# குமாரனாகிய தேவன்

## இயேசு கிறிஸ்து: தேவனுடைய தெய்வீக குமாரன்

1. நமது நித்திய இரட்சகர்
2. அவரது வாழ்வில் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம்
3. அவரது மரணத்தின் தீர்த்ததரிசனத்தின் நிறைவேற்றம்
4. தேவன் நம்மோடு
5. அபிஷேகம் பண்ணப்பட்டவர்
6. பரலோகத்தில் உயிரோடிகின்றவர்? (சவுல்/பவுலின் சாட்சியம்)
7. வரலாற்றுப் பூர்மானவர்
8. நமது மூட்பர்
9. சிலுவையில் அறையப்படுதல்
10. நமது தெய்வீக முன்மாதிரி
11. சகல ஆசிர்வாதங்களின் இடம்
12. வருகிறவர்

## குமாரனாகிய தேவன்

1. ஒரு அறிமுகம்
2. பிரிவு I : திரு அவதாரத்திற்கு முன்பு
3. பிதாவின் ஞானமென்ற வகையில் குமாரன்
4. பிதாவின் வல்லமையென்ற வகையில் குமாரன்
5. பிரிவு II : திரு அவதாரத்திற்கு பின்பு அவரது தெய்வீகம்
6. பூமியில் குமாரனுடைய தெய்வீகத்தை வேதாகமச் சொற்றொடர்கள் பிரதிபலிக்கின்றன
7. பூமியில் குமாரனுடைய தெய்வீகத்தை அவரது சுயய விழிப்புணர்வு பிரதிபலிக்கின்றது
8. பூமியில் குமாரனுடைய தெய்வீகத்தை அவரது கால அட்டவணை பிரதிபலிக்கின்றது
9. பூமியில் குமாரனுடைய தெய்வீகத்தை? நான் இருக்கிறேன்? என்ற கூற்றுகள் பிரதிபலிக்கின்றன
10. பகுதி III : திரு அவதாரத்திற்குப் பின் அவரது மனிதத்துவம்
11. வேதாகத்திற்குப் புறம்பே சாட்சியளிக்கப்பட்ட வகையில் அவரது மனிதத்துவம்
12. இயேசுவின் சரீரப் பிரகாரமான அமைவு
13. இயேசுவின் ஆவிக்குரிய அமைவு
14. இயேசுவினுடைய மனிதத்துவத்தின் கொடுமுடி: அவரது மரணமும் உயிர்தெழுதலும்

## துணைப்பாடங்கள்

1. மாம்சத்தில் தேவன்-ராய்லேனியர்
2. குமாரனின் ஞானஸ்நானம்? எடிகுளோர்
3. குமாரனின் சோதனைகள்? எடிகுளோர்

# நமது நித்திய இரட்சகர்

*இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் குறிப்பிடப்படும் போது, எனது மனமானது ஊசலாடித் தள்ளாடுகின்றது. அவரது அளவானது அகில உலகத்தைக் காட்டிலும் நீண்டது, ஆழ் கடலைக் காட்டிலும் அகன்றது, பரலோகத்தைக் காட்டிலும் உயரமானது மற்றும் பாதாளத்தைக் காட்டிலும் ஆழமானது (யோபு 11:8, 9ஐக் காணவும்). தேடுவதினால் நான் அவரைக் காண முடியாது, அவரது சம்பூரணத்தை அறியவும் முடியாது (யோபு 11:7ஐக் காணவும்).*

*இருந்தாலும், அளவிடப்பட முடியாத இந்த கிறிஸ்துவானவரை நிச்சயமாகவே ஐந்து பகுதிகளில் விளக்கப்படுத்த முடியும்: (1) நித்தியத்திலிருந்து படைப்புக்கு (2) படைப்பில் இருந்து பெத்லகேமுக்கு (3) பெத்லகேமிலிருந்து உயிர்த்தெழுதலுக்கு (4) உயிர்த்தெழுதலில் இருந்து நியாயத்தீர்ப்புக்கு (5) நியாயத்தீர்ப்பில் இருந்து நித்தியத்திற்கு.*

## நித்தியத்தில் இருந்து படைப்புக்கு

*பர்வதங்கள் தோன்றுமுன்னும், பூமியும் உலகத்தின் குடிகளும் உருவாகுமுன்பும், நித்தியத்துவத்திலிருந்தே இயேசு கிறிஸ்து ஜீவனுள்ளவராக, செயல்படுபவராக, இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானவராக இருந்துள்ளார் (சங். 90:2; எபி. 4:12). அவருடைய பார்வைக்கு மறைவானது எதுவும் இல்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்க மாயுமிருக்கிறது (எபி. 4:13). அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது (மீகா 5:2). பூமிக்குரிய அவருடைய சுருக்கமான தங்குதலில், உலகமுண்டாவதற்கு முன்பே அவர் தம் பிதாவினிடத்தில் அனுபவித்திருந்த மகிமையை, அவர் ஐசுவரியராய் இருந்த காலத்தை நினைவுகூர்ந்தார் (யோவா. 17:5; 2 கொரி. 8:9). இயேசு கிறிஸ்து காலங்களுக்கு அப்பாற்பட்டவர்: அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபி. 13:8). அவர் ''நித்திய பிதாவாய்'' இருக்கின்றார்.[1]*

*இயேசு கிறிஸ்து கர்த்தராய்[2] இருக்கின்றார். இது உண்மையாய் இருப்பதால், அவர் சிருஷ்டிக்கப்பட்டவர் என்று உறுதிப்படுத்துவதென்பது சிறிய தவறல்ல (மாறாகப் பெரும் பிழையாகும்). பிதாவினால் அவர் எல்லையற்ற காலம் இருப்பவராக அல்லது ''தெய்வீக ஊற்றாக'' ஏற்படுத்தப்பட்டார் என்ற* Gnostic *கருத்தானது, இயேசு கர்த்தர் என்ற உண்மையுடன் எவ்விதத்திலும் ஒத்திசைவதில்லை. கொலோசெயர் 1:15ன் படியாக அவர், ''சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்'' என்ற*

*கருத்தானது, படைக்கப்பட்டவைகளில் அவர் முதலானவர் என்று விளக்கப்படுத்தப்படக் கூடாது. இது இப்படியிருக்குமென்றால், அவர் தம்மையே படைத்துக் கொண்டார் என்று அர்த்தமாகும், ஏனெனில் ''அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது'' மற்றும் ''அவர் எல்லா வற்றிற்கும் முந்தினவர்'' (கொலோ. 1:16, 17). ஆகையால் கொலோசெயர் 1:15ல் உள்ள "முந்தின பேறுமானவர்" என்ற சொற்றொடரானது அவரது தரம் அல்லது நிலையை[3] உருவக நடையில் அர்த்தப்படுத்துவதாக இருக்க வேண்டுமேயன்றி, அவரது தொடக்கத்தைக் குறிப்பிடாது. இயேசு முதன்மையானவராக, மாண்புமிக்கவராக, படைக்கப்பட்ட எல்லா வற்றைப் பார்க்கிலும் உயர்ந்தவராக இருக்கின்றார் (சங். 89:27ஐக் காணவும்). அப்படியில்லையென்றால், இயேசு ஒரு பொருளாக, ஒரு சிருஷ்டியாக இருக்கிறார் என்றாகி, யோவானின் பின்வரும் கூற்று உண்மையற்றதாகி விடும்: ''சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை'' (யோவா. 1:3).*

*தேவத்துவத்தை இகழ்பவர்களின் (Gnostics) அடிச்சுவடுகளைப் பின்பற்றும் மதக் குழு ஒன்று, கிறிஸ்துவை, உண்டாக்கப்பட்ட ஒரு கடவுளாக, தாழ்வான தெய்வீகம்[4] உள்ளவராகக் கருதுகின்றது. கொலோசெயர் 1:18ல் உள்ள "ஆதியும்" என்ற வார்த்தை கிறிஸ்துவுக்குத் தொடக்கம் ஒன்றிருந்தது என்று அர்த்தப்படுத்துவதாக அவர்கள் தவறாகப் புரிந்து கொள்கின்றார்கள். ஆயினும், சந்தர்ப்பப்பொருளைப் பார்க்கும் போது, கிறிஸ்து தொடக்கம் ஒன்றைப் பெற்றிருந்ததில்லை, ஆனால் அவரே எல்லாவற்றையும் தொடக்குபவராக, ஆரம்பிப்பவராக, தோற்று விப்பவராக, அடிப்படை மூலமாக மற்றும் எல்லாவற்றுக்கும் திறமையுள்ள காரணமாக இருக்கின்றார் என்று காண்பிக்கின்றது.[5]*

*இந்த மதக் குழுவினர் வெளி. 3:14ல் உள்ள "ஆதி" என்ற வார்த்தையை யும், இயேசுவின் நித்தியமான இயல்பை மறுக்கும்படியாகத் தவறாகப் பயன்படுத்துகின்றார்கள். தேவனுடைய படைப்பின் தொடக்கத்தில் இயேசு அதைத் தொடங்குபவராக இருப்பதற்குப் பதில், முதல் சிருஷ்டியாக இருக்கின்றார் என்று கூறுபவர், பிதாவாகிய தேவனுக்கும் தொடக்கம் ஒன்றிருந்தது என்று கூறியாகவேண்டும், ஏனென்றால் அவருக்கும் (தேவனுக்கும்) இதே வார்த்தையானது வெளி. 21:6ல் பயன்படுத்தப்பட்டுள்ளது.[6] மேலும், இயேசுவுக்குத் தொடக்கம் ஒன்று இருந்தது என்று உரிமைகோரும் செயலானது, பிதாவுக்கும் ஒரு தொடக்கத்தைக் கொடுப்பதோடு, சந்தர்ப்பப்பொருளில் இவ்விருவருக்கும் முடிவு ஒன்றுள்ளது என்றும் உணர்த்தக் கூடும்![7] பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் நித்தியமானவர்கள் என்று சரியாக ஒருவர் கண்ணோக்கும் போது தான் வேதாகமத்தின் எல்லா வசனப் பகுதிகளுக்கும் ஒத்திசைவு பெறப்படுகின்றது.[8]*

*இயேசு ஆதியிலே தேவனோடு இருந்ததுமன்றி, தேவனாகவே அவர் இருந்தாரென்றால், அவரது நித்தியத்துவமானது கேள்விகளுக்கு அப்பாற் பட்டதாகும் (யோவா. 1:1). இயேசு எப்படி தேவனிடத்தில் இருந்ததோடு,*

*தேவனாகவும் இருந்தார் என்று விளக்குவது முடியாத ஒரு செயல் ஆகும். கணக்கின்படியல்ல, ஆனால் விசுவாசத்தின்படிதான் ஒருவர் மூவராக இருக்கிறார் என்றும் மூவரும் ஒன்றாயிருக்கின்றார்கள் என்றும் ஒருவர் கூறுகின்றார் (உபா. 6:4; எபி. 1:8; அப். 5:3, 4). இம்மூவரும் ஒரே தேவத்துவம், ஒரே இயல்பு உடையவர்களாய் இருந்தும் ஒவ்வொருவரும் தங்கள் சொந்த சிந்தையைப் பெற்றிருக்கின்றார்கள் (ரோமர் 8:27; பிலி. 2:5). மூவர் ஒன்றாயிருக்கும் தேவன் வேதாகம ரீதியில் விவாதிக்க முடியாதவர் ஆனாலும் மனிதரால் விவரிக்க முடியாதவர். அதிகாரத்தில் இயேசு தமது பிதாவுக்குக் கீழ்ப்பட்டவராய் இருந்தாலும் கூட (''பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்''; யோவா. 14:28), இயல்பிலோ அல்லது இருப்பிலோ அவர் கீழ்ப்பட்டவராயிருப்பதில்லை ("நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்"; யோவா. 10:30). பொருள் ரீதியாக அவர் பிதாவுக்குச் சமமானவராயிருக்கின்றார், அவரே "தேவன்" என்றும் "வல்லமையான தேவன்" என்றும் அழைக்கப்படுகின்றார் (பிலி. 2:6; ஏசா. 9:6).*

*இயேசு பிதாவுக்குக் கீழ்ப்பட்டவராய் இருப்பதால், சிலர் அவரது நித்தியத்துவத்தை மறுத்ததோடு அவர் ''தேவனுடைய தன்மையின் சொரூபம் என்பதையும்'' (எபி. 1:3) மறுத்தார்கள். நான்காம் நூற்றாண்டில் அலெக்ஸாந்திரியாவில் இருந்த அரியு என்பவர் இயேசுவின் இருப்பானது* (Gk.: *ousios*) *பிதாவின் இயல்பாகவே* (Gk.: *homo*) *இருப்பதை ஏற்றுக் கொள்ள மறுத்து, அவரை(பிதாவை)ப் போன்ற* (Gk.: *homoi*) *இயல்புள்ளவர் என்று உறுதியாகக் கூறினார். இதன் விளைவாக அவர் (அரியு), இயேசு நித்தியமானவரல்ல என்றும், மனிதர்களைவிட உயர்ந்த நிலையிலும், தேவனைக் காட்டிலும் தாழ்ந்த நிலையிலும் சிருஷ்டிக்கப்பட்டவரே இயேசு என்றும் அவர் கருத்துக் கூறினார். அத்தனாசியுஸ் என்பவர், எபிரெயர் 1:3ல் உள்ள "தன்மையின்"* (Gk.: *hupostasis*) *என்ற வார்த்தையை வலியுறுத்தி, அரியுவின் கொள்கையை எதிர்த்து நின்று, இயேசு வெறுமனே தேவனைப் போலிருந்தார்* (Gk.: *homoiousios*) *என்று அல்ல, ஆனால் இயேசு தேவனுடைய தன்மையானவராகவே இருந்தார்* (Gk.: *homoousios*) *என்று உறுதிப்படுத்தினார். இவ்விதமாக* "i" *என்ற ஒரு எழுத்தைச் சேர்ப்பதில் அல்லது நீக்குவதில்தான் வேறுபாடு இருந்ததென்று குறைக்கப்பட்டது; ஆனால் உபதேசத்தில் காணும் போது, அது சிருஷ்டிக்கும் சிருஷ்டிகருக்கும், மனிதப் பண்புக்கும் தேவத்துவத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடாக இருந்தது.*

*''தேவனுடைய குமாரன்'' என்ற சொற்றொடரானது மிகவும் ஜாக்கிரதையாய்ப் படிக்கப்பட வேண்டும், ஏனென்றால் தேவத்துவம் ஒரு குமாரனைப் பெற முடிந்ததென்றால், குமாரன் தனது தகப்பனைக் காட்டிலும் இளையவராகின்றார், எனவே குமாரன் நித்தியமானவரல்ல என்பது அவசியமாகிவிடுகின்றது. பெற்றெடுக்கப்பட்ட ஒரு கிறிஸ்து, என்றென்றும் உள்ள ஒரு கிறிஸ்துவாகி விட முடியாது. ''காலங்கள் யாவற்றுக்கும் முன்பே அவர் பெற்றெடுக்கப்பட்டார்" அல்லது அவரது "நித்திய சந்ததி" என்ற, தொடக்கமும் முடிவுமற்ற தொடர்ந்து நடைபெறும் ஒரு நித்திய செயல்பாட்டை உணர்த்தும் பேச்சினால் இந்த இடர்ப்பாடு*

நீக்கப்படுவதில்லை. வேதாகம எழுத்தாளர்கள் தர்க்கரீதியான இந்த இடர்ப்பாட்டைத் தீர்த்து வைக்க வேண்டியிருந்ததில்லை. ஏனென்றால், படைப்புக்கு முன்பே இயேசு இருந்த நிலையில் அவர் பெற்றெடுக்கப் பட்டிருந்தார் என்று அவர்கள் கூறியிருந்ததில்லை.[9]

இயேசு பெத்லகேமில் பிறந்ததைப் பற்றிப் பேசுகையில்தான் வேதாகம எழுத்தாளர்கள், அவர் பெற்றெடுக்கப்பட்டார் என்று கூறுகின்றார்கள். இந்த உண்மையினால்தான் அவர் "தேவனுடைய குமாரன்" என்னப் பட்டார் (லூக். 1:35) என்பது உறுதியானது. மேலும், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டு, பரலோகத்தில் மகிமையைப் பெற்றுக் கொண்ட போது அவர் பெற்றெடுக்கப்பட்டதாக உருவக நடையில் கூறப்படுகின்றது (அப். 13:30-35; எபி. 1:3-5; 5:5). ஆகவே, மாம்சப் பிரகாரமாகவும், உருவக நடையிலும் இயேசு மிகச் சரியாகவே "தேவனு டைய குமாரன்" என்று அழைக்கப்பட்டார்; ஆனால் படைப்புக்கு முந்திய அவரது நிலையில் அவர் அப்பெயரால் அழைக்கப்படவில்லை. படைப்புக்கு முந்திய நிலையில் பிதா/குமாரன் உறவுமுறை இருந்திருக்குமென்றால் குமாரன் பிதாவைப் போன்றவராய் (வயதில்) இருந்திருக்க முடியாது. மேலும், படைப்புக்கு முந்திய குடும்ப நிலை ஒன்றிருந்ததென்றால், அங்கு தாய் யார் என்று ஒருவர் ஆச்சரியப்படுகின்றார், மற்றும் பரிசுத்த ஆவியானவரால் அங்கு நிரப்பப்பட்ட குடும்ப உறவுமுறை என்ன என்றும் ஆச்சரியப்படுகின்றார். படைப்புக்கு முந்திய நிலையில் இயேசு "தேவனு டைய குமாரனா"யிருந்ததில்லை என்றால், இந்தக் கடினமான கேள்விகள் நீக்கப்படுகின்றன.

இப்பொழுது இயேசு, தேவனுடைய குமாரன் என்று அழைக்கப் படுகின்றார், பாவிகள் இந்த உண்மையை தங்கள் முழு இருதயத்தோடும் அறிந்து விசுவாசிக்க வேண்டியது அவசியமாகும் (ரோமர் 10:9, 10). இயேசு இந்தப் பட்டத்திற்கு என்ன கருத்தில் அல்லது எப்பொழுது சுதந்தரவாளி யானார் என்பதைப் பாவி ஒருவர் அறிந்து கொள்ள அவசியம் இல்லை. இருந்தாலும், அந்தப் பட்டமானது தேவத்துவத்தில் ஒரு மதிப்புமிக்க மற்றும் அர்த்தம் நிறைந்த உறவை வெளிப்படுத்துகின்றது என்பதைப் பாவி ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ளவும் மற்றும் மதிக்கவும் முடியும். பிதாவானவர் தமது மிகவும் பிரியமானவர்மேல் கொண்டுள்ள அன்பினால் அனைவரும் அகம் மகிழ முடியும்.

தேவனுடைய குமாரன் தேவனைக் காட்டிலும் எவ்வளவும் குறைந்தவரல்ல என்பது பலருக்கு இடறுதலின் கல்லாகவும், தவறுதற்கான கன்மலையுமாய் உள்ளது (ரோமர் 9:33). யூதர்களில் பெரும்பாலோரும், மற்றும் விடுதலையாளர்களும் "அவர் ஒரு நல்ல மனிதர்" என்ற கருத்தை அனுமதிக்கின்றனர், ஆனால் அவரது தெய்வத்தன்மை வகையிலிருந்து காண மறுத்து நின்றுவிடுவார்கள் (யோவா. 7:12).

பலர் (யூதர்கள், தேவ நம்பிக்கையற்றவர்கள், ஏரியனியர்கள், இன்னும் மற்றவர்கள் முதலியோர்) இயேசுவைத் தெய்வீகத்துவத்திற்குக் கீழானவராக்கி, சிலர் இதன் எதிர் முனையின் கடைசிவரை சென்று பிதாவாகிய தேவனையும் குமாரனாகிய தேவனையும் வேறுபடுத்திக் காண

*மறுக்கின்றனர். மூன்றாவது நூற்றாண்டில், (யோவா. 10:30; 14:9 ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்தி) தனி முதற் தெய்வக் கோட்பாட்டாளர்கள்* (Monarchians) *குமாரனே பிதாவுமானவர் என்று உறுதிபடக் கூறினார்கள். அவர்கள் இயேசுவை "அகிலத்தின் தேவனும் பிதாவுமானவர்"*[10] *என்று அழைத்தனர்.* "Patripassians" *என்று அழைக்கப்படும் ஒரு குழுவினர், பிதாவே சிலுவையில் பாடுபட்டு மரித்தார் என்று போதித்தனர். இந்தக் கருத்தின் ஒரு பகுதியானது மூன்றாம் நூற்றாண்டில் இருந்து இந்த நூற்றாண்டுக்கு ஒரு மதக் குழுவால் கொண்டு வரப்பட்டு, தேவத்துவத்தில் ஒரே ஒரு நபர் மட்டும் இருக்கின்றார் என்பது அவர்களின் நம்பிக்கையாய் உள்ளது. அவர்கள் பல வேதவசனங்களைத் தவறாகப் பயன்படுத்தி, குமாரனானவர் பிதாவினிடத்திலிருந்து எவ்வகையிலும் பிரிக்கப்பட்டவரல்ல என்ற கருத்தைப் பற்றியுள்ளனர்.*[11]

## படைப்பில் இருந்து பெத்லகேமுக்கு

*"நாம் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதி. 1:26) என்ற கூற்றில், குறைந்தபட்சம் ஒரு தெய்வீக உதவியாளராவது படைப்பின் போது இருந்தார் என்று சுட்டிக்காட்டுதல் உள்ளது. பழைய ஏற்பாட்டின் மற்ற குறிப்புகளில் இருந்து (ஆதி. 1:2; 33:4; சங். 104:30; மற்றும் யோபு 26:13ஐயும் காணவும்) ஆவியானவர் ஒரு உதவியாளராக இருந்தார் என்பது மிகவும் தெளிவாகின்றது. வார்த்தை என்று அடையாளப்படுத்தப்படும் இயேசுவானவரே மிகவும் அதிகமாய் வலியுறுத்தப்படும் இன்னொரு உதவியாளர் ஆவார்:*

> *ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை (யோவா. 1:1-3; எபி. 1:1-3ஐக் காணவும்).*

*Logos என்ற வார்த்தையே மாம்சத்திலே வந்தது என்ற யோவானின் அறிவிப்பில் இருந்த கருத்துப் பொருளைப் புரிந்து கொள்வதில் ஆயிரக்கணக்கான இருதயங்கள் இடர்ப்பாடு அடைந்தன. ஒரு வசனத்தில் அவர் தேவனாக அடையாளப் படுத்தப்பட்டு, அதே வேளையில் தேவனிடமிருந்து வித்தியாசப்படுத்தப்பட்டுள்ளார். Logos (ஆங்கில வார்த்தையாக்கப்பட்ட ஒரு கிரேக்க வார்த்தை) இல்லாமல் ஒன்றும் உருவாக்கப்படவில்லை. இச்சொற்றொடர் அர்த்தப்படுத்துவது என்ன? பொதுப் பெயர்ச் சொல் என்ற வகையில், இது ஒரு கருத்தை செய்தித் தொடர்பு படுத்த ஒலிக்கும் ஒரு தெளிவான கூற்றாகும். கேட்கக் கூடிய ஒலி என்பதைக் கற்பனை செய்ய அவசியமில்லை, ஆனால் ஒருவேளை (மனிதத்துவச் செயல்பாடுகளின் வகையில்) பின்வரும் கூற்றுக்களை இது மறைமுகமாய்க் குறிப்பிடுகின்றது:*

*அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும் (சங். 33:9).*

*கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது (சங். 33:6).*[12]

*ஆகையால் யோவானின் அதிகாரத்தில், சங். 33:6ல் தாவீதின் வியப்புக் குறிப்பை ஒருவர் மிகச் சரியாக வாசிக்கலாம்:*

*கர்த்தருடைய Logosனால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது.*

*இருப்பினும் Logos என்பது வெளிக்குறிப்பான ஒலியைக் காட்டிலும் அதிகமானதாக விவரிக்கப்பட்டது: அவர் தம்மிலேயே தெய்வீகத்துவ மானவராய் இருந்தார்.*

*Logos என்ற சொற்றொடரானது பரந்த பொருளுடையதாயிருந்தால் இயேசுவுக்கு ஒருவேளை அந்தப் பட்டம் தரப்பட்டிருக்கலாம். வாயின் வார்த்தையானது சிந்தனையைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்குக் கருத்து ஒன்றை வெளியிடுவது போல, logos என்பதும் சிந்தனை மற்றும் காரணம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது. தத்துவத்தில், logos என்பது அகிலத்தின் பகுத்தறிவுக் கொள்கையாக விளக்கப்படுகின்றது. இயேசுவுக்குப் பயன்படுத்தப்படும் பொழுது, இது தேவனுடைய சிந்தனை, பகுத்தறிவு மற்றும் ஞானம் ஆகியவற்றைக் குறிக்கின்றது. Logos என்ற வகையில் இயேசு, பகுத்தறிவு மற்றும் ஞானம் ஆகியவற்றின் நபர்த்துவமாக இருக்கின்றார்.*

*Logos என்பது படைப்பில் ஞானம் மற்றும் பகுத்தறிவு மற்றும் சிந்தனை ஆகியவற்றை காட்சிப்படுத்தியதோடு மட்டுமின்றி, அவரது ஊழியமானது படைப்பிற்குப் பிறகு, பழைய ஏற்பாட்டின் புத்தகங்களுக்கு ஏவுதல் கொடுத்தவர் மற்றும் அவைகளின் உண்மையான ஆசிரியர் என்ற வகையில் தொடர்ந்தது. கிறிஸ்துவின் ஆவி தீர்க்கதரிசிகளுக்குள் இருந்தது (1 பேது. 1:10, 11). தாவீது பின்வருமாறு விளக்கப்படுத்தினாலும், கிறிஸ்துவே தாவீதை ஏவினார்:*

*கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது (2 சாமு. 23:2).*[13]

*படைப்பிலிருந்து பெத்லகேமுக்கு இயேசு, இந்த அண்டத்தைப் படைத்த Logos ஆகவும், தீர்க்கதரிசிகளுக்கு ஏவுதல் கொடுத்த Logos ஆகவும் மட்டும் இராமல், இஸ்ரவேலர்களோடு “சென்ற ஆவிக்குரிய (ஞானக்) கன்மலை’’யாகவும் இருந்தார். அவர் மூலமாக அவர்களின் தாகம் தணிக்கப்பட்டது (1 கொரி. 10:4).*

*கடைசியாக, அவர் மிகவும் விசேஷித்ததாக ஆன, நம்பிக்கை நிறைந்தவர்களின் எதிர்பார்ப்புகளை எழுப்பக் கூடிய ஒரு சொற்றொடரால் விவரிக்கப்பட்டார்: “வருகிறவர்” (சங். 118:26; மத். 11:3; 21:9).*

# பெத்லகேமில் இருந்து உயிர்த்தெழுதலுக்கு

*காலம் நிறைவேறின போது, வருகிறவராக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் "வானத்திலிருந்து இறங்கி" (யோவா. 6:51; கலா. 4:5) கீழே வந்தவராயிருந்தார். முன்பு பரலோகத்தில் ஆவிக்குரிய Logos ஆக இருந்தவர் மனிதர்களின் மத்தியில் மாம்சத்தில் வந்தார் (யோவா. 1:14). தேவன் தம் சரீரத்தின்படியாக ஸ்திரீயின் வித்தாக, ஆபிரகாமின் சந்ததியாக மற்றும் தாவீதின் சந்ததியாக வேண்டும் என்று திட்டம் கொண்டிருந்தார் (ஆதி. 3:15; 22:18; 2 சாமு. 7:12-14ஐக் காணவும்). மேலும் தேவன் தாம் கன்னியிடமிருந்து[14] பிறக்க வேண்டும் என்றும் திட்டம் கொண்டிருந்தார், இது முக்கியமற்ற விஷயமாய் இருப்பதில்லை.*

*தகப்பனின்றி ஒரு குழந்தை பிறக்க முடியாது (parthenogenesis) என்ற இயற்கை வாதிகளின் கோட்பாட்டுத் தாக்குதலினால் சில விசுவாசிகள் பெலவீனப்படுத்தப்பட்டுள்ளனர். இருந்தாலும், ஒற்றைப் பெற்றோரால் குழந்தை பெறப்படுவதை அவர் விளக்கப்படுத்த முடிவதைக் காட்டிலும் அதிகமான அளவில் இரு பெற்றோரிடமிருந்து ஒரு குழந்தை எப்படிப் பிறக்க முடியும் என்பதை இயற்கை வாதியானவர் உண்மையில் விளக்க முடியாது என்பதே உண்மை நிலையாகும் (பிர. 11:5). இயேசு இரு பெற்றோருக்குப் பிறந்தவராய் இருந்தால் அவர் நம்மில் எவரைக் காட்டிலும் அதிகம் தெய்வீகத்துவமானவராய் இல்லாதிருப்பார். ஒருவர் தாம், இயேசுவை நம்புவதாகவும், ஆனால் அவர் கன்னியிடமிருந்து பிறந்தார் என்பதைத் தாம் நம்புவதில்லை என்றும் கூறுகிறார் என்றால், அவர் தாம் முற்றிலும் மனிதத்துவமாயிருந்த இயேசுவையே நம்புவதாகக் கூறுகின்றார். அவர் முற்றிலும் மனிதத்துவமானவராக மட்டும் இருந்தால், மற்ற நல்ல மனிதர்களின் இரத்தத்தைக் காட்டிலும் அவருடைய இரத்த மானது இரட்சிக்கும் வல்லமையை அதிகம் கொண்டுள்ளது என்று நினைக்கக் காரணம் எதுவும் இருக்காது. இன்னும் கூடுதலாக, அவர் முற்றிலும் மனிதத்துவமாயிருந்திருந்தால், அவரே கல்லறையிலிருந்து எழுந்திருக்க முடியாததுமல்லாமல் அவரால் வேறு யாரையும் உயிரோடெழுப்ப முடியாது. ஆகவே இயேசுவின் தெய்வீகத்துவமானது, அவருடைய கன்னியின் பிறப்புடன் தவிர்க்க முடியாதபடி இணைக்கப் பட்டிருப்பதாகவே அது காணப்படுகிறது. கன்னியிடம் பிறப்பில்லாத கிறிஸ்தவமானது, இரத்தமில்லாமல் இரட்சிக்கப்படுகிற ஒரு மதமாகவும், ஒரு உயிர்த்தெழுதலில்லாததாகவும் ஆகிறது. இது, இந்த உலக ஜீவியத்திற்கு மாத்திரமாகவே உள்ள ஒரு சமூக சுவிசேஷமாக குறைக்கப்பட்டு விடுகிறது.*

*இயேசுவின் தெய்வீகத்துவமானது அவர் (மனிதரல்லாத) ஒரு தெய்வீகப் பிதாவைக் கொண்டிருப்பதைச் சார்ந்துள்ளதால், அவர் "தேவனு டைய குமாரன்" (லூக். 1:35) என்று அழைக்கப்படுவதன் முக்கியத்துவம் வெளிப்படையாகின்றது. அதே வேளையில், இயேசு தாம் ''மனுஷ குமாரன்'' என்று அழைக்கப்படுவது முக்கியமானது என்று நினைத்தார், இந்தப் பட்டமானது - வேறு எதை விடவும் அதிகமாக - எண்பத்தி இரண்டு முறைகள் அவரது உதடுகளினால் உச்சரிக்கப்பட்டதாகப் பதிவு*

*செய்யப்பட்டுள்ளது. மனுஷ குமாரனாய் இருந்த அவர் மனிதராயிருந்து, முழு உலகத்தின் பாவங்களுக்காகச் சிந்தப்படுவதற்கு இரத்தத்தைப் பெற்றிருந்தார் (மத். 26:28; எபி. 2:9; 9:22; 1 யோவா. 2:2). மனுஷகுமாரன் என்ற வகையில் அவரால் மனிதரின் பலவீனங்களுக்காகப் பரிதபிக்க முடிந்தது (எபி. 2:17, 18; 4:15). அவர் தெய்வீகமான மனுஷ குமாரனாக இருந்ததால், அவர் அழியக் கூடிய சரீரத்தில் இருந்தாலும், மரணத்தில் அவரால் மரணத்தை வெற்றி கொள்ள முடிந்தது (யோவா. 11:25-27; 14:19; 2 தீமோ. 1:10).*

*சில மக்கள், தேவன் மாம்சத்தில் வருதல் என்பது அவருக்குப் பெரியதொரு அவமதிப்பாகும் என்று யூகிக்கின்றனர். உதாரணமாக,* (Gnostics) *தேவநம்பிக்கையற்றவர்களுக்குச் சரீரம்/மாம்சம் என்பது அவசியமான பொல்லாங்காக இருந்தது. அவர்களுடைய கோட்பாட்டின் படி, தேவன் மாம்சத்தில் வரவில்லை, ஆனால் உண்மையான மனிதனான இயேசுவின்மேல் ஞானஸ்நானத்தில் அவர் மீது இறங்கி வந்து, அவர் சிலுவையில் அறையப்பட்ட பிறகு அவரை விட்டு நீங்கி விட்டார்.* Docetic Gnostics *என்ற குழுவினர் இயேசுவின் மனிதத்துவத்தை மறுத்து, அவர் ஒரு வெறும் ஆவித் தோற்றம் என்றாக்கி, அவரது பிறப்பு, மரணம் ஆகியவை தோற்றங்கள் தானே தவிர உண்மை நிலை அல்ல என்கின்றனர்.*[15] *சில அவிசுவாசிகள் இயேசுவை முழுமையான ஒரு கற்பனைப் படைப்பாக்க முயற்சி செய்திருக்கின்றனர்; ஆனால் அப்படிச் செய்ததில், அவர்கள் ஜார்ஜ் வாஷிங்டன், ஜூலியஸ் சீஸர் மற்றும் மகா அலெக்சான்டர் ஆகிய கற்பனைப் பாத்திரங்களை ஏற்படுத்துவது சுலபமானது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியதாயிருக்கின்றது. இதன் விளைவாக, கி.பி. முதல் நூற்றாண்டில் உண்மையான சரீரத்தில் வாழ்ந்த நாசரேத்தூர் இயேசுவைப் பற்றிய உண்மையைப் பெரும்பாலான அவிசுவாசிகள் கேள்வி கேட்பதில்லை.*

*எல்லா முரண்பாடுகளுக்கும் அப்பால், தேவபக்திக்குரிய இரகசியம் மகா மேன்மையுள்ளதாக இருக்கின்றது (1 தீமோ. 3:16). தேவன் எப்படி மனிதராக முடிந்தது என்பதையோ அல்லது மறுபடியும் எப்படி அவர் மகிமையில் ஏறெடுக்கப்பட முடிந்தது என்பதையோ மனித சிந்தை எதினாலும் விளக்கியுரைக்க முடியாது, ஆனால் உண்மையானது நம்புவதற்கு மிகவும் எளிமையானதாக உள்ளது: "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே, ... மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே" (1 தீமோ. 2:5, 6). அவர் தேவனிடத்திலிருந்து கீழே வந்தார், அவர் ஒருவர் மட்டுமே தமது வாசஸ்தலத்திற்குத் திரும்பிச் செல்லும் வழியை அறிந்துள்ளார்: "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா. 14:6).*

# உயிர்த்தெழுதலில் இருந்து நியாயத்தீர்ப்புக்கு

*இயேசு தமது மாம்சப் பிரகாரமான மரணத்திற்கு அப்பால், பரலோகத்தில் தமது பிதாவுடன் மறுபடியும் மகிமையில் இருக்கும் நிலை ஒன்றைக் கண்ணோக்கினார் (யோவா. 17:5). ''அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு'' அவர் சிலுவையைச் சகித்து, அவமானத்தை எண்ணாதிருந்தார் (எபி. 12:2). அவர் மரணம் என்ற பலம் பொருந்திய மனிதனின் வீட்டிற்குள் பிரவேசித்து - உண்மையான மரணம்தான் என்று நிரூபிக்கப் போதுமான அளவு நீண்ட காலமான - மூன்று நாட்கள் அங்கே தங்கியிருந்தார். பிறகு அவர் "மரணத்துக்கு அதிகாரியான பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவ காலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும் படிக்கும்" (எபி. 2:14, 15; மற்றும் வெளி. 1:18ஐயும் காணவும்) பாதாளத்தின் திறவுகோல்களைப் பற்றியிழுத்தார். இந்த வழிமுறையில் அவர், ''மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" (2 தீமோ. 1:10).*

*கல்லறையில் இருந்து அவர் (உயிரோடு) எழுந்ததின் மூலம் இயேசு தேவனுடைய குமாரன் என்று வல்லமையோடு அறிவிக்கப்பட்டார் (ரோமர் 1:5). சங். 2:7ல் பதிவு செய்யப்பட்டுள்ள "நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்" என்ற தேவனுடைய மகிழ்ச்சியுள்ள ஆச்சரியக் கூற்றை உயிர்த்தெழுதலின் ஞாயிறானது (ஏப்ரல் 9, கி.பி. 30) நிறைவாக நிறைவேற்றியது. இயேசு கிறிஸ்து நித்தியத்திலிருந்து படைப்பு வரையிலோ அல்லது படைப்பிலிருந்து பெத்லகேம் வரையிலோ தேவனுடைய குமாரனாக இருந்ததில்லை. அவர் பெத்லகேமில் இருந்து தேவனுடைய குமாரனாக, மரியாளுக்கும் ஆவிக்குரிய தகப்பனுக்கும் பிள்ளையாக இருந்தார் (லூக். 1:35). அதன் பிறகும் கூட அவர் சங். 2:7ல் அர்த்தப்படும் தேவனுடைய குமாரனாக இருந்ததில்லை. இயேசு கன்னி யிடம் பிறந்ததின் மூலம் சரீரப் பிரகாரமாக தேவனுடைய குமாரன் ஆகி முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தேவன் அவரை எழுப்பினார் (அப். 13:33). அதன் பிறகுதான் " 'நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்' என்று இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடி" நிறைவேற்றம் வந்தது.*

*இது எவ்விதம் அவ்வாறாக முடிந்தது? ஒரு உயிர்த்தெழுதலானது ஒரு பிறப்பு அறிவிப்பின் நிறைவேற்றமாகத் தகுதி பெற்றது எவ்விதம்? தீர்க்கதரிசியின் வார்த்தை சொல்லர்த்தமாய் எந்தக் கருத்தையும் ஏற்படுத்துவதில்லை. உருவக நடையில் இது அழகுள்ளதாக இருக்கின்றது. ஒரு குழந்தையின் வரவைக் காட்டிலும் அதிகம் சந்தோஷமான அறிவிப்பு எதுவும் ஒரு வீட்டிலிருந்து வெளியிடப்பட முடியாது. இதற்கு இணையான வகையில், தம்மை ஒரு தகப்பனைப் போலாக்கி, இயேசு மரணத்தை ஜெயித்தார் என்பதைக் காட்டிலும் அதிகம் சந்தோஷமான ஒரு செய்தியை*

*தேவன் அறிவிக்கக் கூடாதிருந்தது, இனி மரணம் அவர் மேல் (இயேசுவின் மேல்) ஆளுகை செய்வதில்லை, இயேசு நமது முன்னோடியானார். பிறகு அவர் வேண்டிக் கொண்டிருந்த ''அவரது மகிமைக்குள்'' அவரால் பிரவேசிக்க முடிந்தது (ரோமர் 6:9; எபி. 6:20; லூக். 24:26).*

*(அவர் பரத்திற்கேறிய) ஒலிவ மலைக்கும் பரலோகத்திற்கும் இடையில், இயேசு ஆணிகளால் துளையுண்ட தமது மாம்ச சரீரத்திலிருந்து தம்மை நீக்கினார். அவர் முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அங்கிருந்து புறப்படுமுன் எப்படியிருந்தாரோ, அப்படியே மறுபடியும் ஆனார் (1 கொரி. 15:50). ஒரு நூற்றாண்டில் மூன்றில் ஒரு பகுதியை அவர் மனித உருவில் செலவிட்டிருந்தாலும், இனி ஒருபோதும் அவர் மறுபடியும் அவ்விதமாகக் கீழாக்கப்படப் போவதில்லை (2 கொரி. 5:16). இவ்விதமாக சங். 2:7ஆனது உயிர்த்தெழுதலின் நாளில் நிறைவேறிற்று.*

*வேதாகமத்தில் கூறுவதற்கு அதிகம் உள்ளது. பரத்துக்கேறிய (மே 18) பிறகு பத்து நாட்கள் கழித்து வந்த பெந்தெகொஸ்தே நாளன்று (மே 28), இயேசு ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் ஆக்கப்பட்டார். அந்த நாளில் அவர் சபைக்குத் தலையாக ஆனார், மெல்கிசேதேக்கின் முறைமைப்படி பிரதான ஆசாரியரானார். அவர் தாவீதின் ஆவிக்குரிய அரியணையில் அமர்ந்து, இராஜாதி இராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் முடி சூட்டப்பட்டார். அந்த நாளில் மறுபடியும் தேவனுடைய குரலொலி பரலோகத்திலிருந்து பேசியது: "நீர் என்னுடைய குமாரன்; இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்'' (அப். 13:33; எபி. 1:1-5; 5:5, 6 மற்றும் எபே. 1:20-23ஐக் காணவும்). உயிர்த்தெழுதலின் நாளைப் போலவே பரத்துக்கேறிய நாளிலும் நடந்தது: குமாரத்துவம் என்பது சரீரப் பிரகாரமானதாகவும், சொல்லர்த்தமானதாகவும் இல்லாது, உருவகமானதாகவும் ஆழ்ந்த அர்த்தம் நிறைந்ததாகவும் ஆயிற்று. உலகத்தின் பெரும் விதியானது இயேசு தேவனுடைய குமாரன் என்ற மாபெரும் சத்தியத்தைச் சார்ந்துள்ளது.*

*பெந்தெகொஸ்தே நாளில் இருந்து உலகத்தின் முடிவு வரையிலும் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் குமாரனுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. தூதர்களும், அதிகாரங்களும் மற்றும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டுள்ளது (மத். 28:18; 1 பேது. 3:22). அவருக்கு வானத்திலும், பூமியிலும், பூமிக்குக் கீழும் உள்ள எல்லா நாமங்களுக்கும் மேலான நாமம் கொடுக்கப்பட்டுள்ளது (பிலி. 2:10).பெந்தெகொஸ்தே முதல் நியாயத்தீர்ப்பு வரையிலும் உள்ள கால இடைவெளியில் பிதாவானவர் கூடத் தமது குமாரனுக்கு ஆதரவாக இருப்பதற்காக கனத்தில் குறைவான ஒரு இடத்தையே எடுத்துக் கொண்டுள்ளார். "குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்'' (யோவா. 5:23). ''சகல பரிபூரணமும் அவருக்குள் வாசமாயிருக்க" (கொலோ. 1:19) பிதாவுக்குப் பிரியமாயிற்று. எல்லாவற்றிலும் கிறிஸ்துவே முதல்வராய் இருக்க வேண்டும் (கொலோ. 1:18). நேர்மையான இருதயங்களுடன் நற்சித்தம் கொண்டுள்ள மனிதர்கள் எந்த எண்ணத்தையும் சுயாதீனத்துடனும் அன்புடனும் கிறிஸ்துவுக்குக்*

*கீழ்ப்படியச் செய்கின்றனர் (2 கொரி. 10:5). பிதாவாகிய தேவன் இயேசுவுக்கு ஜனங்களின் கொடியாக இருக்கும் நிலையையும், நாடுகளை வழி நடத்திக் கட்டளையிடும் நிலையையும் கொடுத்துள்ளார் (ஏசா. 11:10; 55:4).*

*இயேசுவின் மிக மேன்மையான கர்த்தத்துவத்தின் காலத்தின் போது, மத்தியஸ்தராகிய அவர் மூலமாகவே பாவிகள் தேவனை அணுக வேண்டும். மேலும், பரிந்து பேசுகின்றவர் என்ற வகையில் அவர் மூலமாகவே கிறிஸ்தவர்கள் தங்கள் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் (1 தீமோ. 2:5; 1 யோவா. 2:2). இப்பொழுது அவர் தமக்குச் சொந்தமானவர்களுக்கு வாசஸ்தலங்களை ஆயத்தப் படுத்துகின்றவராகப் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டுள்ளார் (யோவா. 14:1-3). நிறைவாக, எல்லா மனிதர்களும் - பிதாவாகிய தேவனுக்கு முன்பாகவோ அல்லது பரிசுத்த ஆவியானவருக்கு முன்பாகவோ அல்ல, ஆனால் கிறிஸ்துவுக்கு முன்பாகவே - நியாயத்தீர்ப்புக்கு நிற்க வேண்டும். இந்த நாள் தேவனுடைய ஆலோசனையில் அமைக்கப்பட்டுள்ளது (அப். 17:30; யோவா. 5:22; 2 கொரி. 5:10).*

## *நியாயத்தீர்ப்பில் இருந்து நித்தியத்திற்கு*

*நியாயத்தீர்ப்புக்குப் பிறகு, இயேசுவின் மேலான அதிகாரம் உள்ள நிலையானது மனவிருப்பத்துடன் அவரது பிதாவினிடம் ஒப்படைக்கப் படும். பின்பு பெந்தெகொஸ்தே நாள் தொடங்கி நியாயத்தீர்ப்பு வரைக்கும் தாம் பெற்றிருந்த வல்லமையை குமாரனே துறந்து விட்டு தேவனே எல்லாவற்றிலும் எல்லாமுமாய் இருக்க மக்கள் யாவருடனும் குமாரனும் சேர்ந்து அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார் (1 கொரி. 15:24). இந்த அதிகார மாற்றமானது உணரப்படாத அளவு மிக மென்மையானதாக, நித்தியம் முழுவதிலும் (லூக். 1:33; எபி. 1:8) குமாரனும், மற்ற பரிசுத்தவான்களும் (வெளி. 3:21; 22:3-5) பிதாவாகிய தேவனுடன் கூட அரசாளுவார்கள். "ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப் படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! ... அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்" (ரோமர் 11:33, 36).*

---

*குறிப்புகள்*

*[1]"நித்திய பிதா" என்று வழக்கமாகக் கொள்ளப்படும் 'abbi'-adh (ஏசா. 9:6; எபிரெயரில் வசனம் 5) என்ற வார்த்தை - இந்தச் சந்தர்ப்பப்பொருளில் அநேகமாக மிகவும் சரியாக - "நித்தியத்தின் பிதா" என்று சரியாகக் கொள்ளப்படலாம். [2]"யேகோவா" என்பது YHWH என்ற நான்கிலக்கணக் குறிப்பின் சரியான*

மொழிபெயர்ப்பு வார்த்தையல்ல, ஆனால் ASVயில் ஏசா. 44:6ல் பயன்படுத்தப் பட்டுள்ளது போன்ற வார்த்தையானது உண்மையான ஜீவனுள்ள ஒரே தேவனைக் குறிக்கப் பயன்படுகின்றது: "நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே; என்னைத் தவிர தேவன் இல்லையென்று, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்." இதே பெயரானது புதிய ஏற்பாட்டில் இயேசுவை அடையாளப்படுத்துவதாக உள்ளது. NASBயில் ("Lord") "கர்த்தர்" என்றுள்ளது. (ஏசா 40:3ஐ மத். 3:3உடனும், ஏசா. 44:6ஐ வெளி. 1:17; 22:13உடனும், யோவேல் 2:32ஐ அப். 2:21உடனும் ஒப்பிட்டுக் காணவும்.) [3]"முந்தின பேறுமானவர்" என்பது மிகவுயர்ந்த மரியாதையுடன் இணைந்துள்ளது. பழைய ஏற்பாட்டின் சொற்றொடரானது அதன் பெரும் மாண்புடன் இணைந்துள்ளது. குடும்பத்தில் உள்ள மகன்களின் நடுவில், முதலில் பிறந்தவர் இரட்டிப்பான கனத்தைப் பெறுவதால் இது முன்னுரிமையின் மதிப்பை அர்த்தப்படுத்துகின்றது. இந்த வார்த்தை நிலைப்பாட்டின் மதிப்பையும் சுட்டிக்காட்டியது, ஏனெனில் ஒருவருடைய பண்பின் உயர்தரத்தினால் அவருக்குக் கொடுக்கப்படும் தனிச் சிறப்பையும் இது குறிப்பிட முடிந்தது. இவ்விரு காரணங்களுக்காகவும் இயேசு "முதற் பேறானவர்"/"முந்தின பேறுமானவர்" என்று அழைக்கப்படுகின்றார்; அவர் முந்தின பேறுமானவர், ஏனென்றால் மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுதலில் அவர் நமக்கு முந்தினவராய் இருக்கின்றார் (கொலோ. 1:18), மற்றும் அவர் முந்தின பேறுமானவர் ஏனென்றால் எல்லாவற்றுக்கும் மேன்மை யான முதல் இடத்தைக் கொடுத்தினால் தேவன் அவரை உயர்த்தியிருக்கின்றார் (எபி. 1:6). [4]வேதவசனங்களின் புதிய உலக மொழிபெயர்ப்பானது (NWV) வேதாகமத்தைச் சரியான முறையில் கொண்டு வருவதில்லை, ஆனால் அது ஒரு குறிப்பிட்ட மதக் குழுவின் போதனைகளை ஆதரிக்கின்ற ஒருதலைப்பட்சமான மொழிபெயர்ப்பாகும். அது யோவான் 1:1ஐ பின்வருமாறு கொண்டுவருகின்றது: "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை ஒரு தேவனாய் இருந்தது." இப்படிப்பட்ட ஒரு மொழிபெயர்ப்பைக் கொடுத்த அதே கல்வித்துவமானது யோவான் 1:6ஐப் பின்கண்டவாறு கொடுக்கும்படி வற்புறுத்துகின்றது: "ஒரு தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனிதர் இருந்தார், அவர் பெயர் யோவான்." NWVயில் இயேசுவை தேவர்களில் ஒரு தேவனாக்கும் அதே மொழிபெயர்ப்பானது தேவனை பல தெய்வீகத்துவத்தில் ஒரு தெய்வீகத்துவமாகவும் ஆக்கும். [5]கொலோ. 1:18ல் Arche என்பது "தொடங்குகின்ற நபர் அல்லது பொருள், ஒரு தொடரில் உள்ள முதல் நபர் அல்லது பொருள், முன்னோடி" என்பதாக உள்ளது. இது "தோற்றம்" என்ற கருத்தில் "தொடக்கம்" என்று அர்த்தப்படுகின்றது. [6]வெளி. 3:14ல் உள்ள Arche என்பது, "எந்த ஒன்றும் இதினால் தொடங்குகின்றது, மூலம், செயல்படும் காரணம்" என்று அர்த்த மாகின்றது; இது "முதற் காரணம்" என்று அர்த்தப்படுகின்றது. Arndt, Gingrich மற்றும் Danker ஆகியோர் "முதற் சிருஷ்டிக்கப்பட்டவர்" என்ற அர்த்தமானது மொழியியல் ரீதியாக சாத்தியக் கூறுள்ளதென்று உறுதிப்படுத்தினர். இருப்பினும், வெளி. 21:6ல் உள்ள arche பிதாவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது, இது "முதற் சிருஷ்டித்தவர்" என்று அர்த்தம் தரவும் சாத்தியக் கூறு உள்ளது. மொழியியல் ரீதியாக இரு அர்த்தங்கள் தகுதியாகலாம், ஆனால் வசன ரீதியாகவும், தர்க்கரீதியாகவும் "முதற் காரணர்" என்ற ஒன்று மட்டுமே உண்மையானதாயிருக்க முடியும். [7]"முந்தினவரும் பிந்தினவரும்" என்ற வார்த்தைகள் வெளி. 22:13ல் கிறிஸ்துவையும், வெளி. 21:6ல் (தமிழில் இங்கு "ஆதியும் அந்தமும்" என்றுள்ளது) பிதாவையும் குறிக்கின்றன. [8]பிதாவும் (சங். 90:1, 2), குமாரனும் (மீகா 5:2; எபி. 13:8) மற்றும் ஆவியானவரும் (எபி. 9:14) நித்தியமானவர்களாய் இருக்கின்றனர். [9]KJV மற்றும் ASVயில் யோவான்

*1:18; 3:16, 18; 1 யோவா. 4:9 ஆகியவற்றில் உள்ள* "begotten" *என்ற வார்த்தையானது தவறான மொழிபெயர்ப்பாகும், ஏனென்றால்* "begotten" *என்பதற்கான கிரேக்க வார்த்தை இந்த வசனங்களில் இல்லை. அதற்குப் பதில்,* "Kind" *என்பதற்கான கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவமும், "ஒரே" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவமும் இங்கு (இவ்வசனங்களில்) உள்ளன.* [*தமிழில் இவ்வசனங்களில் "ஒரே பேறான'' என்று உள்ளது சரியானதாயிருக்கலாம்*]. *மேற்கண்ட மொழி பெயர்ப்புக்களிலேயே இந்த இரு கிரேக்க வார்த்தைகளின் சரியான மொழி பெயர்ப்புக்களுக்கு லூக். 7:12; 8:41; 9:38 ("ஒரே") மற்றும் மாற்கு 9:29 ("வகை") ஆகிய வசனங்களில் காணவும்.* [10]Arthur Cushman McGiffert, *A History of Christian Thought என்ற நூலில் இருந்து.*

[11]*குறிப்பாக, அவர்கள் ஏசா. 9:6; யோவா. 3:13; 10:30; 14:9; 2 கொரி. 5:19; கொலோ. 2:9 ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். "ஒரே தேவனில் ஒரு நபர்த்துவம்" என்ற கருத்தானது* G.K. Wallace *மற்றும்* Ray Vaughn *அவர்களால் வாதிடப்பட்டது.* [12]*சங். 33:6ல் செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பானது* (LXX) *to logo tou Kuriou என்பதற்கு* "by the word of the Lord" *என்று குறிப்பிடுகின்றது.* [13]Septuagint-ல் logos *என்றுள்ளது.* [14]*ஏசா. 7:14ல்* "maiden" *அல்லது* "Virgin" *என்பதற்கான பரிசுத்த ஆவியானவரின் சொற்றொடரானது (எபிரேயு.: 'almah) பாலியல் ரீதியாகப் பக்குவமுடைமைக்கான பொதுவான வார்த்தையாக உள்ளது. கி.மு. 735ல் நன்கு அறியப்பட்ட பக்குவமுள்ள ஒரு பெண் (ஒரு மனிதனை அறிந்து) ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் (ஆனால் உண்மையில் அந்தப் பிள்ளை அல்ல) என்று பரிசுத்த ஆவியானவர் கூறினார். கி.மு. 5ல் அறியப்பட்டிராத பக்குவமுள்ள ஒரு பெண் (ஒரு மனிதனையும் அறியாமல்) ஒரு மகனைப் பெற்றெடுப்பாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் (அவரே உண்மையில் இம்மானுவேலாக இருப்பார்). ஏசா. 7:14ல் ஆவியானவரால் வழி நடத்தப்பட்ட மொழி நடையானது கி.மு. எட்டாம் நூற்றாண்டில் நடைபெற்ற அற்புதமற்ற பிறப்பொன்றையும், கி.பி. முதலாம் நூற்றாண்டில் நடைபெற்ற அற்புதமான பிறப்பொன்றையும் விவரிக்கப் போதுமான அளவு பரந்ததாக உள்ளது. (கி.மு. எட்டாம் நூற்றாண்டில் இருந்ததாகப் பேசப்பட்ட பக்குவமுள்ள பெண் ''மனிதனை அறிவது'' தேவையாய் இருந்தது, ஏனெனில் அந்த நூற்றாண்டில் கன்னியிடம் இருந்து பிறத்தல் என்பது இருந்ததில்லை.)* [15]McGiffert, 1:52.

# வருகிறவராயிருந்தவரின் உருவகம்

*(ரோமர் 5:12-21; 1 கொரிந்தியர் 15:20-26, 45-49)*

*ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையில் ஒற்றுமைகள்:*

| *ஆதாம் ...* | *கிறிஸ்து ...* |
|---|---|
| *அற்புதமாய்ப் படைக்கப்பட்டார் (ஆதி. 2:7)* | *அற்புதமாய்க் கன்னிப் பெண்ணிடம் பிறந்தார் (ஏசா. 7:14; மத். 1:23)* |
| *மனிதராக, மாம்சத்தில் இருந்தார் (1 கொரி. 15:45)* | *மனிதராக, மாம்சத்தில் இருந்தார் (ரோமர் 8:3; கலா. 4:4; பிலி. 2:7)* |
| *தேவனுடைய குமாரன் என்றழைக்கப்பட்டார் (ஆதி. 1:27; 6:2)* | *தேவனுடைய குமாரனாய் இருக்கின்றார் (லூக். 3:38; யோவா. 3:16)* |
| *முழு நிறைவான படைப்பாய் இருந்தார் (ஆதி. 1:31; எசே.28:15; மத்.19:14 ஆகியவற்றை காணவும்)* | *பூரணப்பட்டவராயிருக்கின்றார் (எபி. 4:15; 5:9)* |

*ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையில் வேறுபாடுகள்:*

| *ஆதாம் ...* | *கிறிஸ்து ...* |
|---|---|
| *"முந்தின மனிதனாய்" இருந்தார் (1 கொரி. 15:45, 47)* | *"இரண்டாம் மனுஷனா" யிருந்தார் (1 கொரி. 15:47)* |
| *முழுமையான உலகத்திற்குள் வந்தார் (ஆதி. 1:31)* | *சபிக்கப்பட்டிருந்த உலகில் வந்தார் (ஆதி. 3:17)* |
| *பாவியாயிருந்தார் (ரோமர் 5:14)* | *பாவமற்றவராய் இருந்தார் (எபி. 4:15; 7:26)* |
| *பாவத்தைக் கொண்டு வந்தார் (ரோமர் 5:12)* | *பாவத்திற்கு மீட்பைக் கொண்டு வந்தார் (அப். 10:43)* |
| *தேவனால் ஆக்கினைக்குள்ளானார் (ரோமர் 5:16)* | *தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டார் (மத். 3:17; யோவா. 8:29ஐக் காண்க)* |
| *பாவம் ஆண்ட இடத்தில் இருந்தார் (ரோமர் 5:21)* | *கிருபை ஆளும் இடத்தில் உள்ளார் (ரோமர் 5:21)* |

| | |
|---|---|
| *ஜீவ விருட்சத்திலிருந்து நம்மைப் பிரித்தார் (ஆதி. 3:24)* | *ஜீவ விருட்சத்திடம் நம்மைக் கொண்டு போவார் (வெளி. 22:1, 2)* |
| *எல்லாருக்கும் மரணத்தைக் கொண்டு வந்தார் (ரோமர் 5:15, 17; 1 கொரி. 15:21, 22, 45)* | *எல்லாருக்கும் உயிர்த்தெழுதலைக் கொண்டு வருவார் (யோவா. 10:10; 11:25; 1 கொரி. 15:23-26)* |
| *பூமிக்குரியவராயிருந்தார் (1 கொரி. 15:45, 47, 48)* | *பரலோகத்துக்குரிய வராயிருக்கின்றார் (1 கொரி. 15:47).* |

*பாவம் மற்றும் பரலோகம் ஆகியவற்றைக் கருதும் பொழுது கிறிஸ்துவின் ஆசீர்வாதங்கள் நிபந்தனைக்குட்பட்டவையாகும். மக்கள் அவரது ஆசீர்வாதங்களைப் "பெற்றுக் கொள்ள" முடியும்: "அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய், மரணம் ஆண்டு கொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும், நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே" (ரோமர் 5:17). அவர்கள் அவரது ஆசீர்வாதத்தைப் "புறக்கணிக்கவும்" முடியும்; "என்னைத் தள்ளி, என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந் தீர்க்கும்" (யோவா. 12:48).*

# அவரது வாழ்வில் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம்

*இயேசு எதிர்காலத்தில் நடக்கவிருந்த நிகழ்ச்சிகளை முன்னுரைக்கக்கூடிய தம்முடைய திறமையானது தாம் வெறும் மனிதர் மட்டுமல்ல, தேவனுடைய குமாரன் என்று காட்டத் தீர்மானமுள்ள ஆதாரமாயிருக்கும் என்று நினைத்தார்: "அது நடக்கும் போது, நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும் பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவா. 13:19). அது போலவே, வேதாகமத்தை எழுதிய தீர்க்கதரிசிகள் யாவருக்கும் மக்கள் தங்கள் கவனத்தைக் கொடுத்தால், பழைய ஏற்பாட்டு முன்னுரைத்தல்கள், பொழுது விடிந்து விடிவெள்ளி உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்று இருப்பதை நம்பி ஏற்றுக் கொள்வார்கள் (2 பேது. 1:19ஐக் காண்க). பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் தங்கள் காலத்தில் இருந்த மக்களுக்கு மட்டுமின்றி இன்றைய நாட்களில் இருக்கும் நமக்கும் கூடப் பேசியிருக்கின்றனர் (1 பேது. 1:10-12).[1]*

## கன்னிப் பெண்ணின் மகன் (ஏசா. 7:14)

*கி.மு. 735ல் தெற்கு இராஜ்யமான யூதாவிற்கு எதிராக சீரியாவும் வடக்கு இராஜ்யமும் அரசியல் கூட்டு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தன. யூதா, "காட்டிலுள்ள மரங்கள் காற்றினால் அசைகிறது போல அசைந்து நடுங்கியது" (ஏசா. 7:2). எப்பொழுதும் கிருபை நிறைந்த தேவன் யூதாவின் அரசரான ஆகாஸை ஆறுதல் படுத்துவதற்கு ஏசாயாவை அனுப்பினார்; ஆனால் ஆகாஸ் துன்மார்க்கனாகவும் மாய்மாலக்காரனாகவும் இருந்தான். ஆகாஸிடம் இருந்து வந்த அறிவுக்குப் பொருந்தாத, அற்பமான பதில்செயலானது தேவனுடைய இரக்கத்தை வெறுமையாக்கிற்று; அவர் ஆகாஸினால் "மனச் சோர்வுற்றார்." ஆகாஸை சீரியா - எப்பிராயீ - மரின் சதியிலிருந்து விடுவிக்கும் அடையாளம் ஒன்று தேவனிடத்திலிருந்து வருவதை அந்த அரசன் மறுத்து விட்டான். அவனது மறுப்பின் பேரில், தேவன் தாம் எவ்வகையிலும் அவனுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுக்கப் போவதாகவும், ஆனால் அது அவன் விரும்பாத ஒரு அடையாளமாய் இருக்கும் என்றும் கோபத்துடன் பதில் அளித்தார்:*

*ஆதலால், ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் (ஏசா. 7:14).*

*ஆகாஸ் அறிந்திருந்த புகழ் பெற்ற இளம் பெண்ணொருத்தி விரைவிலேயே திருமணம் முடித்து ஒரு குழந்தை பெற்று அக்குழந்தைக்கு வழக்கமற்ற பெயர் ஒன்றைச் சூட்டப் போவதாயிருந்தது: இம்மானுவேல் என்ற அப்பெயருக்கு ''தேவன் நம்மோடு இருக்கின்றார்'' என்று அர்த்தமாகும். அந்தக் குழந்தை வளருவதற்கு முன்பு, அவ்விரு நாடுகளின் பயமுறுத்தலும் வீணாக்கப்பட்டு விடும். இருப்பினும், தேவன் வேறு சிலவற்றை இடைமறித்துக் கூறினார்: இஸ்ரவேலும், சீரியாவும் யூதாவுக்கு அபாயத்தை முன்னிறுத்தாவிட்டாலும், அசீரியா அதைச் செய்யும். உண்மையில் அசீரியாவானது யூதர்கள் பட்டினி கிடக்குமளவு யூதாவின் நாட்டை முற்றுகையிடும். தீர்க்கதரிசியின் வார்த்தையின்படி, ஒரு மனிதன் ஒரு இளம் பசுவையும், இரண்டு ஆடுகளையும் உயிருடன் பாதுகாக்க முடிந்திருக்கும் (ஏசா. 7:21, 22). ஆகையால், பால் கிடைக்கும், நாட்டில் விடப்பட்ட மக்கள் வெண்ணையையும் தேனையும் சாப்பிடுவார்கள்.*

*தீர்க்கதரிசனத்தின் இந்தக் குழந்தையானது உணவுக்கு வெண்ணையையும் தேனையும் பெற்றிருக்கும் (ஏசா. 7:15). இம்மானுவேல், "தேவன் நம்மோடு இருக்கிறார்'' என்பது அப்பையனின் பெயராக இருக்கும். யூதாவைத் தண்டிப்பதற்கான தேவனுடைய அடையாளமாக அப்பையன் விளங்குவான்! தேவன் இரு வழிமுறைகளில் மக்களுடன் இருக்க முடியும்! தேவன் யூதாவுடன் இருப்பார், ஆனால் அவர்களை ஆசீர்வதிப்பதற்கல்ல: அவர் தண்டிப்பதற்கென்றே யூதாவுடன் இருப்பார். ஆகாஸும் அவனுடைய மக்களும் விசுவாசமற்றவர்களாக இருந்தனர், தேவனுடைய வார்த்தையோ நிச்சயமானதாக இருந்தது.*

*இதுவே, ஏசா. 7:14ன் குறுகிய கால அர்த்தமாய் இருந்தது, ஆனால் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் ஆகாஸுக்குத் தரப்பட்ட ஒரு உள்ளூர் அடையாளத்தைக் காட்டிலும் பெரிதான ஒன்று தீர்க்கதரிசியின் மொழிநடையில் இருந்தது. ஆகாஸ் வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட ஒரு குறுகிய கால நிறைவேற்றத்தை மட்டுமின்றி, மரியாள் மற்றும் யோசேப்பின் நாட்களில் ஏற்படவிருந்த ஒரு நெடுங்கால நிறைவேற்றத்தையும் ஏசாயா சுட்டிக் காட்டினார். முன்னுரைத்தல்கள் பெரும்பாலும் முதலிடம் மற்றும் இரண்டாம் இட அர்த்தங்களும், நேரடியான மற்றும் மறைமுகமான பயன்பாடுகளும் கொண்டிருந்தன. வேசித்தனத்தினால் அல்ல ஆனால் தேவனுடைய தீர்மானத்தினால், ஏசாயாவின் தீர்க்கதரிசனத்திற்கு ஏற்ற வகையில் மரியாள் ஒரு குழந்தையைப் பெறுவாள் என்று தேவனுடைய தூதர் வெளிப்படுத்தினார் (மத். 1:23).*

*ஏசா. 7:14ன் கி.மு. எட்டாம் நூற்றாண்டின் நிறைவேற்றங்களுக்கும், கி.பி. முதலாம் நூற்றாண்டின் நிறைவேற்றங்களுக்கும் மத்தியில் வேறுபாடுகள் இருக்கின்றன, இருப்பினும் முந்தியதில் இருந்து பிந்தியதை முன்னுரைக்கப் பரிசுத்த ஆவியானவர் முந்தியதை ஒரு அடிப்படையாகப்*

பயன்படுத்துமளவுக்கு இவை இரண்டிற்கும் இடையில் போதுமான ஒற்றுமைகளும் இருந்தன. *'Almah* என்ற வார்த்தையானது அதன் பரந்த கருத்தில் ("இளம் பெண்") கி.மு. எட்டாம் நூற்றாண்டில் கன்னிப் பெண் குழந்தை பெறும் நிகழ்வை அவசியப் படுத்தவில்லை, அப்படிப் பட்டதொன்று பதிவு செய்யப்படவும் இல்லை. இருப்பினும், கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஒரு குறிப்பிட்ட வகையான இளம் பெண் (ஒரு கன்னி; கிரேக்கம்: parthenos; மத். 1:23) தான் இன்னும் கன்னியாய் இருந்தபோதே தாயானாள்.

ஆகாஸின் நாட்களில் பிறந்த பையன் பெயரில் மட்டுமே இம்மானு வேலாக, "தேவன் நம்மோடு" என்பதாக இருந்தான்; உண்மையிலேயே அந்தப் பையன் தேவனல்ல. இதற்கு முரண்பட்ட வகையில், மரியாளின் நாட்களில் பிறந்த குழந்தைக்கு இம்மானுவேல், "தேவன் நம்மோடு" என்று பெயரிடப்பட்டது, ஏனென்றால் அவர் உண்மையிலேயே தேவனாக இருந்தார். ஆகாஸின் நாட்களில் இருந்த குழந்தையானது அதன் பெயரில் மட்டுமே அடையாளமாக இருந்தது; மரியாளின் மகனோ பெயரிலும் பொருட் கருத்திலும் அடையாளமாய் இருந்தார்.

ஆகாஸின் நாட்களில் தீர்க்கதரிசனமாய்க் கூறப்பட்ட பிள்ளையானது தேவன் யூதாவுடன் இருப்பார் என்பதற்கு அடையாளமாய் இருந்தது. மரியாளின் நாட்களில் தீர்க்கதரிசனமாய்க் கூறப்பட்ட பிள்ளையானது தேவன் இந்த முழு உலகத்துடனும் இருப்பார் என்பதற்கு அடையாளமாய் இருந்தது (யோவா. 3:16; 1 யோவா. 2:2). ஆகாஸின் நாட்களில் தேவன் தமது ஜனங்களைத் தண்டிப்பதற்காக அவர்களுடன் இருப்பார் என்பதே அடையாளமாய் இருந்தது. மரியாளின் நாட்களில் நல்ல செய்தியாக தேவன் தமது ஜனங்களை ஆசீர்வதிப்பதற்காக அவர்களுடன் இருப்பார் என்பது அடையாளமாய் இருந்தது.

மரியாள், கன்னியாயிருக்கையில் அவர்களிடமிருந்து அக்குழந்தை பிறந்திருக்காதிருந்தால், உண்மையில் அக்குழந்தை இம்மானுவேலாக, "தேவன் நம்மோடு" என்பதாக இருந்திருக்க முடியாது, ஏனென்றால் அவர் நம் எல்லாரையும் போலவே மனிதத்துவம் உள்ளவராகவும் இருந்து, மற்றும் தேவ - மனிதராக இல்லாது போயிருப்பார். மற்றும், அவர் சட்ட விரோதமான, வேசித்தனத்தினால் பிறந்த குழந்தையாகவும் ஆகியிருப்பார். இது உண்மையாயிருந்தால், இயேசு தெய்வீகத்துவமானவராய் இருந்திருக்க மாட்டார், அவரது மதமானது ஒரு தந்திரமான ஏமாற்று வேலையாய் இருந்திருக்கும். அப்படிப்பட்ட விஷயத்தில், இம்மானுவேல், "தேவன் நம்மோடு" என்ற பெயரானது ஒரு ஏளனமானதாக ஆகியிருக்கும்.

## ஆபிரகாமின் சந்ததி (ஆதி. 22:18)

ஆபிரகாம் இந்த உலகத்திற்கு ஒரு ஆசீர்வாதமாயிருப்பார் என்று கர்த்தர் முன்னுரைத்தார். அத்துடன் ஆதி. 12:3ல் "உனக்குள்" என்ற சொற்றொடருக்கு அவர் முந்திய வசனத்தில் உள்ள "உன் சந்ததிக்குள்" என்ற விளக்கத்தைப் பயன்படுத்தினார். ஆதி. 22:17ல் "சந்ததி" என்ற

வார்த்தையானது ஆபிரகாமின் பின் சந்ததியினரை (அதாவது முழு இஸ்ரவேல் இனத்தையும்) குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், ஆதி. 22:18ல் அதே வகையில் அந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. வசனம் 18ல் உள்ள "சந்ததி" என்ற வார்த்தையானது ஆபிரகாமின் சந்ததிகளில் ஒருவராகிய இயேசுவைப் பற்றிய குறிப்பிட்ட முன் குறித்தலாகும். கலா. 3:16ல் பவுல் "... [தேவன்], 'சந்ததிகளுக்கு' என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், 'உன் சந்ததிக்கு' என்று ஒருவனைக் குறித்தே சொல்லியிருக்கிறார், அந்த சந்ததி கிறிஸ்துவே" என்று கூறிய பொழுது, அந்த வசனத்தையே குறிப்பிட்டார். புதிய ஏற்பாட்டின் ஏவப்பட்ட எழுத்தாளர் ஒருவர் இவ்விதமாய் பழைய ஏற்பாட்டின் முன்னு ரைத்தல் ஒன்றுக்குப் பளிச்சிடத் தக்க உட்கண்ணோட்டம் என்ற வகையில் குறிப்பிட்ட அர்த்தம் தந்தார்.

புதிய ஏற்பாட்டின் இன்னொரு பேச்சாளரும் கூட ஆதி. 22:18ன் மேசியாத்துவத் தனிச் சிறப்புக்களை சுட்டிக்காட்டினார். எருசலேம் தேவாலயத்தின் சாலமோன் மண்டபத்தில் பேதுரு பேசிய பொழுது, "நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள்; 'உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்' என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் புத்திரராயிருக்கிறீர்கள்" (அப். 3:25) என்று கூறினார்.

## கலிலேய ஊழியக்காரர் (ஏசாயா 9:1, 2)

வரப் போகிற மேசியாவைப் பற்றிய பழைய ஏற்பாட்டு முன்னு ரைத்தல்கள் பல, உடனடியான, உள்ளூர் அர்த்தங்களையும் கொண்டிருந்தன. இருப்பினும் அவைகளில் சில எந்த வகையிலும் பழைய ஏற்பாட்டு அர்த்தம் இல்லாதவைகளாகவும் இருந்தன. இந்தப் பின்வகையைச் சேர்ந்த முன்னுரைத்தல் ஒன்று கி.மு. எட்டாம் நூற்றாண்டில் "சுவிசேஷத் தீர்க்கதரிசியாகிய" ஏசாயாவால் எழுதப்பட்டது.

> ஆகிலும் அவர் செபுலோன் நாட்டையும், நப்தலி நாட்டையும் இடுக்கமாய் ஈனப்படுத்தின முந்தின காலத்திலிருந்தது போல அது இருண்டிருப்பதில்லை; ஏனென்றால் அவர் கடற்கரையருகிலும், யோர்தான் நதியோரத்திலுமுள்ள புறஜாதியாருடைய கலிலேயா வாகிய அத்தேசத்தைப் பிற் காலத்திலே மகிமைப்படுத்துவார்.
>
> இருளில் நடக்கிற ஜனங்கள்
> பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்;
> மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல்
> வெளிச்சம் பிரகாசித்தது (ஏசா. 9:1, 2).

கலிலேயா நாடானது "பிற்காலத்திலே" மகிமையுள்ள ஒரு நிலையை அடைந்து, என்றென்றும் புகழ் மிக்கதாக ஆகவிருந்தது. அவர் (இயேசு)

பரலோகத்தை விட்டு வரும் முன்னரே கூட, தமது ஊழியத்தின் பெரும் பகுதியை கலிலேயாவில் செய்யத் திட்டமிட்டிருந்தார் என்பது உறுதியாகும்:

> யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப் பட்டு, கலிலேயாவுக்குப் போய், நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம் பண்ணினார்.
>
> கடற்கரையருகிலும் யோர்தானுக்கு அப்புறத்திலுமுள்ள
> செபுலோன் நாடும் நப்தலி நாடும் ஆகிய
> புறஜாதியாருடைய கலிலேயாவிலே,
> இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக்
> கண்டார்கள்;
> மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம்
> உதித்தது என்று,
> ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி
> இப்படி நடந்தது (மத். 4:12-16).

## ஒரு அபிஷேகம் பண்ணப்பட்ட பிரசங்கியார் (ஏசாயா 61:1-3)

கி.மு. எட்டாம் நூற்றாண்டில் ஏசாயாவின் சுருள்கள் மூலமாக அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு பிரசங்கியார் பேசினார்:

> கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல்
> இருக்கிறார்;
> சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக்
> கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்;
> இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக்
> காயங்கட்டுதலையும்,
> சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்,
> கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்
> கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும்
> நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும்
> கூறவும்,
> துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும்,
> சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும்,
> அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும்,
> துயரத்திற்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும்,
> ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும்
> கொடுக்கவும்,
> அவர் என்னை அனுப்பினார்;
> அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின

*நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள் (ஏசா. 61:1-3).*

*கி.பி. முதலாம் நூற்றாண்டில் முப்பது வயதே நிரம்பிய, கல்வியறிவற்றிருந்த தச்சர் ஒருவர் ஜெப ஆலயத்தில் இருந்த போதகர்களை வியப்பில் ஆழ்த்தினார்:*

> *தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் (இயேசு) வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அவர் புஸ்தகத்தை விரித்த போது:*
>
> *கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்;*
> *தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார் ... என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு, (லூக். 4:16-19).*

*அவர் அந்த அழகிய முன்னுரைத்தலின் தீர்க்கதரிசனத்தைத் தொடர்ந்து வாசித்து, "உங்கள் காதுகள் கேட்க இந்த வேத வாக்கியம் இன்றையத் தினம் நிறைவேறிற்று" (லூக். 4:21) என்று தைரியமாக அறிவித்தார்.*

*இயேசு இவ்விதமாக உரிமைகோரியதானது எவரொருவரும் வினயமாய்க் கவனிப்பதற்கு அப்பாற்பட்டதாக இருக்கும். இயேசுவுக்கோ இவ்வித உரிமைகோருதலானது இயல்பானதாகவும் ஏற்புடையதாகவும் இருந்தது.*

## *மோசேயைப் போல ஒரு தீர்க்கதரிசி (உபாகமம் 18:15)*

*சீனாய் மலையில் அந்த மலை அசைந்த போது இஸ்ரவேலர்கள் நடுங்கினார்கள். அவர்கள் அம்மலையின் உச்சியில் அக்கினியையும், மின்னலையும், கனத்த ஒரு மேகத்தையும் கண்டனர், அம்மலை முழுவதும் சூளையைப் போல் புகைக்காடாக இருந்தது (யாத். 19:16-18; 20:18). தேவனுடைய குரலொலியானது பத்துக் கட்டளைகளைப் பேசிய பொழுது அவர்கள் பயந்து நடுங்கினார்கள். பயந்து போன மக்கள் மோசேயை (தேவனிடத்தில்) பேசும்படியும், இல்லையென்றால் தேவனுடைய பிரசன்னத்தில் அவ்வளவு நெருக்கமாயிருக்கையில் தாங்கள் செத்து விடுவோம் என்றும் கெஞ்சினார்கள். மோசே கர்த்தரிடத்தில் பேசினார், அவர் தெய்வீக உரையாளராயிருந்து தன்னைப் போல ஒரு பிரதிநிதியை அனுப்புவதாகத் தேவன் அருளிய வாக்குத்தத்தத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்:*

> *உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்;*

> *அவருக்குச் செவி கொடுப்பீர்களாக. ஓரேபிலே சபை கூட்டப்பட்ட நாளில், "நான் சாகாதபடி என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தை இனி நான் கேளாமலும், இந்தப் பெரிய அக்கினியை இனி நான் காணாமலும் இருப்பேனாக" என்று உன் தேவனாகிய கர்த்தரை நீ வேண்டிக் கொண்டதின்படியெல்லாம் அவர் செய்வார் (உபா. 18:15,16).*

*பேசுபவர் ஒருவருக்கான இஸ்ரவேலரின் வேண்டுகோளானது, ஒரு சரியான வேண்டுகோளாக இருந்தது என்று தேவன் நினைத்தார். மோசேயிடம் அவர், "அவர்கள் சொன்னது சரியே" என்றார் (உபா. 18:17), மற்றும் அவர் வாக்குத்தத்தத்தை மறுபடியும் கூறினார்:*

> *உன்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன் (உபா. 18:18, 19).*

*மோசேயைப் போல ஒரு தீர்க்கதரிசி வருவதாயிருந்தார். மோசே ஒரு சாதாரண தீர்க்கதரிசியல்ல. தேவன் அவரிடத்தில், "மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்" (எண். 12:8) என்றுள்ளது. "கர்த்தரை முகமுகமாய் அறிந்த" (உபா. 34:12) மோசேயைக் காட்டிலும் மேலான தீர்க்கதரிசி எவரும் இஸ்ரவேலில் இல்லை. எனவே அவருக்குப் பின் வருவார் என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டவர் சாதாரணமானவரல்ல.*

*வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அந்தத் தீர்க்கதரிசியானவர் தேவனுடைய வார்த்தையை "தம் வாயில்" (உபா. 18:18) கொண்டிருப்பார் என்று கர்த்தர் உரைத்தார். அவரையும் அவரது வார்த்தையையும் ஏற்றுக் கொள்ளுதல் என்பது தேவனையே ஏற்றுக் கொள்வதாகும், ஆனால் அவரையும் அவரது வார்த்தைகளையும் புறக்கணித்தல் என்பது தேவனையே புறக்கணித்தல் ஆகும் (உபா. 18:19).*

*இந்த அசாதாரணமான தீர்க்கதரிசியைப் பற்றிய வாக்குத்தத்தத்தை மோசேயின் ஜனங்கள் ஒருபொழுதும் மறந்து போகவில்லை. அவரது வருகையைக் கவனிக்கும்படி அவர்கள் தங்களது பிள்ளைகளுக்கும், பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அறிவுரை கூறினார்கள். அவரை "தீர்க்கதரிசியானவர்" (யோவா. 1:21, 25) என்று அவர்கள் கூறினார்கள். மோசேயின் காலத்திற்குப் பதினைந்து நூற்றாண்டுகளுக்குப் பிறகு, யோவானின் ஊழியமானது (யூதர்களின்) கவனத்தை ஈர்த்த பொழுது, உடனடியாக யூதர்கள் உபா. 18:15ல் உள்ள தீர்க்கதரிசியைப் பற்றிய முன்னுரைத்தலை நினைத்துப் பார்த்து, யோவானிடத்தில் குறிப்பாக, "நீர் தீர்க்கதரிசியானவரா?" (யோவா. 1:21) என்று கேட்டனர். யோவானைக் காட்டிலும் பெரியவர் எவரும் இருந்ததில்லை, ஆனால் அவர் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தீர்க்கதரிசியல்ல, அவர் தம்மிடத்தில்*

கேட்டவர்களுக்குத் தாம் அவரல்ல என்பதைத் தெளிவு படுத்தினார்.

இருப்பினும், அற்புதங்கள் எதுவும் செய்திராத யோவான் (யோவா. 10:41) ஒரு உறவினரைப் பெற்றிருந்தார், அந்த உறவினரால், ஐந்து வார்கோதுமை அப்பத்தையும், இரண்டு சிறு மீன்களையும் ஒரு திரளான கூட்டத்திற்கு, ஒருவேளை பத்தாயிரம் பேர் கொண்ட ஒரு கூட்டத்திற்குத் தேவையானதற்கும் மேலான உணவாகப் பெருக்க முடிந்திருந்தது (யோவா. 6:9,10ஐக் காணவும்). இப்படிப்பட்ட நம்புவதற்கேற்ற ஒரு அடையாளமானது உபாகமத்தின் 18:15 வசனத்தில் உள்ள மோசேயின் வாக்குத்தத்தத்தை நினைவு கூரும்படி யூதர்களைத் தூண்டியது. அவர்கள், "மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி" என்று வியப்புற்றனர் (யோவா. 6:14).

இயேசு தாம் இயற்கையின் கர்த்தராயிருந்தாரென்று செயல் விளக்கப்படுத்தியதுடன், வேறு எந்த மனிதரும் ஒரு நாளும் பேசியிராத விதத்தில் அவர் பேசினார் (யோவா. 7:46). அவர் ஒரு நாளில் தேவாலயத்தில் ஒரு சைகை அறிவிப்பை ஏற்படுத்திய போது, கூட்டத்தில் இருந்தவர்களில் மனதில் ஆழமாய்க் கருத்துக் கொண்ட சில யூதர்கள் இந்த மாபெரும் பிரசங்கியாரோடு உபா. 18:15ஐத் தொடர்பு படுத்தி, ஒருவருக்கொருவர், "மெய்யாகவே இவர் தீர்க்கதரிசியானவர்" (யோவா. 7:40) என்று கூறிக் கொண்டனர்.

சாலமோன் மண்டபத்தில் பேதுரு பிரசங்கிக்கையில், உபா. 18:15ஐ மேற்கோள் காண்பித்து, பதினைந்து நூற்றாண்டு பழைமையான தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாயிருந்தவர் இயேசு (அப். 3:22) என்று அவர் கூறினார். "அந்த தீர்க்கதரிசியின்" சொல்லுக்குக் கீழ்ப்படியாமல் போவது என்பது அழிவை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்தார் (அப். 3:23). ஆகையால் "தீர்க்கதரிசிகளின் புத்திரர்களாய்" இருந்த (அப். 3:25) சரியான எண்ணம் கொண்ட யூதர்கள், மோசேயின் முன்னுரைப்பு மொழிகள் இயேசுவில் மகிமையுள்ள மாம்சப் பிரகாரமான வழியில் நிறைவேற்றம் அடைந்ததைக் காண முடிந்திருந்தது.

## உவமைகளில் பேசுபவர் (சங். 78:2)

ஆசாப் என்பவர் இஸ்ரவேலில் புகழ் பெற்றவராய் இருந்தார். பாடகராகவும், கைத்தாளம் தட்டுகிறவராகவும் இருந்த அவர் ஆசரிப்புக் கூடாரப் பாடற் குழுவின் தலைவராகத் தாவீதினால் நியமிக்கப்பட்டார் (1 நாளா. 6:31-33, 39; 15:19; 16:5). மேலும் அவர் பரிசுத்த ஆவியானவரால் ஞானதிருஷ்டிக்காரராகவும் (2 நாளா. 29:30) மற்றும் பாடல்களை எழுதுபவராகவும் (சங். 50, 73-83ஐக் காணவும்) வல்லமைப் படுத்தப் பட்டிருந்தார். அவர் எழுதிய பாடல்கள் சங்கீத புத்தகத்தில் இடம் பெற வேண்டியிருந்தது. சங். 78ஐப் போன்று அறிவுறுத்தல் மற்றும் பக்திவிருத்தி யூட்டுதல் ஆகியவற்றிற்காக எழுதப்படும் பாடலானது மஸ்கீல் என்று அழைக்கப்பட்டது. அவரது போதனையில் ஒரு பகுதி உவமைகளின் அதாவது பயன்பாட்டிற்குரிய கதைகளின் வடிவத்தில் இருந்தது. மற்ற

போதனைகளை அவர் மறைபொருள்களில் அல்லது புதிர்களில் முன்னிறுத்தினார். அவர், ‘‘என் வாயை உவமைகளால் திறப்பேன்; பூர்வகாலத்து மறைபொருள்களை வெளிப்படுத்துவேன்’’ (சங். 78:2) என்று அறிவித்தார்.

ஆசாப்பின் இதே வார்த்தை மொழிதல்களைப் பரிசுத்த ஆவியானவர் ஆசாப்பைக் காட்டிலும் மேலானவர் செய்யப் போவதைக் குறித்து முன்னு ரைக்கப் பயன்படுத்தினார் (மத். 13:35ஐக் காணவும்). இயேசுவும் கூட இஸ்ரவேலுக்கு உவமைகளில் போதிப்பவராக, பூர்வகாலத்திலிருந்து மறைபொருளாய் இருந்தவைகளைக் கூறுபவராகவே வந்தார். இது “தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.” ஆசாப் ‘‘என் வாயை உவமைகளால் திறப்பேன்; பூர்வகாலத்து மறைபொருள்களை வெளிப்படுத்துவேன்’’ என்று கூறினார்.

## பிதாவின் வீட்டைக் குறித்துப் பக்திவைராக்கியம் (சங். 69:9)

ஒருவேளை, ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிரான பரியாசம் அல்லது அவமானப்படுத்தும் செயல் ஏதாவது “உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது” (சங். 69:9அ) என்று கூறச் செய்திருக்கலாம். நிச்சயமாகவே, இயேசுவுக்குள்ளாக இந்த உணர்வு இருக்கும் என்பதைப் பரிசுத்த ஆவியானவர் தாவீதின் மூலம் முன்னு ரைத்தார் என்பது உறுதியாகும்.

> தேவாலயத்திலே ஆடுகள் மாடுகள் புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு, கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டு பண்ணி, அவர்கள் யாவரையும், ஆடுமாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப் போட்டு, புறா விற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக் கொண்டுபோங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார். அப்பொழுது: உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்தார்கள் (யோவா. 2:14-17).

சங். 69:9ன் இரண்டாம் பகுதியான “உம்மை நிந்திக்கிறவர்களின் நிந்தனைகள் என்மேல் விழுந்தது” என்பது, தாவீது ஆசரிப்புக் கூடாரத்தைப் பாதுகாப்பதில் ஈடுபடுகையில், பரிசுத்த கூடாரத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கிய பொல்லாத மனிதர்களால் அவர் புகழ் குறைக்கப்பட்டார் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. தாவீதின் வார்த்தைகளுக்குக் காரணமான உள்ளூர்ச் சூழ்நிலை எதுவாயிருப்பினும், வசனம் 9ன் பிற்பகுதியானது, இயேசுவுக்கு என்ன நடக்கும் என்பதின் முன்னுரைத்தலாகவும் இருந்தது. இயேசு தம் பிதாவின் ஆலயத்தைத்

*தற்காத்தபொழுது, அவர் தேவாலயத்தைத் தவறாகப் பயன் படுத்தியவர்களின் பழித்துரைகளுக்கு தம்மை உட்படுத்தினார். உண்மையில் அவர் தம் சொந்த மரணத்தை விரைவு படுத்தினார். எவ்வழியிலும் அவர் தம்மைப் பிரியப்படுத்திக் கொள்ளவில்லை; அவர் தம் பிதாவின் பரிசுத்தமே அவரது ஒரே சிந்தனையாய் இருந்தது. "கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடவாமல், 'உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என் மேல் விழுந்தது' என்று எழுதியிருக்கிறபடியே நடந்தார்" (ரோமர் 15:3).*

## எல்லா இனங்களையும் ஆசீர்வதிப்பவர் (ஆதி. 12:3)

*கி.மு. சுமார் 1886ல், தேவன் ஆபிராமுக்கு, "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்று வாக்குத்தத்தம் கொடுத்தார் (ஆதி. 12:3). இவ்விடத்தில், எபிரெயர் மற்றும் புறஜாதியார் ஆகியோர் ஆபிராமுக்குள் ஆசீர்வதிக்கப்படுவதைப் பற்றிய முன்னு ரைத்தலானது அது நடப்பதற்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே முன்னுரைக்கப்பட்டது. இன்றைய நாட்களில், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, கிறிஸ்தவராகின்ற ஒவ்வொரு வருமே ஆதி. 12:3ல் ஏற்படுத்தப்பட்ட இந்த ஆதி வாக்குத்தத்தத்தில் பங்கேற்கின்றனர். அந்த வேதவசனப் பகுதியானது தேவன் புறஜாதியாரை விசுவாசத்தினால் நீதிமான்களாக்குவார் என்பதை முன்னுரைத்தது. தேவன் முன்னதாகவே "உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" (கலா. 3:8) என்ற சுவிசேஷத்தை ஆபிராமுக்குப் பிரசங்கித்து இருந்தார். இதன் விளைவாக, விசுவாசிக்கின்ற யாவரும் விசுவாசம் நிறைந்தவரான ஆபிராமுடன் ஆசீர்வதிக்கப்படுகின்றனர். கிறிஸ்துவுக்குரியவர்கள் யாவரும், ஆபிராம் என்ற "உயர்வான தகப்பனாய்" இருந்து பின் ஆபிரகாம் என்ற "திரளான மக்களின் தகப்பனான" அவருக்கு ஆவிக்குரிய சந்ததியாகின்றனர். எல்லா இனங்களில் இருந்தும், விசுவாசத்திற்குக் கீழ்ப்படிகின்ற யாவரும் விசுவாசத்தின் தகப்பனுக்குச் செய்யப்பட்ட தெய்வீக வாக்குத்தத்தத்தின் சட்ட நிறைவான சுதந்தரர் ஆகின்றனர். இவ்விதமாக, இரண்டாயிரமாண்டு பழமையான முன்னுரைத்தலானது இயேசுவை ஆபிரகாமின் குமாரனாகச் சுட்டிக் காண்பித்தது (மத். 1:1), இந்தச் சுட்டிக் காட்டுதலானது ஒரு மனிதரில் இருந்து ஒரு இனத்திற்கும், பின்பு ஒரு இனத்தில் இருந்து சகல இனங்களுக்கும் ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் விரிவாக்கப்படும் சங்கிலியின் மிக முக்கியமான இணைப்பு வளையமாக உள்ளது. இந்தக் காரணத்திற்காகவே, ஆதி. 12:3 ஆனது ஒரு முக்கியமான மேசியாத்துவ தீர்க்கதரிசனமாய் உள்ளது.*

## புறஜாதியாருக்கு ஒளி (ஏசா. 49:6)

*தேவனுடைய அன்பின் ஞானமானது, தீர்க்கதரிசனம் கூறப்பட்ட அவரது குமாரன் வந்து யாக்கோபின் இனத்தாருக்கு மட்டும் ஊழியம்*

*செய்வது போதுமென்று கொண்டிருக்கவில்லை. அவர் தம்மையே உலக மக்களினங்கள் எல்லாவற்றிற்கும் இரட்சிப்பின் ஒளியாக விரிவாக்குவார்:*

> *யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும்,*
> *இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும்,*
> *நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்பகாரியமாயிருக்கிறது;*
> *நீர் பூமியின் கடைசிபரியந்தமும் என்னுடைய இரட்சிப்பா யிருக்கும்படி,*
> *உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன் என்கிறார் (ஏசா. 49:6).*

*தேவனைத் தம்முடைய பலமாகக் கொண்டு தேவனுடைய ஊழியக்காரனாக முன் அபிஷேகம் பண்ணப்பட்ட கனத்துக்குரிய நபர் யார்? (ஏசா. 49:5). தம்முடையவர்களை மட்டுமின்றி மற்ற எல்லா இனங்களையும் ஆசீர்வதிக்க திறமை பெற்றவர் யார்? மரியாளின் கர்ப்பத்தில் உண்டாகு முன்னமே இயேசு ஏற்கனவே வாக்குத்தத்தத்தின் பிள்ளையாய் இருந்தார். நாசரேத்தூரில் இருந்த திகைப்படைந்த கன்னிப் பெண் ஒருத்திக்கு காபிரியேல் தூதர், "இதோ, நீ கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" (லூக். 1:31) என்று கூறினார். கர்ப்பத்திலிருந்தே தேவனுடைய ஊழியராக உருவாக்கப்பட்ட இந்தக் குமாரன் தமது சொந்த மக்களுக்குத் தாம் எவ்வகையில் உதவ முடியுமோ அவ்வகையில் எல்லாம் செயல்பட்டார். அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார் (யோவா. 1:12). அத்துடன், அவரது அப்போஸ்தலர்களுக்கு அவரிட்ட அணி வகுப்புக் கட்டளைகள் அவர்கள் எல்லா இனங்களுக்கும் சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதாக இருந்தது. அவரது அப்போஸ்தலர்கள், முன்பு யூதருக்கும் பின்பு புறஜாதியாருக்கும் சுவிசேஷத்தைக் கொடுத்தல் என்ற முன்மாதிரியைப் பின்பற்றினர்.*

*பிசீதியாவின் அந்தியோகியாவிலே யூதர்கள் கர்த்தருடைய சுவிசேஷத்திற்கு எதிர்த்து நின்ற பொழுது, பவுலும் பர்னபாவும் நேரடியாகப் பேசினார்கள்:*

> *முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்ல வேண்டிய தாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்.*
>
> *நீர் பூமியின் கடைசி பரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேத வாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் (அப். 13:46, 47).*

# ஜனங்களுக்குக் கொடி (ஏசா. 11:10)

*சுவிசேஷத் தீர்க்கதரிசியின் முன்னுரைத்தல் தைரியமானதாக இருந்தது: "அக்காலத்திலே, ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்துக் கேட்பார்கள்; அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும்" (ஏசா. 11:10).*

*கி.மு. எட்டாம் நூற்றாண்டில் ஏறக்குறைய நம்பவே முடியாத முன்னுரைத்தல்கள் வந்தன. ஈசாயின் சந்ததிகளில் ஒருவர் மீது (ஏசா. 11) தேவனுடைய ஆவியானவர் தங்கி, அவருக்கு விசேஷித்த ஞானத்தை அருளுவார். அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும் தமது காது கேட்டபடி நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் (ஏசா. 11:3, 4) நீதியின்படி நியாயந்தீர்ப்பார். ஏழைகளும், சிறுமைப்பட்டவர்களும் தங்களுக்கு சேர வேண்டிய சம உரிமையைப் பெறும்படி அவர் பார்த்துக் கொள்ளுவார் (ஏசா. 11:4). ஒரு நாளிலே, துன்மார்க்கர் அவரது கோபத்தை உணருவார்கள் (ஏசா. 11:4). உருவகத்தில், "நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைச் கச்சையுமாயிருக்கும்'' (ஏசா. 11:5). அது போலவே உருவகத்தில், அவருடைய வல்லமையின் நாளில், "ஓநாய் ஆட்டுக் குட்டியோடே தங்கும்" (ஏசா. 11:6) என்று ஏசாயா கூறினார். அவருடைய பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்தலும் கேடு செய்தலும் இராது, இந்தப் பிரபுவைப் பற்றிய அறிவானது உலகளாவியதாக இருக்கும் (ஏசா. 11:9). அவர் மக்களுக்குக் கொடியாக ஆவார், புறஜாதியார் அவரைத் தேடுவார்கள் (ஏசா. 11:10). அவரது தாபரஸ்தலம் மகிமையுள்ளதாய் இருக்கும். இஸ்ரவேலில் துரத்துண்டவர்களும், யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களும் பூமியின் நான்கு திசைகளிலும் இருந்து ஒன்று கூடி ஈசாயின் அந்தச் சந்ததியைத் தங்களின் கொடியாக நோக்குவார்கள் (ஏசா. 11:12).*

*ஈசாயின் குமாரர்களில் இயேசு ஒருவரே ஏசாயாவின் பரந்த மற்றும் கெம்பீரமான தீர்க்கதரிசனத்தை/முன்னுரைத்தலை நிறைவேற்றத் தகுதி பெற முடியும் (ரோமர் 15:12). பள்ளி செல்லாத இந்த இளம் வயது நாசரேத்தூர்த் தச்சருடைய ஞானமானது அவரது சொந்த ஊரில் இருந்த மக்களைத் திகைப்படையச் செய்தது: "இவனுக்குக் கொடுக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது?" என்று அவர்கள் கேட்டார்கள் (மாற். 6:2). அவர் ஓய்வுநாளில் ஒரு ஊனமுற்ற மனிதனைக் குணமாக்கியதன் மூலம் யூதர்களைத் திகைக்க வைத்தார்; இந்த நல்ல செயலைச் செய்ததானது அவர் விமர்சிக்கப்பட வழியைத் திறந்து வைத்தது (யோவா. 7:23, 24). ஒதுக்கப்பட்டவர்களையும், அன்பு காட்டப்படாதவர்களையும் கண்டு அவர் பரிதபித்தார் (மத். 21:31; 9:10), இதையும் கூட ஏசாயா முன்னுரைத்திருந்தார் (ஏசா. 11:4). ஏசாயா முன்னுரைத்திருந்தபடி (ஏசா. 11:5) அவரது நீதியானது அவரை "நீதிமான்'' என்று அழைத்த (மத். 27:19) பிலாத்துவின் மனைவியினால் உறுதியளிக்கப்பட்டது.*

*இயேசு ஒருபொழுதும் ஓநாய்களை ஆட்டுக்குட்டிகளுடன் சமாதானமாய்ப் படுத்திருக்கும்படி செய்ய முயற்சி மேற்கொண்டதில்லை, அவரது சபையும் அவ்விதம் செய்ததில்லை (ஏசா. 11:6). அவர் இரண்டாம்*

*முறை வரும்பொழுது, காட்டு மிருகங்களைப் பழக்கப்படுத்துவது என்பது மிகவும் தாமதமான செயலாகி விடும், ஏனென்றால் பூமி முழுவதும் அக்கினியால் அழிக்கப்படுவதால் அவை யாவும் பட்சிக்கப்பட்டு விடும் (2 பேது. 3:10). ஓநாய்/ஆட்டுக்குட்டி தீர்க்கதரிசனத்தின் நேரடியான நிறைவேற்றத்தை ஒருவர் நோக்குவதென்றால், அவர் எப்பொழுதும் ஏமாற்றத்திற்குள்ளானவராகவே இருப்பார். இருப்பினும், அதன் அர்த்தமான உருவகம் ஆகும் (ஏசா. 11:5ல் நீதி என்பது அரைக்கட்டு எனப்படுவது போலவே இதுவும் ஆகும்) என்று ஒருவர் கண்டால், எல்லாம் இசைவாகின்றது.*

*உருவக நடையில், ஓநாயைப் போன்ற மனிதர்கள் ஆட்டுக் குட்டிகள் போன்ற இயல்புள்ளவர்களாக்கப்பட்டு, ஒரு குழந்தைக்கும் தீங்கிழைக்கா தவர்களாகின்றனர் (ஏசா. 65:17-25ஐக் காணவும்). மிருகத்தின் இயல்புடைய மனிதர்கள், சுயநலமற்ற அன்புடைய கிறிஸ்துவின் சுவிசேஷத்தினுடைய வல்லமையினால் இரக்கம் மற்றும் உதவி புரியும் பண்பு கொண்ட மனிதர்களாக மறுஉருவாக்கம் பெறுகின்றனர். இந்த உருவக அர்த்தத்தை ஒருவர் உணர்ந்து கொள்கின்ற பொழுது, மற்றும் அவர் பாவம் நிறைந்த மனிதரில் இது நிறைவேறுவதை அறிந்து மெய்சிலிர்க்கின்ற பொழுது, சுவிசேஷமானது விலங்குகளின் கொட்டங்களையும், காட்டு விலங்கு களைப் பழக்கப்படுத்துதல் பற்றியும் மட்டும் குறிப்பிடுவதாயிருந்தால் அந்த சுவிசேஷம் எவ்வளவு பெலவீனமுடையதாகும் என்பதை அவர் உணருவார். நிச்சயமாகவே ஏசாயாவும் இயேசுவும் தங்கள் சிந்தையில் அதிகம் முக்கியத்துவமானவைகளைக் கொண்டிருந்தனர்.*

*இந்த உருக அர்த்தமானது புதிய ஏற்பாட்டின் சபையைக் குறிப்பிடுகின்ற (எபி. 12:22, 23) “பரிசுத்த பர்வதம்” என்பதன் முன்னு ரைத்தல் வரைக்கும் தொடருகின்றது. சபையானது சத்தியத்திற்குத் தூணாக இருக்கின்ற வகையில், சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல சுவிசேஷ செய்தியானது பூமி எங்கு நிறைந்துள்ளது (ஏசா. 11:9; கொலோ. 1:5, 6ஐக் காணவும்). யூதரிலும் புறஜாதியாரிலும் நற்சிந்தையுள்ள மக்கள் யாவருக்கும், உலகத்தின் தரமான சுமைதாங்கியாக, மக்களுக்குக் கொடியாக இயேசு வந்திருக்கின்றார்! (ஏசா. 49:22; 62:10; யோவா. 3:14-16; 12:32 ஆகியவற்றைக் காணவும்).*

*ஈசாயின் குமாரனான இயேசு, ஏசாயா பேசியபடி மக்களினங்களின் கொடியாக இல்லாதிருந்தால், ஐயகோ, தேவனுடைய வசனமானது தரையில் வீழ்ந்து கிடக்குமே. கி.பி. 70ல் வம்சா வழி அட்டவணையானது ஈசாயின் சந்ததியார் யாவரும் அழிக்கப்பட்டதாகச் சாட்சியம் கொடுத்தது. கி.பி. 70க்கு முன்பே ஈசாயின் உரிமையுள்ள குமாரர் தம்மை அடையாளப்படுத்தி, தாம்தான் ஏசாயா தீர்க்கதரிசனத்தின் கொடி என்பதை நிரூபிக்காமல் இருந்திருந்தால், மனிதகுலம் முழுமையும் மனவருத்தத்தோடு மடிய வேண்டியதாக இருந்திருக்கும். மற்ற எந்த எதிர்பார்ப்புகளும் மனிதரின் நம்பிக்கைகளுக்கு ஒளியூட்டியிருக்க முடியாது. இப்படி ஆகியிருந்தால், மகிமையுள்ள எதிர்காலம் பற்றிய ஏசாயாவின் மெய்சிலிருக்கும் கருத்துருக்கமானது சோம்பேறித்தனமான கனவாக,*

*நிறைவேறச் சாத்தியமற்றதாகவே ஆகியிருக்கும். கி.பி. 70 தொடங்கி எவரொருவரும் தம்மை ஈசாயின் வம்சா வழியென்று அடையாளப்படுத்திக் கொள்ள முடியவில்லை.*

## *நியாயத்தைக் கொண்டு வருபவர்*
## *(ஏசா. 42:1-4)*

*அமைதியான ஆனால் பூமிக்கு நியாயத்தைக் கொண்டு வருவதில் வெற்றி கொள்ளப்பட முடியாத தீர்மானம் கொண்ட ஒரு தேவ ஊழியராக யாரோ ஒருவர் ஏசா. 42:1-4ல் முன்னுரைக்கப்பட்டார்:*

> *இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன்,*
> *நான் தெரிந்து கொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும்*
> *இவரே;*
> *என் ஆவியை அவர் மேல் அமரப் பண்ணினேன்;*
> *அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்.*
> *அவர் கூக்குரலிடவுமாட்டார், தம்முடைய சத்தத்தை அவர்*
> *உயர்த்தவும்*
> *அதை வீதியிலே கேட்கப் பண்ணவுமாட்டார்.*
> *அவர் நெறிந்த நாணலை முறியாமலும்,*
> *மங்கியெரிகிற திரியை அணையாமலும்,*
> *நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்.*
> *அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைப்படுத்துமட்டும்*
> *இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை;*
> *அவருடைய வேதத்துக்குத் தீவுகள் காத்திருக்கும்.*

*இந்த முன்னுரைத்தலில், "நியாயம்" என்ற வார்த்தை மூன்று முறை தோன்றுகின்றது. சத்தியத்தில் நியாயத்தைக் கொண்டு வருகின்றவர் புலன் உணர்வூட்டுபவராகவோ அல்லது தெருவில் நின்று பெரிய உரையாற்று பவராகவோ இருக்க மாட்டார். அவர் நெறிந்த நாணலுக்கு, மனம் வருந்தும் பாவிக்கு ஒரு இரண்டாம் வாய்ப்பைத் தருகின்றவராய் இருப்பார்; மங்கி எரிகிற திரியில், தாழ்மையான பாவியின் இருதயத்தில் அவர் நம்பிக்கையின் சுடரை உயிருடன் காப்பவராய் இருப்பார். அவர் தமது பணியை நிறைவேற்றுமளவும் வெளியேறுவதில்லை, மற்றும் அவருடைய நீதியின் கொள்கைகளுக்காக மக்களினங்கள் யாவும் காத்திருக்கும்.*

*யாரைக் குறித்து இப்படிப்பட்ட ஒளி நோக்கம் கொண்ட, நம்பிக்கை நிறைந்த, அர்த்தம் நிறைந்த கூற்றுக்கள் கூறப்பட முடியும்? மத்தேயுவின் படி, நாசரேத்தூர் இயேசுவே பழைமையான தீர்க்கதரிசனங்களில் பேசப்பட்ட தாசனாக இருந்தார்:*

> *இதோ, நான் தெரிந்து கொண்ட என்னுடைய தாசன்,*
> *என் ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசன்;*
> *என் ஆவியை அவர்மேல் அமரப் பண்ணுவேன்,*

*அவர் புறஜாதியாருக்கு நியாயத்தை அறிவிப்பார்.*
*வாக்குவாதம் செய்யவுமாட்டார்; கூக்குரலிடவுமாட்டார்;*
*அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை.*
*அவர் நியாயத்திற்கு ஜெயங்கிடைக்கப் பண்ணுகிறவரைக்கும்,*
*நெரிந்த நாணலை முறியாமலும்,*
*மங்கியெறிகிற திரியை அணைக்காமலும் இருப்பார்.*
*அவருடைய நாமத்தின்மேல் புறஜாதியார் நம்பிக்கையாயிருப்பார்கள் (மத். 12:18-21).*

## காரணம் ஒன்றும் இன்றி வெறுக்கப்பட்டவர் (சங். 35:19; 69:4)

*தாவீது அடிக்கடி காரணமற்ற பகையினால் பாதிக்கப்பட்டவராய் இருந்தார். "முகாந்திரமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள்" (சங். 35:19); "நிமித்தமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறார்கள்" (சங். 69:4) என்று எண்ணற்ற எதிரிகளைப் பற்றித் தாவீது குறைந்தபட்சம் இருமுறையாவது எழுதினார்.*

*ஒவ்வொரு மனிதப் பிறவியையும் ஆழமாக அன்புகூர்ந்த, மற்றும் எவர் ஒருவருக்கும் ஒருக்காலும் தீங்கு விளைவிக்க விரும்பாத அவரின் மீது தகுதியற்ற வகையில் வன்மம் காட்டப்பட்டது. அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை (1 பேது. 2:22). அவர் பரிசுத்தமானவராக, குற்றம் அறியாதவராக, மாசற்றவராக, பாவிகளிடம் இருந்து பிரிக்கப் பட்டவராக, வானங்களில் உயர்த்தப்பட்டவராக (எபி. 7:26) இருந்தார். இயேசுவின் சாந்தமும் தயவும் (2 கொரி. 10:1) சரியான சிந்தனையுள்ள மக்கள் யாவரும் அவரிடம் அன்பு வைக்கும்படி செய்தன.*

*இப்படிபட்ட ஒரு நபர், காரணமின்றிப் பகைக்கப்பட்டதின் பாதிப்புக்குள்ளானார் என்பது எவ்வளவு வினோதமாய் இருக்கின்றது! இருந்த போதிலும், இப்படிப்பட்ட, எதிர்பாராத மற்றும் வக்கிரமான சூழ்நிலை அவருக்கு உண்டாகும் என்பது முன்னுரைக்கப்பட்டிருந்தது: "இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்துமிருக்கிறார்கள். 'முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள்' என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும் படிக்கு இப்படியாயிற்று" (யோவா. 15:24, 25).*

*அவரது அன்பின் தன்மை, பரிசுத்த அலங்கார உடை உடுத்தியிருத்தல் ஆகியவற்றிற்கு அப்பால், அவர் தமது அற்புதங்களை நம்பகமான ஆதாரச் சான்றுகளாகக் கொண்டிருந்தார் ("வேறொருவரும் செய்யாத கிரியைகளை"; யோவா. 15:24). இவைகள் அவரது தெய்வீகத்துவத்தை விமர்சிக்கின்ற தெய்வ நம்பிக்கையற்ற பலருக்கு நம்பிக்கையூட்டப் போதுமான ஆதாரமாய் இருக்க வேண்டும். இருப்பினும் சிலர் நம்பி ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; அவர்கள் மேசியாவைப் புறக்கணித்ததால், "தங்கள் பாவத்தைக் குறித்துப் போக்குச் சொல்ல" இடமின்றி அவர்கள் விடப் பட்டுள்ளனர் (யோவா. 15:22). அவரது அன்பிற்கு வெறுப்பே*

*பதிற்செலுத்தப்பட்டது.*

## *தாழ்மையுள்ள ராஜா (சகரியா 9:9)*

*இஸ்ரவேல் ராஜாக்கள் தங்களுக்குப் பல குதிரைகளைச் சம்பாதி யாதிருக்கும்படிக்குத் தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார் (உபா. 17:16). சாலமோன் தமது வீண் எண்ணம் மற்றும் மனித பெலத்தைச் சார்ந்திருத்தல் ஆகியவற்றினால் தேவனுடைய நிபந்தனையை மீறினார் (1 இரா. 4:26). மேசியாவைப் பற்றி சகரியா ஒரு மிகத் தாழ்மையான பயணத்தை முன்னுரைத்தார்:*

> *சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு;*
> *எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி;*
> *இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்;*
> *அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும்*
> *தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும்*
> *கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்*
> *எப்பிராயீமினின்று இரதங்களையும்*
> *எருசலேமினின்று குதிரைகளையும் அற்றுப்போகப் பண்ணுவேன்,*
> *யுத்த வில்லும் இல்லாமற்போகும்;*
> *அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார்;*
> *அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறு சமுத்திரம் வரைக்கும்,*
> *நதி தொடங்கி பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும் (சக. 9:9, 10).*

*சகரியா எழுதிய வேளையில் யூதா தேசத்திற்கு ராஜா இல்லாதிருந்ததால் (கி.மு. 520ல்) அதன் பிறகும் இயேசுவைத் தவிர வேறொருவரையும் அது பெற்றிராததால் இவரது முன்னுரைத்தல் எல்லாவற்றிலும் மிக அதிகமாய்க் குறிப்பிடக் கூடியதாகும்! இந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளை இயேசு நிறைவேற்றிய விதமானது திகைப்படையச் செய்வதாக உள்ளது:*

> *... இயேசுவானவர் சீஷரில் இரண்டுபேரை நோக்கி, "உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; போனவுடனே அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டு வாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால், 'இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று' சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பி விடுவான்" என்று சொல்லி, அவர்களை அனுப்பினார்.*
>
> *" 'இதோ, உன் ராஜா சாந்த குணமுள்ளவராய்,*
> *கழுதையின்மேலும், கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும்*
> *ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று*
> *சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்'*
> *என்று, தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி*

*இதெல்லாம் நடந்தது.”*

> *சீஷர்கள் போய், இயேசு தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்து, கழுதையையும் குட்டியையும் கொண்டுவந்து, அவைகள்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு, அவரை ஏற்றினார்கள். திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள் (மத். 21:1-8).*

## யூதாவில் இராஜத்துவம் (ஆதி. 49:10)

*கி.மு. சுமார் 1644ல், கோசோன் நாட்டில் யாக்கோபு என்ற முற்பிதா தமது மரணப் படுக்கையில் அமர்ந்து கொண்டு, தம் மகன்களுக்கு ஆசீர்வாதங்கள் கூறிக் கொண்டிருந்தார். யூதாவைப் பற்றிப் பரிசுத்த ஆவியானவர் யாக்கோபின் மூலமாகப் பின்வருமாறு முன்னுரைத்தார்:*

> *சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள் (ஆதி. 49:10).*

*இந்த முன்னுரைத்தலானது தைரியமானதாகவும், வழக்கத்திற்கு மாறானதாகவும் இருந்தது. யூதா முதற் பேறான குமாரன் அல்ல (ஆதி. 49:3), மற்றும் அவன் சேஷ்ட புத்திர சுதந்திரத்தைப் பெற்றிருக்கவும் இல்லை (1 நாளா. 5:1). இருப்பினும், ஒரு மோசமான தொடக்கத்திற்குப் பிறகு, யூதா மனிதத்தன்மையையும், சுயநலமற்ற அன்பையும் காண்பித்திருந்தான், மற்றும் “தன் சகோதரரிலே பலத்திருந்தான்” (1 நாளா. 5:2). எதிர்காலத்தை நோக்கியதில் தேவன் யூதாவில் இருந்தே இஸ்ரவேலின் தலைவரும் பிரபுமானவர் வருவார் என்று தீர்மானம் செய்தார். முடிவாக, மகா பிரபு, மேசியா யூதேயாவிலிருந்து வருவார் (எபி. 7:14).*

*யூதாவின் சந்ததியாரில் எவரும் செங்கோலை, ஆளுகையின் கோலைப் பற்று முன்பு சுமார் அறுநூறு ஆண்டுகள் கடந்து செல்லும். பின்பு யூதாவின் சந்ததியாரான தாவீது தெற்கு இராஜ்யத்தின்மேல் இராஜாவாக அபிஷேகம் பெற்று, பின் தொடர்ந்து (கி.மு. சுமார் 1010ல்) வடக்கு இராஜ்யத்தின் மீதும் ஆளுகை உரிமை பெறுவார்.*

*யூதாவின் மீது செயல்படும் ராஜத்துவத்தைத் தேவன் நீக்குவதற்குப் பாவம் காரணமாய் இருந்தது. கி.மு. 590ல் தேவன் சிதேக்கியாவிடம் பின்வருமாறு கூறிய போது தம்மால் முடிந்த அளவு சகித்து இருந்தவரானார்:*

> *இஸ்ரவேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்துக்கு முடிவு வருங்காலத்தில் உன் நாள் வந்தது. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப் போடு; அது இனி முன்போலிராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன்*

*... (எசே. 21:25-27).*

*எசேக்கியேல் மூலமாய் உரைக்கப்பட்ட தேவனுடைய இந்தத் தீர்க்கதரிசனமானது நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, தேவன் பேரில் விசுவாசம் கொண்டிராதிருந்த நேபுகாத்நேச்சார் என்ற அரசன் வந்து, யூதாவை ஆண்ட கடைசி அரசனான சிதேக்கியாவை (2 இரா. 25:1-7) எசேக்கியேல் மூலமாய் உரைக்கப்பட்ட தேவனுடைய இந்தத் தீர்க்க தரிசனமானது அரச பதவியில் இருந்து நீக்கிப் போட்ட பொழுது நிறைவேற்றம் அடைந்தது.*

*எனவே, யூதாவின் சந்ததியார் எவரும் அரசத்துவம் பெறுவதைத் தேவன் முடித்து வைத்துக் கட்டளையிடும் அளவுக்குப் பாவம் பரவியிருந்தது. குறிப்பாக சிதேக்கியாவின் சகோதரனுடைய மகனான கோனியா என்பவனைப் பற்றி தேவன் பின்வருமாறு கூறினார்:*

*இந்தப் புருஷன் சந்தானமற்றவன்,*
*தன் நாட்களில் வாழ்வடையாதவன்*
*என்று இவனைக் குறித்து எழுதுங்கள்;*
*அவன் வித்தில் ஒருவனாகிலும் வாழ்வடைந்து,*
*தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து,*
*யூதாவில் அரசாளப் போகிறதில்லை (எரே. 22:30).*

*கோனியா பிள்ளையில்லாதவனாக, யூதாவை அரசாள ஒரு வாரிசை எப்பொழுதுமே பெற்றிராதவனாகவே இருந்தான். இருப்பினும், ஆயிரம் வருடங்களுக்கு முன்பு தேவன் யூதாவுக்குக் கொடுத்திருந்த வாக்குத் தத்தமானது ஷில்லோ, இளைப்பாறுதலின் மனிதர், பாதுகாப்பைச் சுமப்பவர் என்பவர் வரும்வரைக்கும் செங்கோல் யூதாவை விட்டு நீங்காது இருக்கும் என்று உறுதிப்படுத்திற்று. கோனியா (எக்கோனியா) சரீரப் பிரகாரமாகப் பிள்ளைகளற்றவனாய் இருந்ததில்லை (மத். 1:12), ஆனால் அவனது சந்ததியில் வந்த எவரும் நேரடியாக, சரீரப் பிரகாரமான முறையில் ஒருபொழுதும் அரசனாகவில்லை. செங்கோல் தக்க வைக்கப்பட்டது, ஆனால் அது சிதேக்கியா தொடங்கி, ஷில்லோ, இளைப்பாறுதலின் மனிதர், பாதுகாப்பைச் சுமப்பவர் எனப்படும் இயேசு வரைக்கும் பயன் படுத்தப்படாமலேயே இருந்தது!*

*இயேசு தமது முதல் வருகையின் போது மாம்சப் பிரகாரமாக யூதாவின்மேல் ராஜாவாக வந்திருந்தால், அல்லது, அவரது இரண்டாம் வருகையின் போது அவர் எருசலேமின் மேல் மாம்சப் பிரகாரமான ஒரு ராஜாவாயிருப்பார் என்றால், எரேமியாவின் மூலமாகப் பழைய ஏற்பாட்டில் தரப்பட்டுள்ள தேவனுடைய தீர்க்கதரிசனமானது தாழத் தரையில் வீழ்வதாயிருக்கும். பெந்தெகொஸ்தே நாளன்று (மே. 28, கி.பி. 30) இயேசு ஆவிக்குரிய ராஜாவாகி, பரலோகத்தில் தேவனுடைய வலது பாரிசத்திலிருந்து ஆளத் தொடங்கிய பொழுது, அது பதினாறு நூற்றாண்டுகள் வயதாயிருந்த யாக்கோபின் பின்வரும் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது:*

*சமாதான கர்த்தர் வருமளவும்*
*செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை,*
*நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை;*
*ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள் (ஆதி. 49:10).*

## கிளை (எரேமியா 23:5)

*தாவரவியலில் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொடரைத் தேவன் தம்முடைய குமாரனை விவரிப்பதற்கு ஒரு விளக்கமாகத் தேர்ந்தெடுத்தார்: Tsemah,[2] "கிளை." ஈசாய் மற்றும் தாவீதின் வம்சா வழியில் இயேசு ஒரு துளிராக அல்லது கிளையாக இருப்பார் (ஏசா. 11:1). சரீர அழகைப் பொறுத்த மட்டில் அவர் இளங்கிளையைப் போலவும், வறண்ட நிலத்தி லிருந்து துளிர்க்கிற வேரைப் போலவும் இருப்பார் (ஏசா. 53:2). இருப்பினும் ஆவிக்குரிய வகையில் கிளை அல்லது துளிர் அல்லது முளை அல்லது இளம் தளிர் (சக. 6:12) என்று அழைக்கப்படுபவர் மிகவும் வசீகரமானவராக இருப்பார். அவரது பரிசுத்தத்தின் சவுந்தரியமானது மனு புத்திரர் அனைவரிலும் மேலானது (சங். 45:2). அவருடைய மகிமையானது பிதாவுக்கு ஒரே பேறான குமாரனுடைய மகிமைக்கு ஏற்றதாக, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்ததாக இருக்கும் (யோவா. 1:14). அவர் சபையாகிய கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார் (சக. 6:13), மற்றும் ராஜாவாக அரசாளுவார். இந்த ராஜா ஞானமாய் ராஜரீகம் பண்ணி, நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார் (எரே. 23:5).*

*Tsemah, என்ற இந்தக் கிளை தமது ஆவிக்குரிய அரியணையில் அமர்ந்து ஆட்சி புரிவதுமின்றி, தமது அரியணையில் அவர் ஆசாரியராகவும் விளங்குவார். வம்சா வழியின்படி அவர் ஆசாரியத்துவத்திற்குத் தகுதியற்றவராயிருப்பார். அவரது மூதாதையரான தாவீதின் மூலம் அவர், யூதா கோத்திரத்துக் கிளையாக இருந்தார். "அந்தக் கோத்திரத்தாரைக் குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை" (எபி. 7:14). ஆகையால் அவர் ஒருபோதும் சரீரப் பிரகாரமாக, சொல்லர்த்தமாக ஆசாரியராய் இருப்பதில்லை. அவர் பூமிக்குத் திரும்ப வருவதாயிருந்தால், அவர் ஆசாரியராயிருக்க மாட்டார் (எபி. 8:4).*

*அவரது ஆசாரியத்துவம் ஆவிக்குரியதாகவும் பரலோகத்திற்குரிய தாகவும் இருப்பது போலவே அவரது ஆளுகையும் ஆவிக்குரிய விதத்தில், பரலோகத்திற்குரியதாக இருக்கின்றது. பரலோகத்தில் பிரவேசித்து பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தில் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிற ஒரு பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கின்றார் (எபி. 8:1). கிளையானவர் இனி ஒருபொழுதும் மாம்சத்தில் பிரதான ஆசாரியராகவும், ராஜாவாகவும் இருப்பதில்லை, மற்றும் அவர் ஒருபொழுதும் அப்படி யாகவும் மாட்டார் (2 கொரி. 5:16). அவர் தமக்குச் சொந்தமானவர் களுக்காக மறுபடியும் வருகையில் அவர் மீண்டும் மாம்சமாக மாட்டார் அல்லது இந்த பூமியில் அவர் தம் கால்களை வைக்கவும் மாட்டார். அதற்குப் பதிலாக, உயிர்த்தெழுந்து, மாற்றம் பெற்று, அழிவற்ற சரீரங்களைப் பெற்று வானத்திலே அவரைச் சந்திக்கச் செல்வதற்கு அவருடைய மகிமையின்*

*சரீரத்தினுடைய சாயலாகும்படியான கட்டளையை அவர் இடுவார் (1 கொரி. 15:51, 52; பிலி. 3:20, 21; 1 தெச. 4:16-18). Tsemah, கிளை என்பதைப் பற்றி மகிமையான விஷயங்கள் பேசப்பட்டுள்ளன.*

## தேவனாக முடிசூட்டப்பட்டவர்
## *(சங். 45:6, 7)*

*பூமிக்குரிய (எபி.: 'adam), அழியக்கூடிய (எபி.: 'enosh) இயல்பைச் சுட்டிக்காட்டி ''மனிதனை'' அடையாளப்படுத்தச் சில எபிரெய வார்த்தைகள் பயன்பட்டன. மற்றவை "மனிதனை" ஒரு புருஷனாக (எபி.: 'ish) பலமுள்ளவனாக (எபி.: gibbor) அல்லது தேவனுடைய சாயலில் பங்கேற்பவனாக(எபி.: 'elohim)ச் சுட்டிக்காட்டின. "நீங்கள் தேவர்கள் [எபி.: 'elohim] என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும்" (சங். 82:6) தேவன் அறிவித்த பொழுது அவர் மனிதனின் பரலோக இயல்பைப் பற்றியே பேசினார். இவ்விதமாக, "தேவன்" என்று மொழி பெயர்க்கப்பட்ட (எபி.: 'elohim) வார்த்தையே மனிதப் பிறவிகளை விவரிக்கவும் பயன்பட்டது. இதன் தமிழ் மொழிபெயர்ப்பானது ("தேவர்கள்") தெய்வீகத்துவமானர்கள் பலர் உள்ளனர் என்ற தவறான கருத்தைத் தருவதாக உள்ளது. இருப்பினும் ஒரே ஒரு மெய்யான தேவன்தாம் இருக்கின்றார் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கின்றது (உபா. 6:4; ஏசா. 44:6; 1 கொரி. 8:2, 3). இது உண்மையாயிருக்கும்போது மனிதர்களையும் தேவனையும் விவரிக்க ஒரே வார்த்தையைச் சங்கீதக்காரர் பயன்படுத்தியதானது மனித ஆத்துமாவின் பரலோகத்திற்குரிய இயல்பைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எந்த ஒரு மிருகமும் 'elohim ("தேவன்") என்று ஒரு பொழுதும் குறிப்பிடப்படவில்லை. மனிதனே அவ்விதம் குறிப்பிடப்பட்டுள்ளான்.*

*இவ்விரு கருத்துக்களில் 'elohim என்ற வார்த்தை தெளிவாகப் பயன்படுகின்ற தன்மையானது ("தேவன்" மற்றும் "தேவ சாயலில் மனிதன்") நாம் சங். 45:6, 7ஐப் புரிந்து கொள்வதற்கு உதவுகின்றது:*

> *தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது,*
> *உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.*
> *நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறீர்;*
> *ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும்*
> *உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்.*

*சங்கீதம் 45, தொடக்கத்தில் சாலொமோனின் திருமணங்களில் ஒன்றைக் குறிப்பிட்டது என்ற வகையில் மிகவும் சிறப்பாக விளக்கப்பட்டது. வசனம் 6 மற்றும் 7 ஆகியவை புதிய புருஷன் மேன்மையாய் உயர்த்தப்பட்டதற்கு பாராட்டுரையாக உள்ளன: அவர் நீதியுள்ள ராஜாவாய் இருக்கின்றார், மற்றும் அவர் தேவனாக (அதாவது தேவனுடைய சாயலாக) இருக்கின்றார்.*

*இருப்பினும், சங். 45:6, 7ஆனது ''சாலொமோனிலும் பெரியவர்''*

*(மத். 12:42) ஒருவரில் இன்னமும் உயர்வான வகையில் நிறைவேற்றம் அடைய வேண்டியதாயிருந்தது. "சீஷன் தன் குருவிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல" (மத். 10:24) என்றிருக்கையில், சாலொமோனின் குமாரர் தம்முடைய மூதாதையரைப் பார்க்கிலும் மகா பெரியவராயிருந்தார். கி.பி. 30, பெந்தெகொஸ்தே நாளன்று - பரலோகத்தில், தேவனுடைய வலது பாரிசத்தில் - இயேசு பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் ராஜாவாக ஏற்படுத்தப்பட்டார் (எபே. 1:22, 23; மத். 28:18). அவரது முடி சூட்டுதலின் நாளில், பிதாவாகிய தேவன் முதலில் சாலொமோனுக்குப் பயன்படுத்தப்பட்ட மொழி நடையை இவருக்குத் தகுதிப் படுத்தி உயர்த்தினார்:*

> குமாரனை நோக்கி [தேவன்],
>
> *தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது,*
> *உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள*
> *செங்கோலாயிருக்கிறது.*
> *நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்;*
> *ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப்*
> *பார்க்கிலும்*
> *உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்*
> *என்று கூறுகின்றார் (எபி. 1:8, 9).*

*சாலொமோனின் ஆளுகையையும் இயேசுவின் ஆளுகையையும் விவரிப்பதற்குத் தேவன் "நீதி" என்ற அதே வார்த்தையைப் பயன் படுத்தினார்; ஆனால் அது இயேசுவுக்குப் பயன்படுத்தப்பட்டபொழுது மிக உயர்வான மற்றும் மிக மேன்மைப் படுத்தப்பட்ட ஒன்றை அர்த்தப் படுத்தியது. அது போலவே, சாலொமோனின் நபர்த்துவத்தை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட "தேவன்" (அதாவது சாலொமோனின் தேவ சாயல்) என்ற அதே வார்த்தையானது இயேசுவின் இயல்பை (அதாவது தெய்வீகத்துவத்தை) விவரிக்கப் பயன்படுத்தப்பட்டது, ஆனால் அது சாலொமோனுக்குப் பயன்படுத்தப்பட்டபோது கொடுத்ததைக் காட்டிலும் மாபெரும் அர்த்தத்தை இயேசுவுக்கும் பயன்படுத்தப்பட்ட போது கொடுத்தது.*

---

*குறிப்புகள்*

*[1]மேசியாவின் பிறப்பு மற்றும் வாழ்வு பற்றிய கூடுதலான பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை "வேதாகமத்தின் ஏவுதலும் அதிகாரமுடைமையும்" என்ற தலைப்பில் வெளியான இன்றைக்கான சத்தியம் இதழில் ஆராயப்பட்டுள்ளன. பின்வரும் தீர்க்கதரிசனங்கள் கிறிஸ்துவுக்குள் நிறைவேறியதாகக் காண்பிக்கப் பட்டன: "தாவீதின் குமாரன்" (2 சாமு. 7:12); "பெத்லகேமியர்" (மீகா. 5:2) மற்றும் "எகிப்தில் இருந்து அழைக்கப்பட்டவர்" (ஓசி. 11:1). [2]*"Shoot" *என்பதற்கான*

*தாவரவியலின் மற்ற சொற்றொடர்கள் இயேசுவைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டுள்ளன, அவைகளில் hoter மற்றும் netser (ஏசா. 11:1) மற்றும் Yonek (ஏசா. 53:2) ஆகியவையும் உள்ளடங்கும்.*

## *இயேசுவைக் காணுதல்*

*மனிதர்களின் புத்தகங்களினால் கவரப்பட்ட ஒரு பிரசங்கியார் தத்துவத்திலிருந்து கற்றறிந்த பிரசங்கங்களைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். ஒரு ஞாயிறன்று அவர் பிரசங்க மேடையில் ஒரு குறிப்பைக் கண்டார்: ''ஐயா, நாங்கள் இயேசுவைக் காண விரும்புகின்றோம்'' யோவான் 12:21. பிரசங்கியார் உடனடியாகத் தமது தவறைக் கண்டு, காலம் மற்றும் நித்தியம் ஆகியவற்றின் மையச் சித்தரிப்பு பற்றிய பிரசங்கத்திற் காக வேதாகமத்திற்குத் திரும்பினார். அவர் இயேசுவின் மேன்மைகளை எடுத்துக் காண்பித்து ஒரு சில ஞாயிற்றுக் கிழமைகளுக்குப் பின்பு, பிரசங்க மேடையில் இன்னொரு குறிப்பைக் கண்டார்: "சீஷர்கள் கர்த்தரைக் கண்டு, சந்தோஷப் பட்டார்கள் யோவா. 20:20."*

*"லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும்" (கொலோ. 2:8) மோசம் போக்கப்படுவதற்கு எதிராக வேதவசனங்கள் கிறிஸ்தவர்களை எச்சரிக்கின்றன. பிரசங்க மேடையானது இயேசு இல்லாமல் வெறுமையாகக் கூடுவது போலவே, எந்த ஒரு கிறிஸ்தவரின் வாழ்வும் கூட வெறுமையாகக் கூடும். சிந்திப்பதும், பேசுவதும் மற்றும் செயல்படுவதும் ஒவ்வொரு சீஷனுடைய பேராவலாய் இருக்க வேண்டும், இப்படிப்பட்ட சீஷனோடுள்ள தொடர்பினால் கிறிஸ்தவனல்லா தவர்களும் இயேசுவைப் பற்றி சிந்திப்பார்கள்.*

*அப். 4:13, கல்வியறிவற்ற, கல்லூரி செல்லாத இரு மனிதர்களின் நடக்கை மூலமாக, "அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்கள்'' என்று புறம்பே உள்ளவர்கள் அறியும்படி செய்தனர். நாம் யாவரும் குறைவுடையவர்களே, ஆனால் ஒவ்வொரு கிறிஸ்தவரும், "கிறிஸ்து எனக்கு ஜீவன்" (பிலி. 1:21) என்று கூறக் கூடியவராய் இருக்க வேண்டும்: "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலா. 2:20).*

# அவரது மரணத்தில் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம்

*இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன நிறைவேற்றத்தை நாம் எவ்வளவு தெளிவாகக் காண்கின்றோம்! நமது மீட்பர் பிறப்பதற்கு முன்பாகவே, அவர் சிலுவையில் அறையப்படுதல் பற்றிய விபரங்கள் தீர்க்கதரிசனத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. தீர்க்கதரிசனம் மற்றும் நிறைவேற்றத்திற்கான பின்வரும் உதாரணங்களைப் படியுங்கள். அவைகள் இயேசுவை தேவனுடைய தெய்வீக குமாரன்*[1] *என்று நம்பும் உங்கள் விசுவாசத்தை வளர்க்க அனுமதியுங்கள்:*

## சகலமும் தம்முடைய பாதங்களுக்குக் கீழ்ப்படப் பெற்றிருந்த மனிதர் (சங். 8:4-6)

*ஆதி. 1:26-28ல் தேவன், ஆதாமுக்கும் அவரது பின் சந்ததிகளுக்கும், பூமி முழுவதையும் ஆண்டு கொள்ளும்படி கட்டளை கொடுத்தார். சங்கீதம் 8ஆனது, மனித இனத்தின் மீது தேவன் கொண்டுள்ள கவனத்திற்காக அவரைத் துதித்து நன்றி செலுத்துகின்ற மற்றும் மேற்சொன்ன கட்டளையின் விரிவான அளவிலான திருப்பிக் கூறுதலாக இருக்கின்றது. வசனம் 4 பின்வருமாறு கூறுகின்றது.*

> *மனுஷனை நீர் நினைக்கிறதற்கும்,*
> *மனுஷ குமாரனை நீர் விசுவாசிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்?*

*இந்த அண்டத்தின் அளவுடன் ஒப்பிடுகையில் மனிதன் என்பவன் மிகமிகச் சிறியவன் ஆவான். அவனது உருவமானது அவனுடைய தகுதியைத் தீர்மானிக்கும் என்றால், மனிதன் அதிகமாய் எண்ணப்பட மாட்டான். இருப்பினும் "இஸ்ரவேலில் இனிமையாய்ப் பாடினவர்" விளக்கப்படுத்தியபடி, மனிதனுடைய உயர்ந்த மதிப்பானது இரு பகுதிகளில் உள்ளது: (1) அவன் தூதர்களைக் காட்டிலும் சற்றே சிறியவனாகப் படைக்கப்பட்டான் (2) உலகம் முழுவதற்கும் அவன்*

அதிகாரம் பெற்றிருக்கின்றான். மாபெரும் தேவன், " 'சகலத்தையும் அவனுக்குக் [மனிதனுக்குக்] கீழ்ப்படுத்தினார்' என்கிற விஷயத்தில், அவர் அவனுக்குக் கீழ்ப்படுத்தாத பொருள் ஒன்றுமில்லை" (எபி. 2:8).

ஆதாமின் காலத்தில் இருந்தே, மனிதன் நிலையாக, ஒவ்வொரு விலங்கையும் கீழ்ப்படுத்தியுள்ளான், மற்றும் அவன் பூமி, கடல், ஆகாயம் மற்றும் வானவெளி ஆகியவற்றை வெற்றிக் கொண்டுள்ளான். மிகவும் சந்தேகம் கொண்ட மக்களும் கூட இது அல்லது அது நடத்தப்பட முடியாது என்று சொல்லத் தயங்குமளவுக்கு மனிதர்களால் தங்களது சுற்றுச் சூழலின் மீது அதிகமான வெற்றிகள் சாதிக்கப்பட்டுள்ளன.

ஆதாமில் இருந்து இயேசுவரை ஏற்பட்டிருந்த மனித வளர்ச்சிகள் ஏராளமாய் இருந்தும், வெற்றி கொள்ளப்பட முடியாத விரோதி ஒன்று இன்னமும் எஞ்சியிருந்தது: மரணம். இரண்டு மனிதர்கள் (ஆதி. 5:24; 2 இரா. 2:11) மரிக்க வேண்டியிராமல் போனாலும், அவர்கள் விதி விலக்குகளாக மட்டுமே இருந்தனர்; ஏனெனில் எஞ்சியிருந்த மனித குலம் முழுமைக்கும் ஒரேதரம் மரிப்பது என்பது நியமிக்கப்பட்டிருந்தது (எபி. 9:27). விசுவாசத்தில் உள்ள மனிதர்களைத் தவிர, மற்ற யாவருக்கும் மரணத்தின் நிச்சயத்தன்மையானது கவலையின் சவப் பெட்டியையே/மூடலையே விட்டுச் செல்லுகின்றது. மரணபயத்தின் மூலமாக மனிதர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் அடிமைத்தனத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தனர் (எபி. 2:15). மிகக் குறைவாகவே நடைபெற்ற உயிர்த்தெழுதலின் நிகழ்ச்சிகள் (1 இரா. 17:21, 22; 2 இரா. 4:35; 13:21) அழியாத நம்பிக்கையைக் கொண்டு வர முடியாதிருந்தன, ஏனெனில் உயிர்ப்பிக்கப்பட்ட அவர்கள் ஒவ்வொருவரும் மறுபடியும் மரிக்க வேண்டியதாய் இருந்தது.[2] மரணம் இன்னமும் ஆளுகை ஒன்றைப் பெற்றிருந்தது, மனிதர்களின் உடல்கள் அழிவைக் கண்டன. மரணத்தின் கட்டில் இருந்து மனிதன் எவ்விதம் விடுவிக்கப்படக் கூடும்? "சகல"மும் மனிதனுக்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்று தேவன் உண்மையிலேயே அர்த்தப்படுத்தியிருந்தாரா? மனிதனின் அதிகாரத்திற்குப் பேருருவம் கொண்ட, பயமூட்டும் ஒரு விதிவிலக்கு இருந்தேயாக வேண்டுமா?

தேவனுடைய ஞானத்தில், இயேசு பூமிக்கு அனுப்பப்பட்டார். அவர் தூதர்களின் இயல்புடன் வரவில்லை. அப்படி அவர் வந்திருந்தால், எல்லாவற்றின் மீதும் ஆளுகை உரிமை என்ற "மனிதனுக்கான" தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு அவர் உட்பட்டிருக்க முடியாது (ஆதி. 1:26; சங். 8:4). அத்துடன், தூதர்கள் மரிப்பதில்லை (லூக். 20:36). மரணத்தின் மூலமாக ஒரு மனிதர் என்றென்றும் மரணத்தை வென்றவராவார் என்பது பரலோகத்தின் ஞானமாய் இருந்தது.

அதன்படியே தேவன், இயேசுவை ஒரு மனிதராக, மாம்சம் மற்றும் இரத்தத்தில் பங்கேற்பவராக, மரணத்தினால் பாதிக்கப்படுபவராக, "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்'' (எபி. 2:14) அனுப்பினார். அவரது உயிர்த்தெழுதலானது, "மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லை" (ரோமர் 6:9) என்ற வகையில் மற்ற எல்லாவற்றிலும் இருந்து மாறுபட்டதாக

*இருந்தது. அவர் இனி, "அழிவுக்குட்படுவதில்லை" (அப். 13:34). "நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்" (யோவா. 14:19) என்று அவர் வாக்குத்தத்தம் தர முடிந்தது.*

*இயேசுவின் உயிர்த்தெழுதல் நடைபெற்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னான காலமாகிய இப்பொழுதும் கூட, தேவன் மனிதனுக்குச் செய்துள்ளதாக ஆதி. 1:26 மற்றும் சங். 8:4ல் உள்ள வாக்குத்தத்தம் முற்றிலுமாக நிறைவேறியதை நாம் கண்டிருக்கவில்லை. இருப்பினும் இப்பொழுது எல்லா பயமும் அகன்று போயிற்று, ஏனெனில் இயேசு என்றென்றும் வாழும்படியாகத் தாமே உயிர்த்தெழுந்து, மரணத்தின் திறவுகோல்களை உடையவராய் இருக்க முடிந்தது என்றால் (வெளி. 1:17, 18), நமது வெற்றியானது அவர் மூலம் நிச்சயப் படுத்தப்பட்டது என்பதை நாம் அறிகின்றோம். தேவன் ஆதியிலே திட்டமிட்டது எதுவோ, அது நன்முறையில் செய்யப்பட்டாயிற்று! இயேசு "எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படும் கடைசிச் சத்துரு மரணம். சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப் படுத்தினாரே" (1 கொரி. 15:25-27அ).*

*இவ்விதமாக எல்லா மனிதர்களுக்குமாக ஆதியில் ஏற்படுத்தப்பட்ட ஒரு முன்னுரைத்தலானது குறிப்பாக ஒரு மனிதப் பிறவி பற்றிய, கிறிஸ்து இயேசு என்ற மனிதர் பற்றிய விலையேறிய முன்னுரைத்தலாக இருந்தது. அவரின்றி, தேவனால் ஆதாமுக்கு ஏற்படுத்தப்பட்டு, சங்கீதக்காரர் வழியாக மீண்டும் கூறப்பட்ட வாக்குத்தத்தமானது தரையில் விழுந்திருக்கும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக நமக்கு வெற்றியை அளிக்கின்ற தேவனுக்கு நன்றி! தேவனுடைய ஆச்சரியமான தீர்க்கதரிசன வசனத்திற்காக நன்றி!*

## புறக்கணிக்கப்பட்ட மூலைக்கல்
## *(சங். 118:22, 23)*

*சங். 118:22, கட்டிடத்தின் கல் என்ற வகையில் இயேசு புறக்கணிக்கப் படுவார் என்று முன்னுரைத்தது:*

> *வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே,*
> *மூலைக்குத் தலைக்கல்லாயிற்று.*

*இயேசு தம்மை யூதர்கள் புறக்கணிப்பார்கள் என்று சுட்டிக் காட்டிய பொழுது, இந்த முன்னுரைப்பின் கூற்றைக் குறிப்பிட்டார்:*

> *நீங்கள் வேதத்தில் இவ்விதம் ஒருக்காலும் வாசிக்கவில்லையா?*
>
> *வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே*
> *மூலைக்குத் தலைக்கல்லாயிற்று,*
> *அது கர்த்தராலே ஆயிற்று,*

*அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது (மத். 21:42).*

*பேதுரு, யூத அதிகாரிகளுக்குப் பேசியதில் இயேசு செய்திருந்த அதே வழிமுறையில் சங். 118:22, 23ஐ பயன்படுத்தினார்: "வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர்" (அப். 4:11).*

*சங். 118:22, 23 உடன், இன்னொரு முன்னுரைத்தல் கூற்றும் கூட இயேசுவை ஒரு கல்லாக (உருவகித்துக்) கூறியது. சுவிசேஷத் தீர்க்கதரிசியானவர், இயேசு "இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்துக்கும் தடுக்கலின் கல்லும், இடறுதலின் கன்மலையும், எருசலேமின் குடிகளுக்குச் சுருக்கும் கண்ணியுமாயிருப்பார். அவர்களில் அநேகர் இடறி விழுந்து நொறுங்கிச் சிக்குண்டு பிடிபடுவார்கள்" என்று எழுதினார் (ஏசா. 8:14ஆ, 15).*

*இயேசு, "இந்தக் கல்லின் மேல் விழுகிறவன் நொறுங்கிப் போவான், இது எவன் மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும்" என்று (மத். 21:44) கூறிய போது ஏசாயாவின் வாய்மொழியைக் குறிப்பிட்டு இருப்பார் என்பது உறுதி. ஏசாயாவின் முன்னுரைத்தலை இயேசு பயன்படுத்திய விதமானது அவர் மிகச் சரியாக எதை அர்த்தப்படுத்தினார் என்பதை அங்கு நின்று கொண்டிருந்தவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் மிகவும் தெளிவாய் இருந்தது: "பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவருடைய உவமைகளைக் கேட்டு, தங்களைக் குறித்துச் சொல்லுகிறார் என்று அறிந்து," (மத். 21:45) என வாசிக்கிறோம்.*

*இஸ்ரவேலர்கள் இயேசுவைப் புறக்கணித்த பொழுது ஏசாயாவின் வாய்மொழி நிறைவேற்றம் அடைந்தது என்று பின்னாளில் பவுல் குறிப்பிட்டார்: "அவர்கள், … இடறுதற்கான கல்லில் இடறினார்கள். இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்" (ரோமர் 9:32ஆ, 33அ).*

*கடைசியில், இயேசு மூலைக்கல் என்ற வகையில் புறக் கணிக்கப்படுவார் என்ற பழைய ஏற்பாட்டு முன்னுரைத்தல்கள் இரண்டும் பின்னாளில் பேதுருவால் அவரது முதலாம் நிருபத்தில் குறிப்பிடப்பட்டன:*

*… கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ,*

*வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட*
*பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல்*

*இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று.*
*அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து*
*இடறுகிறார்கள்;*

*அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள் (1 பேது. 2:7, 8).*

## *நண்பன் ஒருவனால் காட்டிக் கொடுக்கப்படுதல் (சங். 41:9)*

*அப்சலோமின் ஒரு ஆலோசனையாளராயிருந்த அகித் தோப்பேல், பழைய ஏற்பாட்டின் யூதாஸ் என்று அழைக்கப்படுகின்றான். தாவீது மற்றும் அப்சலோமின் நாட்களில் அவனது ஆலோசனை மதிக்கப்பட்டது: "... தேவனுடைய வாக்கைப் போலிருந்தது, அப்படி அகித்தோப்பேலின் ஆலோசனையெல்லாம் தாவீதுக்கும் இருந்தது, அப்சலோமுக்கும் அப்படியே இருந்தது" (2 சாமு. 16:23). அகித்தோப்பேல் அடிக்கடி உணவுக்கு அரண்மனை விருந்தாளியாய் இருந்தான் என்பதில் சந்தேகம் இல்லை. பின்னாளில், அவன் அப்சலோமுக்கு ஆதரவாக, தாவீதிற்கு எதிராகத் திரும்பினான். தாவீது தாம் முழுமையாய் நம்பியிருந்த அரசவை ஆலோசகனும் மற்றும் தனிப்பட்ட நம்பிக்கைக்குரியவனுமாகிய அவனுடைய காட்டிக் கொடுக்கும் கயமைச் செயலை அறிந்த பொழுது, சங். 41:9ல் வெளிப்படுத்தப்பட்ட உணர்வுகள் அவரது இருதயத்தில் கலக்கத்தை ஏற்படுத்தின: "என் பிராண சிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்."*

*இயேசுவும் கூட, நண்பனாய் நடிப்பவன் ஒருவனால் காட்டிக் கொடுக்கப்படுதல் என்றால் என்ன என்பதை அறிந்தார். தாவீது தாம் காட்டிக் கொடுக்கப்படும் வரையிலும் அவ்வாறு நடக்கும் என்று அறியாதவராக இருந்தார் என்பது உறுதி. இதற்கு முரண்பட்ட வகையில், இயேசு தமது அப்போஸ்தலர்களில் யார் தமக்கு எதிராகத் திரும்புவார் என்பது பற்றியும் ஆதி முதலாக அறிந்திருந்தார் (யோவா. 6:64), மற்றும் அவர் காட்டிக்கொடுக்கப் படுவதற்கு முன்பே அவ்விஷயத்தைப் பற்றிப் பேசினார். அவருடைய தெய்வீகத்துவம் பற்றிக் கூடுதலாக மற்ற சீஷர்கள் உறுதிப்பாடு பெறும்படியாக என்ன நடக்கும் என்பதை இயேசு முன்னதாகவே வெளிப்படுத்தினார்:*

> *உங்களெல்லாரையுங்குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்து கொண்டவர்களை அறிவேன்; ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான். அது நடக்கும்போது, நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவா. 13:18, 19).*

*இயேசு, தமது முன்னறிவானது தமது தெய்வீகத்துவத்திற்கு ஒரு ஆதாரமாயிருந்ததென்று நம்பினார் என்பது தெளிவாக உள்ளது.*

## *காட்டிக் கொடுத்ததற்கான கைக்கூலி புறக்கணிக்கப்பட்டது (சகரியா 11:13)*

*இயேசுவைக் காட்டிக் கொடுப்பவன் தனது பேரத்தினால் மனவியாதிப்படும் போது அவரது இரத்தக் கிரயமான பணத்தை என்ன*

செய்வான் என்று சகரியா மிகக் குறிப்பாகக் கூறியிருந்தார்: "நான் அந்த முப்பது வெள்ளிக்காசை எடுத்து, அவைகளைக் குயவனுக்கென்று கர்த்தருடைய ஆலயத்திலே எறிந்து விட்டேன்" (சக. 11:13).

மத்தேயுவின் விவரிப்பின்படி, இந்தப் பழைமையான தீர்க்க தரிசனத்தின் நிறைவேற்றமானது சுற்றி வளைத்ததாக இருந்தது:[3]

> அப்பொழுது, அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப் பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டு வந்து: குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான். அதற்கு அவர்கள், எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றார்கள். அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான். பிரதான ஆசாரியர் அந்த வெள்ளிக்காசை எடுத்து, இது இரத்தக் கிரயமானதால், காணிக்கைப் பெட்டியிலே இதைப் போடலாகாதென்று சொல்லி, ஆலோசனை பண்ணின பின்பு, அந்நியரை அடக்கம் பண்ணுவதற்குக் குயவனுடைய நிலத்தை அதினாலே கொண்டார்கள். இதனிமித்தம் அந்த நிலம் இந்நாள் வரைக்கும் இரத்தநிலம் என்னப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக் காசை எடுத்து, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று (மத். 27:3-10).

யூதாஸின் பணமானது குயவனின் நிலம் ஒன்றை வாங்குவதற்குப் பயன்பட்டது. ''குயவனின் நிலம்'' என்பது முன்னவர் குயவர்களால் பயன்படுத்தப்பட்டதென்ற வகையில் அநேகமாய் அப்பெயரில் நன்கு அறியப்பட்டிருந்தது எனலாம். ஒருவேளை அந்நிலத்தில் இருந்த களிமண் தீர்ந்து போனதால் அது மிகவும் மலிவான விலையில் வாங்கப் பட்டிருக்க முடிந்திருக்கும்.[4]

பல மொழிபெயர்ப்புக்களில் சகரியாவின் தீர்க்கதரிசனத்தை, மத்தேயு, எரேமியாவினிடத்திலிருந்து வருவதாகக் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு வியப்படையலாம். எரேமியாவும் இந்த தீர்க்கதரிசனத்தை வாய் மொழியாகப் பேசி ஆனால் இதைத் தமது புத்தகத்தில் எழுதி வைக்காது இருந்திருக்கக்கூடும். மத்தேயு, சகரியாவின் எழுத்துப் பூர்வமான முன்னு ரைத்தலைக் குறிப்பிட்டார் என்பதே மிகவும் ஏற்புடையதாகும்.

இருந்தாலும், மத்தேயு இந்த முன்னுரைப்பை இன்னொரு எழுத்தாளருக்குரியதாக்கியது ஏன்? உண்மையில் மத்தேயு இப்படிச் செய்யவில்லை. அவர் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டிருந்தார் (யோவா. 14:26; 16:13) அப்படித் தவறு எதுவும் அவரால் செய்திருக்க முடிந்திராது. மற்றும் அவர் அப்படித் தவறு செய்திருந்தால் தொடக்க காலத்தில் இருந்த நம்பிக்கையற்ற யூதர்கள் அத்தவறைப் பற்றிப்பிடித்துப் பெரிது படுத்தியிருந்திருப்பார்கள். அப்படிப்பட்ட தாக்குதல் எதுவும்

அறியப்படவில்லை.

மொழிபெயர்ப்புக்களில் தவறு எவ்விதம் எழும்பிற்று? மத்தேயுவின் மூல எழுத்துக்கள் இருப்பதாக அறியப்படவில்லை. பிரதிகள் மட்டும் இன்னும் உள்ளன, அவைகளில் மிக முந்தியது மத்தேயு எழுதி முடித்து நீண்ட காலத்திற்குப் பின் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். சில பிரதியாளர்கள், பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை, அறிய வேண்டிய அளவுக்கு அறியாமல், "சகரியா" என்பதற்குப் பதிலாக கவனக் குறைவாக "எரேமியா" என்று எழுதியிருக்கக் கூடும். பின்னாளில் பிரதியெடுப்பவர்கள் அது தவறென்று தெளிவாக அறிந்தும் கூட அதைத் திருத்துவதற்குத் தயங்கியிருக்கலாம்.

பழங்காலப் பிரதிகள் சிலவற்றில், மத். 27:9ல் ''எரேமியா'' என்பதற்குப்பதில் ''சகரியா'' என்றே உள்ளது. ஒருவேளை இவைகள் மத்தேயுவின் மூலப் பதிவேட்டின் சரியான பிரதிகளாய் இருக்கலாம். மற்றும் மத். 27:9ல் "தீர்க்கதரிசியின் மூலமாக" முன்னுரைக்கப்பட்டதென்று மட்டும் கூறுகின்ற பழங்காலப் பிரதிகளும் உள்ளன. இந்தப் பிரதியாளர்கள் மத்தேயுவின் மூல/ஆதிக் கூற்றைப் பின்பற்றியிருக்கலாம். இந்த விபரத்தின் விளக்கம் எதுவாயிருப்பினும்,[5] காட்டிக் கொடுத்ததற்கான கைக்கூலியைக் கொண்டு என்ன செய்யப்படும் என்பதற்கான தீர்க்கதரிசியின் முன்னு ரைத்தல் குறிப்பிடத் தக்கதாகும்.

## அவரது உடைகள் பங்கிடப்பட்டது
## (சங். 22:18)

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் சில - அருகாமை மற்றும் வெகு தொலைவு, நேரடியானது மற்றும் சுற்றி வளைத்தது, அடிப்படையானது மற்றும் துணை நிலையானது என்ற - இரண்டு அர்த்தங்கள் உடையவைகளாய் இருந்தன. மற்றவை இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனம் மட்டும் கொண்டிருந்தன. உதாரணமாக, சங். 22:18ஐக் கவனியுங்கள்: "என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப் போடுகிறார்கள்.'' இந்த முன்னுரைத்தலானது மிகவும் மதிப்புடையவைகளில் ஒன்று ஆகும். அது சிலுவையில் அறையும் வேலையானது நான்கு போர் வீரர்கள் அடங்கிய குழுவாய் நிறைவேற்றப்படும் என்பது பற்றிய முன்னறிவையும், இயேசு ஐந்து வஸ்திரங்களை அணிந்திருப்பார் என்பது பற்றிய முன்னறிவையும் காட்டுவதாகத் தோன்றுகின்றது. நான்கு வஸ்திரங்கள் நான்கு வீரர்களுக்கும் சுலபமாகப் பங்கிடப் படலாம், ஆனால் ஐந்தாவது வஸ்திரமானது ஒரு பிரச்சனையை முன் வைத்தது. அதை நான்காகப் பிரிப்பது என்பது அணியக் கூடிய ஒரு வஸ்திரத்தை நான்கு கந்தைத் துணிகளாக்குவதாக இருந்தது. யாரேனும் ஒருவர் அந்த வஸ்திரத்தை அணிந்து கொள்ளும்படியாக, படைவீரர்கள் அதைக் குறித்து சீட்டுப் போடுவதென்று முடிவு செய்தனர், அவ்வாறே செய்யப்பட்டது:

*போர்ச் சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்த பின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள்; அங்கியையும் எடுத்தார்கள், அந்த அங்கி, தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது. அவர்கள், இதை நாம் கிழியாமல் யாருக்கு வருமோ என்று இதைக் குறித்துச் சீட்டுப் போடுவோம் என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப் போட்டார்கள் என்கிற வேத வாக்கியம் நிறைவேறத் தக்கதாகப் போர்ச்சேவகர் இப்படிச் செய்தார்கள் (யோவா. 19:23, 24).*

## *மனுஷரால் நிந்திக்கப்பட்டவர் (சங். 22:6)*

*சிலவேளைகளில் - வெறுங் கால்களுடன், அழுது கொண்டு தப்பியோடிக் கொண்டிருந்த தாவீதின் மேல், சீமேயி சாபம் கூறி கற்களை எறிந்தது போன்ற வேளைகளில் (2 சாமு. 16:5, 6) - ஈசாயின் மகன் தம்மை, "மனுஷரால் நித்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும்" (சங். 22:6) இருந்தவராக உணர்ந்தார். அவர் பின்வருமாறு கூறினார்:*

*என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் பரியாசம் பண்ணி,*
*உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி,*
*கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே,*
*அவர் இவனை விடுவிக்கட்டும்;*
*இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது*
*இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள் (சங். 22:7, 8)*

*தாவீதின் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட சந்ததியானவர் இது போலவே "மனுஷரால் நிந்திக்கப்பட்டவரும், ஜனங்களால் அவமதிக்கப் பட்டவருமாய்" இருந்தார். அவர் சிலுவையில் அறையப்பட்ட பொழுது இது நிறைவேறிற்று:*

*அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி, தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக் கொள்; நீ தேவனுடைய குமாரனானால், சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணி, தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம். தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கை யாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள் (மத். 27:39-43).*

## *தாகமாயிருந்த ஒருவர் (சங். 69:21)*

*தாவீது பரிதாபமான கொடுமைக்கு உட்பட்டிருந்த பொழுது, உதவியாளர்களுக்காக வீணாக நோக்கினார். விரோதிகள் அவரைப் பட்டினி கிடக்கப் பண்ணினார்கள், மற்றும் அவர் தாகமாய் இருந்தார். பரியாசம் பண்ணுவதற்காக அவருக்குப் புலம்புபவர்களுக்குத் தரப்படும் உணவாகிய baruth என்பது தரப்பட்டது; ஆனால் அதில் கசப்பான பிச்சு அடங்கியிருந்தது. அவர்கள் எவ்வளவு கொடுமையான/குரூரமான மனிதர்களாய் இருந்திருக்கக் கூடும்! பிறகு, தண்ணீருக்குப் பதிலாக அவர்கள் அவருக்குக் காடியைக் கொடுத்தார்கள்: "என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்" (சங். 69:21).*

*கொடுமைப்படுத்தப்பட்ட இன்னொருவரான நசரேயனாகிய இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கையில், அது போலவே ஆறுதல் படுத்துகிறவர்களின்றி விட்டுவிடப்பட்டார். அவர் தொங்க விடப்பட்ட உடன் (ஏறக்குறைய காலை ஒன்பது மணியின் போது), அவருக்குத் தவறு செய்யத் தூண்டும் (மலிவு விலை) திராட்ச இரசத்தைத் தர முன்வந்தனர் என்பது உறுதி. அந்த மதுபானத்தை வக்கிர மனம் கொண்ட மக்கள் அவரைப் பரியாசம் பண்ணுவதற்காகத் தர முன் வந்தனர்; அதில் வெள்ளைப் போளம் கலந்திருந்ததால், கசப்பாகவும் குடிக்க முடியாததாகவும் இருந்தது (மாற். 15:23), அது பிச்சுப் போலவும், கசப்பான சாறு போலவும் இருந்தது. இயேசு அதைக் குடிக்க மறுத்ததில் வியப்பேதும் இல்லை. தாவீதைச் சித்திரவதைப் படுத்தியவர்கள் போலவே, இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்களும் மட்டு மீறிய கொடுமைக்காரர்களாயிருந்து அவரது காயங்களில் உப்பைத் தூவியது போன்ற செயலினால் அவரது பாடுகளை அதிகப்படுத்தினார்கள்.*

*ஆறு மணி நேரம் கடந்தது. பிற்பகலில் ஏறக்குறைய மூன்று மணியளவில், இயேசு தாம் மரிக்கப் போவதை அறிந்தார் (யோவா. 19:28). அவர் சங். 69:21ன் அப்பகுதி இன்னமும் நிறைவேற்றப் படாததா யிருந்ததையும் அறிந்தார்: ''என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்.'' அவர் பிச்சினை ஏற்றுக் கொண்டிருந்தார், ஆனால் காடியை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையால், ''வேதவாக்கியம் நிறைவேறத் தக்கதாக" (யோவா. 19:28), "தாகமாயிருக்கிறேன்" என்று இயேசு சத்தமிட்டுக் கூறி யாரேனும் தமக்குக் குடிக்கக் கொடுப்பதற்குத் தூண்டினார். இந்த வேளையில், விலை மலிவான, போதைமிகத் தரும் மதுபானமான காடி என்பது அவருக்குத் தரப்பட்டது. ஒரு கடற்காளான் காடியில் தோய்க்கப்பட்டு அவரது வாய்க்குத் தள்ளப்பட்டது. அவர் அந்தக் காளானிலிருந்து ருசித்த பிறகு, அவரது வாயிலிருந்து அவருடைய கடைசி வார்த்தைகள் வந்தன: "முடிந்தது"; "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (யோவா. 19:30; லூக். 23:46).*

# தேவனுடைய சித்தத்தைச் செய்கின்றவர் (சங். 40:6-8)

*இஸ்ரவேலர்களை மிருக பலிகளைக் கொடுக்கும்படி தேவன் கட்டளையிட்டிருந்தார் (லேவி. 16). ஆராதிப்பவர்கள் தேவன்மீது அன்புகூர்ந்து (உபா. 10:12, 13) மற்றும் தங்கள் அயலார்மீது அன்புகூரும் பொழுது (லேவி. 19:18; மீகா 6:6-8ஐக் காணவும்) தேவன் இவைகளில் (மிருக பலிகளில்) பிரியப்படுபவராகக் கண்டார் (சங். 51:19). இருப்பினும், தனிப்பட்ட அன்பு, அர்ப்பணிப்பு, பரிசுத்தம் மற்றும் தாழ்மை ஆகியவையற்ற மிருக பலி எதுவும் இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு அருவருப்பானதாய் இருந்தது (சங். 51:16, 17; ஏசா. 1:11-17; எரே. 6:20; 7:22, 23; ஆமோ. 5:22-24). மிருக பலியிலும் மற்றும் ஆராதிப்பவர் தம்மையே முழுமையாக அர்ப்பணிப்பதிலும் உள்ள இந்த மாபெரும் கொள்கையானது சங். 40:6-8ன் மூலப் பின்னணி அமைப்பிலிருந்து விளக்கம் பெறலாம்:*

> *பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல்,*
> *என் செவிகளைத் திறந்தீர்;*
> *சர்வாங்க தகன பலியையும் பாவ நிவாரண பலியையும்*
> *நீர் கேட்கவில்லை*
> *அப்பொழுது நான், இதோ, வருகிறேன்,*
> *புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது;*
> *என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்;*
> *உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று*
> *சொன்னேன்.*

*சுய பரிசுத்தமும் அர்ப்பணிப்பும் இணைந்திராத பலிகளையும் போஜன பலிகளையும் தேவன் விரும்பாதிருந்தார். உண்மையற்ற, மாய்மாலக் காரரான ஆராதிப்பவர்களிடமிருந்து வருகின்ற தகனபலிகளும் பாவநிவாரண பலிகளும் அவர் கேட்டுக் கொள்வதைப் பூர்த்தி செய்ய முடியாதிருந்தன. இப்பொழுது போலவே அப்பொழுதும் ஒவ்வொரு ஆராதனையாளரும் தம்மையே தமது உள்ளத்திலிருந்து கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார்.*

*சங்கீதம் 40ல் சித்தரிக்கப்பட்டவர், "இதோ வருகிறேன்" என்று கூறினார். இந்த உள்ளான தீர்மானமானது நியாயப்பிரமாணப் புத்தகத்தில் எழுதப்பட்டு, ஆணையிடப்பட்டிருந்தது (உபா. 10:12, 13; 30:9, 10). தக்க விதத்தில் தூண்டப்பட்டு, திறந்த இருதயம் மற்றும் வாயினால் அவர் தாமாகவே முன் வந்து, "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" என்று கூறினார். இப்படிப்பட்ட ஒரு ஆராதனையாளராகவும், சங். 40ன் எழுத்தாளராகவும் இருந்த தாவீது, இவ்விதமாக மிருகங்களை விட மேலானதைத் தேவனுக்கு அளித்தார்.*

*இருப்பினும், உண்மைத் தன்மையுடன் செலுத்தப்பட்ட மிருக*

*பலிகளினாலும் கூட உண்மையில் பாவத்தை எடுத்துப் போடக் கூடாதிருந்தது (எபி. 10:3, 4). அவைகளால் கணக்குக் கேட்கும் நாளைத் தள்ளி வைக்க மட்டுமே முடிந்திருந்தது (எபி. 10:1, 2). ஆகையால் இந்த உலகத்தின் நியதி முழுவதும் சங்கீதம் 40:6-8ன் இரண்டாவது மற்றும் மேலான/உயர்வான அர்த்தத்தின்மீதுதான் அமைந்து உள்ளது. கிறிஸ்து, தேவனுடைய சித்தத்தை சுத்தத்திலும் உண்மையிலும் மாத்திரம் நிறைவேற்றவில்லை, ஆனால் இன்னும் அதிகமானவைகளை அவர் செய்தார்: அவர் ஒரு மனித உடலை (தம்மையே) கையளித்தார் (எபி. 10:5).*

*பழைய ஏற்பாட்டு ஆராதனையாளர் கற்பனை செய்திருக்கக் கூடியவைகள் யாவற்றிலும் இருந்து மாறுபட்ட மற்றும் உயர்ந்த கருத்தில், இயேசு நம்முடைய பலியாயிருக்க ஒப்புக் கொண்டார். உலகத் தோற்றத்திற்கு முன்பே அவர் தம்முடைய பிதாவிடம் (1 பேது. 1:18-20ஐக் காணவும்), "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது" என்று கூறினார் (எபி. 10:7). இயேசுவுக்கு ஒரு மனித சரீரம் ஆயத்தமாக்கப்பட்ட பொழுது, அவர் அதை விருப்பத்துடன் சிலுவையில் ஒப்புக் கொடுத்தார். இதன் மகிழ்ச்சிகரமான விளைவாகக் கிறிஸ்தவர்கள் இப்பொழுது, "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" (எபி. 10:10) என்று கூறி அகம் மகிழ முடியும்.*

## *சர்ப்பத்தின் தலையை நசுக்கியவர் (ஆதி. 3:15)*

*தேவன் சர்ப்பத்திடம், "அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" (ஆதி. 3:15ஆ) என்று கூறிய பொழுது, ஸ்திரீயின் வித்தைக் குறித்துப் பேசினார். இது பாம்புகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் உள்ள இயல்பான விரோதத்தை இங்கு அர்த்தப்படுத்து கின்றதென்று மிக அரிதாகவே அறிவிற்கு ஏற்புடையதாகக் காணப் படுகின்றது. சர்ப்பமானது சாத்தானின் பேசும் கருவியாக இருந்தது என்பது தெளிவு ("உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலு சர்ப்பம்"; வெளி. 12:9). இது இப்படியிருப்பதால், தேவன், பிசாசுக்கும் ஸ்திரீயின் வித்திற்கும் இடையில் ஒரு போராட்டத்தை முன்னுரைத்தார். ஸ்திரீயின் வித்திற்கு முதல் உதாரணமான காயீன், பிசாசுடன் ஒரு போராட்டத்தில் பிரவேசிக்கவில்லை. மாறாக காயீன், சாத்தானை ஆளும் படிக்குப் பாவம் செய்து பிசாசுக்கு இணங்கிப் போனான் (ஆதி. 4:7). காயீன் பொல்லாங்கனுடையவனாய் இருந்தான் (1 யோவா. 3:12); இதன் விளைவாக, சாத்தானின் தலையை நசுக்கக்கூடிய ஸ்திரீயின் வித்தாக அவன் இருக்க முடியாது.*

*ஸ்திரீயின் வித்தினுடைய இரண்டாவது உதாரணமான ஆபேல், உலகம் முழுவதையும் மோசம் போக்குகிறவனுடன் ஆவிக்குரிய ஒரு*

*போராட்டத்தில் பிரவேசித்து, வெற்றி பெற்றெழுந்தான். அவன் தனது சொந்த சரீர வாழ்வை இழந்து போனாலும் சாத்தானின் ஆவிக்குரிய தலையை நசுக்கினான். ஒருவேளை அவன் தனது சரீர வாழ்க்கையை இழந்து போனதென்பது சாத்தான் ஸ்திரீயின் வித்தினுடைய காலை நசுக்குவான் என்பதின் அர்த்தமாயிருக்கலாம். ஆபேல் ஸ்திரீயின் "தேவபக்தியுள்ள சந்ததியாக" இருந்தான் (மல்கி. 2:15ஐக் காணவும்).*

*ஒரு நபர் தேவனுக்காக வாழ்ந்து, பிசாசானவனை எதிர்த்து நின்று, அந்தச் செயல்பாட்டில் உபத்திரவங்களினால் பாடுபடும் ஒவ்வொரு உதாரணமும் ஆதி. 3:15ன் நிறைவேற்றத்தினுடைய ஒரு பகுதியாகத் தோன்றும். இருப்பினும் இயேசுவே இப்படிப்பட்ட வெற்றிகரமான வாழ்வின் மிக அர்த்தமுள்ள உதாரணமாயிருக்கின்றார். ஸ்திரீயினிடத்தில் பிறந்த அவர் (கலா. 4:5), ஏவாளின் சந்ததியாய் இருந்தார் (லூக். 3:23-38; ஆதி. 3:20ஐக் காணவும்). அவர் சரீர மரணத்தில் பாடுபட்டதை, சாத்தான் அவருடைய குதிங்காலை நசுக்கினான் என்று கூறப்பட முடிந்தது; ஆனால் அந்த மரணத்தின் செயல்முறையில், இயேசு மரணத்திற்கு அதிகாரியான பிசாசானவனை அழித்தார் (எபி. 2:14). இன்றைய நாட்களில் இயேசு மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவரா யிருக்கின்றார் (வெளி. 1:18). அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் (2 தீமோ. 1:10), இதை சர்ப்பத்தின் தலையை நசுக்கியதால் அவர் நிறைவேற்றினார்.*

*நீதியுள்ள நபர் ஒவ்வொருவரின் உதாரணமும் ஆவிக்குரிய வகையில் தலையை நசுக்குவதாகவே உள்ளது, ஆனால் இயேசு ஒருவரே மரணத்தை நசுக்கினார். இந்தக் கருத்தில், இயேசு ஒருவரே ஆதி. 3:15ஐ நிறைவேற்றினார் என்று கூறப்பட முடியும். ஏனென்றால், இதைக் குறித்து இயேசுவின் தனித் தன்மையினால் வேதாகமக் கல்வியாளர்கள், ஆதியாகமம் 3:15ஆனது மேசியாவின் வருகையைப் பற்றிய முதல் அறிவிப் பாகிய "மூல முன்மாதிரி சுவிசேஷ அறிவிப்பு" ஆகும் என்று நீண்ட காலமாகக் கூறி வந்துள்ளனர். புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் எவரும் ஆதி. 3:15ஐ இயேசுவுக்கு நேரடியாகப் பயன்டுத்தவில்லையென்றாலும், இதன் நம்பிக்கையின் மூச்சானது இதை வியப்புகுரிய ஒரு வசனப் பகுதியாக்குகின்றது. இது சாத்தான்மேல் திட்டவட்டமான வெற்றிக்கான முன்னுரைத்தலான நம்பிக்கையைக் கொடுக்கின்றது: "பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" (1 யோவா. 3:8).*

## *வெற்றிப் புகழுடன் பாவம் சுமந்தவர் (ஏசாயா 53)*

*உண்மையிலேயே எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே, ஏசாயா இயேசுவின் மகிமையைக் கண்டு, "அவரைக் குறித்துப் பேசினார்" (யோவா. 12:41). ஏசா. 53ல் உள்ள விபரங்களின் விளக்கத் தன்மையானது, அவைகள் தீர்க்கதரிசனமாயிராமல், வரலாற்றை உற்று நோக்குவதாகவே காணப்*

*படுவதாக சிந்திக்கும்படி வாசகர்களுக்கு காரணமாகின்றது. அவிசுவாசிகள் இந்த அதிகாரத்தின் கூற்றுகளுக்கு இயேசுவைத் தவிர பொருத்தமான வேறு நபர் யாரையாவது (மோசே, உசியா, செருபாபேல், எரேமியா, சிதேக்கியா, ஏசாயா, யோயாக்கீன் மற்றும் இஸ்ரவேல் உட்பட யாரையாவது) காண்பதற்கு வானத்திலும் பூமியிலும், ஜீவனுள்ளோரிடத்திலும் மரித்தோரிடத்திலும் தேடி ஆராய்ந்து திரிந்துள்ளனர்; ஆனால் இயேசுவைத் தவிர வேறு யாரும் இதற்குப் பொருத்தமுள்ளவராக இல்லை. மற்றும், வேறு எவரும் ஏசாயா 53 தம்மைக் குறித்துக் கூறும்படி தமது வாழ்வை நோக்கத்துடன் அமைத்துக் கொள்வது என்பது இயலாத ஒரு செயலாகவே இருக்கின்றது. இயேசுவை மிகத் தெளிவாக (முன்) கண்ட தீர்க்கதரிசியினால் மனதில் ஆழப்பதியும் விபரங்கள் முன்னுரைக்கப்பட்டன:*

1. *அசட்டை பண்ணப்பட்டவர் (53:3; மத். 27:39-43ஐக் காணவும்)*
2. *துக்கங்கள் நிறைந்தவர் (53:3; மத். 26:38ஐக் காணவும்)*
3. *பாடு அநுபவித்தவர் (53:3; எபி. 4:15ஐக் காணவும்)*
4. *மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவர் (53:3; யோவா. 1:10, 11ஐக் காணவும்)*
5. *மற்றவர்களுக்காகத் பாடுகளைச் சுமந்தவர் (53:4; மத். 8:16, 17ஐக் காணவும்)*
6. *வஞ்சனையற்றிருந்தவர் (53:9; 1 பேது. 2:22)*
7. *தம்மைத் துன்புறுத்தியவர்களுக்கு முன்பாக வாய் பேசாதிருந்தார் (53:7; மத். 26:63; 27:12, 14ஐக் காணவும்)*
8. *மற்றவர்களுக்காகத் தழும்பு ஏற்றவர் (53:5; 1 பேது. 2:24, 25ஐக் காணவும்)*
9. *மற்றவர்களுக்காகப் பாவம் சுமந்தவர் (53:5, 12; 1 கொரி. 15:3; 2 கொரி. 5:21; எபி. 9:28; ரோமர் 4:25 ஆகியவற்றைக் காணவும்)*
10. *அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டவர் (53:12; லூக். 22:37ஐக் காணவும்)*
11. *அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டவர் (53:12; லூக். 23:34ஐக் காணவும்)*
12. *நியாயத்தை இழந்தவராய் இருந்தார் (53:8; மத். 27:24ஐக் காணவும்)*
13. *ஐசுவரியவானுடன் புதைக்கப்பட்டார் (53:9; மத். 27:57-60ஐக் காணவும்)*
14. *மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்தார் (53:10; மாற். 16:9ஐக் காணவும்)*
15. *மகா பெரியவராக உயர்த்தப்பட்டு கனப்படுத்தப்பட்டார் (53:12; பிலி. 2:9-11ஐக் காணவும்).*

*ஏசாயா 53ல் தீர்க்கதரிசி யாரைக் குறித்துச் சொல்லுகிறார்? தம்மைக்*

*குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ என்று எத்தியோப்பிய மந்திரி ஒருவர் பிலிப்புவிடத்தில் கேட்டார். அந்த சுவிசேஷகன் அதற்களித்த பதிலைப் புரிந்து கொள்வது சுலபமாகும்: "அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்" (அப். 8:35). அவர் வேறு யாரையும் குறித்துப் பிரசங்கிப்பதற்குப் பேசத் தொடங்கி இந்த வேத வசனப் பகுதியைப் பயன்படுத்த முடியாதிருந்தது.*

## *வெற்றி கொண்ட ஒருவர் (சங். 68:18)*

*சங். 68:18அ, வின் அழகிய, உருவக நடைமொழியில் தேவனை வெற்றி கொண்ட ஒரு அரசராக தாவீது சித்தரித்தார். இந்த அரசர் (தேவன்) உன்னதத்திற்கு ஏறி, யுத்தத்தில் சிறைப்பட்டவர்களை வழிநடத்தி, தம்மைப் பாராட்டுபவர்களிடமிருந்து கொடைகளை/வரங்களை ஏற்றுக் கொண்டவராக அவர் (தாவீது) சித்தரித்தார்:*

> *தேவரீர் உன்னதத்திற்கு ஏறி,*
> *சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டு போனீர்;*
> *... மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக் கொண்டீர்.*

*இதே வழி முறையொன்றில், இயேசு கல்லறைக்குள் இறங்கி, வெற்றிகரமாய் எழும்பி, மரணம், பாதாளம் மற்றும் கல்லறையில் உள்ள தம் சிறைப்பட்டவர்களை வழிநடத்துபவராக விளங்குகின்றார்! உலகின் மிகக் கொடிய யுத்தத்தில் அவர் கல்லறைகளின்மேல் சாத்தானுக்கு இருந்த பிடிமானத்தை வெறுமையாக்கினார்: மரணத்தின்மேல் அதிகாரம் கொண்டிருந்த பிசாசானவனை அவர் வெறுமையானவனாக்கினார் (எபி. 2:14), சுவிசேஷத்தின் மூலமாக ஜீவனையும் அழியாமையையும் கொண்டு வந்தார் (2 தீமோ. 1:10). பிறகு, அவர், "நான் மரித்தேன், ஆனாலும் சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" (வெளி. 1:18) என்று வெற்றிகரமாக அறிவிக்க முடிந்தது. இப்பிரபஞ்சத்தின் தேவனுடைய துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் நீக்கிப் போட்டு, அவர் தமது மகிமையுள்ள வெற்றியை வெளியரங்கமாய்க் காட்சிப்படுத்த முடிந்தது (கொலோ. 2:15).*

*அந்த மிகச் சிறந்த வெற்றி மட்டுமே மனிதர்கள் மரண பயத்தை இழக்கச் செய்யக் கூடியதாயிற்று (எபி. 2:15). மரணத்தின் மீதான வெளிப்படையான அந்த ஆதிக்கத் திறமையினால் மனிதர்கள் மரணத்தையும், திறந்த கல்லறையையும் பார்த்து, "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (1 கொரி. 15:55) என்று இகழ்ந்து பேச முடிந்தது. இப்பொழுது அவர்கள், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1 கொரி. 15:57) என்று உரக்கக் கூற முடியும். ''மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்''*

*(1 கொரி. 15:54) பொழுது கிறிஸ்தவர்கள் நிறைவான வெற்றியை எதிர்நோக்க முடியும்.*

*இயேசு நமக்காகச் செய்துள்ளவற்றினால், தேவன் மனிதர்களிடமிருந்து துதியின் வார்த்தைகளையும் பாராட்டின் கொடைகளையும் மற்றும் நன்றிகளையும் பெற்றுள்ளார். எபே. 4:8ல் பவுல், பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்டு தாவீதின் வார்த்தைகளினுடைய புதிய ஏற்பாட்டுப் பயன்பாட்டில் ஒரு வார்த்தையை மாற்றினார். இயேசு வரங்களைப் பெறுவதற்குப் பதிலாக வரங்களைப் பகிர்ந்தளிப்பதாக அவர் குறிப்பிட்டார். மரணத்தை வெற்றி கொண்ட மேசியா, தேவனுடைய வலது பாரிசத்திற்கு எழுந்தருளிச் சென்று பத்து நாட்களுக்குப் பிறகு அவர் தமது பரிசுத்த ஆவியானவரை அனுப்பி மனுஷர்களுக்கு வரங்களைக் கொடுத்தார்.*

*குறிப்பாக, அவர் அப்போஸ்தலர்களைத் தமது தூதர்களாக அதிகாரப்படுத்தினார், அவர்களுக்கு மற்றவர்களின் தலைகளின் மேல் கைகளை வைத்து தங்களின் அற்புத வரங்களைப் பகிர்ந்தளிக்கும் வல்லமையைக் கொடுத்தார். இவ்விதமாக வரங்களைப் பெற்றவர்கள் அவ்வரங்களைப் பயன்படுத்தி தீர்க்கதரிசிகளாகவும், சுவிசேஷ ஊழியர்களாகவும், மேய்ப்பர்களாகவும் மற்றும் போதகர்களாகவும் ஊழியம் செய்தனர் (எபே. 4:8-13). பல்வகை வரங்களின் இந்தப் பகிர்வானது (1 கொரி. 12:4-11) சுவிசேஷத்தை உறுதிப்படுத்துவதிலும், தேவனுடைய மக்களுக்குப் பக்திவிருத்தியூட்டப் போதிப்பதிலும் கருவியாகச் செயல்பட்டது (எபி. 2:1-4; ரோமர் 12:3-8).*

*இந்த வரங்கள் குறுகிய காலமே இருந்தன, சகல சத்தியமும், முழுமையான வெளிப்பாடும் தெறியப்படுத்தப்பட்டவரை மட்டுமே நிலைத்தன (யோவா. 16:13; 1 கொரி. 13:8-13). இருப்பினும் அந்தத் தற்காலிகமான முதல் நூற்றாண்டுக் காலத்தில், பிரசங்கித்த வசனத்தை உறுதிப்படுத்துதல் (மாற். 16:17-20) என்ற தங்களின் தெய்வீகக் கட்டளையினால் ஆன நோக்கத்தை அவ்வரங்கள் நன்றாகவே நிறைவேற்றிப் பணி புரிந்தன. பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்ற இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவர் அற்புதக் கொடைகளைப் பகிர்ந்தளித்து, பூமியில் உள்ள மனிதர்களுக்கு வரங்களைப் பொழிந்தார்.*

## விலையேறப்பெற்ற மூலைக்கல் *(ஏசாயா 28:16)*

*யூதர்களில் பலருக்கு, கிறிஸ்து புறக்கணிக்கப்பட்ட, விரும்பத் தகாத கட்டிடக் கல்லாகவே இருந்தார், ஆனால் மற்ற மக்கள் அவரை விலையேறப் பெற்ற மூலைக்கல்லாக அடையாளம் கண்டுணர்ந்து கொண்டனர். ஏசாயா இந்த முன்னுரைத்தலை ஏற்படுத்தினார்:*

*ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது:*

*இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே*
*வைக்கிறேன்;*
*அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப் பெற்றதும்,*
*திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும் ... (ஏசா. 28:16)*

பேதுருவிடம் "... இந்தக்கல்லின் மேல் [பேதுருவின் மீதல்ல ஆனால் அவர் உணர்ந்திருந்த அஸ்திபாரக் கூற்றின்மேல்] என் சபையைக் கட்டுவேன்'' (மத். 16:18) என்று கூறிய பொழுது இயேசு தமது தெய்வீகத்துவத்திற்கான விளக்கத்தை, கிறிஸ்தவத்தின் அஸ்திபாரமாகப் பயன்படுத்தினார். எந்த ஒரு மனித அஸ்திபாரமும் - பேதுருவோ அல்லது மற்ற எந்தப் பாவியோ - பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட மக்களின் நிறுவனத்தை தாங்குவதற்குப் போதுமானதாய் இருக்க முடியாது. "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" (1 கொரி. 3:11). இயேசுவின் சபையைக் கட்டுவதற்கு அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் அவருடன் ஊழியம் செய்தாலும், மூலைக் கல்லாக ஆராதனைக்குரியவராக, பரீட்சிக்கப்பட்டதும் விலையேறப் பெற்றதுமானதாக - இருப்பவர் இயேசுவே ஆவார் (எபே. 2:20).

இந்த விஷயத்தில் இயேசுவின் விலையேறப் பெற்ற தன்மையும், மிக மேலான மதிப்பும் ஏசாயா 28:16ஐ மேற்கோள் காட்டிய போது பேதுருவால் குறிப்பிடப்பட்டது. அவர் (பேதுரு) தம்மையே சபையின் அஸ்திபாரக் கல்லாகச் சுட்டிக் காட்டிக் கொள்ளவில்லை; அவரால் இயேசுவைத் தவிர வேறு எவரையும் அந்தத் தகுதி நிலையில் வைத்துச் சிந்திக்க முடியாதிருந்தது:

*அந்தப்படியே, இதோ, தெரிந்து கொள்ளப்பட்டதும்,*
*விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக் கல்லை சீயோனில்*
*வைக்கிறேன்;*
*அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை*
*என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது.*
*ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப் பெற்றது*
*(1 பேது. 2:6, 7அ).*

---

குறிப்புகள்

[1]இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டது, அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய பழைய ஏற்பாட்டின் கூடுதலான தீர்க்கதரிசனங்கள் "வேதாகமத்தின் ஏவுதலும் அதிகாரமுடைமையும்" என்ற தலைப்பில் வெளியாகும் இன்றைக்கான சத்தியம் இதழில் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. "முப்பது வெள்ளிக் காசுக்கு விற்கப்படுதல்" (சக. 11:12), "தேவனால் கைவிடப்பட்டவர்" (சங். 22:1) மற்றும் ''மறுபடியும் உயிர் பெற்ற சடலம்'' (சங். 16:10) ஆகியவையும் இந்தத் தீர்க்கதரிசனங்களில் உள்ளடங்கியுள்ளன. [2]இயேசு வந்த பிறகு, மற்ற (உயிர்த்து)

*எழுதல்களும் நடைபெற்றன: தபீத்தாள் (அல்லது தொற்காள்; அப். 9:36-42), நாயீன் பட்டணத்து விதவையின் மகன் (லூக். 7:11-16), யவீருவின் மகள் (மாற். 5:22, 23, 35-43; லூக். 8:41, 42, 49-56), லாசரு (யோவா. 11:1-45), இயேசுவின் சிலுவை மரணத்தின் போது எழுப்பப்பட்டவர்கள் (மத். 27:50-53), மற்றும் ஐத்திகு (அப். 20:9-12). இவர்கள் ஒவ்வொருவரும் மறுபடியும் மரிக்க வேண்டியதாயிற்று.* [3]*சகரியாவினுடைய முன்னுரைத்தலின் ஒரு நேரடியான நிறைவேற்றமானது யூகிக்கப்பட்டுள்ளது. ராஸ் ஷாம்ரா என்ற இடத்தில் கிடைத்துள்ள எழுது கற்பலகைகளில் ஆலய அதிகாரி ஒருவரை Yotser என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "உருவாக்குபவர், வடிவமைப்பவர், பானைவனைபவர்'' என்பது இதன் அர்த்தமாகும். உலோகங்களை உருக்கி வடிவமைப்பவரும் Yotser எனப்பட்டார், அவர் ஆலயப் பொக்கிஷதாரராகவும் இருந்திருக்கக் கூடும்.* RSV *மொழிபெயர்ப்பு வேதாகமமானது இந்தப் புதை பொருள் தகவல் துணுக்கைப் பயன்படுத்தி தன்னில் உள்ள சகரியாவின் தீர்க்கதரிசனத்தை, ''நான் முப்பது வெள்ளிக் காசை எடுத்து, அவைகளைக் கர்த்தருடைய ஆலயத்தில் இருந்த பொக்கிஷ சாலையில் எறிந்து விட்டேன்" என்று மறுவடிவமைத்திருக்கின்றது. இருப்பினும், இந்த விளக்கமானது சரியானதாக இருப்பினும், மத்தேயுவின் வார்த்தைகள் சகரியா தீர்க்கதரிசனத்தின் சுற்றி வளைத்த நிறைவேற்றமும் உண்டு எனக் காட்டுகின்றன. ஏனெனில் ஆசாரியர்கள் யூதாஸின் அந்தப் பணத்தைக் கொண்டு குயவனுடைய நிலத்தை வாங்கியிருந்தனர்.* [4]Albert Barnes, *Matthew and Mark,* Notes on the New Testament (N.p., 1949; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1974),302. [5]Jack P. Lewis *அவர்களால் பல்வேறு சாத்தியக்கூறுகள் சுருக்கியுரைக்கப் பட்டன: "மத்தேயுவால் குறிப்பிடப்பட்ட பல்வகைக் கருத்துள்ள வசனப் பகுதியானது சகரி. 11:12, 13ஐ நினைவு படுத்துகின்றது, மற்றும் இவ்விடத்தில் வேதவசனத்திற்கான மத்தேயுவின் வழக்கமான விதிமுறை அமைப்பும் குறிப்பிடப்படுகின்றது (இ.வ. 1:22). இது செப்துவஜிந்த் மற்றும் மோசோரெட்டிக் வசனங்களில் இருந்து சார்பு நிலையற்றது. மோசோரெட்டிக் வசனப் பகுதியில் 'குயவன்' என்றும் செப்துவஜிந்த் வசனத்தில் 'பொக்கிஷ சாலை' என்றும் உள்ளது. இந்த நிகழ்ச்சியானது, எரேமியா ஒரு நிலத்தை வாங்கியது (எரே. 32:6*ff*) மற்றும் குயவன் வீட்டிற்குச் சென்றது (எரே. 18:2*ff*) ஆகியவற்றின் எச்சங்களைக் கொண்டுள்ளது. அப். 1:19*ff*ஆனது சங். 69:25 மற்றும் 109:8 ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுவதுடன், யூதாஸுடன் தொடர்புள்ள நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகின்றது. எரேமியாவுக்கு இவ்வசனப் பகுதியை உரிமைப் படுத்தும் பிரச்சனையைத் தீர்ப்பதில் பின்வரும் ஆலோசனைகளும் உள்ளடங்குகின்றன: (1) பிரதியெடுத்ததில் ஒரு தவறு ஏற்பட்டுள்ளது. (2) எரேமியா என்பது எரேமியா மற்றும் சகரியா ஆகிய பெயர்கள் ஒரு பகுதியாக அடங்கிய தீர்க்கதரிசிகளின் குழுவுக்குப் பெயராக நிலைநிற்கின்றது. (3) பின்னாளில் கற்றறியாத எழுத்தாளர் ஒருவர் எரேமியா என்ற வார்த்தையைச் சேர்த்து விட்டார். (4) வேறெங்கும் காணப்படாத எரேமியாவின் கூற்றை சகரியா பாதுகாத்தார். மற்றும் (5) இங்கு குறிப்பிடப்பட்டது, இவ்விரு தீர்க்கதரிசிகளின் கூற்றுக்களின் கூட்டு உரையாகவும் எரேமியாவுக்கு உரித்தானதாகவும் இருந்தது. இந்த வினாவுக்கான தீர்வு அறியப்படாததாகும்"* (*The Gospel According to Matthew,* Part 2, The Living Word Commentary Series [Austin,Tex.: Sweet Publishing Co., 1976; reprint, Abilene Texas.: ACU Press, 1984], 157).

# தேவன் நம்மோடு

*இம்மானுவேல் என்ற வார்த்தை "தேவன் நம்மோடு" என்று அர்த்தப்படுகின்றது, இது வேதாகமத்தில் நான்கு முறைகள் வருகின்றது. மூன்று முறைகள் இது (ஏசா. 7:14; 8:8, 10) மிகவும் அதிகமாக எதிர்மறையாக, அழிவைக் குறிப்பிடும் வகையில் உள்ளது: தேவன் நம்மைத் தண்டிப்பதற்காக நம்மோடு இருக்கின்றார். ஒரு முறை இது (மத். 1:23) நேர்மறையான, கட்டியெழுப்பும் அர்த்தம் கொண்டதாக உள்ளது: தேவன் நம்மை ஆசீர்வதிப்பதற்காக நம்மோடு இருக்கின்றார்.*

**தேவன் நம்மைத் தண்டிப்பதற்காக நம்மோடு இருக்கின்றார்:**

*ஏசா. 7:14ல் இம்மானுவேல் என்ற வார்த்தையின் முதல் பயன்பாடானது கலப்பான ஆசீர்வாதத்தை விவரிக்கின்றது. ஆகாஸ் அரசன் வஞ்சனையுள்ளவனாய் இருந்தான். ஆகாஸ் அரசாண்ட யூத தேசத்திற்கு கேடுண்டாக்குவதற்கு சீரியாவும் இஸ்ரயேலும் அனுமதிக்கப்படாது என்பதை அறிவிப்பதற்கு ஏசாயாவைத் தேவன் அவனிடத்தில் அனுப்பினார். துன்மார்க்கனும் விக்கிரகாராதனைக்காரனுமாய் இருந்த ஆகாஸ் ஏசாயா கூறியவை பற்றிக் கவலைப்படவில்லை, ஏனெனில் அந்தக் கொடிய அரசன் தேவன்மேல் நம்பிக்கை வைக்கவில்லை.*

*தேவன் யூதாவை விடுவிப்பார் என்பதற்கு ஆகாஸ் எந்த அடையாளத்தைக் கேட்டாலும் அதைத் தருவதற்கு ஏசாயா தயாராக இருந்தார். "அதை ஆழத்திலிருந்தாகிலும் உன்னதத்திலிருந்தாகிலும் கேட்டுக் கொள்" (ஏசா. 7:11ஆ) என்று ஏசாயா கூறினார். ஆகாஸ் ஒரு அடையாளத்தைக் கேட்க மறுத்து விட்டான். சீரியாவுக்கும், யெஸ்ரயேலுக்கும் எதிராகத் தன்னோடு கூட்டுச் சேரும்படி அசீரியாவுக்குக் கைக் கூலி கொடுத்து ஒப்பந்தம் செய்து கொள்ளும் நோக்கத்தில், அவன் மாய்மாலப் பக்தியான கூற்றொன்றைக் கூறினான்: "நான் ... கர்த்தரைப் பரீட்சை செய்ய மாட்டேன் என்றான்" (ஏசா. 7:12). இப்படிப்பட்ட வஞ்சனையினால் தேவன் சோர்ந்து போனார், உதவி செய்வதற்கான அவரது பொறுமை வெறுமையாயிற்று. அவர் துன்மார்க்கனான ஆகாஸுடன் அவன் கேட்காத ஒரு அடையாளம், தண்டனையின் ஒரு அடையாளம் தரப்படும் என்றார்: "ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" (ஏசா. 7:14). "இளம் பெண்", "மணமாகாத இளம் பெண்" அல்லது "கன்னிப் பெண்"[1] என்று அர்த்தப்படும் ha'almah என்று அழைக்கப்படும் இளம் பெண் ஒரு தாயாகி, தனது குழந்தைக்கு "தேவன் நம்மோடு" என்று அர்த்தப்படும் இம்மானுவேல் என்ற பெயரை இடுவாள். ஆகாஸின் நாட்களின் சந்தர்ப்பப்*

*பொருளில் அந்தக் குழந்தையின் பெயரானது தண்டனையைப் பிரகடனம் செய்தது. தேவனுடைய வருகையினால் யூதா நாடானது, பஞ்சம், துன்பம், முள்ளுகள் மற்றும் முட்புதர்கள் ஆகியவற்றினால் துன்பப்படும். ஆகாஸுக்கு எதிரான அப்போதைய பயமுறுத்தல்கள் நீக்கப்படும், ஆனால் அவனுடைய துன்மார்க்கம் மற்றும் போலித்தனம் ஆகியவை ஈடு செய்யப்படும்: யூதாவின் நகரங்களின்மேல் அழிவை உண்டாக்கவும், எருசலேமின் மீது முற்றுகையிடவும் தேவன் அசீரியாவை அனுமதிப்பார். பஞ்சம் மேலோங்கியிருக்கும்/பின்விளைவாகத் தொடரும். ஒரு மனிதன் ஒரு பசுவைக் காப்பாற்ற முடிந்திருந்தால், நாட்டிற்குள் காட்டுத் தேனைக் காண முடிந்ததென்றால், அவன் வெண்ணையும் தேனும் கொண்ட அடர்வற்ற உணவைத் தனக்குப் பராமரித்துக் கொள்ள முடியும். தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்ட அடையாளமான விசேஷித்த மகனாகிய இம்மானுவேல் இப்படிப்பட்ட வரையறைக்குட்பட்ட உணவுக்குத் தம்மைத் தாமே குறைத்துக் கொள்வார். ஆகையால் இம்மானுவேல் என்ற வார்த்தையின் முதல் பயன்பாட்டினுடைய சந்தர்ப்பப் பொருளானது கசப்பும் இனிப்பும் கொண்டதாக - ஆனால் பெரும்பாலும் கசப்புள்ளதாக இருக்கின்றது.*

*இம்மானுவேல் என்ற வார்த்தையின் இரண்டாவது பயன்பாடானது (ஏசா. 8:8) இதே சந்தர்ப்பப் பொருளின் பகுதியாகவே உள்ளது. யூதா தேசம் முழுவதும் இம்மானுவேல் என்று, அதாவது யூதர்கள்மேல் தண்டனையை வருவிப்பதற்காக தேவன் வந்து பார்வையிட்ட நாடாக அழைக்கப் படுகின்றது.*

*அது போலவே இம்மானுவேல் என்ற வார்த்தையின் மூன்றாவது பயன்பாடும் (ஏசா. 8:10) கூட முதல் இரண்டு பயன்பாடுகள் காணப்படும் அதே காட்சிக் களத்தின் பாகமாக, பாடுகளின் கசப்பை உயர்த்திப் பிடிப்பதாக உள்ளது. மனநிலை குலைந்த, இடர்ப்பாடுகள்பட்ட யூதர்களுக்கு அசீரியாவைத் தோற்கடிக்கும்படியான ஆலோசனையானது பயனற்றதாகவும், முக்கியத்துவமற்றதாகவும் இருந்திருக்கும்; ஏனெனில், இதோ, இம்மானுவேல்! அடக்கி ஒடுக்கும் தேவபக்தியற்ற படை ஒன்றின் வடிவில் தேவன் யூதாவுடன் இருந்தார், மற்றும் யூதர்களின் மிக புத்தி கூர்மையான யுக்தியினால் கூட தேவனுடைய தீர்மானமானது தடங்கல் படக் கூடாததாய் இருந்தது.*

*இம்மானுவேல் என்ற வார்த்தையின் பழைய ஏற்பாட்டுப் பயன்பாடுகள் மூன்றிலும் சிறிதளவே மகிழ்ச்சிக்குரியது காணப்பட முடியும்.*

**தேவன் நம்மை ஆசீர்வதிப்பதற்காக நம்மோடு இருக்கின்றார்:**

*சில வேதவசனங்கள், அருகில் உள்ள மற்றும் தொலைவில் உள்ள என்ற இரு அர்த்தங்களைத் தரும் வகையில் திட்டமிடப் பட்டுள்ளதை வேதாகம மாணவர்கள் அதிக காலமாக கவனித்திருக்கின்றனர். இவைகளில் ஏசாயா 7:14ஐக் காட்டிலும் அதிகம் புகழ் வாய்ந்தது வேறு எதுவும் இல்லை. ஆகாஸின் நாட்களில் இம்மானுவேல் என்று அழைக்கப்பட்ட குழந்தை*

*யானது தான் சூடிக் கொண்ட பெயரினால் ஒரு சகுனமாயிருந்து, தேவன் யூதாவைத் தண்டிப்பதற்காக யூதாவுடன் இருந்தார் என்று விளக்கப் படுத்திற்று. இருப்பினும் அந்த (கி.மு.) எட்டாம் நூற்றாண்டுத் தீர்க்கதரிசனத்தில் இன்னொரு முன்னுரைத்தலும் மறைந்திருந்தது. இம்மானுவேல் என்று அழைக்கப்பட்ட இன்னொரு குழந்தையானது யோசேப்பு மற்றும் மரியாள் ஆகியோரின் நாட்களில் பிறக்க வேண்டி யிருந்தது (மத். 1:23). அவர் தாம் சூடிக் கொள்ளும் பெயரினால் மட்டுமின்றி அவர் உண்மையிலேயே "தேவன் நம்மோடு இருக்கிறார்" என்பதற்கு அடையாளமாய் இருப்பார், ஏனெனில் அவருக்கு மனிதத் தகப்பன் கிடையாது.*

*இயேசுவுக்கு மனிதத் தகப்பன் ஒருவர் இருந்திருந்தால், மற்ற குழந்தை இருந்த கருத்தான இம்மானுவேல், "தேவன் நம்மோடு" என்பதிலிருந்து அவர் மாறுபட்டிருக்க மாட்டார். அவர் இரு பெற்றோருடைய மற்ற எல்லா மகன்களைப் போன்றவராகவே இருந்து, இவ்விதமாய் தமது தனித் தன்மையை இழந்திருப்பார். ஆகையால் (கி.மு.) எட்டாம் நூற்றாண்டில் இருந்த குழந்தைக்குப் பெயரிட்டதைக் காட்டிலும் அதிகமான விஷயங்கள் இயேசுவை இம்மானுவேல் என்று அழைப்பதில் அடங்கியிருந்தது. ஆகாஸின் நாட்களில் இருந்த அறியப்படாத இளைஞன் எவ்வகையிலும் தன்னில் தனிச் சிறப்புடன் காணப்பட்டதில்லை; அவனது பெயரானது தேவன் கோபத்துடன் வருவதன் அடையாளமாக மட்டுமே இருந்தது. யோசேப்பின் நாட்களில் இருந்த நன்கறியப்பட்ட இளைஞரோ தம்மிலே தனிச் சிறப்புடையவராய் இருந்தார்; அவர் தமது பெயரின் அடையாளத்தைக் காட்டிலும் மேலானவராயிருந்தார்; அவர் தேவன் மாம்சத்தில் வந்தவராயிருந்தார்.*

*ஏசாயா 7 மற்றும் 8ல் உள்ள எதுவும், இம்மானுவேல் என்ற வார்த்தை தோன்றும் மற்ற இடங்களும், மத்தேயு 1:23ல் உள்ள 'இம்மானுவேலின்' மகிமைக்குரிய சிந்தனையின் அழகுடன் ஒப்பிடப்படுவதற்கில்லை. புதிய ஏற்பாட்டுப் பயன்பாட்டில், தேவன் "நியாயம் தீர்ப்பதற்காக" நம்மிடத்தில் இருக்க வரவில்லை (யோவா. 3:17), ஆனால் "அவர் மூலமாக நாம் இரட்சிப்படையும்படிக்கே" அவர் நம்முடன் இருக்க வந்தார். 'இம்மானு வேலின்' பழைய ஏற்பாட்டுப் பயன்பாடானது "தாவீதின் வீட்டிற்கு" (ஏசா. 7:13) உள்ளூர் அர்த்தம் ஒன்றை மட்டுமே பெற்றிருந்தது; புதிய ஏற்பாட்டுப் பயன்பாடோ "முழு உலகத்திற்கும்" (1 யோவா. 2:2) முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது.*

*இதோ, இம்மானுவேல்! தேவனுடைய மிகச் சரியான பிரதிநிதித்துவ மானவர் மாம்சமானார் (எபி. 1:3; யோவா. 1:14). தேவனாக இருந்தவர் தமது சொந்தப் படைப்பில் வந்து, மாம்சமும் இரத்தமும் ஆனார் (யோவா. 1:1, 11; எபி. 2:14). "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோ. 2:9). கிறிஸ்துவில் தேவன் இருந்தார் (யோவா. 10:37, 38; 14:10, 11, 20அ) "... தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில்*

*ஒப்புவித்தார்" (2 கொரி. 5:19) என்று நாம், வாசிக்கின்றோம்.*

---

*குறிப்புகள்*

*[1]சொல் ஆராய்வுப்படி 'almah என்பது திருமணமான அல்லது திருமணம் ஆகாத இளம் பெண்ணைக் குறிப்பிட முடியும் (1 சாமு. 17:56, 20:22ல் 'elem, பிள்ளையாண்டான் என்பது போன்றது), ஆனால் வேதாகமத்தில் எந்த சந்தர்ப்பப் பொருளிலும் திருமணமான பெண் 'almah என்று அழைக்கப்படுவதில்லை. 'Almah என்ற வார்த்தை உள்ள பழைய ஏற்பாட்டின் ஏழு இடங்களிலும் "திருமணம் முடிக்கத்தக்க ஆனால் திருமணம் ஆகாத" என்று அர்த்தமே/விளக்கம் ஒன்றே பயன்பாடு பெறுகின்றது (ஆதி. 24:43; யாத். 2:8; சங். 68:25; நீதி. 30:19; உன். 1:3; 6:8; ஏசா. 7:14). 'Almah என்பதன் பயன்பாட்டினால் சுட்டிக்காட்டுதல் என்னவெனில், ("பெண், மனைவி" என்று குறிக்கும் 'ishsha அல்லது "பெண்பால்" என்பதைக் குறிக்கும் negebah ஆகியவற்றிற்குப் பதில்), ஏசாயா 7:14ல் திருமணமாகாத பெண்ணையே குறிப்பதாக உள்ளது. இருப்பினும் இது, ஆகாஸின் நாட்களுக்காகக் கன்னியிடம் இருந்து பிறத்தல் என்பது முன்னுரைக்கப்பட்டது என்று அர்த்தமாகாது. ஏசாயா இதைக் கூறும் போது கன்னியாக இருந்தவள் பின்னாளில் ஒரு தாயாவாள் என்று மட்டுமே வேதவசனம் கூறுகின்றது. யோசேப்பு மற்றும் மரியாள் ஆகியோரின் நாட்களில் விஷயம் முற்றிலும் மாறானதாக இருந்தது. கன்னியிடம் இருந்து பிறத்தல் என்பதைத் தவிர வேறு எந்த விளக்கமும் மத். 1:23ன் சந்தர்ப்பப் பொருளுக்கு நீதி இழைப்பதில்லை. (சில வேளைகளில் வார்த்தைகள் அரிதான பயன்பாடு பெற்றுள்ளன. Bethulah மற்றும் parthenos ஆகியவை கன்னித் தன்மையைக் குறிப்பிடுபவைகளாய் வழக்கமாகக் கருதப்பட்டாலும் கன்னித் தன்மையற்ற பெண்களைக் குறிக்கவும் அவ்வப்போது பயன்படுத்தப்படுகின்றன; யோவேல் 1:8; ஆதி. 34:3;* LXX*).*

## இயேசு, பிரசங்கியார்களுக்கு ஒரு முன்மாதிரி

1. *வேதவசனங்களுக்கான அவரது மரியாதை (லூக். 20:25, 26)*
2. *வேதவசனங்கள் பற்றிய அவரது அறிவு (மத். 4:1-11; லூக். 2:52; 4:17)*
3. *அவரது பணிமுறை அட்டவணை (லூக். 2:52; 4:16; 10:38-42; மாற். 1:35; அப். 10:38ஐக் காணவும்)*
4. *அவரது எளிமை (மத். 5:1-12; மாற். 12:37ஐக் காணவும்)*
5. *அவரது ஒப்படைப்பு/உறுதிப்பாடு (லூக். 2:49; யோவா. 4:34; 5:30; 6:38; 12:49; 17:4; 19:30)*

# அபிஷேகம் பண்ணப்பட்டவர்

*Mashiah, அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பவர் தம்மேல் எண்ணெய் ஊற்றப்பட்டவர் ஆவார். இந்த வழிமுறையில் கீஸின் குமாரனாகிய சவுல் ஒரு mashiah ஆனார் (1 சாமு. 10:1). அது போலவே தாவீதும் ஒரு mashiah ஆனார்: "அப்பொழுது சாமுவேல் தைலக் கொம்பை எடுத்து அவனை ... அபிஷேகம் பண்ணினான்" (1 சாமு. 16:13). ஒருவரை ராஜாவாகப் பதவியில் அமர்த்துவதற்கு அவரை எண்ணெயால் அபிஷேகம் செய்விப்பதே முறையான வழியாக இருந்தது.*

*தேவன் mashiah என்ற கருத்தைத் தமது சொந்த குமாரனைக் குறிப்பதற்கு ஏற்புடையதாக்கினார். இயேசுவைத் தமது "அபிஷேகம் பெற்றவர்'' என்று விளக்குவதற்கு Mashiah என்பது அவரால் பயன் படுத்தப்பட்ட இயற்பெயர்களில் ஒன்று ஆகும் (சங். 2:2). இயேசுவை ராஜரீகத்தின் ஒரு நபராக, "பிரபுவாகிய மேசியா" (தானி. 9:25) என்று தானியேல் சித்தரித்தார்.*

Mashiah *என்ற எபிரெய வார்த்தையே ஆங்கிலத்தில்* "messiah" *என்று வருகின்றது; அதற்குச் சமமான கிரேக்க வார்த்தையான Christos என்பது* "Christ" *என்று வருகின்றது. தெய்வீகத்துவமானவர் இந்த உலகத்திற்கு Mashiah*(messiah)*வாக வருவார் என்பதைக் கிணற்றண்டையில் இயேசுவுடன் பேசிய சமாரியப் பெண் எப்படியோ அறிந்திருந்தாள். அவள், "கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன்" (யோவா. 4:25) என்று கூறினாள்.*

*யோவானின் சீஷர்களில் ஒருவரான அந்திரேயாவும் கூட, அபிஷேகம் செய்யப்பட்டவராக இந்த உலகத்திற்கு வருகிறவர் Mashiah என்ற பெயரைச் சூடிக் கொள்வார் என்பதை அறிந்தார். அவர் பேதுருவிடம், "மேசியாவைக் கண்டோம்'' (யோவான் 1:41) என்று கூறிய போது அவரது குரலில் ஆழமான உணர்வு இருந்திருக்க வேண்டும்.*

*பின்னாளில் பேதுரு, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' (மத். 16:16) என்று அறிக்கையிட்டார். பேதுருவின் விசுவாசத்திற்காக அவரை இயேசு பாராட்டியதுடன், தேவனுடைய திட்டமிடப்பட்டிருந்த சபையானது அந்த நசரேயனே தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட குமாரன் என்ற உண்மையின் மீதுதான் அஸ்திபாரம் போடப்படும் என்றும் அறிவித்தார். இருப்பினும், நுணக்கமாய்க் கூறினால், பேதுரு அறிக்கை செய்த வேளையில் இயேசு Mashiahவாக இருக்கவில்லை, அவர் அபிஷேகம் செய்யப்*

*பட்டிருக்கவுமில்லை. அவர் மரணத்தையும், பாதாளத்தையும் ஜெயித்து, மகிமையில் விண்ணேற்பு அடைந்த பிறகே அவர் தேவனுடைய Mashiahவாக அபிஷேகம் செய்யப்பட்டார். அவர் பரத்துக்கேறின பத்து நாட்களுக்குப் பின், பெந்தெகொஸ்தே நாளன்று இயேசு தமது முடி சூட்டுதலுக்காகத் தமது பிதாவின் அரியணை முன்பாகச் சென்றார். உருவகத்தில் கூறினால், அவரது பிதாவானவர் அபிஷேகத் தைலத்தை அவர் தலையில் ஊற்றினார். அவர் இயேசுவை "தேவனே" என்று அழைத்து,*

> *தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது,*
> *உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.*
> *நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர்;*
> *ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும்*
> *உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார் (சங். 45:6, 7)*
> *என்று கூறினார்.*

*கர்த்தருடைய நாளில் (அநேகமாக 26, மே, கி.பி. 30) நடந்த அந்த வரலாற்று நிகழ்ச்சியில் இருந்து, அவர் ஆசீர்வதிக்கப்பட்டவராகவும், அதிகாரம் பெற்ற ஒரே ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் (1 தீமோ. 6:15), விசேஷித்த Mashiahவாகவும் முறைப்படி ஏற்படுத்தப் பட்டார்.*

## இயேசுவின் தெய்வீகத்துவமும் வேதாகம ஏவுதலும்

*இயேசுவின் தெய்வீகத்துவத்தை ஆதாரம் நிரூபிக்கிறதென்றால், வேதாகமம் தெய்வீகத்துவமானது என்று தானாகவே நிலைநாட்டப்படுகின்றது. இயேசு பழைய ஏற்பாட்டை ஆமோதித்ததாலும், அவரது அதிகாரத்தின் பேரில் அவருடைய சீஷர்கள் புதிய ஏற்பாட்டை எழுதியதாலும் இது உண்மையாய் உள்ளது. அவர்களது வார்த்தைகள் நம்பத்தக்கவை அல்ல என்றால், இயேசுவின் வரலாறானது நிலைநிற்பதில்லை. இருப்பினும், இயேசுவின் வரலாறானது இம்மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கக் கூடாதது என்றால், இம்மனிதர்கள் இயேசுவின் வரலாற்றைத் தாங்களே கண்டுபிடித்து அவ்வலைப் பின்னலைச் சதியாலோசனையாகப் பரப்பக் கூடிய நபர்களாய் இல்லை என்றால், இயேசுவின் தெய்வீகத்துவமானது நிலைநிற்கின்றது, அவரது அதிகாரத்தின் பேரில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் தெய்வீக ஏவுதல் பெற்றவைகளாகவே இருக்க வேண்டும்.*

# பரலோகத்தில் உயிரோடிருக்கின்றவர்

## [சவுல்/பவுலின் சாட்சியம்]

*பதினோரு அப்போஸ்தலர்களின் "அவிசுவாசத்தைக் குறித்தும், இருதய கடினத்தைக் குறித்தும்'' (மாற். 16:14) அவர்கள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவால் தனிப்பட்ட வகையில் கடிந்து கொள்ளப்பட்டனர், ஆனால் அவர்கள் உடனடியாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினர். அவர்கள், இயேசுவின் சரீரமானது நடந்து, பேசியதை - உண்மையில் உயிருடன் இருந்ததை - கண்டிருந்ததால் தங்களின் புதிய விசுவாசத்திற்காக மரணமடையும் அளவுக்கு மிகப் பலத்த நம்பிக்கை கொண்டனர்.*

*"அகாலப் பிறவியான ஒருவர்" (1 கொரி. 15:8) இருந்தார், முதலில் அவர் கிறிஸ்துவின் பெயரைத் தரித்திருந்த எவரையும் கடுமையாய்த் துன்புறுத்து பவராகவும், பயமுறுத்தல் மற்றும் கொலைகள் செய்கிறவராகவும் இருந்தார் (அப். 8:1; 9:1, 2; 22:4, 5; 26:9-11). இயேசு உயிர்த்தெழுந்தபின் பூமியில் இருந்த நாற்பது நாட்களில் அவரைப் பவுல் கண்டிருந்ததில்லை, ஆனால் பிணமானது உயிர் பெற்றது என்ற அறிக்கையாக வந்த அவரது (இயேசுவின்) வரலாறானது அவரை(பவுலை)ப் பொறுத்த வரையில் நம்ப முடியாததாக இருந்தது. கண்களைக் குருடாக்கும் ஒரு ஒளியில் வானத்தில் தாம் அவரைக் கண்டதாகவும் அவர் பேசியதைக் கேட்டதாகவும் அவர் (பவுல்) உரிமைகோரினார் (அப். 9:3-6; 22:6-11; 26:13-18).*

*பவுல் உண்மையிலேயே இயேசுவைக் கண்டு, அவர் பேசியதைக் கேட்டிருந்தால், இயேசு மரித்தவராயிருக்கவில்லை என்பதே அர்த்தமாகின்றது: அவர் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து பரலோகம் சென்றிருந்தார். போதுமான ஆதாரமற்ற பரலோக தரிசனமானது நிலைப்படுத்தப்பட/மெய்ப்பிக்கப்பட முடியுமென்றால், அவிசுவாசி யிடமிருந்து வந்த அந்தப் பலத்த சாட்சியமானது இயேசுவின் உயிர்த் தெழுதலை ஆதரிக்கின்றது. பரலோக தரிசனமானது, பிணமொன்று மறுபடியும் உயிர் பெற்றது என்ற அறிக்கையைப் போலவே இயல்புக்கு மீறியதாகவும், அறிவுக்கு முற்றிலும் மாறானதாகக் காணப்படுகின்றது. பவுலின் உரிமோகோருதலுக்கு உறுதிப்பாடு ஏதேனும் இருக்கின்றதா?*

**ஒரு மாயத் தோற்றமா?**

*பவுல் ஒரு மாயத் தோற்றத்தினால் பாதிக்கப்பட்டிருந்தாரா? பவுல்*

*எப்படிப்பட்ட ஒரு தீர்மானமிக்க, பலத்த சிந்தையுள்ளவராக இருந்தார் என்பதை ஒருவர் நினைவுகூரும் வரையிலும் இது அறிவுக்குப் பொருத்தமாகவே ஒலிக்கின்றது. மாயத்தோற்றங்கள் என்பவை வழக்கமாக ஆலோசனையினாலேயே தூண்டிவிடப்படுகின்றன என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். இருப்பினும் இந்த நிகழ்ச்சியில், பவுலின் மனதில் இருந்த ஆலோசனை எதுவும் இயேசுவைக் காண்பதற்கு நேர் எதிரானதாகவே இருந்திருக்கும். அவர் இயேசு என்ற பெயரையே வெறுத்து, அவர் (இயேசு) ஒரு ஏமாற்றுக்காரர் என்று நம்பி, இயேசுவைப் பின்பற்றுபவர்களை இன்னும் அதிகமாய்க் கண்டு பிடித்து அவர்களைக் கட்டி, சிறையில் அடைத்துக் கொலை செய்வதற்காக ஒரு பயணத்தில் இருந்தார். இல்லை, உளவியல் ரீதியாக பவுல் இயேசுவைக் காண்பதற்குத் தக்கவாறு இருந்திருக்கவில்லை. பவுலின் நிகழ்ச்சியில் விசுவாசிக்கத் தயாரான அனுபவம் கொண்டிருந்தார் என்பது அறிவுக்குப் பொருத்தமானது அல்ல.*

***மனக் குழப்பமா?***

*தமஸ்கு செல்லும் சாலையில் பவுலின் அனுபவத்தை மனதின் மாயத் தோற்றமோ அல்லது ஆலோசனையின் வல்லமையோ விளக்கப்படுத்துவதில்லையென்றால், அவரது கற்றறிவானது அவரது சிந்தனையைப் பாழாக்கிப் போட்டிருந்ததா? இதுவே பெஸ்துவின் நிர்ணயமாய் இருந்தது (அப். 26:24). சமாதான நிலையற்ற மனம் கொண்ட மனிதர் ஒருவர், உலகின் மாபெரும் புத்தகங்களில் பதிமூன்று அல்லது பதினான்கை எழுத முடியும் என்பது சமான நிலையான மனங்களைப் பற்றி நன்கு பேசுவதில்லை! இயேசுவைத் தவிர வேறு எவரைக் காட்டிலும் அதிகமான மக்களைச் சரியான வாழ்க்கைக்குத் தூண்டுவதற்கு மன நோயானது அனுமதித்திருக்கும் என்பது கேள்விப்படாத ஒன்று ஆகும். பெஸ்து கூறியது சரியென்றால், நமக்கு பைத்தியக்காரர்களே அதிகம் தேவை! நெடுஞ்சாலையொன்றில் நண்பகல் வேளையில் பெற்ற தரிசனத்திற்குச் சரியான விளக்கம் எதுவாயிருப்பினும், பவுலின் விஷயத்தில் அவர் (பவுல்) ஏறுமாறான மனம் கொண்டிருப்பார் என்பது மதிப்புடைய தேர்வாகக் காணப்படுவதில்லை.*

***ஒரு கிறிஸ்தவ மோசடியா?***

*பவுல் கண்டதற்கு மாயத் தோற்றமோ அல்லது பைத்தியக் காரத்தனமோ ஏற்புடைய விளக்கமல்ல என்றால், ஏற்புடையதாயிருப்பது என்ன? பவுல் கிறிஸ்தவர்களால் மோசடி செய்யப்பட்டாரா? இப்படிப்பட்ட ஒரு ஆலோசனையே கூட கிறிஸ்தவர்களுக்கெதிரான பழி தூற்றுதலாய் உள்ளது, ஏனெனில் அவர்கள் மோசடி வேலைகளில் ஈடுபட்டதில்லை. சத்தியத்தின் முழு நிறைவேற்றமாயிருப்பதாக உரிமை கோரியவரைப் பின்பற்றுவதே அவர்களின் இலக்காயிருந்தது (யோவா. 14:6).*

*மற்றும், முரட்டு சிந்தனையுள்ள பவுல் தன்னை ஒருவர் தவறாக வழி*

*நடத்த முயற்சி செய்திருந்தால், அந்த கிறிஸ்தவர் சொல்வதைக் கேட்டிருக்க மாட்டார். அவர் ஸ்தேவானைக் கல்லெறிந்தவர்களின் மேலாடைகளைக் காவல் செய்து கொண்டிருந்தார், மற்றவர்கள் மரிப்பதற்குத் தாம் காரணமாய் இருந்ததாகவும் சாட்சியளித்துள்ளார். அத்துடன், இந்த வினோதமான நிகழ்ச்சி (பரலோக தரிசனம்) நடைபெற்ற போது பவுலுடன் இருந்தவர்களில் கிறிஸ்தவர்கள் எவரும் இல்லை.*

***வேண்டுமென்றே கூறப்பட்ட பொய்க் கதையா?***

*பரலோக தரிசனம் பற்றிய கதையொன்றைப் பவுல் தாமே ஏற்படுத்தினார் என்பது நம்பக் கூடியதா? பவுல் பொய் கூறுவதால் இழந்து போகக் கூடிய யாவற்றையும் ஒருவர் எண்ணிப் பார்க்கும் போது அவர் உடனடியாக இப்படிப்பட்ட கோட்பாட்டிலிருந்து பின்னடைந்து விடுகின்றார்: (1) அவரது வெற்றி வாய்ப்பு யாவும் மறைந்தொழியும். அவர் ஒரு கிறிஸ்தவராவதற்கு முன்பு, புகழ் பெற்ற தம் பேராசிரியரான கமாலியேலுடன் ஒப்பிடத் தக்க வகையில் இஸ்ரவேலில் புகழ் பெற்ற ஒரு ரபீ ஆவதற்குரிய பாதையில் இருந்தார். அவர் ஒரு கிறிஸ்தவர் ஆவதால் இந்த வாய்ப்பை அவர் இழந்து போனார். (2) இஸ்ரவேலில் அவர் மிகவும் ஆழமாக அன்பு காட்டிய அவரது குடும்பத்தார் மற்றும் இனத்தார் ஆகியோருடன் உள்ள ஐக்கியமானது துண்டிக்கப்பட்டது (ரோமர் 9:1-3; 10:1, 2ஐக் காணவும்). (3) அவரது மகிழ்வான வாழ்க்கை கடந்து போயிற்று, ஏனெனில் உபத்திரவப்படுத்துகின்றவராய் இருந்த அவர் உபத்திரவப் படுகின்றவரானார், கடைசியில் அவர் வேதசாட்சியாக மரித்தார். (அப். 9:23, 29; 14:19; 16:23; 21:13, 30; 23:13; 2 தீமோ. 4:7, 8ஐப் படிக்கவும்.) இல்லை, தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் நடந்த நிகழ்ச்சி பற்றிய பொய்க் கதையொன்று விளக்கம் என்ற வகையில் திருப்தியளிக்காததாக உள்ளது.*

***கிறிஸ்துவுடன் ஒரு தற்செயலான சந்திப்பா?***

*மேலே அட்டவணைப்படுத்தப்பட்ட நான்கை விட மற்ற மாற்றக் கருத்துக்களை மனிதர்கள் ஆராய்ந்துள்ளனர், ஆனால் என்ன நடந்தது என்பது பற்றி மிகச் சரியான உண்மையையே பவுல் கூறினார் என்ற ஒரே மாற்றுக் கருத்தையே அவர்கள் கண்டுள்ளனர். சர் ஜார்ஜ் லைட்டெல்ட்டன் (1709-73) அவர்கள், பவுலின் சாட்சியமானது பொருத்தமற்ற கதை என்றே முதலில் நினைத்தார். அவர் பின்வருமாறு எழுதினார்:*

> *[அப்போஸ்தலரான] பவுல் வஞ்சிக்கும் விருப்பத்துடன் தாம் பொய்யென்று அறிந்தவற்றைக் கூறிய மோசடிக்காரராய் இருந்திருக்க வேண்டும்; அல்லது அளவுக்கு அதிகமான கற்பனையினால் அவர் தம்மைத் தாமே வஞ்சித்துக் கொண்ட ஒரு அதி உற்சாகியாய் இருக்க வேண்டும்; அல்லது அவர் மற்றவர்களின் மோசடியினால் வஞ்சிக்கப்பட்டிருக்க வேண்டும், மற்றும் அவர் கூறிய யாவையும் மோசடியின் வல்லமையின் மேல் சுமத்தப்பட வேண்டும்; அல்லது அவர் கூறிய யாவையும் அவரது மனமாற்றத்தின் காரணமாகவும்,*

> *அதன் விளைவாக நடந்தவைகளாலும் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும், அவை யாவும் உண்மையிலேயே நடந்தன; மற்றும் இதனால், கிறிஸ்தவ மதமானது ஒரு தெய்வீக வெளிப்பாடாக உள்ளது. (Lord Lyttelton on the Conversion of St. Paul and Gilbert West on the Resurrection of Jesus Christ).*

*பவுலின் வாழ்வையும் வார்த்தைகளையும் சாத்தியமான ஒவ்வொரு வழியிலும் பரிசோதித்துப் பார்த்த பிறகும், ஒவ்வொரு விளக்கத்தையும் கொடுத்துத் தீர்த்த பிறகும், பவுல் எடுத்துரைத்தது சத்தியமே என்று லைட்டெல்ட்டன் முடிவு செய்தார்.*

*முடிவுரை*

*மேசியா இப்பூமிக்கு வரவிருந்த நிகழ்ச்சி பற்றிய குறிப்பிட்ட பல விபரங்களை அறிவதற்குப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுக்கு அற்புத அறிவு அவசியமானதாக இருந்தது. அவரது வருகைக்கு நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அவர்களின் முன்னுரைத்தல் எழுத்தாக்கப் பட்டிருந்தன.*

*மேசியா என்று உரிமைகோரும் நபர் ஒருவர் அகுஸ்து ராயனின் காலத்தில் (கி.மு. 31 - கி.பி. 14) யூதேயாவிலிருந்த பெத்லகேமில் உண்மையிலேயே பிறந்தார், மற்றும் பொந்தியு பிலாத்துவின் ஆட்சிக் காலத்தில் அவர் மரித்தார் என்று பிலாத்துவாலேயே சான்றளிக்கப்பட்டார்.*

*அவரது உரிமைகோருதலுக்குச் சான்றாதாரமாக அறிக்கையிடப்பட்ட அற்புதங்களுக்கும் அப்பால், அவரது வாழ்க்கை முறையானது அவரது உண்மைத் தன்மைக்குச் சான்றளிக்கின்றது. அவர் தாழ்மையை அணிந்திருந்தார், மற்றவர்களுக்காகச் சுயநலமின்றி வாழ்ந்தார், தமது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவது தவிர சுய நோக்கம் வேறெதையும் அவர் பற்றிக் கொள்ளவில்லை. இயேசுவைப் போல எந்த ஒரு மனிதரும் பேசியதில்லை, அவரைப் போல எந்த ஒரு மனிதரும் வாழ்ந்திருந்ததில்லை அல்லது ஒருபொழுதும் வாழ்ந்ததில்லை. மனிதகுலம் உணரக் கூடிய அளவில், அவரது பண்பானது தெய்வீகத்துவமானதாக, தேவனிடத்தில் நாம் எதிர்பார்ப்பதற்கு மிகச் சரியானதாகத் தோன்றுகின்றது.*

*சிலுவையில் அறையப்பட்ட இயேசு திரும்பவும் உயிர் பெற்றார், மரணத்திற்கு அவர் மீது வல்லமையற்றுப் போயிற்று என்ற உறுதிப்பாடானது குறிப்பிட்ட சில அவிசுவாசிகளைப் பற்றிக் கொண்டது. இந்த உறுதிப்பாடானது அவர்களிடத்தில் திடீரென்று ஏற்பட்டது, மற்றும் அவர்கள் அந்த மகிமையுள்ள உறுதிப்பாட்டிற்காகப் பிரசங்கியார்களாகும் படிக்கு இந்த உறுதிப்பாடானது மிகவும் வலிவானதாகவும் அர்த்தமுள்ள தாகவும் இருந்தது. அவர்கள் பிரசங்கித்ததை அவர்கள் சுவிசேஷம் - “நற்செய்தி” - என்று அழைத்தார்கள். தேவன் வந்திருந்து மனிதர்களின் நடுவே சரீரத்தில் வாழ்ந்திருந்தார் என்ற தங்களுடைய நம்பிக்கையை ஏற்றுக் கொள்ளும்படி ஆயிரக்கணக்கான மக்களை அவர்கள் இணங்கச் செய்தனர்.*

## நியாயப்பிரமாணமும் இரக்கமும்

கி.மு. சுமார் 500ல், லோக்ரிஸ் என்ற கிரேக்க மாவட்டத்தில், செல்யூக்கஸ் அரசருக்கு தேவனுடைய தைப் போன்ற ஒரு பிரச்சனை இருந்தது. விபசாரம் செய்தால் கண்களை இழக்க வேண்டும் என்று அவரது சட்டம் உத்தரவு இட்டது. இருப்பினும் அவரது மகன் அக்குற்றத்தைச் செய்தவரான போது, சட்டத்தை நிலைநாட்டுதல் மற்றும் தமது மகன்மேல் இரக்கமாய் இருத்தல் ஆகிய இருநிலைகளுக்கிடையில் அவர் பலமாக இழுத்தெரியப்பட்டார். அவர் தமது மகனின் ஒரு கண்ணையும் தமது சொந்தக் கண் ஒன்றையும் நீக்கிப் போட்ட தன் மூலம் அந்தப் பிரச்சனையைத் தீர்த்தார். இவ்வழி முறையில் அவர் சட்டத்தையும் பராமரித்து, தம் மகனைக் காணக் கூடியவராகவும் விட்டு வைத்தார்.

# வரலாற்றுப் பூர்வமானவர்

*பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை இயேசு நிறைவேற்றுதல் பற்றி விபரங்களைத் தருகின்ற புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் நம்புவதற்குரியவைகளா? நசரேயத் தச்சராக இயேசு முதல் நூற்றாண்டில் உண்மையிலேயே வாழ்ந்தார் என்பதை இந்த நூற்றாண்டில் ஒருவர் எப்படி அறிய முடியும்? அவரது அற்புதமான வாழ்வின் சரித்திரமானது அக விருப்பத்தின் சிந்தனையாக மட்டுமே இருக்கின்றதா? ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்களுடன் அப்படிப்பட்ட நபர் மாம்சத்தில் இருந்ததாகவும், தாங்கள் அவரது மகிமையைக் கண்டதாகவும் உறுதி செய்தார்கள். இருந்தாலும், அவர்கள் மனித குலத்தின் மகிமையுள்ள முழுநிறைவான இலக்கு ஒன்றைக் கற்பனையில் மட்டுமே கண்டவர்களாய் இருந்தார்களா?*

*இயேசுவின் நிரூபணமான வாழ்வு பற்றிய நான்கு சுவிசேஷங்களை தீர்மானமான அவிசுவாசிகள் நுணுகி ஆராய்ந்த பிறகு, இப்பொழுது உள்ளவற்றிலேயே மிகவும் சான்றாதாரமுள்ள வரலாற்றுப் பதிவேடுகளாக நமது காலத்தில் முன் வைத்துள்ளனர்.*[1] *மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோர் கற்பனைப் படைப்பான இயேசுவை சுய மோசடியாய்ப் பின்பற்றியவர்கள் மட்டுமே என்று ஒருவர் கருத்துக் கொண்டால், கிறிஸ்தவரல்லாதவர்களின் கூற்றுக்களைக் கவனிக்கையில் அக்கருத்து தவிடு பொடியாகின்றது. ஆதி நூற்றாண்டுகளில் இருந்து கிறிஸ்தவரல்லாதவர்களின் பல மேற்கோள்கள் கிடைப்பதுடன், சில கூற்றுக்கள் இயேசுவைப் பற்றி நடப்பில் உள்ளனவாகவும், அவர் உண்மையிலே வாழ்ந்தார் என்பதை உறுதியாய்ச் செயல்விளக்கப் படுத்துவனவாகவும் உள்ளன.*[2]

## *பிளேவியஸ் யோசிப்பஸ்*

*பிளேவியஸ் யோசிப்பஸ் என்ற கற்றறிவுள்ள பரிசேயர் ஒருவர் சபை தொடங்கப்பட்டு ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தார். புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்படும் வரையிலும் அவர் வாழ்ந்தார். அவர் ஒரு கிறிஸ்தவரல்ல, ஆனால் இயேசுவின்மேல் அவர் ஏறக்குறைய பயபக்தியுள்ள மரியாதையைக் கொண்டிருந்தார்:*

> *இப்பொழுது ஏறக்குறைய இந்தக் காலத்தில் இயேசு என்ற ஞானமுள்ள மனிதர் இருந்தார், இவரை மனிதர் என்பது சட்டபூர்வமாக சரியென்றால் இது தகும்; ஏனெனில் இவர் அற்புத*

செயல்கள் செய்பவராக, சத்தியத்தை மனிதர்கள் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்ளும் வகையிலமைந்த ஒரு போதகராக இருந்தார். இவர் யூதர்கள் பலரையும் புறஜாதியார் பலரையும் தம்மை நோக்கி இழுத்துக் கொண்டார். இவரே கிறிஸ்துவாக இருந்தார். நம்மிடையே இருக்கின்ற முக்கியமான மனிதர்களின் ஆலோசனையின்படி பிலாத்து இவருக்கு சிலுவை மரணத்தண்டனை கொடுத்தார், முதலில் இவர்மீது அன்புகூர்ந்தவர்கள் இவரைக் கைவிட்டு விடவில்லை; ஏனெனில் மூன்றாம் நாளிலே இவர் அவர்களுக்கு மறுபடியும் உயிருள்ளவராகத் தோற்றம் தந்தார்; தெய்வீக தீர்க்கதரிசிகள் முன்னுரைத்திருந்தபடியே இவரைப் பற்றிய இந்த நிகழ்ச்சிகளும் இன்னும் ஆயிரம் ஆயிரமான அற்புத நிகழ்ச்சிகளும் நடந்தன. இவரிடத்திலிருந்து பெயரைப் பெற்றுக் கொண்ட கிறிஸ்தவர்கள் என்ற இனக்குழுவினர் இந்நாட்களிலும் இல்லாது போய் விடவில்லை.[3]

மேலுள்ள இக்கூற்றில் வார்த்தைகளின் பயன்பாட்டில் ஜாக்கிரதை யின்மையும் அதனுடன் இணைந்த பெரும் மதிப்பும் யோசிப்பஸை உறுதியாகவே பண்புறுத்துகின்றன, ஏனெனில் சுவிசேஷ உண்மைகளின்மீது விசுவாசம் என்ற ஆழப்பதியும் கருத்துக்களை அவர் இதில் விட்டுச் சென்றார்.[4] இருப்பினும், பின்னாளைய புத்தகம் ஒன்றில் அவரது உண்மையான விசுவாசம்/நம்பிக்கை காணப்படுகின்றது, இது ஒரு திருப்தியாகப் பணியாற்றுகின்றது; அந்த எழுத்தானது இயேசுவை “கிறிஸ்து என்று அழைக்கப்பட்டவர்” என்று குறிப்பிட்டது.[5]

இயேசுவின் தெய்வீகத்துவத்தை யோசிப்பஸ் நம்பவில்லை என்பதற்குப் பலத்த சாட்சியம் உள்ளது, ஆனால் நாசரேத்தூர் இயேசு முதல் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்று யோசிப்பஸ் நம்பியதற்கு அதே அளவு சமமான பலத்த சாட்சியம் உள்ளது. கிறிஸ்தவ “இனக்குழு”வுக்குப் புறம்பே நிலை நிற்பவர் என்ற வகையில் யோசிப்பஸ்ஸின் வார்த்தைகள், இயேசுவை ஒரு கற்பனைப் படைப்பாகக் கண்ணோக்கும் எவருக்கும் எதிரானதாக உள்ளது.

## டால்முட்ஸ்

முதல் ஐந்து நூற்றாண்டுகளில் யூதர்களின் விரிவான எழுத்தாக்கமானது டால்முட்ஸ் (Talmuds) என்று அழைக்கப்படுகின்றது (இது மிஷ்னா மற்றும் கெமாரா என்ற இரண்டு பாகங்களாய் உள்ளது). இது இயேசுவைப் பற்றிப் பேசுகின்றது. எதிர்பார்க்கப்படும்படியாகவே இதில் உள்ள குறிப்புகள் மிகக் குறைவாகவும் வெறுப்பு மிக்கதாகவும் உள்ளன; ஆனால் உண்மையில் இல்லாத ஒரு இயேசு என்ற கருத்தை டால்முட்ஸ் மறுக்கின்றது.[6] இவை ‘‘ஏலியின் மகளான மரியாளுக்குப் பிறந்த மகனான நாசரேத்தூர் இயேசு”வைப் பற்றிப் பேசுகின்றன.[7] அவர் எகிப்துக்குச் சென்றதை இவை எடுத்துரைக்கின்றன மற்றும் அவரது அற்புத வல்லமைகளை உணர்ந்து ஒப்புக் கொள்ளுகின்றன. இருப்பினும், இவை அவரது வல்லமையை, தேவனுடைய நாமத்திற்கான சரியான உச்சரிப்பைத் தேவாலயத்தில் இருந்து திருடிக் கொண்டதால் பெற்றார் என்றோ அல்லது எகிப்திய மந்திர

வித்தையைக் கையாண்டார் என்றோ குறிப்பிடுகின்றன. இயேசுவைப் பின்பற்றியவர்களின் குறிப்பான சில பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன, அவைகளில் மத்தேயு, ததேயு, பவுனி என்ற பெயருடையவர் மற்றும் நிக்கொதேமு ஆகியவர்களும் உள்ளடங்கும். பஸ்கா அன்று சிலுவையில் அறையப்பட்டதும் விடப்படவில்லை, ஆனால் எல்லாக் குறிப்புரைகளும் இயேசுவின் மீது மந்திரவாதமும் மாயவித்தையும் செய்பவர் என்ற குற்றச்சாட்டை தீய வகையில் மெதுமெதுவாக உட்புகுத்தி பாரமாக்குபவைகளாய் உள்ளன.[8]

ரபீக்கள் இயேசுவை "தூக்கில் இடப்பட்டவன்" என்றும் "கன்னிப் பெண்ணுக்குப் பிறந்தவன்" என்றும் பழிப்புரையாகக் குறிப்பிட்டனர்.[9] மேலும் ரபீக்கள் "gospel" என்ற வார்த்தைக்கு தங்கள் மொழியில் "எல்லைக் கோட்டின் அக்கிரமம்" அல்லது "எழுதப்பட்ட கற்பலகையின் பாவம்" என்ற அர்த்தம் தருகின்ற அவமானப்படுத்தும் சிலேடைச் சொற்களை ஏற்படுத்தினர்.[10] கற்பனைப் படைப்பான இயேசு என்ற கருத்தை அவர்கள் எப்பொழுதாவது கருதியிருந்தால், அவர்களின் தாக்குதல்கள் மாறுபட்டதாய் இருந்திருக்கும் என்பது உறுதி. அவர்கள் ஏற்படுத்திய ஒவ்வொரு அவமானமும் நாசரேத்தூர்த் தச்சர் உண்மையில் இருந்தார் என்பதையே அடிப்படையாகக் கொண்டிருந்தன.

## கொர்நேலியு டேசிட்டஸ்

ரோமப் பேரரசில் தலைசிறந்தவரென்று கருதப்பட்ட இன்னொரு வரலாற்றாளர் கொர்நேலியு டேசிட்டஸ் ஆவார். நீரோவின் காலத்தில் (கி.பி. 54-68) ரோமாபுரியில் மூன்றில் ஒரு பகுதி எரிக்கப்பட்டது பற்றி ஏறக்குறைய கி.பி. 110ம் ஆண்டில், இவர் ஒரு விவரிப்பை எழுதினார். 64ல் ஏற்பட்ட "மாபெரும் தீ விபத்திற்கு" நீரோவே காரணமாய் இருந்தார் என்று ரோமர்களில் சிலர் கூறியதால், இவர் அக்குற்றச்சாட்டை மறுத்துரைக்கும் வகையில் இதை எழுதினார். டேசிட்டஸ் தமது அறிக்கையின் ஒரு பாகமாக பின்வருமாறு எழுதினார்:

> ஆகையால், வதந்தியை முற்றிலும் அழித்து விடாமல் ஆனால் பாதிப்பு ஏற்படுத்துவதற்காகக் கும்பலானது கிறிஸ்தவர்கள் என்று பெயரிட்டு அழைத்த மனிதர்களின் வகுப்பாரை நீரோ குற்றவாளிகளுக்குப் பதிலீடாக்கி அவர்களின் குற்றங்களால் ஏற்பட்ட அருவருப்புக்கென்று கொடுமையின் மிக உச்ச கட்டமான மேலான தண்டனையை வழங்கினான். அவர்கள் தங்கள் பெயரைப் பெற்றிருந்த கிறிஸ்து என்பவர் திபேரியு ராயனின் காலத்தில் ஆளுநராய் இருந்த பொந்தியு பிலாத்துவின் தீர்வையின் பேரில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவராயிருந்தார்; அழிவின் இல்லிடமாகிய யூதேயாவில் மட்டுமின்றி ரோமாபுரியிலேயே கேடுண்டாக்கும் மூட நம்பிக்கையானது குறுகிய காலத்திற்கு மேலோங்கியிருந்தது, இங்கு உலகத்தின் பயங்கரமும் வெட்கமும் நிறைந்த விஷயங்கள் ஒன்றிணைந்து இருந்தன.[11]

“கிறிஸ்தவர்கள் என்று பெயரிடப்பட்டிருந்தவர்கள்” மேல் டேசிட்டஸ் ஆழ்ந்த வெறுப்புக் கொண்டிருந்தார் என்பதை அவரது எழுத்துக்கள் காண்பிக்கின்றன, ஆனால் “கிறிஸ்து” (Christus) என்பவர் “ஆளுநரான பொந்தியு பிலாத்துவின் தீர்வையினால் மரண தண்டனைக்கு ஆளானார்” என்று (டேசிட்டஸ்) திடமாக நம்பியிருந்ததும் தெளிவாகின்றது.

## C. *பிளினியஸ் செக்குந்து*

C. *பிளினியஸ் செக்குந்து என்பவர் டேசிட்டஸ் சமகாலத்தவரான இன்னொரு ரோம எழுத்தாளரும், பித்தினியாவின் ஆளுநரும் ஆவார். அவர் இதே பெயருடைய புகழ் பெற்ற தமது சிற்றப்பாவிலிருந்து வேறுபடுத்தப் படுவதற்காக “இளைய” பிளினி என்று அடையாளப் படுத்தப்பட்டார். கி.பி. 112ல் இளைய பிளினி ட்ரேஜன் பேரரசருக்குத் தமது மாநிலத்தில் உள்ள கிறிஸ்தவர்களை என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை கேட்டு எழுதியிருந்தார்.*

*புறசமயக் கோவில்கள் கை விடப்பட்டு, கிறிஸ்துவின் நாமத்திற்காகக் கிறிஸ்தவர்கள் விருப்பத்துடன் மரணத்தை பெற்றுக் கொண்டிருக்கையில், இயேசுவைப் பற்றி கற்பனைக் கதை “தொற்று நோய்” போல் பரவியது என்று பிளினியை நினைக்கச் செய்வது இயலாததாக இருந்திருக்க வேண்டும். கிறிஸ்தவத்தின் செல்வாக்கினுடைய விரிவைப் பிளினியின் குறிப்புகள் விவரிக்கின்றன: “இந்த மூட நம்பிக்கையின் தொற்று நோயானது நகரங்களின் எல்லைகளில் மட்டுமின்றி, கிராமங்களிலும், நாடு முழுவதிலுமே விரிவாயிற்று.”*[12]

## *சுயூட்டோனியஸ்*

*டேசிட்டஸ்ஸின் சமகாலத்தவரும் சக வரலாற்றாளருமான சுயூட்டோனியஸ் அவர்கள் கி.பி. சுமார் 49ல் பேரரசாயிருந்த கிலாவுதியுவினால் செயல்படுத்தப்பட்ட ஒரு அழிவு நடவடிக்கை பற்றி கி.பி. சுமார் 120ல் எழுதினார்: “கிறிஸ்துவினால்* (Chrestus) *தங்களுக்கு ஏற்பட்ட தீமைத்தூண்டுதலினால் யூதர்கள் தொடர்ந்து/நிலையாக தொந்தரவுகள் ஏற்படுத்திக் கொண்டிருந்தபடியினால், அவர் (கிலவுதியு ராயன்) அவர்களை (யூதர்களை) ரோமாபுரியிலிருந்து வெளியேறக் கட்டளையிட்டார்.”*[13] *(டேசிட்டஸ்* “Christus”[14] *என்று அழைத்திருந்தவரை, சுயூட்டோனியஸ்* “Chrestus”[15] *என்று அழைத்தார்.)*

*இந்த வெளியேற்றமானது கிலவுதியு ராயனின் ஆட்சிக் காலத்தினுடைய ஒன்பதாம் ஆண்டில் நடைபெற்றதாக ஒரோஸியஸ் என்ற எழுத்தாளர் குறிப்பிட்டார். வெர்னெர் கெல்லர் சுட்டிக் காட்டியபடி, “சிலுவையில் அறையப்பட்டு பதினைந்து முதல் இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்டிராத காலத்தில்” ரோமாபுரியில் கிறிஸ்தவ சமூகம் ஒன்று இருந்தது என்பதை அது அர்த்தப்படுத்துகின்றது.*[16]

*ரோமாபுரியில் யூதர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில்*

*இருந்த விசுவாசமற்ற யூதர்கள், கிறிஸ்தவர்களான யூதர்களைத் துன்புறுத்தினார்கள் என்பது உறுதி. அவர்கள் கிலவுதியு ராயன் ஆழ்ந்த வெறுப்புக் கொள்ளும்படியான வெளியரங்கமான பெரும் தொந்தரவை எழுப்பினர். எனவே பேரரசர் அந்த விஷயத்தை யூதத்துவத்தின் உட்பூசல் என்பதாகக் கண்ணோக்கி ஒவ்வொரு யூதரும் ரோமாபுரியை விட்டுச் செல்ல வேண்டும் என்று கட்டளையிட்டார். அந்த மகிழ்ச்சியற்ற குழுவில் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் இருந்தனர். கொரிந்துவில் பவுல், "யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப் போகும்படி கிலவுதியு ராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்து தேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும்'' (அப். 18:2) கண்டார். இயேசுவின் மரணத்திற்குப் பின் இருபது ஆண்டுகளுக்குள்ளாகவே ரோமாபுரியில் இருந்த ஏராளமான கிறிஸ்தவர்களின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்திய இந்த வருத்தத்திற்குரிய நிகழ்ச்சியானது* "Chrestus" *என்று ஒருவர் இல்லாமல் இருந்திருந்தால் நடைபெற்றிருக்கவே முடியாது. சுயூட்டோனியஸின் குறிப்பானது இயேசுவின் வரலாற்றுத்துவம் பற்றி மறுப்புள்ள மற்றும் வெறுப்புணர்வு மிக்க ஆதார மூலத்திலிருந்து வந்த நிரூபணமாக உள்ளது.*[17]

## முடிவுரை

*முதல் நூற்றாண்டில் உயிர் வாழ்ந்த, சுவாசித்த, மரித்த நாசரேத்தூர் இயேசுவின் செயல்விளைவானது ஒடுக்கப்பட முடியாதது ஆகும், ஏனெனில் அவர் செய்தது "ஒரு மூலையில் நடந்த காரியமல்ல" (அப். 26:26). கிறிஸ்துவைப் பற்றிய மற்ற எதுவும் தாக்கப்பட்டாலும், அவரது உண்மை இருப்புத்தன்மை ஒப்புக் கொள்ளப்பட்டாக வேண்டும். ''தகவல் அறிவுடைய எந்த ஒரு மனிதரும் நெப்போலியன் போனபார்ட், ஆலிவர் கிராம்வெல், ஜூலியஸ் சீசர்'' அல்லது நாசேரேத்தின் இயேசு போன்றவர்கள் இருந்தனர் என்பதில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமளிக்க மாட்டார்கள். ''ஜூலியஸ் என்பவர் வாழ்ந்தார், கால் (பிரான்ஸ்) நாட்டின் மீது யுத்தம் தொடுத்தார் மற்றும் ரோம அரசவையினரால் கொல்லப்பட்டார் என்பவைகள் உண்மையென்றும் அதிகாரப்பூர்வமான வரலாறு என்றும் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன; ஆனால் அவைகள் இயேசு வாழ்ந்திருந்தது, யூதேயா மற்றும் கலிலேயாவில் தமது சுவிசேஷத்தைப் பிரசங்கித்தது மற்றும் கல்வாரியில் சிலுவையில் அறையப்பட்டது ஆகியவற்றைக் காட்டிலும் தற்காலத்திற்குச் சமீபமானவைகளும் அல்ல, அவைகள் இவைகளைப் போலப் பாதியளவு கூட உறுதிப்படுத்தப்படவும் இல்லை."*[18]

*" 'கற்பனைக் கிறிஸ்து' முதலிய நவீனக் கோட்பாடுகள் அறிவியல் வரலாற்றாளர்கள் அனைவராலும் மறுக்கப் படுகின்றன" என்று ஃப்ரெடரிக்* C. *கிரான்ட் அவர்கள் உரிமைகோரினார்.*[19] *ஒரு விரிவுரையாளர் பின்வருமாறு கூறினார்:*

*அவர் [இயேசு] ஒருபொழுதும் வாழ்ந்ததில்லை என்றும், அவரது வாழ்வில் விபரங்கள் யாவும் புனைகதைகளே என்றும் யூகிக்கும் செயலானது, சுவிசேஷ வரலாற்றின் இன்றியமையாத கூறுகளை உண்மை என்று ஏற்பதைக்காட்டிலும் அதிக கடினமானதாகவும், வரலாற்றாளரின் பாதையில் அதிகப் பிரச்சனைகளை எழுப்புவதாகவும் இருக்கின்றது.*[20]

F. F. *புரூஸ் அவர்கள், "சில எழுத்தாளர்கள் 'கற்பனைக் கிறிஸ்து' என்ற நவீனத்துவத்தை வைத்து விளையாட்டுக் காட்டலாம், ஆனால் அவர்கள் வரலாற்று ரீதியான ஆதாரத்தின் அடிப்படையில் அவ்விதம் செய்வதில்லை" என்று கூறினார்.*[21]

*"புதிய ஏற்பாடு ஒருபோதும் எழுதப்பட்டிராதிருந்தால், பிதாக்கள் தொடர்ச்சியாக மௌனம் காத்திருந்தால், அப்பொழுதும் கூட இந்தப் புறம்பான ஆதார மூலங்களில் இருந்து [அதாவது, அவிசுவாசிகளின் கூற்றுக்களில் இருந்து] கிறிஸ்தவத்தின் மாபெரும் உண்மைகள் எல்லாவற்றையும் சேகரித்துப் பெறும்படியாக நாம் நிர்ப்பந்திக்கப் பட்டிருப்போம்."*[22] *எனவே, கிறிஸ்தவமானது வரலாற்றுப் பூர்வமான ஆதாரமும் புவியியல் ரீதியான அடிப்படையும் கொண்டதாகும். நிழலாட்டமான கன்ஃபூஸியஸ் அல்லது சந்தேகம் நிறைந்த புத்தர் ஆகியவர்களுக்கு மாறாக இயேசு, ஜூலியஸ் சீஸர் போன்றே உண்மைத் தன்மையுடன் நிலை நிற்கின்றார். "மனுஷகுமாரனை நீங்கள் யாரென்று சொல்லுகிறீர்கள்?" என்ற கேள்வியைப் பற்றிப் பிடிக்கும் ஒருவர் தமது பதிலுக்கு அடிப்படையாக உறுதியான சிலவற்றைக் கொண்டுள்ளார்.*

---

*குறிப்புகள்*

[1]*"புதிய ஏற்பாட்டுப் பதிவேடுகளின் அடிப்படையில் நம்பகத் தன்மையானது" அறைகூவலுக்கு உட்பட்டிருந்த காலம் ஒன்று இருந்தது, "ஆனால் அந்தக் காலம் நீண்டதாகவும், நிரந்தரமான கடந்த காலமாகவும் இருக்கின்றது"* (John H. Gerstner, *Reasons for Faith* [New York: Harper & Brothers, 1960], 86). [2]*கிறிஸ்தவரல்லாதவர்களின் குறிப்புக்களும் கூட, "வாதத்தை மறுத்துரைக்க உதவலாம், இது 19ம் நூற்றாண்டின் முடிவில் சில விமர்சகர்களால் இயேசு உண்மையில் வாழ்ந்திருந்ததில்லை என்றும், சற்றுக்காலம் மனித உருவில் இப்பூமியில் தோன்றியிருந்த கடவுளைப் பற்றிய விரிவான கற்பனைக் கதையாகவே இயேசுவின் வரலாறு உள்ளது என்று ஒரு கருத்தானது மிக மும்முரமாய்ப் பரப்பப்பட்டது"* (*Encyclopaedia Britannica,* 1962 ed., s.v. "Jesus Christ," by Jaroslav Jan Pelikan). [3]Josephus Antiquities 18.3.3. [4]*எனவே, யோசிப்பஸ்ஸின் கூற்றானது கிறிஸ்துவுக்கு ஆதரவானதாக உள்ளது மற்றும் இம்முழுப் பகுதியும் ஒரு இடைச் செருகல் என்று பல கல்வியாளர்கள் உறுதிப்படுத்தினர். குறிப்பிட்ட வார்த்தைகள் இடைச் செருகல்களாகும் என்ற முடிவானது குறைந்த அபாயம் உள்ளதென்றாலும் இதே செயல்விளைவை கொண்டதாக உள்ளது.* (Joseph Klausner, *Jesus of Nazareth: His Life, Times, and Teaching,* trans. Herbert Danby [New York: Macmillan Co., 1929], 56). *இருப்பினும் யோசிப்பஸ்ஸின் எழுத்துக்களில் நடப்பில் உள்ள பிரதிகள் யாவையும் முழுப்*

பகுதியையும் கொண்டுள்ளன, மற்றும் இப்பகுதியானது கி.பி. 324 (ஈசுபியஸ்) முதற் கொண்டு மேற்கோள் காட்டப்பட்டு வருகின்றது. ஆசிரியர் கையாண்ட சொற்களின் ஆதாரத்தைப் பொறுத்தமட்டில், இந்தப் பகுதியைப் போலவே யோஸிப்பஸ்ஸின் எழுத்துக்களில் வேறு எந்தப் பகுதியையும் கூட ஒருவர் சுலபமாக மறுதலிக்க முடியும். உணர்வு சார்ந்த காரண அறிவு மட்டுமே இதை நீக்கிப் போட முடியும். The *New York Times* News Service என்ற பத்திரிகையில் பெப்ருவரி 13, 1972ல் எருசலேமின் தேதி வரிசை ஒன்றின் கீழ், யோசிப்பஸ்ஸின் குறிப்புகளின் மாறுபட்ட பகுதியாக அரபுக் கையெழுத்துப் பிரதியொன்றில் பின்வருமாறு காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டது: "இந்த வேளையில் இயேசு என்று அழைக்கப்பட்ட ஞானமுள்ள ஒரு மனிதர் இருந்தார். அவரது நடக்கை நன்றாயிருந்தது, மற்றும் அவர் உண்மையுள்ளவர் என்று அறியப்பட்டார். யூதர்கள் மற்றும் பல நாடுகள்/ இனங்களில் இருந்து பலர் அவரது சீஷர்களாயினர். பிலாத்து அவருக்கு மரணத் தீர்வையிட்டார். அவரது சீஷர்களானவர்கள் தமது சீஷத்துவத்தைக் கை விடவில்லை. அவர் சிலுவையில் அறையப்பட்டு மூன்று நாட்களுக்குப் பின் அவர் தங்களுக்குத் தரிசனமானதாகவும், அவர் உயிருடன் இருப்பதாகவும் அவர்கள் அறிக்கை செய்தனர்; அதன்படி பார்த்தால், ஒருவேளை அவர் அற்புதங்கள் செய்வார் என்று தீர்க்கதரிசிகள் விரிவாய் கூறிய மேசியாவாக இருக்கலாம்." [5]Josephus *Antiquities* 20:9.1 [6]F. F. Bruce, *The New Testament Documents: Are They Reliable?* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1954), 102. இயேசுவின் வரலாற்றுத்துவத்தில் யூதர்கள் முழுமையான நம்பிக்கை கொண்டிருந்ததைக் காண்பிக்க புரூஸ் அவர்கள் Klausner என்பவரின் *Jesus of Nazareth* என்ற நூலில் பக். 18ffஐயும், Maurice Goguel அவர்களின் *Life of Jesus* என்ற நூலில் பக். 70ffஐயும் குறிப்பிட்டுக் காண்பித்தார். "இயேசு அல்லது கிறிஸ்து என்ற பெயரை உடைய ஒரு நபர் ஒரு காலத்தில் இருந்தார்" மற்றும், அவர் "திபேரியு ராயனின் காலத்தில் பலஸ்தீனத்தில் சிலுவையில் அறையப்பட்டார்" (Maurice Goguel, *Life of Jesus* [New York: Barnes & Noble, 1933; 3d impression, 1958], 70). [7]Thomas Hartwell Horner, *An Introduction to the Critical Study and Knowledge of the Holy Scriptures* (Philadelphia: E. Littel, 1831), 1:197. [8]Ibid (மேற் குறிப்பிடப்பட்ட நூல்) [9]இயேசு *Ha-Taluy*, "தூக்கிலிடப்பட்டவன்" என்றும் *Ben Pantera* "கன்னிப் பெண்ணின் மகன்" என்றும் அழைக்கப்பட்டார். *Pantera* என்பது *Parthenos* "கன்னி" என்ற கிரேக்க வார்த்தையின் களங்கப்படுத்துப்பட்ட வடிவமாகும் (Ibid.) [10]*Euangelion* "சுவிசேஷம்" என்ற வார்த்தையானது *'Awen-gillayon* அல்லது *'Awon-gillayon* என்று மாற்றப்பட்டது. (Babylonian Talmud, tractate Shabbath, 116a, b, quoted in F. F. Bruce, 102.)

[11]Tacitus *Annals* 15.44, quoted in Bruce, 117. [12]C. Plinius Secundus *Epistles of Pliny* 10:97, quoted in J. W. McGarvey, *Evidences of Christianity*, Part 3 (Louisville: Guide Printing and Publishing Co., 1891), 12-14. [13]Seutonius *Life of Claudius* 25.4, quoted in Bruce, 118. [14]Tacitus *Annals* 15.44, quoted in Bruce, 117. [15]Horner, 1:200. [16]Werner Keller, *The Bible as History* (New York: William Morrow and Co., 1958), 379. [17]ரோமாபுரியின் மாபெரும் தீ விபத்துப் பற்றியும், கிலவுதியுவைத் தொடர்ந்து வந்த நீரோ (64-68), "புதிதான மற்றும் தீங்கு விளைவிக்கும் மூட நம்பிக்கைக்கு அடிமைப்பட்ட கிறிஸ்தவர்கள் என்ற மனித வகுப்பாருக்கு" தண்டனை அளித்துத் துன்புறுத்தியதையும் சுயூட்டோனியஸ் எழுதினார் (*Life of Nero*, 21.2, quoted in Bruce, 118). [18]J. L. Dagg, *The Evidences of Christianity* (Macon, Ga.: J. W. Burke and Co., 1869), 85, 90. [19]*Encyclopedia Americana*, s.v. "Jesus Christ," by Frederick C. Grant. [20]H. G. Wells, in N. B. Hardeman, *Dallas Lectures for 1943* (Dallas: Eugene Smith, 1943), 122. [21]Bruce, 119. [22]Harvey W. Everest, *The Divine Demonstration* (St. Louis: Christian Board of Publication, 1884), 85.

# நமது மீட்பர்

*இயேசுவின் பிராயச்சித்த வரலாற்றில் இருதயங்களை உடைக்க வல்லமையும், பாவிகளை இயேசுவுக்காக வாழ வற்புறுத்துதலும் உள்ளது. அங்கு ஒரு மிக முக்கியமான பாடக் கருத்து எப்படி இருக்க முடியும்?*

*''பிராயச்சித்தம்''* ("Atone")[1] *என்ற வார்த்தையானது தவறகற்றிச் சீர்த்திருத்தலை ஏற்படுத்துதல், விஷயங்களைச் சரியாக்குதல், அல்லது தவறிழைத்த ஒரு நபருக்கு மன நிம்மதியைத் தருதல் என்று அர்த்தப் படுகின்றது. அந்நியமாயிருந்த இரு மனிதர்கள் இதன் விளைவாக "ஒன்றாகின்றனர்." சண்டையிட்டுக் கொண்டிருந்த இரண்டு மனிதர்களை "ஒற்றுமைப்படுத்த" மோசே முயற்சி செய்தார் (அப். 7:26). ஆங்கிலத்தில்* "atonement" *என்ற வார்த்தையானது "at one* ment" *என்ற சொற்களுக்கு நேரடியான அர்த்தம் உள்ளதாகும்; இது ஒப்பந்தம், இசைவு, ஒப்புரவாகுதல் என்று அர்த்தப் படுத்துகின்றது.*

KJV*யின் புதிய ஏற்பாட்டில் "ஒப்புரவாகுதல்" என்ற வார்த்தை ஒரே ஒரு முறை (ரோமர் 5:11) தோன்றுவதற்குப் பொறுப்பாயிருக்கின்ற கிரேக்க வார்த்தையானது*[2] *நாணயங்கள் போன்ற சமமதிப்புகள் உள்ளவைகள் மாற்றாகக் கொடுக்கப்படுதல் என்ற நேரடியான அர்த்தம் உள்ளதாக இருக்கின்றது. நியாயமான மாற்றானது வேறுபாடுகளைச் சரிப்படுத்து வதாக, ஒரு ஒப்புரவாகுதலாக, ஒரு பிராயச்சித்தமாக இருப்பதை விளைவிக்கின்றது.*

*''பிராயச்சித்தம்'' என்று மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தையானது*[3] *"ஒரு மூடுதல்" என்று நேரடியான அர்த்தம் உள்ளதாகும். இது நோவா பேழையின் மேல் போட்ட கூரையை விவரிக்கின்றது. இது ஏசாவை சாந்தப் படுத்துவதற்கு யாக்கோபு அனுப்பிய பரிசுப் பொருட்களை விவரிக்கின்றது: "முன்னே வெகுமதியை அனுப்பி அவனைச் சாந்தப் படுத்தி [அவனது முகத்தை மூடி]'' (ஆதி. 32:20). இவ்வார்த்தையானது ''பாவத்திற்கான ஒரு மூடுதல், திருப்தி, சினம் தணித்தல், ஒப்புரவாக்குதல்" என்று அர்த்தப்படுத்த வந்துள்ளது.*

*"பாவம்" என்ற வார்த்தையானது "இலக்கைத் தவறவிடுதல்" (அம்பு எய்வதில் செய்தல் போன்றது) என்ற அர்த்தம் தரும் கிரேக்க வார்த்தைகளில்*[4] *இருந்து வருகின்றது. அதாவது, தெய்வீகத்துவத்திற்கு முன்னதாகத் தவறிழைத்துக் குற்ற உணர்வுடன் இருத்தல் என்றாகின்றது. தேவன் பாவத்தைச் சகிக்கக் கூடாதவராதலால் (உபா. 32:3, 4; ஆபகூக் 1:13; யோவா. 8:21), அவர் பாவிகளை ஏதேனிலிருந்து வெளியேற்ற வேண்டியதாய் இருந்தது. மனிதன் தன்னைப் படைத்தவரிடம் இருந்து விலக்கப்படுவது என்பது பாவத்தின் விளைவாக இருந்தது. பாவமானது பரலோகத்தில் பிரவேசிக்க முடியாதாகையால் (யோவா. 8:21, 24;*

வெளி. 21:27), இந்த அண்டத்தின் மிக வினயமான பிரச்சனையாய் இருந்தது ஒரு ஒப்புரவாகுதல், ஒரு சமரசப்படுத்துதல், ஒரு பிராயச்சித்தம் ஆகும், இதன் மூலமாகவே இப்பொழுது பாவிகள் தேவனுடைய தயவுக்குச் சீர்ப்படுத்தப்பட்டு, கடைசியாக பரலோகத்தில் அவரது பிரசன்னத்தில் சேர முடிகின்றது.

## மீட்பு அவசியமானதாக உள்ளது

ஆதாமும், ஏவாளும் மாத்திரம் தேவனுக்கெதிராகப் பாவம் செய்திருக்கவில்லை. தமது மனதை சரியாகப் பயன்படுத்தக் கூடியவரும், தவறிலிருந்து சரியானதை அறியும் அறிவு பெற்று வளருகின்ற தன்மையும் உடைய ஒவ்வொரு நபரும் நீதியின் இலக்கைத் தவற விட்டுள்ளனர் (“அநீதியெல்லாம் பாவம் தான்”; 1 யோவா. 5:17). எல்லாரும் தேவனுடைய தர அளவையினின்று விழுந்து போனோம் (ரோமர் 3:23). வேறு எந்த ஒரு மனிதருமல்ல, ஆனால் இயேசு மட்டுமே ‘‘என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப் படுத்தக் கூடும்?” (யோவா. 8:46) என்று பதில் பெற இயலாத அளவு அறை கூவல் விடுக்க முடிந்தது.

மனிதரின் முன்னேற்றங்கள் எவ்வளவோ இருந்த போதிலும், மூவாயிரம் வருடங்கள் பழைமையான பின்வரும் கேள்வியானது இன்னமும் ஒரு எதிர்மறையான பதிலையே வேண்டுகின்றது: ‘‘என் இருதயத்தைச் சுத்தமாக்கினேன், என் பாவமறத் துப்புரவானேன் என்று சொல்லத் தக்கவன் யார்?” (நீதி. 20:9). இயேசுவைத் தவிர வேறு எவரும் இவ்வித உரிமைகோருதலை ஏற்படுத்த முடியாது. பாவத்தின் உலகளாவிய தன்மையானது வரையறைக்குட்பட்ட பிராயச்சித்தத்தின் உபதேசமானது சத்தியத்தினின்று விழுந்து போனதாகும் என்று காட்டுகின்றது. உலகளாவிய பாவநிவிர்த்தி மட்டுமே உலகளாவிய பாவத்திற்கு எதிராகச் செயல் வல்லமையுள்ளதாக இருக்க முடியும். தேவன் பட்சபாதம் காண்பிக்காதவராயிருக்கிறார் என்றால் (அப். 10:34), மற்றும் அவர் தம்முடைய படைப்புகள் அனைத்தையும் நேசிக்கின்றார் என்றால், பாவ பிரயாசித்தத்திற்கான அவரது திட்டமானது எல்லா மனிதர்களையும் உள்ளடக்குவதாக இருக்க வேண்டும்.

## மீட்பு என்பது தனிநபருக்குறியதாய் உள்ளது

பாவம் என்பது பரம்பரையாகப் பெற்றதுமல்ல அல்லது அது மாற்றத் தக்கதும் அல்ல. ஒவ்வொரு பாவியும் ‘‘தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்” (யாக். 1:14).[5] இந்தக் காரணத்தினாலேயே பாவத்திற்கான இயேசுவின் பிராயசித்தமானது எவ்வளவு விரிவானதாயிருப்பினும், அந்தப் பரிகாரத்தின் அளிப்புகளுக்குத் தனிநபர் ஒவ்வொருவரும் தனிப்பட்ட வகையில் பதில்தரும் பொழுதே அது செயல் வல்லமையுள்ளதாக இருக்கின்றது. பாவம் என்பது தனிப்பட்ட, சொந்த விஷயம் என்றால், பாவநிவிர்த்தியின் வல்லமையும் அப்படிப்பட்ட

*தாகவே இருக்கின்றது. பாவம் தனிப்பட்ட சொந்த வகையிலானது என்றால் ஒப்புரவாகுதலும் தனிப்பட்ட சொந்த விஷயமாகவே இருக்க வேண்டும். எனவே ஒரு தனிப்பட்ட சொந்த பதில்செயலின்றி பிராயசித்தம் என்பது பயனற்றதாகும். பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளுக்காகப் பதில்செயல் செய்வதென்பது சாத்தியமற்றது, ஒரு நண்பர் இன்னொருவருக்காக[6] ஞானஸ்நானம் பெறுவதும் சாத்தியமற்றது. "நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" (ரோமர் 14:12).*

### *மீட்பு என்பது கிறிஸ்துவுக்குள் மட்டுமே இருக்கின்றது*

*மரணமும், தேவனுடைய பிரசன்னத்திலிருந்து வெளியேற்றப் படுதலுமே பாவத்தின் சம்பளமாய் இருக்கின்றது. மனிதனுடைய அக்கிரமத்தைக் கண்டு கொள்ளாது, மனிதருடைய பாவங்களுடன் அவரைப் பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டால் தேவன் உறுதிப்பாடான மற்றும் நீதியானவராய் இருக்க முடியாது (உபா. 32:1-4). இருந்தாலும் தேவன் எப்பொழுதுமே மனிதர்மேல் அன்புகூர்ந்து மனிதர் இரட்சிக் கப்பட வேண்டும் என்று எண்ணி ஏங்குபவராய் இருக்கின்றார் (எசே. 33:11; யோவா. 3:16). தேவன் நீதியுள்ளவராகவும் அதே வேளையில் பாவிகளை நீதிமானாக்குகிறவருமாய் இருப்பது எப்படி? (ரோமர் 3:25ஆ, 26ஐக் காணவும்.) இது பரலோகத்தின் பிரச்சனையாக இருந்தது.*

### *முற்பிதாக்களின் பிரமாணத்தைக் கைக்கொள்வது போதுமானதாய் இல்லாதிருந்தது*

*தேவனுடைய நியாயப்பிரமாணமானது மிருக பலிகளைக் கட்டளையிட்டது மற்றும் மனித இரத்தத்தைச் சிந்துவதையோ அல்லது எந்த இரத்தத்தையும் புசிப்பதையோ தடை செய்தது. முற்பிதாக்களைப் பரலோகத்தின் சாலையில் வைத்துக் காத்துக் கொள்வதற்கு இப்படிப்பட்ட பிரமாணங்கள் இன்றியமையாதவைகளாக இருந்தன. இப்படிப்பட்ட ஆசரிப்புகள் பாவத்திற்குப் பரிகாரம் பெற்றுத் தந்திருக்க முடியுமென்றால், பரலோகத்தின் பிரச்சனையானது தீர்க்கப்பட்டிருக்கும் - ஆனால் இவைகளால் அதைச் செய்ய முடியாதிருந்தது.*

### *மோசேயின் பிரமாணத்தை ஆசரிப்பது போதுமானதாய் இல்லாதிருந்தது*

*மோசேயின் பிரமாணத்தை இழித்துரைத்து (உபா. 27:26; எபி. 10:26, 27) அதைக் கடைப்பிடிக்க தவறும் எவர் ஒருவர் மேலும் ஒரு சாபம் இருந்தது. அதை மாசில்லாமல் கடைப் பிடித்தவர்கள் மீதும் கூட (லூக். 1:6; பிலி. 3:6) பாவமானது அவர்களுக்கெதிராக அடையாளமிடப்பட்டிருந்தது, ஏனெனில் மிருகங்களின் இரத்தமானது பாவங்களை எடுத்துப்போட முடியாததாக இருந்தது (எபி. 10:4). "உயிரைக் கொடுக்கத் தக்கதாக நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்ததானால், நீதியானது நியாயப் பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே" (கலா. 3:21).*

**தேவனையும் கிறிஸ்துவையும் விசுவாசித்துக் கீழ்ப்படிவது போதுமானதாக இருப்பதில்லை**

*எண்பத்து ஐந்து வயதான ஆபிராம், தமது சந்ததியைத் தேவன் வானத்து நட்சத்திரங்களைப் போலப் பெருகச் செய்வார் (ஆதி. 15:6) என்று விசுவாசித்ததில் விசுவாசத்தின் மாபெரும் செயல்பாடு உதாரணப் படுத்தப்பட்டது. ஆபிரகாமுக்குள் இருந்த விசுவாசத்தின் இச்செயலானது புதிய ஏற்பாட்டில் நமக்கு ஒரு உதாரணமாக முன் வைக்கப்பட்டுள்ளது (ரோமர் 4:16-24; கலா. 3:16-29). விசுவாசிக்கும் செயலும் (யோவா. 6:29ஐக் காணவும்) மற்றும் கீழ்ப்படிதலும் பாவத்திற்குப் பரிகாரம் தந்திருக்க முடிந்ததென்றால், பரலோகத்தின் பிரச்சனையானது தீர்த்து வைக்கப்பட்டிருக்கும். அன்பினால் கிரியை செய்கிற (கலா. 5:6) கீழ்ப்படிதலுள்ள விசுவாசமே (ரோமர் 1:7) எவர் ஒருவரும் பரலோகம் செல்ல இன்றியமையாததாக உள்ளது (வெளி. 2:10), ஆனால் எந்த ஒரு மனிதரும் செய்கின்ற எந்த ஒரு செயலும் அவரை நீதியுள்ளவராக்க முடியாது. தேவனுடைய வசனத்திற்குக் கண்டிப்பாகக் கீழ்ப்படிய வேண்டியது அவசியமானதாயிருக்கையில், மனித கீழ்ப்படிதலானது பரலோகத்தின் பிரச்சனைக்குத் தீர்வாக இல்லாதிருந்தது.*

**நற்செயல்களை நிகழ்த்துவது போதுமானதாக இருப்பதில்லை**

*நற்செயல்கள் என்பவை தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றவைகளாகவும், தேவையானவைகளாகவும் இருக்கின்றன (மத். 25:31-46), ஆனால் அவைகள் மனிதரின் பாவங்களுக்குப் பரிகாரம் தர முடியாது. ஒரு தகப்பனார், தமது மகன் கீழ்ப்படியாமல் போன ஒவ்வொரு முறையும் ஒரு ஆணியைக் கதவில் அறைந்து, அம்மகன் கீழ்ப்படிகின்ற ஒவ்வொரு முறையும் ஒரு ஆணியை அக்கதவில் இருந்து உருவி எடுப்பதுண்டு. அவ்வாறு எல்லா ஆணிகளும் எடுக்கப்பட்டு விட்டாலும், அக்கதவில் அழகற்ற காட்சி ஒன்று எஞ்சியிருந்தது: அது துளைகள், உள்ள ஒரு கதவாக இருந்தது. கீழ்ப்படிதல் அவசியமானதேயாகும், ஆனால் அது கீழ்ப்படியாமையை ஈடு செய்து விடாது. விபசாரம் செய்கின்ற ஒருத்தி தேவையில் இருக்கின்ற தனது அண்டை அயலாருக்கு ஒரு நல்ல பெண்ணாக (உதவி செய்பவளாக) இருந்த போதிலும் இன்னமும் தனது குற்ற உணர்விலேயே இருக்கின்றாள். திருடன் ஒருவன் ஏழைகளுக்குப் பணம் கொடுத்தாலும் கூட இன்னமும் குற்ற உணர்விலேயே இருக்கின்றான். ஒரு மனிதர் தனது சாப வார்த்தைகளை ஈடுசெய்வதற்காக அதிகம் ஜெபிக்கிறார் என்றால், அது தவறான அணுகு முறை ஆகும். பாவிகளுக்கான இரட்சிப்பானது வரவு செலவு முறையில் பெற்றுக் கொள்ள முடியாது. அது பரலோகத்தின் (மற்றும் உலகத்தின்) மாபெரும் பிரச்சனைக்குத் தீர்வாக இருப்பதில்லை.*

**நீதியை மாற்றிக் கொள்வது முடியாததாக இருக்கின்றது**

*கிறிஸ்துவின் நீதியை மனிதர்களுக்கு மாற்றிக்கொள்ளுதலே மனிதரின் நம்பிக்கையற்ற நிலை, ஆக்கினைக்குட்பட்ட நிலை ஆகியவற்றிற்குத்*

*தேவனுடைய தீர்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்று சிலர் நினைத்துள்ளனர். இது சாத்தியமாயிருந்தால், கிறிஸ்து பரலோகத்தை விட்டு ஒருக்காலும் வந்திருக்கத் தேவையில்லை, ஏனெனில் அவர் இப்பூமிக்கு வருவதற்கு முன்பே நீதியுள்ளவராக இருந்தார்.*

*நீதிக்கான நமது ஆதாரமாகக் கிறிஸ்து இருந்தாலும் (எரே. 23:6; 1 கொரி. 1:30), மற்றும் நாம் அவருக்குள் நீதியாக்கப்பட்டாலும் (2 கொரி. 5:21), ஒரு நபரில் இருந்து இன்னொருவருக்கு நீதியானது மாற்றப்படும் ஒரு நிலை என்பது கிடையாது. கிறிஸ்துவின் பிராயசித்த பலியின்றி நாம் நீதியுள்ளவர்கள் என்று அறிவிக்கப்பட முடியாது, ஆனால் இயேசுவின் நீதியுள்ள நிலையானது நமக்கு செயல்படுத்தப் படுகிறது என்று வேதவசனங்களோ அல்லது பயன்பாட்டு அறிவோ ஆலோசனை கூறுவதில்லை.*

*நீதி என்பது, நீதியாய் இருக்கும் பண்பு ஆகும், இது உண்மை பற்றிய தேவனுடைய அறிவிப்பினால் இருக்கின்றது, இது பாவியின் மற்ற எந்த ஒரு நிலையினாலும் தகுதியாக்கப் படுவதினால் இருப்பதில்லை. ஒரு நபரிடமிருந்து நீதியானது இன்னொருவருக்கு மாற்றப்படுதல் என்பது பிறப்பிக்கப்பட முடியுமென்றால், தேவன் தமது மகனைச் சேதப்படுத்தாமல் இருக்க நிச்சயமாகவே அதைப் பற்றிச் சிந்தித்திருப்பார். ஆதாமின் பாவமானது பரம்பரையாக பெறாதது போலவே, கிறிஸ்துவின் நீதியும் மாற்றப்பட முடியாதது ஆகும். பரலோகத்தின் தீர்வு வேறு ஏதாவதொன்றாக இருக்க வேண்டியதாயிற்று.*

***பதிலீடாகக் கிறிஸ்துவை அனுப்புவதே ஒரே ஒரு தீர்வாக இருந்தது***

*பரலோகத்தின் ஆலோசனையில், எந்த யுகத்திலும் மனிதரின் பாவங்களை எடுத்துப் போடுவதற்கு மிருக பலிகள் போதுமானவையல்ல என்று உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே அறிவிக்கப்பட்டது (1 பேது. 1:20; வெளி. 13:8). தேவனுடைய ஒரே குமாரன் ஒரு தியாகமான, பதிலீடான மரணம் அடைவதற்காக மாம்சமாவதற்குத் தாமே முன் வந்தார் (எபி. 10:1-10). அவர் தமது பிதாவிடம், "உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன் ..." (வ. 7) என்று கூறினார். வற்புறுத்துதல் எதுவும் இராது என்று பிதாவானவர் விளக்கப்படுத்தினார், மற்றும் அவர் (குமாரன்) பூமிக்கு வந்து சேர்ந்த பிறகு அவர் தம் மனதை மாற்றிக் கொள்ள வேண்டி யிருந்தால், அவர் அந்தப் பயங்கரமான சோதனையைக் கடக்க வேண்டியிராது. பிதாவானவர் குமாரனுக்குக் கொடுத்த வாக்குத் தத்தமானது இயேசுவால் அவர் இப்பூமியில் இருக்கும் பொழுது நினைவுகூரப்பட்டது (யோவா. 10:17, 18).*

*நம் எல்லாரையும் போலவே இயேசு மனிதத்துவமாக இருந்தார். சிலுவையில் அவரது பயங்கரத்தை நாம் எடுத்துரைத்து, அவர் தாம் அழிவை சந்திக்க வேண்டியிருந்த நகருக்குச் செல்ல அவர் "தீர்மானித்தது" ஏன் என்பதைக் காணலாம் (லூக். 9:51; 13:33). அவர் மரணம் அடையக் கூடாது என்று பேதுரு வாதிட்டு அவ்விதமாய் அவர் மரணத்தைத் தவிர்க்கும்படி சோதித்த பொழுது பேதுருவை அவர் "சாத்தான்" என்று அழைத்தது ஏன்*

*என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது (மத். 16:21-23). அவரது ஆத்துமா துயரடைந்த பொழுது அவரது சிலுவையின் பயங்கரத்தைக் குறித்து நாம் பரிதபிக்க முடிகின்றது. இருந்த போதிலும், "பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும்" என்று கூறுவதற்குப் பதில் இயேசு, "ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்" என்று கூறத் தம்மையே ஒழுங்கு படுத்திக் கொண்டதற்காக நாம் மகிழ்ச்சி யடைகின்றோம் (யோவா. 12:27).*

*கெத்செமெனேயில் மனவேதனை தரும் சோதனையில், தாம் மரிப்பதிலிருந்து பின் வாங்க முடியும் என்பதை இயேசு நன்றாய் அறிந்திருந்தார். அவர் தம்மை விடுவிப்பதற்குத் தூதர்களின் சேனைகளை அழைக்க முடியும் என்பதை அறிந்திருந்தார் (மத். 26:53ஐக் காணவும்), ஆனால் அவர் மனவிருப்பத்துடன் சிலுவையை மறுக்காதிருந்தார். சிலுவையின் துக்கத்தையும் வெட்கத்தையும் தவிர்ப்பதற்கு அவர் ஆழமாக விரும்பினார். தாம் சேதப்படாதபடிக்கு அவர் ஊக்கமாய், அவரது வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் விழும் நிலைமையுடன் ஜெபித்தார். உலகத்தின் பாவங்களுக்குப் பிராயசித்தமாக வேறு ஏதாவதொரு வழியைப் பிதாவானவர் சிந்திக்க முடிந்ததென்றால், இயேசு கல்வாரியின் துன்பம் தம்மை விட்டுக் கடந்து செல்ல வேண்டும் என்று விரும்பினார்.*

*சர்வ ஞானியாகிய தேவன் தமது ஞானத்தின் ஐசுவரியத்தினுடைய ஆழத்திலும் கூட வேறு எந்தத் திட்டமும் போதுமானதாயிருக்கும் என்று அறியாதிருந்தார். வேறு எந்தத் திட்டமும் பரலோகத்தின் சுத்தத் தன்மையையும் பிதாவின் நீதியினுடைய தர அளவையையும் இணங்கச் செய்கிறதாய் இருந்திருக்கும். தேவன் நீதியுள்ளவராக நிலைத்திருந்து, அப்படியிருப்பினும் பாவிகளை நீதியாக்குவதற்கு அவருக்கிருந்த ஒரே வழி எதுவென்றால், அவர் இயேசுவின் மேல் உலகின் பாவங்கள் குவிக்கப்பட்டு அவர் சிலுவையில் வேதனைப்படுவதைக் காண்பது என்பதே ஆகும். அப்போது தான் பிதாவானவர் பாவிகளைக் குற்றத்திலிருந்து விடுதலை யாக்குவதை மதிப்புக்குரியதாக உணர முடியும் (ரோமர் 3:23-26). கல்வாரியில் நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தமிட்ட வேளையில் அன்பு மிக்க இரக்கமும் சத்தியமும் ஒன்றாகச் சந்தித்தன (சங். 85:10ஐக் காணவும்).*

## *முடிவுரை*

*நாம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருக்கின்றோம்! தேவன் இரட்சிப்புக்கான தமது திட்டத்தை அறிவித்த பொழுது, என்ன நடக்கும் என்று காண்பதற்குத் தூதர்களும், தீர்க்கதரிசிகளும், நீதிமான்களான மனிதர்களும் விருப்பம் கொண்டிருந்தனர். பிரயாசித்தத்தின் அமைப்பின் ஆழ்ந்த கவலை மற்றும் மாட்சிமை ஆகியவற்றை அது நியமிக்கப்பட்ட வேளை வரும் வரையிலும் எந்தக் கண்ணும் காணவில்லை, எந்தக் காதும் கேட்டதில்லை மற்றும் எந்த இருதயமும் கற்பனை செய்திருந்ததும் இல்லை.*

*வரப் போகும் மகிமை பற்றி எவரொருவரும் அறிய முடியாது இருந்தது. இருப்பினும், ஒரு காலத்தில் இரகசியமாயிருந்தது இப்பொழுது வெளிப் படுத்தப்பட்டுள்ளது. இயேசுவின் பாவநிவாரண மரணத்தினால் பாவிகளின் குழுவானது சுத்திகரிக்கப்பட்ட ஆத்துமாக்களின் சபையாக இருப்பதற்கு அழைக்கப்படுவதை உற்று நோக்குகையில், தூதர்களும் மனிதர்களும் அவரது (தேவனுடைய) அநந்த ஞானத்தைக் கண்டுணர முடிகின்றது! மதத்தின் புதிய மற்றும் பழைய பாகம் ஒவ்வொன்றும் சிலுவையுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. தேவன் தமது திட்டத்தை நிறைவு செய்த பொழுது, ஒன்றும் மறக்கப்படவில்லை. தேவனுடைய செய்தியாளர் இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் அறியாதிருக்கத் தீர்மானித்த பொழுது எதுவும் விடப்பட்டிருந்ததில்லை (1 கொரி. 2:2ஐக் காணவும்).*

*தேவனுடைய திட்டத்தினால் உந்தப்பட்ட அன்பும், அதைப் பெற்று எடுத்த ஞானமும், அதைச் செயல் விளைவாக்கிய தைரியமும் மெய்சிலிர்க்க வைப்பவைகளாகவும் இருதயத்தைக் கலங்கச் செய்பவைகளாகவும் இருக்கின்றன. அவரது கிருபையானது பாவங்களுக்குத் தெய்வீக மூடுதல் ஒன்றை அளித்துள்ளது. தம் சொந்தப் பாவம் நிறைந்த தன்மை பற்றி அறியாமலும், பிராயசித்தத்தின் அமைப்பின் மகிமையை மதியீனமான தென்று வெறுத்து ஒதுக்கியும் உள்ள மனநிலையுள்ள மனிதரின் நிலையானது கவலைக்குரியதும், புலம்புதலுக்குரியதும், பரிதாபத்திற் குரியதும் ஆகும்.*

---

*குறிப்புகள்*

[1]"Atone" *என்ற வார்த்தையானது "ஒன்றாகி, ஒப்புக் கொண்டு" என்று அர்த்தப்படும்* "attone," "attoon," "aton," *என்ற மத்திய கால ஆங்கில வார்த்தை யிலிருந்து அடையப் பெற்றதாகும்.* [2]*Katallage.* [3]*Kippurim.* [4]*Hata'* and *hamartano.* [5]*தேவன் மனிதனை இரு இயல்புகளுடன் படைத்தார்: (1) அவன் தனது மனதின் பிரமாணத்தைப் பின்பற்றக்கூடிய (ரோமர் 7:23, 24) உள்ளான மனிதனைப் பெற்றுள்ளான், இவ்வியல்பானது தேவனுடைய பிரமாணத்தில் களிகூர்கின்றது, இதனால் எது சரியானது என்ற ஒழுக்க விஷயங்களை இவ்வியல்பே முடிவு செய்ய இயலும் (லூக். 12:57; ரோமர் 2:14; 1 கொரி. 11:14). (2) அவன் மாம்சத்தால் ஆன புறம்பான மனிதனைப் பெற்றுள்ளான் (ரோமர் 7:25) இவ்வியல்புக்கு விலங்கு களைக் காட்டிலும் மேலான மார்க்கம் ஒன்றும் இல்லை, இது தனக்குள்ளாகவே மனம் போன போக்கில் போகக் கூடியதாக உள்ளது. இது தேவனுடைய பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டதல்ல (ரோமர் 8:7) மற்றும் அவ்வாறு இருக்க முடியாது, ஏனெனில் மாம்சத்திற்குப் பகுத்தறியும் தன்மை கிடையாது. ஒழுக்க ரீதியான நற்தன்மை எதுவும் (ரோமர் 7:8) அல்லது ஒழுக்க ரீதியான கெட்ட தன்மை எதுவும் மாம்சத்தில் வாசம் பண்ணுகின்றது என்று எதிர்பார்க்கப்பட முடியாது. இயல்பினால் அதுதான் போன போக்கில் விடப்பட்டு, மாம்சமானது சுய இச்சைகளைத் தேடுகின்றது (எபே. 2:3). மனிதனுடைய மாம்ச ரீதியான பாகமானது தன்னிலே பாவமுடையது அல்ல. அது ஒழுக்கமற்றதல்ல ஆனால் ஒழுக்கம் இல்லாதது ஆகும்;*

அதற்கு ஒழுக்கங்கள் என்றால் என்ன என்று தெரிவதில்லை. அதற்குத் தலைமைப் பொறுப்பளிக்கையில் அது ஒழுக்கவீனத்தைத் தன் இலக்காகக் கொள்கின்றது, ஆனால் அது பாவத்தைக் கருவுறச் செய்யும்படி ஏற்படுத்தப்படவில்லை. தேவன் படைத்த எல்லாமே மிக நன்றாகவே இருந்தது. நமது பெற்றோர்கள் நம்மைப் பாவ உலகிற்குள் கொண்டு வருகின்றனர் (சங். 51:5). நமது பெற்றோர்கள் நம்மைத் தமிழ் பேசும் பூமியில் கொண்டு வரலாம், ஆனால் நாம் தான் மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும். அது போலவே, ஒரு நபர் பாவத்தைக் கற்றுக் கொள்கின்றார் (அப். 2:8ஐக் காணவும்). சங். 58:3ஐப் போலவே சங். 51:5ம் விரிவான கவிதை நடை மொழியாகும். உண்மையில் நாம் பிறந்த உடனே பேசத் தொடங்குவதில்லை, உடனே வழி தவறிச் செல்வதும் இல்லை; நாம் வழி தவறியவர்களாகப் பிறப்பதில்லை என்பதே உண்மையாகும். நாம் தவறிலிருந்து சரியானதைப் பிரித்து அறியக் கற்றுக் கொள்கையில் வழி தவறிச் செல்லுகின்றோம். பிறகு, ஆதாமின் பாவமல்ல, நமது பாவங்களே நம்மைத் தேவனிடத்திலிருந்து பிரிக்கின்றது (ஏசா. 59:1, 2). நமது பிதாக்கள் உண்ட திராட்சக் காய்கள் நமது பற்களைக் கூசிப் போகச் செய்வதில்லை (எசே. 18:2, 3). நமது பிதாக்களின் தவறான செயல்கள் பலவற்றின் விளைவை நாம் அநுபவிக்கலாம் (யாத். 20:5), ஆனால் நாம் ஒருக்காலும் அந்தக் குற்றத்தைச் சுமப்பதில்லை (உபா. 24:16). நமக்குள் பாவம் காணப்படுவதற்கு முன்பு வரையிலும் நாம் படைக்கப்பட்ட நிலையில் முழுமையானவர்களாய், நிறைவானவர்களாய்த் தான் நாம் இருந்தோம் (எசே. 28:15). கர்த்தர் நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஆவியை அமைத்தார், மற்றும் அவர் நம்மைப் பாவிகளான நிலையில் தொடங்கி வைக்கவில்லை (சக. 12:1). இயேசுவின் கூற்றுப்படி அவர் நம்மைப் பரலோகத்திற்குத் தகுதியான வகையிலேயே தொடங்கி வைக்கின்றார். (மத். 19:14ஐக் காணவும்.) ரோமர் 5:12 வசனப் பகுதியானது தங்கள் சிந்தையைப் பயன்படுத்தாதவர்களைப் பற்றியோ அல்லது வலது கைக்கும் இடது கைக்கும் வேறுபாடு அறியாதவர்களைப் பற்றியோ விவாதிப்பதில்லை; மாறாக, அது பாவம் செய்தவர்களைப் பற்றியே விவாதிக்கின்றது (ரோமர் 3:9). [6]புதிய ஏற்பாட்டின் முழு போதனையின் கண்ணோட்டத்திலும், சந்தர்ப்பப் பொருளின் கண்ணோட்டத் திலும் 1 கொரி. 15:29 வசனப் பகுதியானது "மரித்தோருடைய [உயிர்த்தெழுதலுக் காக] ஞானஸ்நானம் பெறுதல்" என்று விளக்கப்படுவதே மிகச் சிறந்ததாகும் என்பதே எனது கருத்தாக உள்ளது.

# சிலுவையில் அறையப்படுதல்

*சிலுவையைப் பற்றிய பாடக் கருத்தானது ஒருக்காலும் முற்றிலும் கற்கப்பட முடியாது. பின்வரும் வார்த்தைப் படிப்புகள் மற்றும் பிரசங்க உதவிகள் ஆகியவை சிலுவையில் இயேசுவின் பாடுகள் மற்றும் மரணம் பற்றிய நிகழ்ச்சிகளைக் குறித்து நீங்கள் புரிந்து கொண்டுள்ளதை வளப்படுத்த அளிக்கப்படுகின்றன.*

## சிலுவையைக் குறித்த பொதுக் கருத்துக்கள்

**கொல்கொதா**

எருசலேமின் மதிற்சுவருக்குப் புறம்பே இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடமானது அரமாயிக் மொழியில் "மண்டை ஓடு" என்ற அர்த்தப்படும் கொல்கொதா (Golgotha) என்ற வார்த்தையால் அழைக்கப் பட்டது (மத். 27:33). இந்த அரமாயிக் வார்த்தையானது மண்டை ஓட்டின் வடிவத்தின் காரணத்தால் "உருண்டு செல்" என்று அர்த்தப்படும் *galal* என்ற எபிரெய வினைச் சொல்லில் இருந்து அடையப் பெற்றதாகும். மத்தேயு, மாற்கு மற்றும் யோவான் ஆகியோர் "Skull" என்பதற்கான கிரேக்க வார்த்தையான *Kranion* என்ற வார்த்தையினால் Golgotha என்பதை மொழிபெயர்த்தனர் ("Cranium" என்ற ஆங்கில வார்த்தையை நினைத்துப் பார்க்கவும்). "Skull" என்பதற்கான இலத்தீன் வார்த்தை *calvaria* என்பதாகும், இவ்வார்த்தையை ஜெரோம் அவர்கள் லத்தீன் வல்கேட் பதிப்பில் பயன்படுத்தினார். KJVயின் மொழிபெயர்ப்பாளர்கள் ஜெரோம் அவர்களின் இலத்தீன் வேதாகமம் தங்கள்மேல் செல்வாக்குச் செலுத்தியதால் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பது உறுதி, ஏனெனில் லூக். 23:33ல், லூக்கா பயன்படுத்திய *Kranion* என்ற கிரேக்க வார்த்தையை மொழிபெயர்ப்பதற்குப் பதிலாக அவர்கள் இலத்தீன் வார்த்தையை அப்படியே ஆங்கிலத்துவப்படுத்தி "Calvary" என்று எழுதி விட்டார்கள்.

Golgotha என்பது அவ்விடத்தில் ஏராளமான மண்டை ஓடுகள் கிடந்ததால் ஏற்பட்ட காரணப் பெயராகும் என்று ஜெரோம் கூறினார். தாயெர் அவர்கள், அந்த இடமானது "மண்டை ஓடு போன்ற வடிவத்தில் இருந்ததால் ... அவ்வாறு அழைக்கப்பட்டது"[1] என்று கூறினார். எருசலேமுக்குப் புறம்பே உள்ள மண்டை ஓட்டின் வடிவம் கொண்டதும், இப்பொழுது "கோர்டனின் கல்வாரி" என்று அழைக்கப்படுவதுமான

*மலையில்தான் இயேசு சிலுவையில் அறையப்பட்டார் என்று பலர் நினைக்கின்றனர்.*

***கிரகணம்***

*“ஆறாம் மணி நேரம் முதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று” என்று மத். 27:45 கூறுகின்றது. முழு நிலா வேளையாகிய, யூதர்களின் பஸ்கா வேளையில் (மத். 26:2) இயேசு மரித்தார். இயற்கை விதிகளின்படி, சந்திரனானது சூரியனிலிருந்து பூமியின் எதிர்ப்புறத்தில் இருக்கையில் சூரிய கிரகணம் ஏற்பட முடியாது. ஆகையால், இயேசு மரணம் அடைந்த வேளையில் பூமியின்மீது ஏற்பட்ட அந்தகாரமானது இயற்கையான சூரிய கிரகணம் என்று உரிமைகோர முடியாது. மேலும், இயற்கையான ஒரு சூரிய கிரகணம் ஏற்பட்டிருக்க முடிந்திருந்தாலும், அது ஒரு சில நிமிடங்களே இருந்திருக்கும், மூன்று மணி நேரம் அளவுக்கு இருந்திருக்க முடியாது. திபேரியு ராயனின் ஆட்சிக் காலத்தின் பதினான்காம் ஆண்டில் ஏற்பட்ட, “அறியப்பட்டவைகளிலேயே மாபெரும் சூரிய கிரகணமாகும் … ஏனெனில் நட்சத்திரங்கள் காணப்படுமளவுக்கு பகலானது இரவாக மாறிற்று”[2] என்று கடவுள் நம்பிக்கையற்ற ரோம வானவியல் அறிஞரான பிளேகன் கூறியதை ஆல்பெர்ட் பேர்னெஸ் அவர்கள் தமது எழுத்தில் மேற்கோள் காட்டுகின்றார்.*

*வரலாற்றின் வருத்தம் தோய்ந்த இந்த நிகழ்ச்சியின் போது, தேவன் தம்முடைய பூமியின் மீது சூரிய வெளிச்சத்தின் மகிழ்ச்சியை அற்புத விதமாக நீக்கிப்போட்டு, புலம்பலின் மெல்லிய ஒளித்திரை வலையை வைத்தார். மத்தியானம் முதல் பிற்பகல் மூன்று மணி வரையிலும் தேவன் பரலோகத்தினுடைய துக்கத்தின் கறுப்புக் கொடியைக் காட்சிப்படுத்தினார்.*

***சிலுவை***

*சிலுவையானது* “**X**” (*crux decussata,* “St. Andrew's Cross”) *வடிவத்தில் இருந்ததா,* “**T**” (*crux Commissa,* “St. Anthony's Cross”) *வடிவத்தில் இருந்ததா?,* “†” *வடிவில் சிலுவை மரத்தின் மேல் பகுதியில் ஒரு சிறு மரத்துண்டு நீட்டப்பட்டிருந்ததா* (*Crux immissa*)?, *அல்லது* “**I**” (*Crux simplex*) *வடிவில் இருந்ததா? என்பது வெகுவாக விவாதிக்கப்பட்டுள்ளது. பிலாத்து கொடுத்த மேல் விலாசம் (பல வார்த்தைகள் அடங்கியது, மூன்று முறைகள் எழுதப்பட்டது) கொண்ட பலகையானது இயேசுவின் தலைக்கு மேல் வைக்கப்பட்டிருந்தது என்ற உண்மையானது குறுக்கு சட்டத்திற்கு மேல் நெடும் மரத்தில் இயேசுவின் தலைக்கு மேற்பகுதியில் சற்று இடம் இருந்திருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகின்றது. எனவே அது Crux immissa* (†) *அல்லது Crux simplex* (“**I**”)*ஆக இருந்திருக்கலாம். பொதுவான கருத்தின்படி இது* Crux immissa (†)*வாக இருந்தது.*

*இயேசுவின் சரீரத்தைத் தாங்கிப் பிடிப்பதற்காக சிலுவையிலிருந்து ஆப்புக்கட்டையொன்றை நீட்டிக்கப் பட்டிருக்கலாம் என்று சிலர்*

நினைத்தாலும், அது இருந்திருக்க வாய்ப்பில்லை. வக்கிர மனதுடன் அவரைத் துன்புறுத்தியவர்கள் அவரது உடலின் எடையானது அவரது கரத்திலிருந்த ஆணித் துளைகளை இழுப்பதைக் கண்டு ஆனந்தம் அடைந்திருப்பார்கள்.

**ஏலி - எலியா**

இயேசு "ஏலி, ஏலி", ("என் தேவனே, என் தேவனே") என்று கதறிய பொழுது, அங்கு நின்றிருந்த சிலர், அவர் "எலியா, எலியா" என்று கூறியதாக நினைத்தார்கள். இயேசு உரத்த குரலில் கதறியிருந்தாலும், அவரது வார்த்தைகள் தெளிவற்று இருந்தன என்பது உறுதி. அருகில் நின்றிருந்தவர்களின் தவறான புரிந்து கொள்ளுதலானது "மொழி அறியாமையினால் ஏற்பட்டதல்ல, ஆனால் இயேசுவின் தெளிவற்ற உச்சரிப்பில் இருந்து ஏற்பட்டதாகும்" என்று J. W. McGarvey அவர்கள் கூறினார்.[3] இயேசு சுமார் ஆறு மணி நேரம் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்ததால் இது மிகச் சுலபமாக உண்மையாயிருக்க முடியும். இரத்த இழப்பும் கூடவே விரித்த கரங்களுடன் தொங்கியதன் விளைவாக அவரது மார்புத் தசைகளில் உண்டாயிருந்த மாபெரும் துன்பமும் அவரது பேச்சைத் தெளிவற்றதாக ஆக்கியிருக்க வேண்டும்.

**இரத்தமும் தண்ணீரும்**

இயேசுவின் விலாவில் குத்தப்பட்ட ஈட்டி என்பது அநேகமாக ஒரு *Logche* ஆக இருக்கலாம் என்றும், அதன் தலைப் பகுதியானது இரும்பினால், மனிதரின் கையகலத்திற்கு முட்டை வடிவில் செய்யப் பட்டதாயிருந்திருக்கலாம்[4] என்று W. ராபர்ட்ஸன் நிக்கோல் கூறினார். இருதயத்தின் மேல் உறை குத்தப்பட்டதால்தான் இயேசுவின் விலாவில் இருந்து இரத்தமும் தண்ணீரும் வழிந்தோடிற்று என்று அல்பர்ட் பேர்னஸ் அவர்கள் விளக்கம் அளித்தார்: "இந்த மெல்லிய சவ்வானது [இருதயத்தின் மேல் உறை] தண்ணீரைப் போன்ற ஒரு சுரப்புப் பொருளை கொண்டுள்ளது ... இப்பொருளானது தனது தொடர்ந்து இயக்கத்தினால் இருதயத்தின் மேற்பரப்பு உலர்வடைவதைத் தடை செய்கின்றது"[5]

*கிறிஸ்துவின் மரணத்திற்கான உடல் ரீதியான காரணம்* என்ற நூலில், மருத்துவர் வில்லியம் ஸ்ட்ரௌடு அவர்களால் முற்றிலும் மாறுபட்ட கோட்பாடு ஒன்று கருத்தில் கொண்டு வரப்பட்டது. ஸ்ட்ரௌடு அவர்களின் கருத்தின்படி, ஈட்டியால் குத்தப்படுவதற்கு முன்பே இயேசு இருதயம் பிளந்து அதனால் ஏற்பட்ட இயற்கைச் சிதைவினால் இறந்தார். இயற்கைச் சிதைவைத் தொடர்ந்து இரத்தமானது இதய மேலுறைக்குள்ளாகப் பாய்ந்தது என்பது ஸ்ட்ரௌடின் கோட்பாடு ஆகும். இந்த இரத்தமானது அதன் அதிக திரவ மற்றும் அதிகத் திடப் பகுதிகளாகப் பிரிந்து, ஈட்டியால் இதய மேலுறையானது குத்தப்பட்ட போது வெளியே பாய்ந்தோடியது. *Logche* என்ற ஒரு ஈட்டியானது எலும்பை முறிக்காமல் எப்படி இயேசுவின் மார்புக்குள் நுழைந்திருக்க முடிந்தது? ஒருவேளை அது மேல் நோக்கிக் குத்தப்பட்டு, மார்புக் கூட்டின் கீழ்ப்பகுதி வழியே

*நுழைந்திருக்கலாம்.*

# சிலுவையின் உறுதிப்படுத்தல்

***சுயாதீனமான விபரங்கள்***

*சிலுவையில் அறையப்பட்டிருந்த நேரம். மாற்கு 15:25-33 வசனப் பகுதியானது ஆறாம் மணி வேளை வந்த பொழுது இயேசு சிலுவையில் மூன்று மணி நேரமளவாகத் தொங்கிக் கொண்டிருந்தார் என்று குறிப்பிடுகின்ற வேளையில், யோவா. 19:14ல் ஆறாம் மணி வேளையில் இயேசு இன்னமும் பிலாத்தின் அரண்மனையில் இருந்தார் என்று கூறப்பட்டுள்ளதாகச் சிலர் தர்க்கம் செய்துள்ளனர். இருப்பினும், யோவான் (யோவா. 20:19 சுட்டிக்காட்டுகின்றபடி), ரோமானியருடைய மணிக் கணக்கின் முறைமையைப் பயன்படுத்தினார் என்றும், மாற்கு யூதர்களுடைய மணிக்கணக்கின் முறைமையைப் பயன்படுத்தினார் என்றும் ஒருவர் யூகித்தால் சிரமம் எதுவும் இருப்பதில்லை. அதிகாலை ஆறுமணி அளவில் இயேசு இன்னமும் பிலாத்துவின் அரண்மனையில் இருந்தார், ஏறக்குறைய ஒன்பது மணியளவில் சிலுவையில் அறையப்பட்டார், மற்றும் மத்தியான வேளையில் (யூதர்களின் ஆறாம் மணி வேளையில்) அவர் ஏற்கனவே சிலுவையில் மூன்று மணி நேரமாகத் தொங்கிக் கொண்டிருந்தார். மாற்கு மற்றும் யோவான் ஆகியோரின் சுவிசேஷ விபரங்கள் முரண்பாடு எதையும் கொண்டிருப்பதில்லை. மாறாக, அவைகளின் கருத்து வேறுபாடானது இந்தப் புத்தகங்கள் ஒருவரை யொருவர் சார்ந்திராது எழுதப்பட்டன என்பதற்குத் தற்செயலான நிரூபணத்தை அளிக்கின்றது.*

*காடியும் வெள்ளைப் போளமும். கசப்புக் கலந்த காடியை இயேசு ருசி பார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார் என்ற உறுதிப்பாட்டினால் மத்தேயு, அதில் வெள்ளைப் போளம் கலந்திருந்தது என்று மாற்கு கூறியதிலிருந்து முரண்படுகின்றார் என்று சிலர் நினைத்துள்ளனர். இருப்பினும், சிலுவையில் தொங்கிய ஆறு மணி வேளையில் இயேசுவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் திராட்ச ரசத்தைக் கொடுத்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. உண்மையில், யோவான் 19:28-30ல் இருந்து, இயேசு மரிப்பதற்குச் சற்று முன்னதாக அவருக்குக் காடி என்ற தீவிரமான திராட்ச ரசம் வழங்கப்பட்டு அந்த பானத்தை அவர் ஏற்றுக் கொண்டார் என்று நாம் அறிகின்றோம்.*

*மத்தேயுவும் மாற்குவும் ஒரே நிகழ்ச்சியைப் பற்றிக் கூறியிருப்பினும், அப்பொழுதும் கூட முரண்பாடு எதுவும் யூகிக்கப்படலாகாது. "காடி" என்ற வார்த்தையானது கசப்பான எந்தப் பொருளையும் குறிப் பிடலாம். வெள்ளைப் போளம் என்பது அதன் சுகந்த வாசனைக்கென்று நன்கு அறியப்பட்டிருப்பினும், சுவையில் மிகுந்த கசப்பாக உள்ளது. ஆங்கில வார்த்தையான* "myrrh" *என்பது murr ("கசப்பு") என்ற அரபு வார்த்தையில் இருந்து பெறப்பட்டதாகும்.*

*மத்தேயு காடியில் கலக்கப் பயன்படுத்திய பொருளைப் பற்றி நமக்குக் கூறவில்லை. மாற்கு, அந்தக் கசப்புப் பொருள், வெள்ளை போளமாகும் என்று அதிகம் குறிப்பாகக் கூறினார். மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோருடைய குறிப்புகளில் முரண்பாட்டைக் காண்பதற்குப் பதிலாக, நாம் மறுபடியும் இக்கருத்து மாறுபாடானது சார்பற்ற எழுதுதலை வலியுறுத்துகின்றது என்று காண்கின்றோம்.*

*நான்கு மேல் விலாசங்கள். இயேசுவின் தலைக்கு மேல் வைக்கச் சொல்லிப் பிலாத்து கொடுத்த மேல் விலாசம் பற்றி சுவிசேஷ எழுத்தாளர்கள் ஒவ்வொருவரும் மாறுபட்ட ஒரு வர்னணையுள்ள மேல் விலாசமாக அதைக் குறிப்பிடுவதால், பதிவேடுகளைச் சிலர் விமர்சனம் செய்துள்ளனர். இருப்பினும், கூற்றுக்கள் மாறுபட்ட வார்த்தைகளின் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டும் கூட மிகச் சரியானதாக இருக்கலாம். மூன்று மொழிகளில் எழுதப்பட்ட ஒரே கூற்றானது (சொல்லர்த்தமாக) மிகச் சரியான ஒரே மாதிரியானதாக இருப்பது இல்லை. இவ்விதமாக, சுவிசேஷ எழுத்தாளர்கள் இக்கூற்றை ஒரே விதமான வார்த்தைகளில் மிகச் சரியாக எழுதாதது பற்றி எவ்வித ஆச்சரியமும் இருக்கக் கூடாது. கருத்தில் இவை யாவும் ஒன்றேயாகும்: ''யூதர்களின் ராஜா.'' இந்த நான்கு மேல் விலாசங்களும் சுவிசேஷ எழுத்தாளர்களுக்கு எதிரான ஆதாரமாய் இருப்பதற்குப் பதில் சார்பற்ற மற்றும் நம்பிக்கைக்குகந்த அவர்களின் எழுத்துக்களுக்கு இவை சாத்தியக் கூறுள்ள பலத்த ஆதாரமாயுள்ளது.*

*தேவாலயத்தை இடித்தல். அது போலவே "தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக் கொள்" (மத். 27:40) என்ற ஏளனச் சொல்லில் சார்பற்ற மற்றும் நம்புவதற்குகந்த எழுத்துத் தன்மை காணப்படுகின்றது. இந்தக் கூற்றானது (மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோரால் பதிவு செய்யப்பட்டது, ஆனால் யோவானால் பதிவு செய்யப்படவில்லை) சிலுவையில் ஏளனம் செய்பவர்களிடம் இருந்து வந்தது ஆகும். அவர்களின் பழிச் சொல்லானது இயேசு முன்பே கூறியிருந்த சிலவற்றைக் குறிப்பிட்டிருந்தது, என்றாலும் இயேசு என்ன கூறியிருந்தார் என்பதை ஒருவர் மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய சுவிசேஷங்களில் வீணாகத் தேடுகின்றனர். சிலுவையில் அறையப்பட்ட வேளையில் கூறப்பட்ட இந்த ஏளனச் சொற்களை யோவான் பதிவு செய்யாத அதே வேளையில், யோவான் 2:19ல் இயேசு தாம் சிலுவையில் அறைய ப்பட்டிருக்கையில் பெற்ற ஏளனச் சொற்களுக்குக் காரணமான கூற்றை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கூறியிருந்தார் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.*

### *தீர்க்கதரிசனத்தின் நிச்சயமான வார்த்தை*

*முன்னுரைக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் நிறைவேற்றமானது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் பயன்படுத்தப்பட்ட சுவிசேஷத்தின் பிரதான உறுதிப்படுத்துதலாக உள்ளது. சிலுவையில் அறையப்படுதல் பற்றி நாம் குறைந்தது பதினோறு தீர்க்கதரிசனங்களைக் காண்கின்றோம், அவைகளில் சில ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டுள்ளன:*

1. *பாதிக்கப்பட்டவர் எதிர்த்து நிற்கமாட்டார் (ஏசா. 53:7; யோவா. 18:8; 1 பேது. 2:23, 24)*
2. *மரணத்தின் பாங்கு (சங். 22:16; சக. 12:10; யோவா. 12:32, 33; 18:31, 32; 19:37ஐயும் காணவும்)*[6]
3. *அக்கிரமக்காரருடன் (ஏசா. 53:12; மாற். 15:28)*
4. *வஸ்திரங்கள் பங்கிடப்பட்டன (சங். 22:18; யோவா. 19:23-25)*[7]
5. *அக்கிரமக்காரருக்காக வேண்டுதல் (ஏசா. 53:12; லூக். 23:34)*
6. *ஒரு வியப்புக் கூக்குரல் (சங். 22:1; மத். 27:46)*
7. *ஏளனக் குறிப்புகள் (சங். 22:7, 8; மத். 27:39-44)*
8. *கசப்பு (சங். 69:21; மத். 27:34)*
9. *காடி (சங். 69:21; யோவா. 19:28-30)*
10. *ஆவியை ஒப்புக் கொடுத்தல் (சங். 31:5; லூக். 23:46)*
11. *எலும்புகளில் ஒன்றும் முறிபடாது (சங். 34:20; யோவா. 19:36)*

## *சிலுவையின் விளைவு*

*சிலுவையில் அறைதல் என்றால் ஒரு கோலில் கூரான ஆயுதம் கொண்டு துளைத்தல், ஒரு மரத்தில் ஆணியினால் அறைதல் என்று அர்த்தமாகின்றது. அவர் அடிக்கப்பட்டு, தாக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, குத்தி ஊடுருவப்பட்டு, நொறுக்கப்பட்டு மற்றும் ஒடுக்கப்பட்டார் என்று இயேசு சிலுவையில் அறைதலைப் பற்றி எழுதப்பட்டுள்ளது (ஏசா. 53:3-7). அவரது ஆத்துமா வேதனையடைந்தது. போதை தரும் பானம் அவருக்கு அளிக்கப்பட்டது, அவர் அதை ஏற்க மறுத்து விட்டார். கூர்மையான மற்றும் இடைவிடாத வலியைச் சகித்துக் கொள்ள அவர் தீர்மானித்தார். ஏனெனில் அவர் "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணா திருப்பேனோ" (யோவா. 18:11) என்று ஏற்கனவே கூறியிருந்தார்.*

*சரீர வலியுடன் கூட அவர் கடிந்து கொள்ளப்படுதல், ஏளனம் மற்றும் மகிழ்ச்சிக்காகத் துன்புறுத்தப்படுதல் ஆகியவற்றைச் சகித்துக் கொண்டார். அவர் முழுமையாக இல்லாவிட்டாலும், ஏறக்குறைய நிர்வாணமாக இருந்தார், வெட்கம் மற்றும் வெளிப்படையான சங்கடம் ஆகியவற்றை அநுபவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார். அத்துடன், இறப்பின் பாங்கானது "சிலுவையின் மரணபரியந்தமும்" (பிலி. 2:8) ஆக இருந்தது, இது ஒரு பழியாகவும், நற்பெயருக்குக் களங்கமாகவும் இருந்தது. சிலுவையில் அறைதல் என்பது கொலையாளிகள் திருடர்கள் மற்றும் அந்நியர்கள் ஆகியோருக்கென்று ஒதுக்கப்பட்டிருந்தது.*

*சரீர வலி மற்றும் வெட்கம் ஆகியவை இருந்த போதிலும், தேவனால் கைவிடப்பட்ட நிலைமையே இயேசுவை மிகவும் மனம் புண்படுத்தியது. தாகம், காய்ச்சல் மற்றும் ஒருவேளை தடித்துப் போன உதடுகள் ஆகிய வற்றுடன் அவர் தேவனை நோக்கித் தாம் ஏன் கைவிடப்படவேண்டும் என்று உரத்த குரலில் கதறினார். தமது பிதாவை எப்போதும் பிரியப்படுத்தி யிருந்த அவரைத் தேவன் கைவிட விரும்பவில்லையென்றாலும், தேவன்*

*அவரைச் சிலுவையிலிருந்து மீட்டிருப்பாரேயென்றால், எல்லாம் இழந்து போகப்பட்டிருக்கும். யாரேனும் ஒருவர் பலிகடாவாக வேண்டியிருந்தது; யாரேனும் ஒருவர் பாவமாக்கப்பட வேண்டியிருந்தது. இந்த முழு உலகத்தின் பாவமும் தேவனுடைய பிரியமான குமாரனாகச் சிலுவை மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பொழுது, தேவன் அக்காட்சியைக் கைவிட வேண்டியதாய் இருந்தது. அவரது பரிசுத்தமும், தூய்மையையும் பாவத்தைச் சகித்துக் கொள்ளக் கூடாதிருந்தது. மரத்திலே தூக்கப்பட்ட எவனும் தேவனால் சபிக்கப்பட்டவனாயிருந்தான் (கலா. 3:13). தேவன் பகல் வெளிச்சத்தை நீக்கிப் போட்டு, இயேசு தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றிய பொழுது அவரைக் கை விட்டார்.*

*இயேசு அது எல்லாவற்றையும் - வலி, வெட்கம், பாவசாயல் ஆகுதல் எல்லாவற்றையும் - ஏற்றுக் கொள்ளும்படிக்குத் தம்மையே நிர்ப்பந்தித்துக் கொண்டார், அதை அடிபட வேண்டியவர்களுக்காகச் செய்தார்! இது தவிர்க்கக் கூடியதாய் இருந்தது; அவர் தூதர்களின் சேனைகளை அழைத்திருக்க முடியும். மற்றவர்களை அவர் இரட்சிக்க முடிந்தது ஆனால் அவரையே இரட்சித்துக் கொள்ள முடியவில்லை என்ற ஏளனச் சொல் உண்மையற்றதாய் இருந்தது; அவர் தம்மையே இரட்சித்துக் கொண்டிருக்க முடிந்திருந்தது. ஏளனம் செய்தவர்கள் மனதில் நினைத்திராத ஒரு கருத்தில், அவர்களின் வார்த்தைகள் உண்மையாய் இருந்தன: இயேசு மற்றவர்களைப் பாவம் மற்றும் மரணத்திலிருந்து இரட்சிக்க வேண்டியிருந்தது என்றால், அவர் மரணத்திலிருந்து தம்மையே இரட்சித்துக் கொள்ளக் கூடாதிருந்தது. அவர் ஒரு தெரிவைச் செய்ய வேண்டியிருந்தது, மற்றவர்கள் வாழ வேண்டும் என்பதற்காக அவர் தமது ஜீவனை இழப்பதைத் தெரிவு செய்தார். வேறு ஏதேனும் வழியொன்றைக் காணும்படிக்கு அவர் தமது பிதாவினிடத்தில் கேட்டுக் கொண்டிருந்தார், தமது குமாரனுக்காக முடிந்திருந்ததென்றால் தேவன் அப்படி ஒன்றைப் பெற்றிருப்பார் - ஆனால் மனித குலத்தின் மீதான அன்பு முதலாவதாக வந்து நின்றது.*

*கவனிப்பவர்களுக்காக மட்டுமின்றி, அறியாமையில் உள்ளவர்களுக் காகவும், தூரத்தில் இருந்தவர்களுக்காகவும், கலகக்காரர்கள் மற்றும் பாவம் நிறைந்தவர்களுக்காகவும், இழந்து போகப்பட்டு மற்றும் நிறைவேற்றாது இருந்தவர்களுக்காகவும், தேவனற்றவர்களுக்காகவும், இவ்வுலகத்தில் நம்பிக்கையற்றவர்களுக்காகவும் கூட இயேசு பாடுபட்டார். அது மிக மேலான அன்பாக இருந்தது; அழியும் வார்த்தைகள் அதை எவ்வளவு வறியதாகச் சித்தரிக்கக் கூடும்!*

## *முடிவுரை*

*கிறிஸ்துவின் சிலுவையானது வல்லமை நிறைந்தது மற்றும் வெற்றி மேலோங்கியது, இருப்பினும் நாமும் கூடச் சிலுவையில் அறையப்பட வில்லையென்றால், வெளிப்படுத்தப்பட்ட அன்பு வீணாகின்றது, நமக்குக் கிடைக்காது போகின்றது. நமது பூமிக்குரிய இச்சைகளை நாம் விட்டுவிடாதிருந்தால், இயேசுவின் சிலுவையால்கூட நம்மை இரட்சிக்க*

*முடியாது (ரோமர் 8:13ஐக் காணவும்). பழைய மனிதன் சிலுவையில் அறையப்பட்டாலன்றி, ஞானஸ்நானம் என்ற அழகிய சடங்கில் மறுபடியும் எழுதல் என்பது வீணானதாகவே உள்ளது! (ரோமர் 6:3-6ஐக் காணவும்.) உண்மைக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டுள்ளனர் (கலா. 2:20).*

குறிப்புகள்

[1]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint ed., Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1973), 120. [2]Albert Barnes, *Matthew and Mark,* Notes on the New Testament (N.p., 1949; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1974), 312. [3]J. W. McGarvey, *Matthew and Mark*, The New Testament Commentary, vol. 1 (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 246. [4]Marcus Dods, "The Gospel of St. John," in *The Expositor's Greek Testament*, ed. W. Robertson Nicoll, vol. 1 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1951), 859. [5]Albert Barnes, *Luke and John,* Notes on the New Testament (N.p., 1949; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1975), 374. [6]*யூதர்கள் சாதாரணமாகக் கொலை தண்டனை தரும் வழி வகையென்பது கல்லெறிதலாகும் என்பதைக் கவனிக்கையில், இயேசு சிலுவையில் அறையப்படுவார் என்று முன்னுரைக்கப்பட்டது கூட மிகவும் குறிப்பிடத் தக்கதாக உள்ளது.* [7]*வஸ்திரங்கள் பங்கிட்டுக் கொள்ளப்பட்டது பற்றியும், ஒரு உடையின் மேல் சீட்டுப் போடப்பட்டது பற்றியும் ஆகிய இவ்விரண்டையும் குறிப்பிட்டுக் கூறிய இந்த முன்னுரைத்தலானது எல்லாவற்றிலும் மிகவும் கவனத்திற்குரியதாகும்.*

# நமது தெய்வீக முன்மாதிரி

உன்னதமானவருடைய ஒரே பேறான குமாரன் பல காரணங்களுக்காக இந்த பூமியைக் கிருபையினால் நிறைக்கத் தம்மைத் தாழ்த்தினார். அவைகளில் ஒன்று மலைப் பிரசங்கத்தையும் மற்றும் பல தெய்வீக போதனைகளையும் முன் வைப்பதாக இருந்தது. அவர் வந்ததற்கான இன்னொரு காரணம் அவர் தம் இரத்தத்தைச் சிந்துவதற்காகும். மரணத்தை ஜெயித்தல் என்பது இன்னும் வேறொரு காரணமாக இருந்தது. நமக்கு ஒரு முன்மாதிரியாக அவர் இருக்கும்படியாகவும் அவர் வந்தார். பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களைப் போலச் செய்ய முயற்சிப்பார்கள் என்பதைப் பரலோகத்தின் தேவன் அறிந்திருந்தார். பெரியவர்களுக்குக் கூட ஒரு முன்மாதிரி தேவை என்பதை அவர் அறிந்திருந்தார். நம்மில் எவரொருவரும் அவரது அடிச்சுவடுகளை முழுமையாகப் பின்பற்ற முடியாதவர்களாகவே இருக்கின்றோம், ஆனால் நாம் ஒரு பரிபூரணமான முன்மாதிரியைப் பெற்றுள்ளோம் என்பதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

## அவருடைய இளமைப் பருவம்

சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் ஆகியோருக்கு இயேசு ஒரு முன்மாதிரியாக இருக்கின்றார். கிறிஸ்துவின் இளமைப் பருவம் பற்றிப் பரிசுத்த ஆவியானவர் நமக்குச் சிலவற்றைக் கூறியுள்ளார். லூக். 2:51ல் அவர் தமது தாய்க்கும் தகப்பனுக்கும் ''கீழ்ப்படிந்து'' இருந்தார் என்று கூறப்படுகின்றது. ஒரு குழந்தையானது தனது பெற்றோருக்குக் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று வாழ்வின் தலையாய சட்டங்களில் ஒன்றாக உள்ளது, மற்றும் இதுவே புறக்கணிக்கப்படுவதில் முன்னுரிமையுடையதாகவும் உள்ளது.

மேலும், இளைஞர் என்ற வகையில் இயேசு மத ஈடுபாடு கொண்டவராக இருந்தார். அவர், "[தம்] பிதாவுக்கடுத்தவைகளில் இருக்க வேண்டும்" (லூக். 2:49) என்று அவர் கூறினார். அவர் "காட்டுத்தினையை விதைக்கவில்லை'' மற்றும் பாவம் செய்யவில்லை. சிறுவர்களும் சிறுமியர்களும் தாங்கள் இளம் வயதுள்ளவர்களாய் இருக்கையில் தூய்மையாகவும், நேர்மையுள்ளவர்களாயும் இருப்பதற்கு இயேசுவின் முன்மாதிரியில் இருந்து கற்றுக் கொள்ள முடியும்.

## அவருடைய உலகம் சார்ந்த வேலை

இயேசு ஒரு தச்சராக ஆனார் (மாற். 6:3) என்று வேதவசனங்களில் எழுதப்பட்டது தற்செயலானது அல்ல. அவர் தச்சுத் தொழிலைச் செய்ய

வேண்டும் என்று ஒருக்காலும் நோக்கங் கொண்டதில்லை, ஆனால் அவர் அந்தத் தொழிலைக் கற்றுக் கொண்டார் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. நாம் உழைப்பின் மேன்மையை மதித்து, ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ளும் நல்லறிவு உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதற்காகவே இது முன் வைக்கப்பட்டுள்ளது என்பது உறுதியானதாகும். மகனுக்குத் தொழில் ஒன்றைக் கற்றுத் தராதவன் அவனுக்குத் திருடக் கற்றுத் தருபவன் போலவே இருக்கின்றான் என்று பழங்கால ரபீக்கள் யூதப் பெற்றோர்களுக்குப் போதித்தனர்.

## அவருடைய ஞானஸ்நானம்

ஞானஸ்நானம் பெறுவதற்காக இயேசு கலிலேயாவிலிருந்து சுமார் எழுபது மைல்கள் தொலைவில் இருந்த, யோவான் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த இடமாகிய யோர்தானுக்கு நடந்து சென்றதில் ஒரு முன்மாதிரியாக இருக்கின்றார். நீங்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்கு எவ்வளவு தூரம் நடந்து செல்லுவீர்கள்? சில மக்கள் ஒரு அடி கூட எடுத்து வைக்க மாட்டார்கள். சிலர் ஞானஸ்நானத்தை முற்றிலுமாக மறுதலிக்கின்றனர். இவர்கள் இயேசுவின் முன்மாதிரியைக் கவனிப்ப தில்லை என்பது தெளிவு. இயேசு கழுவப்பட வேண்டிய பாவம் எதுவும் இல்லாதவராகையால், இவ்விஷயத்தில் அவருடைய முன்மாதிரியானது விசேஷமாய்க் கவனிக்கப்பட வேண்டியதாய் உள்ளது. அப்படியிருந்தும், அவர் ஞானஸ்நானத்தை வலியுறுத்தினார். அவரது பிதாவானவர் எல்லா மக்களும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று கட்டளையிட்டிருந்ததை அவர் அறிந்தார், மற்றும் அவர் பாவமற்ற வராயிருந்தும், தேவனுடைய ஒவ்வொரு கட்டளையையும் அவர் நிறைவேற்ற விரும்பினார். அவர் தமக்காக இக்கட்டளையைக் காத்துக் கொள்ளும்படி பிரசங்கியாரிடத்தில் (யோவான் ஸ்நானனிடத்தில்) பேச வேண்டியிருந்தது. அவர் முதல் முயற்சியை எடுத்தார். உங்கள் வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இவ்விஷயத்தில் இயேசுவின் முன்மாதிரியைப் பற்றி நீங்கள் என்ன கூற முடியும்?

## அவரால் எதிர்க்கப்பட்ட சோதனை

எஜமானர் சோதனையைச் சந்தித்த வழிமுறையிலும் மாபெரும் முன்மாதிரியாகவே விளங்குகின்றார். மனிதப் பிறவி என்ற வகையில் அவர் நம் எல்லாரைப் போலவே சோதனைகளுக்கு உட்பட்டவராய் இருந்தார். நாம் வேத வசனத்தின் மேற்கோள்களைப் பயன்படுத்துதல் என்பது சோதனையை எதிர்த்து நிற்கும் வழிமுறைகளில் ஒன்று ஆகும். இயேசு பழைய ஏற்பாட்டின் வசனப் பகுதிகளை அறிந்தவராகவும், அவைகளை மேற்கோள் காட்டக் கூடியவராகவும் இருந்தார். தேவனுடைய வசனமானது கருக்குள்ள பட்டயமாக உள்ளது, பிசாசானவன் அதனுடைய வெட்டுகின்ற வல்லமைக்கு முன் நிற்க முடியாது. ஆகையால், நானும் நீங்களும், நமது ஆத்துமாக்களை ஆபத்துக்குள்ளாக்க விரும்பாதிருந்தால்,

பிசாசானவனின் அறைகூவல்களைச் சந்திப்பதில் அந்த மாபெரும் முன்மாதிரியைப் பின்பற்றுவோம். நாம் வேதாகமத்தைக் கற்றுக் கொண்டு அதிலிருந்து மேற்கோள் காட்டக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

## இழந்து போகப்பட்டவர்களுக்கான அவருடைய அன்பு

பாவம் நிறைந்த ஆத்துமாக்களுக்குப் போதிப்பதற்கான வைராக்கியம் என்பது நமது மாபெரும் முன்மாதிரியிடம் உள்ள இன்னுமொரு தலை சிறந்த பண்பாகும். இயேசு தமது காலத்திலிருந்த மார்க்கத் தலைவர்களிடம் தாம் புகழ் இழந்தவராகக் காணப்படக் கூடிய வேளையிலும், பாவம் நிறைந்த, புறம்பே தள்ளப்பட்ட மனிதர்களிடத்தில் தமது நேரத்தைச் செலவிட்டார். ஒருமுறை, அவர் பசியாய் இருந்த போதிலும், சரீரப் பிரகாரமான உணவின் மீது உள்ள தமது ஆர்வம் யாவற்றையும் இழக்குமளவுக்கு பாவியிடம் பேசுவதில் அவர் அதிகமாய் ஈடுபாடு கொண்டார். மற்றவர்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள நீங்கள் ஆர்வம் குறைந்தவர்களாய் இருந்தால், இவ்வகையில் நீங்கள் உங்கள் தலைவரை/முன்னோடியைக் கண்டு கொள்ளாமல் இருக்கின்றீர்கள்.

## அவரது எதிரிகளிடத்தில் அவருடைய அன்பு

இயேசுவைத் தவறாக நடத்தியவர்களிடத்தில் அவரது எண்ணப் போக்கானது அவரது வாழ்வின் மாபெரும் அத்தியாயங்களில் ஒன்றை அமைக்கின்றது. நமக்கு நன்மை செய்பவர்களுக்கு நாம் நன்மை செய்கையில், இயேசு தம்மைத் தவறாக நடத்தியவர்களிடத்தில் அன்பும் பரிதாபமும் உள்ள இருதயம் கொண்டிருந்தார். அவர், ‘‘பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக் கிறார்களே” (லூக். 23:34) என்று கூறினார். பேதுரு பின்வருமாறு எழுதினார்:

> கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை (1 பேது. 2:21, 22).

இந்த விஷயங்கள் எல்லாவற்றிலும் நம்மில் பலர் இயேசுவைப் பின்பற்றக் கூடியவர்களாய் இருக்க முடியுமா என்பது சந்தேகமாய் உள்ளது, ஆனால் முயற்சிக்காமல் இருப்பது பாவமாகும், ஆண்டுகள் கடக்கின்ற போது நாம் இன்னும் சிறப்பாகச் செய்ய முடியும்.

## பிதாவுக்கு அவருடைய கீழ்ப்படிதல்

*இயேசு தம்முடைய பூமிக்குரிய பெற்றோருக்குக் கீழ்ப்படிதலில் அனுபவமும், அவருடைய பரலோக பிதாவின் கட்டளைகளைக் காத்துக் கொண்டதும் அவர் கெத்செமெனே தோட்டத்திற்கு வந்த போது உதவின. பழக்கமான அந்த இடத்தில், நள்ளிரவு வேளையில், எஜமானர் முகங்குப்புற விழுந்து, "தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார்" (எபி. 5:7). அவர் மரிக்க விரும்பவில்லை. ஏனெனில் சிலுவையில் ஆணியடிக்கப்படுதல் என்பது உங்களுக்கும் எனக்கும் போலவே அவருக்கும் வலி நிறைந்த பெரும் துக்கமாகவே இருந்தது. அவர் தமது சரீரப் பிரகாரமான விருப்பத்தை மறுதலிக்க வேண்டியதாக இருந்தது. "அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" (எபி. 5:8, 9) என்று நாம் வாசிக்கின்றோம்.*

*நாம் எதை விரும்புகின்றோமோ அதை மறுதலிக்கவும், சுயநலமற்ற முழு இருதயத்துடன் நம்மையே ஒப்புக் கொடுக்கவும் முடியாமல் போனால், நாம் கீழ்ப்படியக் கற்றுக் கொண்டிருக்கவில்லை என்றே ஆகின்றது. இயேசு தாம் தேவனுடைய குமாரன் என்பதால் சரீரத் துன்புறுத்தலிலிருந்து விதிவிலக்கு உரிமைகோரவில்லை. அவர் இப்படிப் பட்ட எண்ணப்போக்கைக் கொண்டிருந்ததால், ஆசீர்வதிக்கப்பட்ட அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற நாம் எப்படி மறுக்க முடியும்? (பிலி. 2:5ஐக் காணவும்.)*

# சகல ஆசீர்வாதங்களின் இடம்

*மழை, சூரிய வெளிச்சம் மற்றும் சரீரத்திற்குரிய ஏராளமான ஆசீர்வாதங்கள் ஆகியவை தேவனால், பரிசுத்தவான்கள் மற்றும் பாவிகள் ஆகிய இரு சாராருக்குமே கொடுக்கப்படுகின்றன (மத். 5:45). அவர் துன்மார்க்கருக்கும் மற்றும் நீதியுள்ளவர்களுக்கும், ''மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் அவர்களுக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் அவர்களுடைய இருதயங்களை நிரப்பி" (அப். 14:17) வருகின்றார். இருப்பினும் அது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு உண்மையாவதில்லை. பிதாவினுடைய ஒரே பேறான குமாரனே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் பகிர்ந்து வழங்க வேண்டும் என்பதே பிதாவின் நல்மகிழ்வாய் உள்ளது (யோவா. 10:9; 14:6; 15:5; அப். 4:12; கொலோ. 1:27). இயேசுவுக்குப் புறம்பே ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் எதுவும் இல்லை; அவருக்குள் அவை அனைத்தும் காணப்படுகின்றன (எபே. 1:3).*

*கிறிஸ்துவுக்குப் புறம்பே உள்ள தனிநபர்கள் இன்னமும் தங்களின் பாவங்களும் அக்கிரமங்களும் தங்களுக்கு எதிராய் குறிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றனர்; ஆனால் ஒரு நபர் கிறிஸ்துவுக்குள் வந்த நேரம் தொடங்கி, பொய்யுரையாத ஒருவரால், ஒவ்வொரு பாவமும் மன்னிக்கப்பட்டு, மறக்கப்பட்டது என்று கூறப்படும் வாக்குத்தத்தத்தைப் பெறுகின்றார் (எபி. 8:12). கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்கள் தங்களின் தேவனுடைய ஆவியானவரான பரலோக விருந்தினர் தங்கியிருக்கும் மகிழ்ச்சியை அனுபவிப்பதில்லை, ஆனால் இயேசுவுக்குக் கீழ்ப்படிகின்ற ஒவ்வொருவருக்குள்ளும் வாசம் பண்ண அவர் வருகின்றார் (யோவா. 14:17; அப். 2:38; 5:32; கலா. 4:6).*

*அவிசுவாசிகள் தங்கள் சொந்த வெளிச்சத்தில் நிற்கின்றனர், மற்றும் அவர்கள் தங்களுடைய சிறந்த சொந்த ஆர்வங்களுக்கெதிராக வேலை செய்கின்றனர். இயேசுவுக்குள் வந்தவர்கள் சிருஷ்டிப்பின் விதிகளுக்கு ஒப்பத் தங்களை அமைத்துக் கொள்கின்றனர். அவர்கள் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கின்றது என்ற (ரோமர் 8:28) வாக்குத்தத்தத்தைப் பெற்றுள்ளனர்.*

*தேவனை விசுவாசித்தும் கூட, கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்கள் "எங்கள் பிதாவே" என்று அழைத்து ஜெபம் செய்யத் தகுதியற்றவர்களாய் இருக்கின்றனர். "எங்களைப் படைத்தவரே" என்று மட்டுமே அவர்களால் சரியாகக் கூற முடியும். இதற்கு மாறாக, கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள்*

*பிதாவின் குடும்பத்தில் தத்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் "அப்பா! பிதாவே!" என்று அவரை அழைப்பதில் அவர் பிரியப்படுகின்றார் (கலா. 4:5-7). அது போலவே, கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்கள் தங்களுக்காகப் பேசப் பெரிய சகோதரரைப் பெற்றிருப்பதில்லை. தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் இயேசுவைத் தங்களுடைய மூத்த சகோதரராக தேவனுடைய பக்கத்தில் பெற்றுள்ளனர், அவர் நீதியுள்ள பரிந்து பேசுபவராயிருந்து, அவர்களுக்காக வேண்டுதல் செய்கின்றார் (எபி. 7:25; 1 யோவா. 2:1, 2).*

*கிறிஸ்தவமற்ற தோழமைகள் கிறிஸ்தவர்களின் வாழ்வு மற்றும் உறவுமுறைகளை வளப்படுத்தக் கூடிய ஆவிக்குரிய கூற்றில் பொதுவாகக் குறைவு படுகின்றன. ஒரு நபர் கிறிஸ்துவுக்குள் வருகின்ற பொழுது, அவர் இப்பூமியில் உள்ள மிகச் சிறந்த மனிதர்களுடன் ஐக்கியமாகின்றார். அவர்களின் ஒழுக்க விதி மிக உயர்வானதாயுள்ளது, மற்றும் அவர்களின் நோக்கமானது (பிதாவினுடைய சித்தத்தைச் செய்தல்; யோவா. 6:38) இப்பூமியில் ஒப்புவமையற்றதாக உள்ளது. கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒருவர், ஒளியில் உள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்குத் தகுதியுள்ள மற்றவர்களுடன் ஐக்கியம் கொள்கின்றார். அவர் இனியும் இருளில் தள்ளப்படத் தகுதியானவர்களுடன் தன் நாட்களைச் செலவழிப்பதில்லை (கொலோ. 1:12; மத். 25:30).*

*மக்கள் கிறிஸ்துவுக்குள் வருவது எப்படி என்பதைப் பின்வரும் இரு வேத வசனங்களிலேயே கூறப்படுகின்றது:*

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? (ரோமர் 6:3).*

> *ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே (கலா. 3:27).*

*ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதன் மூலமாகவே கிறிஸ்துவுக்குள் வருகின்றார் என்றே இவ்விரு வசனப் பகுதிகளும் கூறுகின்றன. உண்மையான விசுவாசமும், உண்மையான மனந்திரும்புதலும் முந்தி வர, ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவுக்குள் வருவதற்கு மக்கள் நிறைவேற்றும் கடைசிக் கட்டளையாய் உள்ளது. இதன் பிறகு பல கட்டளைகள் வருகின்றன. ஆனால் கிறிஸ்துவுக்குள் இருத்தல் மற்றும் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருத்தல் ஆகியவற்றின் மத்தியில் ஞானஸ்நானமே பிரிக்கும் கோடாக உள்ளது.*

# வருகிறவர்

*இயேசு சிலுவையில் அறையப்படுவதற்குச் சற்று முன்னதாகத் தமது சீஷர்களிடத்தில், "... ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" (யோவா. 14:2, 3) என்று கூறினார். அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட உடனேயே, இரு தூதர்கள் (''வெண்ணாடை அணிந்த மனிதர்கள்'') அவருடைய சீஷர்களிடம் தோன்றி, "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்றார்கள் (அப். 1:11).*

## இரண்டாம் வருகையைப் பற்றிய தவறான கருத்துக்கள்

*இரண்டாம் வருகை என்பது உறுதியான உண்மையாயிருந்தாலும், அதிகம் எதிர்பார்க்கப்படுகின்ற இந்த நிகழ்ச்சியைப் பற்றி எண்ணற்ற தவறான கருத்துக்கள் போதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிறிஸ்தவரும் வேதாகமத்தின் அடிப்படையிலில்லாத யூகங்களினால் குழப்பமடையாத படிக்கு இயேசுவின் மறுவருகை பற்றிய வேதாகம போதனைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.*[1]

***"அவர் ஏற்கனவே வந்து விட்டார்"***

*கர்த்தருடைய நாள் ஏற்கனவே வந்து விட்டது என்ற தவறான கருத்தானது பவுலினால் தீவிரமாக எதிர்க்கப்பட்டது:*

> *அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப் படுவதையுங் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும், கலங்காமலும் இருங்கள் (2 தெச. 2:1, 2).*

*மக்கள் கர்த்தருடைய நாள் "சமீபித்து"* (KJV) *இருந்தது என்றோ அல்லது "சமீபமாய்"* *இருந்தது* (ASV) *என்றோ கூறவில்லை, ஆனால் கி.பி. 51ல்*

*2 தெசலோனிக்கேயர் நிருபம் எழுதப்பட்ட காலத்தில் அது ஏற்கனவே வந்து விட்டது என்று கூறிக் கொண்டிருந்தனர்.*

*இந்தத் தவறான கருத்தானது கர்த்தருடைய நாள் "நிலை நின்றுள்ளது" என்றே நேரடி அர்த்தப்படுவதாக விளக்கும் ஏவப்பட்ட வசனமாகும், ஆனால் இது "வந்திருக்கின்றது"* (NASB; RSV) *என்று அதிக மென்மையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதே வார்த்தையானது காணப்படும் 1 கொரி. 3:22 மற்றும் ரோமர் 8:38 ஆகிய இடங்களில் "நிகழ்காரியங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்விதமாக, 2 தெச. 2:2ல், கர்த்தருடைய நாள் வந்திருந்தது, அதாவது அது ஏற்கனவே உண்மை நிலையாய் இருந்தது என்பது மிகச் சரியான மொழிபெயர்ப்பாய் இருக்கும்.*

*கர்த்தருடைய நாள் நிகழ்கால உண்மையாய் இருந்ததென்று முதல் நூற்றாண்டில் வாதிட்டவர்கள் அந்த மாபெரும் நாளானது ஆகாயத்தில் கர்த்தரின் காணும் தோற்றத்துடனிருக்கும் என்பதை அறியாதிருந்தனர் (அப். 1:9-11). மேலும் அவர்கள் கர்த்தருடைய நாளுக்கு முன்னதாக விசுவாச விலக்கம் ஏற்பட வேண்டும் என்பதையும் அறியாதிருந்தனர் (2 தெச. 2:3).*

**"அவர் உடனடியாக வருகிறார்"**

*கிறிஸ்துவின் மறுவருகையைப் பற்றித் தெசலோனிக்கேயரிடம் இருந்த இன்னொரு தவறான கருத்து என்னவென்றால், கிறிஸ்துவின் வருகையானது உடனடியானதாக, மேல் தொங்குவதாக, பயமுறுத்துவதாக இருக்கும் என்பதேயாகும். "நிகழ்கால உண்மை நிலை" என்ற பிழையான கருத்தை மறுத்துரைப்பதில் பவுல், இரண்டாம் வருகைக்கு முன்னர் என்ன நடக்க வேண்டும் என்பதைப் பற்றிப் பேசினார். கர்த்தருடைய நாள் கி.பி. 51ல் வந்திருக்க முடியாத அளவுக்கு பல நிகழ்ச்சிகள் அதில் அடங்கியுள்ளன (2 தெச. 2:1-12ஐக் காணவும்). கி.பி. 51க்குப் பின் மாபெரும் விசுவாச விலக்கம் நடந்திருக்கிறது உறுதி, ஆனாலும் அந்த விசுவாச விலக்கமானது கர்த்தருடைய நாள் வரைக்கும் இருக்கும் (2 தெச. 2:8). ஆகையால், கர்த்தருடைய நாள் எந்த ஒரு குறிப்பிட்ட தலைமுறையில் வருகிறது என்று ஒருவராலும் கூற முடியாது. அந்த நாள் திருடன் வருகிற விதமாய் வரும் (1 தெச. 5:1, 2); அதாவது, அது எதிர்பார்க்கப்படாததாகவும், திடீரென்று வருவதாகவும் இருக்கும். இந்தக் காரணத்தினால், கர்த்தருடைய வருகையின் உடனடித் தன்மை சான்றளிக்கப்பட முடியாது. உண்மையில், ஒரு குறிப்பிட்ட சந்ததியில் கர்த்தருடைய வருகை மேல் தொங்குவதாயுள்ளதென்று சிலர் போதிக்கும் பொழுது, அவர் அந்தத் தலை முறையில் வரமாட்டார் என்பதற்கு அப்போதனையே திடமான காரணமாய் இருக்கலாம். இயேசு, "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" (மத். 24:36) என்று கூறினார்; "நீங்கள் நினையாத நாழிகையில் மனுஷ குமாரன் வருவார்'' (மத். 24:44) என்றும் அவர் கூறினார்.*

***“அவர் மறுபடி வரும் பொழுது பவுல் உயிருடன் இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டார்”***

*கர்த்தர் வரும்பொழுது பவுல் உயிருடன் இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டார் என்பது சில மக்களின் கருத்தாக உள்ளது, இயேசுவின் வருகையைப் பற்றிய மூன்றாவது தவறான கருத்தாகும். பவுல் 1 தெச. 4:15ல் தன்மைப் பெயர்ச் சொல்லைப் பயன்படுத்துவதால் இப்படி அவர்கள் யூகிக்கின்றனர். அதே காரணத்தினால், கர்த்தர் வரும் பொழுது பவுல் மரித்திருக்கும்படி எதிர்பார்க்கப்பட்டார் என்றும் ஒருவர் முடிவு செய்ய முடியும், ஏனெனில் அவர் 1 கொரி. 6:14 மற்றும் 2 கொரி. 4:14 ஆகிய வசனங்களில் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுபவர்களை விவரிப்பதற்கும் தன்மைப் பெயர்ச் சொல்லையே பயன்படுத்தினார்.*

*உண்மையில், பவுல் தம்முடைய சொந்த நிலை பற்றி குறிப்பாக விவாதிக்கவில்லை. இருப்பினும் அவர், படிப்படியாக வளரக் கூடிய விசுவாச விலக்கம் பற்றிப் பேசினார். அந்த விசுவாச விலக்கமானது தீர்மானிக்கப்படாத ஒரு கால வரையரை வரைக்கும், அது தன் உச்ச வல்லமையை அடையும் வரைக்கும் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். இதைப் பற்றிய பவுலின் விழிப்புணர்வானது, கர்த்தர் வரும் பொழுது அவர் தாம் உயிருடன் இருப்போம் என்று எதிர்பார்க்கவில்லை என்று அர்த்தப்படுத்தக் கூடும்.*

***“கர்த்தருடைய வருகையானது இரு நிலைகள் கொண்டிருக்கும்”***

*இன்றைய நாட்களில் சிலர், ஏழு வருட கால இடை வெளியில் எதிர்காலத்தில் காணக்கூடிய இரு வருகைகள் நடைபெறும் என்று இரண்டாம் வருகையைப் பற்றி உரிமைகோருவது இன்னொரு நான்காவதான தவறான கருத்தாகும். இயேசு தமது பரிசுத்தவான்களுக்காக parousia[2] என்ற வருகையில் வந்து, மரித்தோரை உயிர்ப்பித்து, உயிருள்ளவர்களை மறுரூபமாக்கி, பின்பு ஏழு ஆண்டுகள் கழித்து தமது பரிசுத்தவான்களுடன் தமது epiphaneia என்ற வருகையில் மறுபடியும் தோன்றுவார் என்று கூறப்படுகின்றது. இந்தத் தவறான உபதேசத்தின்படி, இயேசுவின் இவ்விரண்டு வருகைகளுக்கும் இடைப்பட்ட ஏழாண்டுக் காலத்தில் பரிசுத்தவான்கள் மகிமை சூழ்ந்த பரவசத்தில்[3] வாழ, பெரும் துன்பத்தில் இப்பூமியின் மீது குழப்பம் நிறையும் எனப்படுகின்றது. ஏழு ஆண்டுகளின் முடிவில், கர்த்தர் தமது epiphaneia என்ற வருகையில் பூமிக்குத் திரும்பி ஆயிரம் ஆண்டு அரசாட்சியைத் தொடங்கி வைத்து, அதன் முடிவில் மரித்த துன்மார்க்கரை எழுப்புவார் என்றும் கூறப்படுகின்றது.*

*இந்தக் கோட்பாட்டிற்கான ஆதரவு மூல வார்த்தைகளில் தேடப் படுகின்றது. கர்த்தருடைய வருகையின் இரண்டு நிலைகளை விவரிப்பதற்குப் பரிசுத்த ஆவியானவர் parousia மற்றும் epiphaneia என்ற இரு வார்த்தைகளை விசேஷமாக ஏவுதல் செய்தார் என்று கூறப்படுகின்றது. இருப்பினும், parousia என்ற வார்த்தையானது மனித வருகை தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (2 கொரி. 7:6), பாவ மனுஷனுடைய வருகை (2 தெச. 2:9), பெத்லகேமில் கர்த்தருடைய முதலாம் வருகை (2 பேது. 1:16)*

மற்றும் உலகத்தின் முடிவில் கர்த்தருடைய இரண்டாவது வருகை (1 கொரி. 15:23) ஆகியவற்றிற்கும் இவ்வார்த்தையானது பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆகையால், ஒருவர், parousia என்ற வார்த்தையானது கர்த்தருடைய இரண்டாம் வருகையின் நிரூபணமற்ற முதல் நிலையை விவரிக்க ஆவியானவரால் ஏவப்பட்டுள்ளதென்று முறைப்படி உறுதிப்படுத்த முடியாது.

அது போலவே, epiphaneia என்ற வார்த்தையும் கூட பெத்லகேமில் கர்த்தருடைய முதலாம் வருகையைப் பற்றிக் கூறுவதற்கும் (2 தீமோ. 1:10) மற்றும் உலக முடிவில் அவரது இரண்டாம் வருகையைப் பற்றிக் கூறுவதற்கும் (1 தீமோ. 6:14) பயன்படுத்தப்படுகின்றது. ஆகையால் epiphaneia என்ற வார்த்தையானது கர்த்தருடைய இரண்டாம் வருகையின் நிரூபணமற்ற இரண்டாம் நிலையை விவரிக்க ஆவியானவரால் ஏவப்பட்டுள்ள நுட்பமான வார்த்தையென்று உறுதிப்படுத்துவதும் சரியற்றதாக உள்ளது.

அத்துடன், இயேசு உண்மையில் தமது பரிசுத்தவான்களுடன் வரும் parousia வருகையை இந்தத் தவறான கோட்பாடானது இயேசு தமது பரிசுத்தவான்களுக்காக வருவார் என்று கூறுகின்றது (1 தெச. 3:13; 4:14). கர்த்தருடன் வரும் பரிசுத்தவான்கள் (கிரேக்கம்: hagioi, “பரிசுத்தவான்கள்”) தூதர்களாயிருக்கலாம் (2 தெச. 1:7; யூதா 14), அல்லது சரீரத்தில் எஞ்சியுள்ளவர்கள் உடன் இணைந்து மறுரூபமாக்கப்படுவதற்குத் திரும்பி வரும் மரித்த கிறிஸ்தவர்களின் ஆவிகளாயிருக்கலாம். அவர்கள் தூதர்களோ அல்லது தேவனுடைய மரித்த பிள்ளைகளின் ஆவிகளோ, அவர்களது வருகையானது parousiaவிலிருந்து மாறுபட்ட epiphaneiaவாக இருக்கும் என்பதற்கு போதனை எதுவும் இல்லை.

1 தெச. 4:16ல் உள்ள “கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்” என்ற சொல் விளக்கமானது தவறாகக் கோட்பாடுப் படுத்தப்பட்டபடி கிறிஸ்துவுக்குப் புறம்பே மரித்தவர்கள் என்பதற்கு வேறுபட்ட தோற்றமுடையதல்ல. மாறாக, பவுல் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களைக் கிறிஸ்துவுக்குள் வாழ்பவர்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டினார் (1 தெச. 4:15). இந்த சந்தர்ப்பப் பொருளில், பவுல் கிறிஸ்தவர்களைப் பற்றி மட்டும் கலந்துரையாடினார். மரித்த கிறிஸ்தவர்கள் கர்த்தருடன் சேருவதற்கு முந்தி உயிருள்ள கிறிஸ்தவர்கள் அவ்விதம் செய்வதற்கு இப்பூமியை விட்டுப் போக மாட்டார்கள் என்று அவர் கூறினார். 1 தெச. 4ஆனது, உயிருடனோ அல்லது மரித்தோ, கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்களைக் காணாது விடுகின்றது.

## இரண்டாம் வருகையின் சிறப்பியல்புகள்

**ஒரு முன் தேவை**

ஏற்கனவே இருக்கின்ற அக்கிரமமானது வளர்ச்சியுற்றிருப்பதென்பது இரண்டாம் வருகையில் முன் தேவை என்று பவுல் உறுதிப்படுத்தினார். பவுல் எழுதிய காலத்தில் கட்டுப்பாட்டிற்குள் இருந்த இந்த இயக்கமானது

*கவனிக்கத் தக்க அளவில் வளரும், ஆனால் அது கர்த்தருடைய இரண்டாம் வருகையில் அழிக்கப்படும் (2 தெச. 2:1-12).*

*அக்கிரமத்தின் இரகசியம், பாவமனுஷன் பவுலின் நாட்களில் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்தன. நிச்சயமாகவே இவன் வந்திருந்த சிலரில் 1 யோவான் 2:18ல் குறிப்பிடப்பட்டிருந்த அந்தி கிறிஸ்துக்களில் ஒருவனாக இருந்தான். 2 தெச 2ல் உள்ள மூர்க்கமான விசுவாச விலக்கமானவன் கிறிஸ்துவை எதிர்த்து நிற்கும் (அந்தி கிறிஸ்துவின்) பல குணங்கள் கொண்டிருந்தான். அவன் பாவத்தின் சாயலாய் இருந்தான், இயேசுவோ நீதியின் சாயலாய் இருந்தார். அவன் கேட்டின் மகனாய் இருந்தான், கிறிஸ்துவோ ஜீவாதிபதியாய் இருந்தார் (அப். 3:15). அவன் தேவனை எதிர்த்தான், கிறிஸ்துவோ பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தார்.*

*பாவ மனுஷனும், நீதியின் மனுஷனும் ஆகிய இருவருமே இரகசியத்தை உடையவர்கள் என்று விவரிக்கப்படலாம் (2 தெச. 2:6-8; 1 தீமோ. 3:16), அற்புதங்கள் செய்யலாம் (2 தெச. 2:9; யோவா. 5:19, 20) மற்றும் ஒரு parousiaவைக் கொண்டிருக்கலாம் (2 தெச. 2:8, 9). இருப்பினும் பாவ மனுஷன் கர்த்தருடைய parousiaவின் வெளிச்சத்தில் வாசம் பண்ண முடியாது; அவன் கொலை செய்யப்படுவான்.*

*பாவமனுஷனுக்கான பல அடையாளங்கள் யோசனையாகத் தரப்பட்டுள்ன; பலர் நீரோவைக் குறிப்பிட்டுள்ளனர். கி.பி. 68ல் அவன் மரணமடைந்த போது, சிலர் பவுலின் முன்னுரைத்தலில் இருந்த கேட்டின் மகன் அவன்தான் என்ற தங்களின் கருத்தை விட்டு விட மறுத்தனர். "மீண்டும் உயிர் பெற்ற நீரோ" என்ற புனை கதை எழும்பிற்று, அவன் மறுபடியும் உயிர் பெற்று கிறிஸ்தவர்களைத் தொடர்ந்து துன்புறுத்துவான் என்று அக்கதை கூறியது. இதற்கு மாறாக, நீரோவும் மற்றும் இன்னொரு வேட்பாளரான கலிகுலா (இவன் எருசலேம் தேவாலயத்தில் தனது உருவச் சிலையை நிறுவியவன்) என்பவனும் ஆகிய இருவருமே கர்த்தர் வரும்பொழுது அதிகாரத்தில் இருக்க மாட்டார்கள் என்பதால் தகுதியிழந்தவர்களாகின்றனர். பவுலினால் தீர்க்கதரிசனமாய்க் கூறப்பட்ட அக்கிரமமானது கர்த்தருடைய வருகையில் ஒழிக்கப்படு மட்டும் நிலைத்திருக்கும். இது போலவே இன்னும் பெயர் குறிக்கப்பட்ட மற்றவர்களும் இயேசு திரும்பி வரும் பொழுது அதிகாரத்தில் இருக்க மாட்டார்கள் என்பதால் (கேட்டின் மகன் எனப்படுவதிலிருந்து அவர்கள்) நீக்கப்படுகின்றனர்.*

*பாவமனுஷனைத் தடை செய்திருந்த முகமையின் அடையாளம் பற்றியும் பல்வேறு வகையில் கூறப்பட்டுள்ளது. பவுல் தாமே தடை செய்கிறவராய் இருந்தார் என்று சிலர் கருதியுள்ளனர். மற்றவர்கள் எல்லா அப்போஸ்தலர்களையும் உள்ளடக்கியிருக்கின்றனர். 2 தெச. 2:7ல் உள்ள சொற்றொடரை, போப்பின் உதயத்தைக் கட்டுப்படுத்த ஜெர்மன் பேரரசு அல்லது ரோமப் பேரரசு மேற்கொண்ட முயற்சிகளைக் குறிப்பதாக ஒரு சிலர் விளக்கப்படுத்தியுள்ளனர். கி.பி. 476ல் ரோமப் பேரரசு வீழ்ந்த பிறகு ரோமானிய மூப்பர்கள்/ஆயர்கள் தங்கள் அதிகாரப் பசிக்கு அடிமை களாயினர். தடை செய்பவனைப் பற்றி இரண்டாம் நூற்றாண்டில்*

*தெர்த்துல்லியன் பின்வருமாறு விளக்கம் அளித்தார்: "ரோம அரசைத் தவிர வேறு தடையெது உள்ளது ... ?"[4] மேலும் அவர் பின்வருமாறு கூறினார்.*

> *பேரரசர்களுக்காக நாம் நமது ஜெபத்தை ஏறெடுக்க இன்னுமொரு மற்றும் மாபெரும் அவசியமும் உள்ளது, ... ஏனெனில் முழு பூமியின் மீதும் வல்லமையுள்ள அதிர்ச்சியொன்று வரக் காத்திருக்கிறது என்று நாம் அறிகின்றோம் - உண்மையில், எல்லாவற்றின் முடிவும் பயங்கரம் நிறைந்த சாபங்களினால் பயமுறுத்துகின்றது - ரோமப் பேரரசு மட்டுமே தொடர்ந்து நிலைத்திருப்பதனால் திருப்பித் தாக்கக் கூடியதாயுள்ளது.[5]*

*அடையாளப்படுத்தப்படாத தடை செய்பவன்(ர்) நீக்கப்பட்ட பிறகு, பாவமனுஷன் வல்லமை பெற வேண்டும். அவனது வல்லமையானது கிறிஸ்துவின் வருகை வரையிலும் இருக்கும், அவரது வருகையில் அவன் அழிக்கப்படுவான் (2 தெச. 2:8).*

### குற்றப்படுத்தப்பட முடியாத கிறிஸ்தவர்கள்

*கர்த்தருடைய நாளில் இயேசுவின் பணியானது முற்றிலும் அழிப்பதாயிருக்காது. எல்லா யுகங்களிலும் மீட்கப்பட்ட பரிசுத்தவான்களை அவர் பெற்றுக் கொள்வது/ஏற்றுக் கொள்வது என்பது அவரது (மறு) வருகையின் மகிழ்ச்சியான அம்சமாய் இருக்கும். மீட்கப்பட்டவர்களின் கூட்டத்தில் தெசலோனிக்கேயர்களும் இருக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார். அவர்கள் "முற்றிலும்" பரிசுத்தமாக்கப் படுவதற்காக அவர் ஜெபித்தார், பின்பு அவர் தமது ஜெபத்தை மீண்டும் ஏறெடுத்தார்: "உங்கள் ஆவி, ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் parousiaவின் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப் படுவதாக" (1 தெச. 5:23). அவர் தமது சக கிறிஸ்தவர்கள் தங்களை சரியான விஷயத்திற்கு முற்றிலும் அர்ப்பணிக்க விரும்பினார்; மற்றும் அவர்கள் குற்றம் சாட்டப்படுத்தப்பட முடியாத அந்நிலையிலேயே மரித்து விட வேண்டும் அல்லது கர்த்தர் வரும் பொழுது அந்நிலையிலேயே அவர்கள் வாழ வேண்டும் என்று அவர் விரும்பினார்.*

### மனம் மாறியவர்கள் கிரீடங்களாகும் நிலை

*மற்ற காரணங்களுடன் கூட, பவுல் தமக்கு மிக அன்பானவர்களான பிரியமுள்ள தெசலோனிக்கேயரைக் காண முடியும் என்பதாலும் அவர் கர்த்தருடைய வருகையை ஆவலுடன் எதிர்நோக்கினார். விக்கிரகங்களிடமிருந்து உண்மையான தேவனிடம் திரும்பியிருந்த மக்களுடன் அவர் மறுபடியும் ஒன்று சேர்வார் என்ற அறிவே அந்த எதிர்பார்ப்பில் அவருக்குள் மகிழ்ச்சியை நிறைத்தது. ஒலிம்பிக் பந்தயத்தில் வெற்றியாளர் மலர்களால் ஆன மாலை ஒன்றைப் பெறுவது போல, கர்த்தருடைய நாளில் தெசலோனிக்கேயர்கள் பவுலின் மகிழ்ச்சியின் கிரீடமாய் இருப்பார்கள் என்று பவுல் கூறினார் (1 தெச. 2:19).*

*மனம் மாறியவர்கள் கிரீடங்கள் ஆவதுடன், 1 தெச. 2:19ன் குறிப்பிடத்*

*தக்க அம்சமானது அந்த மனமாறியவர்கள் யார் என்பதைப் பவுல் அறிவார் என்ற அடிப்படையில் அமைந்த யூகமாகத் தோன்றுகின்றது. கல்லறைக்கு அப்பாலும் தனிப்பட்ட முறையில் அடையாளம் கண்டு கொள்ளுதல் என்பது வேதாகமத்தின் கருத்தாகும். ஒருவருடைய சரீரம் எஞ்சி வாழ்வதில்லை, ஆனால் நினைவுகூரும் திறமையானது எஞ்சியிருக்கின்றது.*

**தேவ கோபம்**

*மீட்கப்பட்டவர்களின் மகிழ்ச்சி மற்றும் சந்தோஷத்துடன், துன்மார்க்கர் மற்றும் கீழ்ப்படியாதவர்கள் மேல் தேவ கோபாக்கினையும் கூட கிறிஸ்துவின் இரண்டாம் வருகையுடன் தொடர்பற்றுப் போக முடியாததாக உள்ளது (1 தெச. 1:10; 4:6; 5:3; 2 தெச. 1:8, 9; 2:8). வேசித்தனத்தைப் பற்றிச் சபை உறுப்பினர்கள் எச்சரிக்கப்பட்டனர், அப்படிப்பட்ட துன்மார்க்கத்தைச் செயல்படுத்தும் அனைவர் மேலும் கர்த்தர் ஆக்கினை செலுத்துகின்றவராய் இருக்கின்றார் என்று புத்தி கூறப்பட்டது. மற்றும், கர்த்தர் கணக்குக் கேட்க மாட்டார் என்ற நினைவில் வாழும் மக்கள், ஒரு பெண்ணுக்குப் பிரசவ வலிகள் திடீரென்று உண்டாவது போல, திடீரென்று ஏற்படும் அழிவுக்கென்றே விழித் தெழுவார்கள், மற்றும் அங்கு தப்பிக்க வழியெதுவும் இருக்காது. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள்மேல் நித்திய அழிவாகிய தண்டனை வரும்.*

*''அழிவு'' என்ற வார்த்தை நேரடியாக அர்த்தம் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது. பாவிகள் உண்மையில் அழிக்கப்பட்டு, இல்லாமல் ஆக்கப்பட்டுவிட்டால், அவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனையானது நித்தியமானதாக இருக்க முடியாது; அது ஒழிந்து போய்விடும். இதன் விளைவாக, 2 தெச. 1:7-10ல் உள்ள "அழிவு" என்ற வார்த்தையானது வாதைகள் என்பதற்குச் சமமானதாக உள்ளது. குற்றம் செய்தவர்கள் நிரந்தரமான துன்பத்தில் இருப்பார்கள், ஆனால் அவர்கள் ஒருபொழுதும் அழிக்கப்பட மாட்டார்கள்.*

*''மரணம்'' என்பது பிரிவு என்று விவரிக்கப்படுகின்ற பொதுவான கருத்தானது தன்னில் சில சத்தியம் கொண்டதாக உள்ளது. உண்மையில் மரணம் என்பது உயிரற்ற நிலையாக உள்ளது. தேவ கோபாக்கினையினால் பாதிக்கப்பட்டவர்கள் அவருடைய சமூகத்திலிருந்து பிரிக்கப்பட்டு மரணம் ("இரண்டாம் மரணம்"; வெளி. 20:14) என்று அழைக்கப்படப் போதுமான அளவு பெருந் துக்கமாக உள்ள நித்திய அக்கினியில் துன்பப்படுவார்கள், ஆனால் இது சொல்லர்த்தமாக மரணம் என்று இருப்பதில்லை. குற்றவாளிகள் இன்னமும் உயிருடன் இருப்பார்கள். அவர்கள் (வெளி. 9:6ல் உள்ளவர்கள் போன்றவர்கள்) சந்தேகமின்றி நரக நெருப்பிலிருந்து ஒரு விடுதலை என்ற வகையில் மரணத்தைத் தேடுவார்கள், ஆனால் மரணமானது அவர்களை விட்டு ஓடும்.*

குறிப்புகள்

*[1]இன்னும் ஆழமான கற்றல் ஒன்றுக்கு இன்றைக்கான சத்தியத்தின் "கடைசி விஷயங்கள்" என்ற இதழில் (ஜன. 1998) உள்ள "இயேசுவின் மறுவருகை" மற்றும் "இயேசுவின் மறுவருகை பற்றிய கள்ள உபதேசங்கள்" என்ற தலைப்பில் உள்ள* Owen Olbricht *அவர்களின் பாடங்களைக் காணவும். [2]கண்ணால் காணப்படக் கூடிய அளவில் உள்ள (கர்த்தரின்) இரு வருகைகளுடன் - அவரது பிறப்பு மற்றும் அவரது இரண்டாம் வருகை ஆகியவற்றுடன் - குழப்பிக் கொள்ளாதபடிக்கு காணப்பட முடியாத மூன்று "வருகைகள்" உள்ளன: (1) சபை நிலைநாட்டப்பட்ட பொழுது (மத். 10:23; 16:28ஐக் காணவும்); (2) எருசலேமின் அழிவு (1 பேது. 4:7; யாக். 5:7; மத். 26:64ஐக் காணவும்); மற்றும் (3) ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் (யோவா. 14:23; பிலி. 4:5). காணக்கூடிய அளவில் உள்ள (இயேசுவின்) இரண்டாம் வருகையானது பொதுவாக "இரண்டாம் வருகை" என்று அழைக்கப்படுகின்றது. இது அவருடைய parousia எனப்படுவதுடன், இந்த எதிர்கால நிகழ்வானது அவருடைய apokalupsis ("வெளிப்படுத்துதல்"; 2 தெச. 1:7-10; 1 பேது. 1:3-13); அவரது epiphaneia ("தோற்றம்"; 1 தீமோ. 6:14); மற்றும் he hemera kuriou ("கர்த்தருடைய நாள்"; 2 தெச. 2:2) என்றும் அழைக்கப்படுகின்றது. வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவரது parousia, அவரது apokalupsis மற்றும் அவரது epiphaneia ஆகியவை he hemera kuriouக்காக கால அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன (1 கொரி. 1:7, 8; 2 தெச. 2:1, 2, 8). [3]கர்த்தருடன் இருக்கச் செல்லுதலை ஒருவர் பரவச நிலை என்று விவரிக்கலாம், ஆனால் அது பவுலைப் பொறுத்தமட்டில் ஏழு ஆண்டுக் காலமாய் இராமல், கர்த்தருடன் "என்றென்றும்" இருத்தல் என்பதாகவே உள்ளது (1 தெச. 4:17).* [4]Tertullian *On the Resurrection of the Flesh* 24. Alexander Roberts and James Donaldson, eds., *The Ante-Nicene Fathers: Translations of the Writings of the Fathers down to A.D. 325,* rev. and arr. A. Cleveland Coxe (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957). [5]Tertullian *Apology* 32.

*Parousia (1 தெச. 2:19; 3:13; 4:15; 5:23; 2 தெச. 2:1, 8) என்ற வார்த்தையானது "பக்கத்தில் இருத்தல்" என்று அர்த்தப்படுகின்ற கூட்டு வார்த்தையாகும். எனவே ''பிரசன்னம்'' என்பதே மிகச் சரியான மொழி பெயர்ப்பாக உள்ளது (பிலி. 2:12; 2 கொரி. 10:10). பிரசன்னமாகுதலுக்கு வருகையொன்று அவசியமாய் இருந்தால், parousia என்பது "வந்து சேருதல்" அல்லது "வருகை" அல்லது "வருதல்" என்று அர்த்தப்படலாம். தீத்து பவுலிடம் வந்தது parousia (2 கொரி. 7:6) என்று அழைக்கப்படுகின்றது. பாவ மனுஷன் வந்து சேருதல் parousia (2 தெச. 2:9) என்று அழைக்கப்படுகின்றது. பெத்லகேமில் இயேசு வந்ததும் (2 பேது. 1:16) மற்றும் உலக முடிவில் அவரது வருகையும் (1 கொரி. 15:23) கூட அவரது parousia என்ற குறிப்பிடப்படுகின்றன.*

# ஒரு அறிமுகம்

*நாம் ஒன்றுகூடிப் படிக்கையில், நசரேயனாகிய இயேசு தேவனுடைய குமாரன் என்றும் குமாரனாகிய தேவன் என்றும் நாம் காண்போம். இது நிச்சயிக்கப்பட்ட ஒரு முடிவு போலக் காணப்படலாம், ஆனாலும் இந்தப் பூமியில் உள்ள பல கோடிக் கணக்கான மக்களில் திரளானவர்கள், இயேசு தெய்வீகமானவர் என்ற கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளாதிருப்பது திகைப்படைய வைக்கிறது. மதரீதியான பின்வரும் புள்ளியியல் கணக்கீட்டைக்*[1] *கவனியுங்கள்:*

| | | |
|---|---|---|
| *கிறிஸ்துவில் விசுவாசமுள்ள மதங்கள்* | *33.5%* | *187 கோடி* |
| *கிறிஸ்துவில் விசுவாசமற்ற மதங்கள்* | *45.7%* | *255 கோடி* |
| *நாத்திகம் மற்றும் மதமற்ற நிலை* | *20.8%* | *116 கோடி* |
| *மொத்த மக்கள் தொகை* | | *558 கோடி* |

*இந்தப் புள்ளியியல் விபரமானது இயேசுவின் தெய்வீகத்தைக் கூர்மையான ஒருமுகப் படுத்துதலுக்குக் கொண்டு வருகின்றது. இவை கருத்துள்ள சில வினாக்களையும் எழுப்புகின்றன: கோடிக் கணக்கான மக்கள் இயேசுவின் வரலாற்றை ஏன் அறிவதில்லை? அவர்கள் அவரைப் பற்றி ஏன் கேள்விப் படுவதில்லை? இந்த வினாக்களுக்கான முக்கிய விடைகள் யாவும் உலகளாவிய சுவிசேஷத்துவ மற்றும் ஊழியப் பணிகளில் உள்ள குறைபாட்டிலேயே அமைந்துள்ளன.*

*இந்தப் பாடத்தில் நாம் கடும் முயற்சி செய்ய வேண்டிய அறைகூவலை அடுத்துவரும் இருகேள்விகள் நமக்குத் தருகின்றன: (1) இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்ற பலர் அவரை ஏன் விசுவாசிப்பதில்லை? (2) அவரை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொள்ளுகின்ற பலர் அவரை ஏன் குமாரனாகிய தேவன் என்று ஏற்றுக் கொள்ளுவதில்லை?*

*இந்த வினாக்களுக்கான விடைகள் நபருக்கு நபர் மாறுபடும். சிலர் மேம்போக்கானவர்களாய் இருப்பார்கள், ஆனால் மற்றவர்களோ அதற்கு அப்பால் சென்று, குழப்பத்தினால் கொண்டுவரப்பட்ட பெரும் மனவேதனையை வெளிப்படுத்துவார்கள். இயேசுவைப் பற்றிய இந்தக் குழப்பமானது தவறான அல்லது காலத்திற்கு ஒவ்வாத போதனைச் செயல்*

முறையில் இருந்து விளைந்ததாக இருக்கலாம். சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஜிம் ஜோன்ஸ்[2]ஸின் மார்க்கக் குழுவின் பரிதாபமான முடிவுகள் போன்ற சில நிகழ்வுகள் கிறிஸ்துவின் சத்தியத்தைப் பற்றி வேறு வகையில் கேள்விப்பட்டிருந்தால் இயேசுவைப் பற்றித் தெளிவான, பகுத்தறிவுக் கேற்ற மற்றும் இயேசுவின் போதனைகளில் உள்ள கருத்துக்கள் பற்றிச் சரியான ஒரு முன்னிறுத்தல் பெற்றிருக்கக் கூடிய பல மக்களிடத்தில் தேவபக்தியற்ற தன்மையை இயல்பாகவே எழுப்பி விடுவதாயிருக்கின்றன.

பலர் இயேசுவில் விசுவாசம் கொள்ளவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ போகாமற் செய்கின்ற இன்னொரு காரணம் நாம் அவருடைய தனித்தன்மையை விளங்கப் பண்ணுவதில் பெற்றிருக்கும் சிரமமாய் இருக்கலாம். நாம் இயேசுவில் விசுவாசம் உள்ளவர்களாய் இருக்கலாம். அவரை மற்றவர்கள் நம்பச் செய்யும் நமது முயற்சிகளில் நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கலாம். இருப்பினும், இயேசுவைப் பற்றிய நமது கருத்தானது தெளிவற்றதாகவோ அல்லது ஆழமற்றதாகவோ இருக்கலாம். அவரைப் பற்றிய கடினமான கேள்விகளில் நாம் இடர்ப்பாடு அடையலாம். இயேசுவில் உள்ள நமது விசுவாசமானது விசேஷமாக, நேரடியாக அடையப் பெறாததாக, இன்னொருவர் மூலம் பெற்றதாக இருந்தால், அவநம்பிக்கையின் துளைக்கும் கேள்விகளுக்கு பதில் தரப் போதிய அளவு ஆழமானதாய் இராமல் இருக்கலாம். இது நாம் நமது விசுவாசத்தை மறுத்து விடுவோம் என்று கூறுவதற்கல்ல. நாம் நமது விசுவாசத்திற்குப் போதிய ஆதாரமூலங்களோ அல்லது பக்குவமோ இல்லாமல் இருப்பதால் இயேசுவைப் பற்றிய பதில்களைத் தேடிக் கொண்டிருப்பவரின் வாழ்வில் உள்ள வெற்றிடத்தை நம்மால் நிறைக்க முடியாமல் போகின்றது.

இதைக் கவனியுங்கள்: நீங்கள் உங்கள் நண்பரிடத்தில் அடுத்துவரும் ஞாயிறு அன்று உங்களுடன் ஆராதனையில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்வதற்கான தைரியத்தை வேண்டிப் பெற்றுள்ளீர்கள். ஒருவேளை உங்கள் நண்பர், “சமீபத்தில்தான் நான் தேவனிடத்தில் திரும்பி அவரை ஆராதித்தல் பற்றி நிறையச் சிந்தித்துள்ளேன். இருப்பினும், கிறிஸ்தவர்களாகிய நீங்கள் மூன்று தேவர்களைப் பெற்றிருக்கின்றீர்கள். நான் மத விஷயங்களில் ஒரு தெய்வக் கொள்கையுடன் இருக்கின்றேன். ஒரு தெய்வத்தையே நான் நம்புகின்றேன். மூன்று தேவர்களில் நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையை நான் ஏற்றுக் கொள்ள முடியாது” என்று கூறுகிறார் என வைத்துக் கொள்வோம். உங்கள் பதில்செயல் என்னவா யிருக்கும்? நீங்கள் எப்படிப் பதில் அளிப்பீர்கள்? நீங்கள் கூறுவது எதுவோ அதை நீங்கள் எப்படி சரி பார்ப்பீர்கள்?

இது உங்களுக்கு ஒரு பிரச்சனையை முன் வைக்குமென்றால், நீங்கள் தனியாக இருப்பதில்லை. உண்மையில் இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் இருந்த சபையானது தேவனாகிய பிதாவையும் மற்றும் தேவனாகிய குமாரனையும் பற்றிய, ஒரு தெய்வக் கொள்கையில் எப்படி கிறிஸ்தவம் நிலைத்து நின்றது என்பதை யூதர்களுக்கும், புறதெய்வ விக்கிரகாராதனைக்காரர்களுக்கும் விளக்கப்படுத்துவதில் இடர்ப்பாடு

அடைந்திருந்தது.

தேவனைப் பற்றிய நமது கருத்தானது நமது மதத்தைப் பற்றி நிறைவாகத் தீர்மானிப்பதால், தேவனாகிய குமாரன் என்ற நமது இந்தப் பரிசீலனைக்குச் சேர்ந்து கொள்ளும்படி நாங்கள் உங்களை நேர்மையாய் அழைக்கின்றோம். பிதாவாகிய தேவன் மற்றும் குமாரனாகிய தேவன் ஆகிய கருத்துக்கள் உள்ளடங்கிய தனது ஒரு தெய்வக் கண்ணோட்டத்தைக் கிறிஸ்தவமானது மற்ற மக்கள் நம்பும்படி செய்ய வேண்டும் என்ற பொறுப்பை ஆதிசபை உணர்ந்திருந்தது. அவர்கள் அவ்விதம் உணர்ந்திருக்கவில்லையென்றால், கிறிஸ்தவமானது அதன் சத்தியத்தை, வல்லமையை, தனித்தன்மையை மற்றும் இசைவான தன்மையை இழந்திருக்கும்.

---

குறிப்புகள்

[1]*The World Almanac and Book of Facts*, 1995 ed., s.v.“Religious Information.” [2]ஜிம் ஜோன்ஸ் தனது சமயச் சட்டம் அல்லது மதத்தின் பெயரினால் மக்கள் குழு ஒன்றைத் தற்கொலை செய்து கொள்ளும்படியாக வழிநடத்தினார்.

# பிரிவு I:

# திரு அவதாரத்திற்கு முன்பு

*இயேசுவை அவர் இப்பூமியில் செய்த ஊழியத்தின் பாங்குகளில் நினைத்துப் பார்க்கும் மனப்பாங்கு உள்ளவராக ஒருவர் இருக்கின்றார். இந்த ஆண் குழந்தையானது சாதாரணமாய்ப் பிறந்தது அல்ல என்பதை காபிரியேல் தூதனால் கூறப்பட்ட அறிவிப்பு நமக்கு நினைவூட்டுகின்றது. அவரது பிறப்பானது தேவனுடைய மேசியா வந்து சேர்ந்திருந்தார் என்ற நற்செய்தியுடன் இணைக்கப்பட்டிருந்தது. அது தேவனுக்குத் துதியும் மகிமையும் செலுத்தும் நிகழ்ச்சியாக இருந்தது. அவரது பிறப்பைச் சுற்றிலும் நடந்த எல்லா விபரங்களும் சிந்தையில் வருகின்றன.*

*அது ஞானிகள் தங்களைக் காட்டிலும் ஞானமான ஒருவருக்கு வழிபாடு செலுத்திய வேளையாய் இருந்தது. அவர் சிறு பையனாய் இருந்த போது தேவாலயத்தில் தமது கேள்விகள் மற்றும் பதில்களால் யூதத்துவத்தின் வல்லுநர்களை ஆச்சரியப்படச் செய்த நிகழ்ச்சி என்ற ஒரு சிறு கண்ணோட்டமானது அவரது இயற்கையான ஞானத்தை நமக்கு வெளிப் படுத்துகின்றது. அவர் குழந்தைப் பிராயத்திலிருந்து மனிதனாய் வளர்ந்தது பற்றிய அவரது மனிதத்துவ வளர்ச்சியின் சுருக்கமான கூற்றொன்று அவர் ஞானத்திலும், தேவனுடைய கிருபையிலும் மற்றும் மனிதருடைய தயவிலும் வளர்ந்ததை வலியுறுத்துகின்றது.*[1]

*இயேசுவின் ஞானத்தைப் பற்றிய இந்த வலியுறுத்தலின் மறைமுகமான கருத்தை நாம் எப்பொழுதாவது ஆழமாய்ச் சிந்தித்திருக்கின்றோமா? அவரது சொந்த ஊழியத்தின் ஆரம்பத்தில் அவரது ஞானஸ்நானமானது "எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்காகப் பெறப்பட்டது" என்று அவர் கூறியபோது அவருக்கிருந்த மிகமேன்மையான உட்கண்ணோட்டத்தை நாம் பற்றியிருக்கின்றோமா? சாத்தான் மூலம் தரப்பட்ட சோதனைகள் எல்லாவற்றையும் எதிர்த்து நிற்க அவரது வழிமுறை மற்றும் திறமையானது அவர் தம் அற்புதமான அறிவையும் தேவனுடைய வசனத்தை உடனடியாகப் பயன்படுத்தியதையும் கொண்டதாகும் என்று நாம் கவனித்திருக்கின்றோமா? இயேசுவின் மலைப்பிரசங்கத்தில் விளக்கப்பட்ட அவரது மிக மேன்மையான ஞானத்தினால் - மனிதத் திறனுக்கு மேலாக எழும் ஞானத்தினால் - நாம் வியப்பை எய்தியிருக்கின்றோமா? ஆம்! இயேசுவின் ஞானமானது அவரது ஒவ்வொரு வார்த்தை, செயல்பாடு மற்றும் எண்ணப்போக்கு ஆகியவற்றில் ஒளிர்கின்றது!*

*இயேசுவின் இந்த ஞானத்தினுடைய செயல் விளக்கமானது தவிர்க்க முடியாதது ஆகும். தண்ணீரானது ஈரமாய் இருப்பதிலிருந்து நீங்கிப் போக முடியுமா? நெருப்பானது சூடாய் இருப்பதில் இருந்து நீங்கிப் போக முடியுமா? தேவன் ஞானமாய் இருப்பதில் இருந்து நீங்கிப் போக முடியுமா? "இல்லை" என்பதே இந்தக் கேள்விகளுக்குப் பதிலாகும்! தண்ணீர் ஈரமாய் இருப்பதும், நெருப்பு சூடாய் இருப்பதும் அவைகளின் இயல்பான தன்மையாகும். ஞானமாய் இருப்பது என்பதும் தேவனுடைய இயல்பு ஆகும். நித்தியம் மற்றும் காலம் யாவற்றிலும் தேவன் மதியீனமான செயல் ஒன்றையாகிலும் செய்ததில்லை அல்லது மதியீனமான வார்த்தை ஒன்றையாகிலும் கூறியதில்லை.*

*திருத்துவத்தைப் பற்றிய நமது பாடத்தை தொடருகையில் இயேசு - குமாரனாகிய தேவன் - நம்முடைய உலகத்தில் அவருடைய பிறப்புக்கு முன்னும் கூட எவ்விதம் பிதாவின் ஞானத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்தினார் என்று காண்போம்.*

---

*குறிப்புகள்*

*[1]இவைகள் இயேசுவின் வாழ்வு பற்றிய கூற்றிற்குக் குறிப்புகளாகும்: மத். 2:1, 2, 11; 3:13-15; 4:1-11; லூக். 1:19; 2:11, 13, 14, 42-47, 49, 52.*

# பிதாவின் ஞானமென்ற வகையில் குமாரன்

*குமாரனுடைய ஞானத்தை முழுமையாக மதிப்பதற்கு, நாம் முதலில் அவரை பிதாவின் ஞானம் என்ற வகையில் காண வேண்டும். பிதாவின் ஞானமானது படைப்பில் நமக்கு முதலில் வெளிப்படுத்தப்பட்டது. முடிவற்றதில் இருந்து தேவனுடைய வெளிப்பாடான/விளக்கமான குமாரனாகிய தேவன் வந்து அகிலத்தையும், நமது உலகத்தையும் மற்றும் காலத்தையும் இருக்கச் செய்தார்.*

## புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டுள்ள வகையில்

தேவன் "முதலில்" வெளிப்படுத்தியதை நன்கு புரிந்து கொள்வதற்காக, அவர் "கடைசியாக" வெளிப்படுத்தியதை ஆராய்ந்து பார்த்து அதன் மூலம் தொடக்கத்திற்கு முன் இருந்தது என்ன என்பதை நாம் அடைவோம். இதை நாம், படைப்பிற்கு முன்பு இயேசு தேவனுடைய ஞானம் என்ற வகையில் இருந்ததற்கான புதிய ஏற்பாட்டுக் கோட்பாட்டை ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் செய்வோம்.

புதிய ஏற்பாடானது, காலம் தொடங்கு முன்பே தேவனுடைய ஞானம் இருந்தது என்றும், அந்த ஞானமானது சிலுவையில் அறையப்பட்ட "மகிமையின் கர்த்தரில்" இருந்து பிரிக்க முடியாததாக இருந்தது என்றும் சுட்டிக்காட்டுகின்றது:

> அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகின்றோம்; இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தை யுமல்ல, உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகின்றோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார் களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைய மாட்டார்களே. எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணியவைகளைக் கண் காணவு மில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர்

> *எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந் திருக்கின்றார் (1 கொரி. 2:6-10).*

*அப்போஸ்தலிக்க யுகம் தொடங்கும் வரையிலும் இந்த வியப்பூட்டும் சத்தியமானது அறியப்படாதிருந்தது, ஏனென்றால் இது கடந்த காலத்தில் தேவனுடைய "மறைக்கப்பட்ட" "இரகசியமாய்" இருந்தது. வெளிப் படுத்தப்பட்ட இரகசியமானது நமக்கு அதிசயத்தின் பலகணிகளைத் திறந்து வைத்துள்ளது. மேற்கண்ட வேதவசனப் பகுதியானது முற்காலத்திலிருந்து கிறிஸ்துவின் சிலுவைக்கு நீட்டிக்கப்பட்ட ஒரு பாலத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. இந்தப் பாலமானது இதன் "மாபெரும் திறப்பு நிகழ்ச்சியை" பெற்றிருந்த பொழுது தேவனுடைய ஞானமானது இயேசுவில் உறுதியாய் ஏற்படுத்தப்பட்டது.*

*தேவனுடைய ஞானம் என்ற வகையில் இயேசுவைப் பற்றிய மற்ற அடையாளப் படுத்துதல் கொலோசெயருக்குப் பவுல் எழுதிய நிருபத்தில் சுட்டிக்காட்டப்படுகின்றது. கிறிஸ்துவின் நபர்த்துவம் மற்றும் ஊழியம் ஆகியவற்றைக் குறைத்து மதிப்பிடும் "ஞானம்" ஒன்றைப் பரிந்துரைத்த போதகர்களால் அவர்கள் இடர்பாடு அடைந்திருந்தார்கள், விசேஷமாக அப்போதனையானது படைப்பு மற்றும் மீட்பில் அவரது பணியைக் குறைத்து மதிப்பிட்டது.[1] பவுல், இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய இரகசியமானது "அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" (கொலோ. 2:3) என்று வலியுறுத்தியதன் மூலம் அதற்குப் பதில் அளித்தார்.*

*கிறிஸ்துவைப் பற்றிய இந்த வழியைப் பவுல் பேசும் பொழுது, அவர், கிறிஸ்து தேவஞானத்தின் கருவூலமாக மட்டும் இருந்தார் என்று கூறவில்லை. அவர் தேவன் என்ற வகையில் இயேசு இப்பொழுது முழுமையாக வெளியான தேவஞானமாயிருக்கின்றார் என்று அறிவித்தார். ஏற்கனவே பவுல், கிறிஸ்துவைத் தேவனுடைய ரூபமாயிருக்கின்றவர் என்று அறிவித்திருந்தார். கூடுதலாக அவர், தேவகுமாரன் படைப்புக்கு முன்னிருந்த நிலையை வலியுறுத்தினார். வேதாகமம் முழுவதிலும் கிறிஸ்துவை மிகவும் மேன்மைப் படுத்தும் வசனப் பகுதிகளில் ஒன்றான கொலோ. 1:16, 17அ - வில் அவர் பின்வருமாறு கூறினார்:*

> *ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துகளும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், ...*

*தேவனுடைய படைப்பின் ஞானமாகக் கொலோசெயரில் விவரிக்கப்பட்டுள்ள குமாரன் தேவனுடைய குமாரனாக மட்டும் இல்லை; அவர் குமாரனாகிய தேவனாகவே இருக்கின்றார். "ஏனென்றால்,*

*தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் [கிறிஸ்துவுக்குள்] வாசமாயிருக்கிறது'' (கொலோ. 2:9). Pleroma ("பரிபூரணம்") என்ற கிரேக்க வார்த்தை கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில் இதற்கு முன்னும் காணப்படுகின்றது: "சகல பரிபூரணமும் அவருக்குள்ளே [கிறிஸ்துவுக்குள்ளே] வாசமாயிருக்கவும் ... அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோ. 1:19, 20).*

*வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், தேவனுடைய சாராம்சம் கிறிஸ்துவுக்குள் தங்கியுள்ளது. தேவனுடைய சாராம்சம் ஆவியான வரேயாவார் (யோவா. 4:24). புதிய ஏற்பாட்டில் கிரேக்க வார்த்தையான theotes என்பது தோன்றும் ஒரே இடம் கொலோ. 2:9 ஆகும். தேவனின் முழுமைத்துவத்தில், தெய்வீகத்தின் முழு இயல்பு (சாராம்சம்) கிறிஸ்துவில் காணப்படுகின்றது. இது கொலோசெயர் நிருபத்தின் சந்தர்ப்பப் பொருளில் வரலாற்று இயேசுவை உள்ளடக்குகின்ற ஒரு நித்திய உறவு ஆகும்.[2]*

## *மீட்பில் பிரதிபலிக்கப்பட்டுள்ள வகையில்*

*இயேசுவைத் தேவனுடைய ஞானம் என்று கருதுவது நமது வழக்கமான தொடக்க நிலையல்ல. நம்மில் பலர் இயேசு தேவனுடைய குமாரன், அவர் நபர்த்துவத்தில் பிதாவாகிய தேவனுடைய அன்பு, இரக்கம் மற்றும் கிருபை ஆகியவற்றை வெளிப்படுத்தினார் என்றே முதலாவது அறிமுகப்படுத்தப் பட்டோம். பிதாவினுடைய அன்பின் அளவானது, நமது மீட்புக்காக அவர் தம் குமாரனைச் சிலுவையில் ஒப்புக் கொடுத்ததில் செயல் விளக்கப் படுத்தப்பட்டது. எனவே, நாம் இயேசுவிடம் சரணடைகின்ற பொழுது, அவரை மரித்தோரில் இருந்து எழுப்பிய தேவனுடைய வல்லமையில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலம் நாம் எழுப்பப்படுகையில் அவர் நம்முடைய இரட்சகராகின்றார். இதுவே கிறிஸ்துவின் சுவிசேஷம் என்ற நற்செய்தியாக உள்ளது. கிறிஸ்துவைப் பற்றி நாம் மேலும் நோக்கும் பொழுது, அவர் நமக்குத் தேவனுடைய அன்பு, இரக்கம் மற்றும் கிருபை ஆகியவற்றிற்கு மேலானவைகளைக் காட்டுகின்றார் என்று நாம் காண்கின்றோம். அவர் நமக்குத் தெளிவாக்கப்பட்ட தேவஞானமாகவும் இருக்கின்றார்.*

*பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதிய பொழுது, பலர் சரியான இடத்தில் நோக்காததினால் தேவஞானம் அவர்களுக்கு உறுதிப்படுத்தப்படவில்லை என்பதை நினைவூட்டினார். யூதர்கள் அடையாளங்களில் மோகம் கொண்டிருந்தார்கள். அவர்கள் அற்புதங்களைக் காண விரும்பினார்கள் (மத். 12:38, 39). கிரேக்கர்கள் ஞானத்தைத் தேடினார்கள், ஆயினும் பெரும்பாலும் தத்துவம் என்ற ஊடகத்தில் மூலமாகவே அவர்கள் அதைத் தேடினார்கள், அதைப் பவுல் ''உலக ஞானம்'' என்று விவரித்தார். இந்தப் பின்னணியில் ''நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; ... கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமு மாயிருக்கின்றார்" (1 கொரி. 1:23, 24) என்று பவுல் கூறினார். இவ்விதமாக, நமக்கான தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் மூலமாக "கிறிஸ்துவே*

*தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்" (1 கொரி. 1:31). ஆகையால் குமாரனானவர் தமது மீட்பின் ஊழியத்தில் பிதாவின் ஞானத்தைப் பிரதிபலிக்கின்றார்.*

## படைப்பில் காட்சிப்படுத்தப்பட்ட வகையில்

*தேவன் ஒருபொழுதும் ஒரு மதியீனமான செயலைச் செய்ததில்லை அல்லது ஒரு மதியீனமான வார்த்தையைக் கூறியதில்லை, ஏனென்றால் அவர் எல்லையற்ற அறிவுள்ளவராக, எல்லாம் அறிந்தவராக இருக்கின்றார். எல்லா வல்லமையும் நிறைந்தவராய் இருக்கும் அவரது இயல்பைப் போலவே அவர் எல்லா ஞானமும் உள்ள இயல்புடையவராகவும் இருக்கின்றார். ஆகையால், தேவனுடைய ஞானத்தை அவருடைய குமாரனாகிய இயேசுவில் காணும் போது அது நம்மை வியப்படையச் செய்யக் கூடாது. தேவனுக்குள் நித்தியத்திற்கும் படைப்பில் இருந்தே உடன் உறைந்த தேவ ஞானத்தின் தோற்றமாக (வெளிப்பாடாக) அவர் இருக்கின்றார், அது இப்பொழுது வரலாற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.*

*இப்பொழுது தேவனுடைய ஞானம் இயேசுவில் "முடிவாக்கப் பட்டுள்ளதை" கவனித்திருக்கின்ற நாம் படைப்பின் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சியை "மிகவும் பின்னோக்கி" காணுவோம். அங்கு ஞானம் இருக்கின்றது! அது நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றதா? நிச்சயமாகவே இல்லை. தேவனுடைய (சகல ஞானம் நிறைந்தவர் என்ற) கண்ணோக்கில், மற்றும் பின்னால் இயேசுவில் (புதிய ஏற்பாட்டில்) தேவ ஞானம் வெளிப்படுத்தப்பட்டதின் வெளிச்சத்தில், படைப்புக்கு முன்னதாகவே கூட ஞானத்தை நாம் கண்டால் திகைப்படையக் கூடாது.*

*புதிய ஏற்பாட்டுப் போதனைகள் இயேசுவைத் தேவனுடைய ஞானத்துடன் இணைக்கின்றன. அங்கு காணப்படும் சத்தியங்கள் தேவனுடைய ஞானம் நித்தியமாய் இருக்கிறதென்றும், அது படைப்பில் செயல்பாடுள்ளதாய் இருந்ததென்றும் காட்டுகின்றன. புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்களுடைய நோக்கில் இருந்து, நாம் காணும் தேவனுடைய நித்திய ஞானமானது குமாரனாகிய தேவனே தேவனுடைய படைப்பில் மும்முரமாய் ஈடுபட்டார் என்பதைத் தெளிவாக்குகின்றன. பரிசுத்த ஆவியானவரால் தரப்பட்ட இவ்வளவு ஆழமான உட்கருத்துக்களை மனிதரின் கண்களால் காணக் கூடிய நாம் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்களாய் இருக்கின்றோம்! அவைகளின் மூலமாக நாம், தீர்க்கதரிசிகளும் தூதர்களும் கூடப் பகுத்தறிய முடியாத சத்தியங்களைக் காண்கின்றோம் (1 பேது. 1:10-12; 2 பேது. 1:19-21). இது தேவன் "வளர்நிலை வெளிப்படுத்துதலை" நடைமுறைப்படுத்தினார் என்று அர்த்தப்படுத்துகின்றதா? ஆம், அவ்வாறே இது அர்த்தப்படுத்துகின்றது! வேதாகமத்தின் மொழியானது எதையேனும் அர்த்தப்படுத்துகிறதென்றால், அந்த அர்த்தமானது பழைய ஏற்பாட்டைக் காட்டிலும் புதிய ஏற்பாட்டில் நாம் தேவனை அதிகம் முழுமையாகக் காண்கின்றோம் என்பதேயாகும். தேவனுடைய வளர்நிலை வெளிப்படுத்துதலும், நமக்கான அவரது*

சித்தமும் வேதவசனங்களில் காணப்படுகின்றன, அவை வேதவசனங்களுக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இது இரண்டு ஏற்பாடுகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது (உபா. 4:2; 12:32; நீதி. 30:5, 6; வெளி. 22:18, 19). தேவனுடைய வெளிப்படுத்துதல் பற்றிய அவரது அக்கறை மற்றும் அவரது வசனம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டுகள் அடிக்கடி இருக்கின்றன.

தேவனால் ஏவப்பட்டுப் புதிய ஏற்பாட்டை எழுதியவர்களின் எழுத்துக்களின் மூலம், நீதி. 8:22-31ல் அதன் எழுத்தாளர் கண்டதை விட அதிகமானவற்றை நாம் காண முடியும். அவர் ஞானத்தைத் தேவன் படைப்பில் மகிமையாக, மகிழ்வு நிறைந்ததாக வெளிப்படுத்தியதைக் கண்டார். நீதிமொழிகளின் வசனப்பகுதிகளில் நாமும் அதைக் காண முடியும். பிற்பாடு புதிய ஏற்பாட்டு வெளிப்படுத்துதலின் பயனாக, நாம் ஞானத்தை தேவனுடைய இயல்பின் (சாரத்தில்) விளக்கத்தின்படி ஒரு நபராகவும் காண முடியும் - அது உணராக் கருத்தொன்றின் (ஞானத்தின்) கவிதை நபர்த்துவமாக மட்டும் இருப்பதில்லை. வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், குமாரனாகிய தேவன் படைப்பில் தேவனுடைய ஞானத்தைப் பிரதிபலிப்பதை நாம் காண்கின்றோம். ரோலாண்டு மர்ஃபி அவர்கள் தமது “ஜீவ விருட்சம்” என்ற நூலில் பின்வருமாறு கூறுகின்றார்:

> … ஞானத்தின் தொடக்கமும் அதன் அதிகாரமுடைமையும் படைப்பின் நபர்த்துவப்படுத்தப்பட்ட ஒழுங்கமைவைக் காட்டிலும் அதிகமானவற்றை ஆலோசனையாகத் தெரிவிக்கின்றன. ஞானம் ஏதோ ஒரு வகையில் கர்த்தருடன் அடையாளப்படுத்தப்படுகின்றது. ஞானம் என்ற பெண்ணின் அழைப்பானது கர்த்தருடைய குரலாய் இருக்கின்றது. அவள் தேவனுடைய வெளிப்படுத்துதலாய் இருக்கின்றாள், இயற்கையின் சுயவெளிப்பாடாக மட்டும் அவள் இருப்பதில்லை.

தேவனுடைய ஞானம் என்ற வகையில் கிறிஸ்து அந்த ஞானத்தை படைப்பிலும் உலகத்தின் மீட்பிலும் பிரதிபலிக்கின்றார். இந்த இணைவுகள் நாம் பயன்பெறும்படியாக வேதாகமத்தில் இருக்கின்றன. கிறிஸ்தவர்கள் - பவுல் உய்த்துணர்ந்தது போலவே - கிறிஸ்து தேவனுடைய ஞானமாய் இருக்கின்றார் என்பதை உய்த்துணர முடியும் (1 கொரி. 1:24).

---

குறிப்புகள்

[1]Everett Ferguson, *Backgrounds of Early Christianity* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 245-49. [2]*கொலோ. 1:20* Gerhard Delling *அவர்களின் “pleroma” என்ற பாடத்தை Theological Dictionary of the New Testament என்ற நூலில் காணவும்.*

# பிதாவின் வல்லமையென்ற வகையில் குமாரன்

*தேவனுடைய ஞானம் என்ற வகையில் கிறிஸ்துவைக் கவனிப்பதில் நாம் சற்று நேரத்தைச் செலவிட்டோம். கிறிஸ்து முன்னிருந்த நிலையானது படைப்பில் தேவனுடைய ஞானமாகப் பிரதிபலித்தது. பழைய ஏற்பாட்டு தேவ மனிதர்கள் படைப்பில் தேவனுடைய ஞானத்தைப் பற்றி மிகவும் மேன்மையான மொழிநடையில் பேசியிருந்தாலும், "தேவத்துவத்தின் இரண்டாம் நபர்" என்ற சொற்றொடர்களில் அவர்கள் ஒருபோதும் பேசியிருந்ததில்லை. இதற்கு மறுபுறம், புதிய ஏற்பாட்டில், கிறிஸ்து எல்லாக் காலத்திற்கும் முன்னதாக தேவனுடைய ஞானமாயிருக்கிறார் என்றும் அவர் படைப்பில் பங்கேற்றார் என்றும் மறைமுகமாகவோ அல்லது உறுதிப் படுத்துகின்றதாகவோ உள்ள கூற்றுக்கள் அடங்கியுள்ளன.*

*இப்பொழுது நாம் குமாரனாகிய தேவனைப் பற்றி படிப்பின் இன்னொரு பகுதிக்குத் திரும்புகின்றோம். இந்த ஆய்வானது கிறிஸ்து அவரது திரு அவதாரத்திற்கு முன் அல்லது பெத்லகேமில் அவரது பிறப்புக்கு முன் தேவனுடைய வார்த்தையாய் இருந்தார் என்ற வகையில் அடங்கு கின்றது. நமது முந்திய பாடத்தில் போலவே, நாம் புதிய ஏற்பாட்டின் பொருத்தமான வசனப் பகுதிகளுக்குச் செல்லுவோம். படைப்பில் தேவனு டைய வார்த்தையைப் பற்றிய விபரங்களைப் பெற்றுக் கொண்ட பிறகு நாம், இந்தப் பாடப் பொருள் பற்றிய போதனையைத் தேடப் பிறகு பழைய ஏற்பாட்டிற்குச் செல்லுவோம்.*

## புதிய ஏற்பாட்டுப் போதனை

*புதிய ஏற்பாட்டில் நாம், மத்தேயு மற்றும் லூக்காவின் பொழிப்புரைச் சுவிசேஷங்கள்[1] இயேசுவின் பிறப்பானது உலகத்திற்குத் தேவனுடைய சொந்தமான வருகையைப் பிரகடனப் படுத்தியது என்பதை வலியுறுத்த விரைகின்றன என்று காண்கின்றோம். மத்தேயு குழந்தை இயேசுவை இம்மானுவேல் என்று அடையாளப்படுத்துகின்றார்; அதாவது "தேவன் நம்மோடு இருக்கின்றார்." லூக்கா அவரை "தேவனுடைய குமாரன்" என்று கூறுகின்றார். இவ்விரு புத்தகங்களுமே கிறிஸ்து என்ற குழந்தையைப் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து கன்னி மேரி கர்ப்பத்தில் தாங்கியது பற்றிப் பேசுகின்றன (மத். 1; லூக். 1).*

***"ஆதியிலே"***

*யோவான் சுவிசேஷமானது ஒரு மாறுபட்ட அணுகுமுறையை*

எடுத்தாளுகின்றது. இதன் முன்னுரையானது (யோவா. 1:1-18) இயேசுவின் பிறப்பு பற்றிய விபரங்களைக் கையாளுவதில்லை. மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோர் தருவது போன்ற வம்சா வழி விபரங்கள் இதில் இல்லை (மத். 1; லூக். 3). அதற்குப் பதிலாக, சிந்தையைத் தயங்க வைக்கும் தொடக்கக் கூற்று ஒன்று அங்குள்ளது! யோவான் 1:1 ஆனது, கால இடைவெளியினூடே எதிரொலிக்கும் ஒரு சொற்றொடருடன் தொடங்குகின்றது: "ஆதியிலே" (En arche = "ஆதியிலே"). நாம் உடனடியாக ஆதியாகமம் 1:1ஐப் பற்றி நினைக்கின்றோம் (Bre'shith ="ஆதியிலே" " In [the] beginning")[2]

"ஆதியிலே" என்ற சொல்லை நாம் மீண்டும் மீண்டும் கூறுவோமாக. நாம் அப்படிச் செய்தால், உடனடியாக ஒரு கேள்வி எழுகின்றது: "எந்த ஆதியிலே?". ஆதி. 1:1 மற்றும் யோவா. 1:1 ஆகிய இரு சொற்றொடர்களை மட்டுமே வேதாகமத்தில் தேவனைப் பற்றியதாக நாம் பெற்றிருந்தால், அந்த எழுத்தாளர்கள் தேவனின் தொடக்கத்தைப் பற்றிப் பேசினார்கள் என்று நாம் சுலபமாய் முடிவு செய்து விட முடியும். இருப்பினும், தேவன் நித்தியத்திற்கும் இருக்கின்றார் என்பது வேதவசனங்களின் முக்கிய ஆய்வுப் பொருள்களில் ஒன்றாக உள்ளது. ஆகையால் நாம் இந்த இடத்தில் வேதாகம விளக்கம் தருவதில் மிகச் சிறந்த விதிகளில் ஒன்றைப் பயன்படுத்துகின்றோம்: தெளிவற்ற வசனப் பகுதி ஒன்றை அதே பாடக் கருத்தைப் பற்றி தெளிவாகப் போதிக்கும் வேதவசனப் பகுதி இன்னொன்றுக்கும் முரண்பட்ட வகையில் ஒருபொழுதும் விளக்கம் தராதீர்கள். இவ்விதமாக ஆதி. 1:1 மற்றும் யோவான் 1:1 ஆகிய வசனப் பகுதிகளில் உள்ள "ஆதியிலே" என்பது தேவன் இருத்தலைப் பற்றியல்ல அவரது படைப்புப் பணியையே குறிக்கின்றது என்று நாம் முடிவு செய்கின்றோம். ஆகவே, "the" என்ற சுட்டுச் சொல்லானது ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் இடைச் செருகப் பட்டதாகும்.

ஆதி. 1:1, "தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார்" என்று கூறுகின்றது. இது படைப்பைப் பற்றிய சுருக்கமானதொரு மேல் கூற்றாகக் காணப்படுகின்றது. இது படைப்பின் திறப்புச் செயலினால் பின்பற்றப் படுகின்றது. இருப்பினும், படைப்புச் செயல்பாடுகளிலும், படைப்பு முழுவதிலும் தேவனுடைய உறவானது உள்ளடக்கம் பெற்றுள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

யோவான் 1:1-3, படைப்பில் கிறிஸ்து செய்தது என்ன என்பதற்கு ஒரு ஆச்சரியமான கூற்றாகும்:

> ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத் திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.

வார்த்தை தேவனாயிருந்தது; வார்த்தை தேவனிடத்திலிருந்தது. சகலமும் அவர் மூலமாகவே உண்டாக்கப்பட்டது. இங்கு நாம், அடையாளப் படுத்துதல், உறவுமுறை மற்றும் செயல்பாடு ஆகியவற்றைப் பெறுகின்றோம். இந்தச் சுருக்கக் கூற்றில் நாம் முரண்பாடு போலத்

*தோன்றும் மெய்யுரையொன்றைப் பெறுகின்றோம்: தேவனுடைய எளிமைத்துவத்தைப் பெரும் சிக்கல் சூழ்ந்துள்ளது.*

**"Logos"[3]**

*Logos (வார்த்தை) என்பது படைப்பின் தொடக்கத்தில் இருந்தது. வார்த்தையானது படைப்பின் தொடக்கத்தில் அங்கு இருந்ததால், வார்த்தையானது படைப்பு தொடங்குவதற்கு முன்னதாகவே இருந்தது. ஒரு தச்சர் தாம் முதலில் அங்கிருப்பதற்கு முன்னதாகவே வீடு ஒன்றை கட்டியெழுப்ப முடியுமா? வார்த்தையானது (படைப்புக்கு) முன்னிருந்த நிலையானது தெளிவாக இருக்கின்றது. அவர் இருந்தார். மேலும், வார்த்தை தேவனிடத்திலிருந்தது. இது உறவு முறையைப்[4] பேசுகின்றது. படைப்பின் செயல்பாட்டில் வார்த்தையின் முன்னிருந்த நிலையானது யாருடன் உறவு படுத்தப்படுகின்றது? எபி. 1:2, "... குமாரன் மூலமாய் [தேவன்] நமக்குத் திருவுளம் பற்றினார், ... இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபி. 2:9ஐயும் காணவும்). எனவே இங்கு திருஅவதாரத் திற்கு முன்பு ஒரு பிதா/குமாரன் உறவு இருந்துள்ளது. பின்னாளில், இந்தக் குமாரன் மீட்பின் ஊழியத்திற்காகத் திருஅவதாரமாய் வந்த இயேசுவே என்று குறிப்பிடுவதை நாம் காண்கின்றோம். இருப்பினும், பிதா மற்றும் குமாரன் என்ற வகையிலான தெய்வீக இருத்தலானது நித்தியமானது, இவ்விதமாக அது திரு அவதாரத்தைச் சார்ந்திருப்பதில்லை என்பதை நம் சிந்தையில் வைத்துக் காக்க வேண்டும்.*

*எபி. 1:2ல் உள்ள கூற்றானது - "குமாரன் மூலமாய் [தேவன்] நமக்கு திருவுளம் பற்றினார்'' - வார்த்தை, அவர் முன்னிருந்த நிலையில், தெய்வீகமே என்று நமக்கு அர்த்தப்படுத்துகின்றதா? தேவனுடன் குமாரத்துவம் தெய்வீகத்தை அர்த்தப்படுத்துகின்றதா? இதற்குப் பதிலானது சந்தர்ப்பப் பொருளைச் சார்ந்துள்ளது. உதாரணமாக, பவுல், ரோமர் 9:26ல் தேவனுடைய மக்கள் "ஜீவனுள்ள தேவனுடைய புத்திரர்கள்" என்பதைப் போதிப்பதற்கு ஓசியா 1:10ஐப் பயன்படுத்தினார். ஆனால் இந்தக் கூற்றுக்களில் இருந்து எவரொருவரும், தேவனுடைய ''புத்திரர்கள்'' தெய்வீகமானவர்கள் என்று முடிவு செய்ய மாட்டார்கள்.*

*இருப்பினும், திருஅவதாரத்திற்கு முந்திய வார்த்தை என்ற வகையில் தேவனுடைய குமாரன் தெய்வீகமானவராயிருந்தார் என்பதில் சந்தேகம் எதுவும் இருக்குமென்றால், நாம் எபி. 1:8அ - வை வாசிக்க வேண்டியது அவசியமாகும்: "குமாரனை நோக்கி [தேவன்]: 'தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது' " என்று கூறுகின்றார். எபிரெயரில் உள்ள மற்ற பல வசனங்களைப் போலவே இவ்வசனமும் பழைய ஏற்பாட்டிலிருந்து வந்த ஒரு மேற்கோள் ஆகும். இது சங். 45 (வ. 6)ல் இருந்து வருகின்றது. இது ஒரு எபிரெய அரசரும் அவரது மணமகளும் கொண்டாடும் திருமணத்திற்கு நாம் பயன்படுத்தும் ஒரு ராஜரீகத் திருமண சங்கீதமாகும். இந்தச் சங்கீத்தைப் பற்றிய மூன்று உண்மைகள் நமது சிந்தனையில் மையமாய் இருக்கின்றன: (1) இந்த அரசர் தாவீதின் அரச பரம்பரையைச் சேர்ந்தவர் என்பது உறுதி. (2) தாவீது அல்லது அவரது வம்சா*

*வழியினரில் எவரொருவரிலும் இந்தச் சங்கீதமானது ஒரு பகுதி நிறைவேற்றத்தையே காண்கின்றது. (3) எபிரெயருக்கு நிருபம் எழுதிய புதிய ஏற்பாட்டு எழுத்தாளரால் இதன் மேசியாத்துவப் பயன்பாடானது திகைப்பிற்குரிய வழியில் முழு வலிவுடன் கொண்டு வரப்படுகின்றது! எபிரெயர் நிருபத்தில், சங். 45:6, 7 வசனப் பகுதியானது தாவீதின் அரச பரம்பரையில் வந்தவருடைய - மேசியாவினுடைய - மிக உன்னதமான நிறைவேறுதலுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இது பிதாவாகிய தேவனால் நேரடியாகக் கூறப்பட்டதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது (வ. 5), அவர் மகனை (வ. 8), தேவனே (தெய்வீகத்துவமானவர்) என்று இதில் அழைக்கின்றார்![5]*

*ஆகையால், யோவான் 1:1-3ல் பேசப்பட்ட தேவன் மற்றும் வசனம் ஆகியவர்களுக்கிடையில் உள்ள உறவானது உண்மையில் ஒரு பிதா/குமாரன் உறவென்று நாம் காண்கின்றோம். இது பிதாவும், திருஅவதாரத்திற்கு முந்திய அவரது மகனும் தெய்வீகமானவர்களே என்ற ஒரு முடிவை அவசியப்படுத்துகின்றது. ஆகையால், தேவனுடைய நித்திய பிதா/குமாரன் உறவு முறையானது உலகத்தின் படைப்பு பற்றிய ஒவ்வொரு வேதவசனப் பகுதியிலும் மறைமுகமாய்க் காணப்படுகின்றது. உண்மையிலேயே, யோவான் எழுதியபடி, "... அந்த வார்த்தை [logos] தேவனாயிருந்தது ... சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை."*

*தேவனுடைய வல்லமையே எல்லாவற்றையும் படைத்தது என்ற உறுதிப்பாடானது புதிய ஏற்பாடு முழுவதிலும் இழையோடுகின்றது. இருப்பினும், வார்த்தையின் - முன்னிருந்த நிலையில் குமாரன், குமாரனாகிய தேவன், பின்பு திரு அவதாரமானவரின் - மூலமாகவே இந்த வல்லமை வெளிப்படுத்தப்பட்டது என்பது பற்றிய முழுமையான உணர்ந்து கொள்ளுதலானது புதிய ஏற்பாட்டை முழுமைப் படுத்திய யோவானின் எழுத்துக்களில் முன்னணிக்கு வருகின்றது. இந்த முன்னேற்றத்தின் ஒரு மேற்கண்ணோட்டம் பின்வருமாறு:*

*மாற்குவின் சுவிசேஷத்தில் இயேசு படைப்பைப் பற்றி அது தேவனுடைய கிரியை என்ற வகையில் பேசினார் (மாற். 10:6; 13:19). சபையின் தொடக்க நாட்களில், தேவனே எல்லாவற்றையும் படைத்தவர் என்று சீஷர்கள் ஒப்புக் கொண்டிருந்தார்கள் (அப். 4:24). பவுல் 1 கொரிந்தியர் நிருபத்தை எழுதிய பொழுது பிதாவாகிய தேவனை "அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது" என்றும் "இயேசு கிறிஸ்துவின் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது" என்றும் பேசினார் (1 கொரி. 8:6). இவ்விடத்தில் பவுல் படைப்பின் செயல்பாட்டில் பிதாவையும் குமாரனையும் உறவுபடுத்திக் கூறினார். அவர் குமாரனை logosக்கு (வார்த்தைக்கு) உறவுபடுத்திக் கூறவில்லை. ரோமருக்கு எழுதிய நிருபத்தில், பவுல் சகலமும் அவர் மூலமாகவும் அவருக்காகவும் இருக்கிறது என்ற இயங்கும் புகழ்பாடலை வெளிப்படுத்தினார் (ரோமர் 11:36அ). பின்னாளில், எபேசியருக்கு எழுதிய நிருபமானது, "எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனை"(எபே. 3:11அ)ப் பற்றிப் பேசுகின்றது.*

*கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில் குமாரன் தேவனுடைய தற்சுரூபமானவர் என்று கூறப்படுகின்றார். அவர் தேவனுடைய முதற்பேறானவராயிருக்கின்றார்; அவர் படைப்பு அனைத்திற்கும் முந்தியவராயிருக்கின்றார், அதன் மீது ஆட்சித் தலைமை உரிமை பெற்றிருக்கின்றார், அதை நிலைப்படுத்துகின்றார். கொலோ. 1:15-17 பின்வருமாறு கூறுகின்றது:*

> *அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்தி லுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவை களுமாகிய சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத் துவங்களானாலும், துரைத்தனங்களானா லும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப் பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.*

*இவ்வசனப்பகுதியானது படைப்பில் தேவனுடைய குமாரனின் நபர்த்துவம், இடம் மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை விவரிக்கும் அளவின் உச்சத்தை அடைகின்றது. இங்கு நாம் தேவனுடைய வல்லமை காட்சிப் படுத்தப்படுவதில் வியப்பில் ஆழ்த்தும் சித்தரிப்பொன்றைப் பெறுகின்றோம். இன்னும் பிற உட்பொருள் நிறைந்த வசனப் பகுதிகளில், படைப்பானது குமாரன் மூலமாய் வந்த தேவனுடைய கட்டளையினால் உண்டாயிற்று என்பதையும், இந்தக் குமாரன் தமது வல்லமையுள்ள வசனத்தினால் எல்லாவற்றையும் தொடர்ந்து தாங்கி நிலைநிறுத்துகின்றார் என்பதையும் நாம் காண்கின்றோம்:*

> *பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகளின் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார் (எபி. 1:1-3).*
>
> *விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக் கிறோம் (எபி. 11:3).*
>
> *பூர்வ காலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும்,*

*ஜலத்தினின்று தோன்றி, ஜலத்தினாலே நிலை கொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும் (2 பேது. 3:5).*

*தெளிவாய்க் கூறப்பட்ட logosன் கருத்தானது யோவான் சுவிசேஷத்தில் காணப்பட்டபடி இவ்வசனப் பகுதிகளில் வாசிப்பதற்கு வசீகரம் உள்ளதாக இருக்கின்றது. புதிய ஏற்பாட்டை வாசிக்கத் தொடங்குகையில் நாம் வழக்கமாகச் சுவிசேஷங்களைத்தானே முதலாவது வாசிக்கின்றோம். இருப்பினும் நாள் வரிசைக் கணக்கில் பேசுகையில் யோவானின் எழுத்துக்களே புதிய ஏற்பாட்டில் கடைசியானது என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.*

*இது, புதிய ஏற்பாட்டின் இறுதியில் யோவானின் பயபக்தி நிறைந்த அறிவிப்புக்கு முன்னதாக, தேவனுடைய படைப்புப் பணியின் பெருந் திறமையினுடைய முழுமையானது திரையிடப்பட்டிருந்தது என்று அர்த்தமாகின்றது. logos/வார்த்தை, முன்னிருந்த குமாரன், குமாரனாகிய தேவன், பின்னாளில் திருஅவதாரமாய் வந்தவர் பிதாவாகிய தேவனின் ஊக்கமூட்டும் வல்லமையாக இருப்பதைக் காட்டுகின்றார். இந்த logos/ வார்த்தை என்பது இதற்கு முன் இருந்திராத அண்டம் ஒன்றை இருக்கும்படி செய்தது; இது தேவனுடைய ஆராய முடியாத ஞானம் மற்றும் வல்லமையின் முழுமைத்துவமான ஒரு காட்சிப்படுத்துதல் ஆகும்.*

## பழைய ஏற்பாட்டுப் போதனை

*பழைய ஏற்பாட்டைப் பார்க்கையில் நாம் அதிகமாய் அனுகூலம் பெற்ற மக்களாய் இருக்கின்றோம். திரையானது நமக்காகத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. தொடக்க கால வாசகர்களுக்குத் தெளிவற்ற வகையில் அல்லது மங்கலாகவே காணப்படுகின்ற (பழைய ஏற்பாட்டு வசனப் பகுதிகளில் காணப்படும்) பல சத்தியங்களை நாம் இப்பொழுது நன்கு உணர முடிகின்றது.[6] இது புதிய ஏற்பாட்டின் கூடுதலான வெளிப்படுத்துதலில் இருந்து பெற்ற அறிவூட்டுதலினால் சாத்திய மாகின்றது. இங்கு நாம் பழைய ஏற்பாட்டின் பல தீர்க்கதரிசன வசனப் பகுதிகள் பழங்கால எபிரெயர்கள் பகுத்துணராத வழிவகையில் விளக்கம் தரப்படுவதைக் காண்கின்றோம்.*

*தேவனுடைய படைப்பின் வல்லமைக்கு வரும்பொழுது பழைய ஏற்பாடானது உறுதிப்பாட்டுடனும், ஆழமான உட்கண்ணோட்டத் துடனும் பேசுகின்றது. சங்கீதங்களில் தேவன் தமது படைப்புப் பணியில் நித்திய வாசியாயிருக்கின்றார் என்று துதிக்கப்படுகின்றார் (சங். 90:2; 102:25-27). தீர்க்கதரிசன இலக்கியத்தில், தேவன் எல்லை கடந்த படைப் பாளராக, ஒருவராய் ஆளுகை செய்து, மனித குலம் முழுமையும் உட்படத் தமது படைப்பில் தம்மை ஈடுபடுத்திக் கொள்பவராக இருக்கின்றார் என்று விவரிக்கப்படுகின்றார் (ஏசா. 40:21-26; 44:24; 45:12; எரே. 10:16).*

*யேகோவா ஒரு படைப்பாளர் என்ற வகையிலான பழைய ஏற்பாட்டுக் கருத்தானது அதன் முழு கெம்பீரத்தில் உள்ளது. தேவன் எல்லா*

*வல்லமையும் நிறைந்தவராக, ராஜரீகம் செய்பவராக, எல்லை கடந்தவராக, அதே வேளையில் எங்கும் நிறைந்தவராக மற்றும் தமது படைப்பின் மீது விசேஷமாக மனித குலத்தின் மீது அக்கறையுள்ளவராக இருக்கின்றார். ஆதி. 1, 2ல் படைப்பின் விபரத்தை வாசிக்கையில் தேவனுடைய படைப்புச் செயல்பாட்டைப் பற்றிய மேன்மைப் படுத்தப்பட்ட, இவ்விளக்கங்களைக் கைக்கொள்வது சட்டப் பூர்வமானதா? ஆம் சட்டப்பூர்வமானதே.*

*தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார் என்று கூறி ஆதியாகமம் தொடங்குகின்றது. இது மற்ற எல்லாவற்றையும் தனக்குள் அடக்குகின்ற வகையிலான குடை போன்ற கூற்று ஆகும். தண்ணீர்த் திரளின் இருள் மற்றும் வெறுமையின் மேல் ஆவியானவர் அசைவாடுகையில், தேவனுடைய தூண்டுதலில் ஒளியும் ஒழுங்கு அமைப்பும் உதித்தெழுந்தது. படைப்பு பற்றிய விபரமானது தேவன், ''நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக ....'' (ஆதி. 1:26, 27) என்று கடைசியில் கூறுவதாக நாம் காணும் வரையிலும் தொடர்ந்து கட்டவிழ்கின்றது. இந்த விபரத்தின் சுருக்கமும், விரிவும் ஆதி. 2:4-25ல் தரப்பட்டுள்ளது, தேவன் மனித குலத்தைப் படைத்தது பற்றிய அதிக விபரங்கள் ஆதி. 2:7, 21, 22ல் தரப்பட்டுள்ளன.*

*ஆதியாகமத்தை மோசே எழுதுகையில் அண்டம் உதித்தெழுந்த ஒழுங்கமைவு பற்றி நாம் இன்று அறிந்துள்ளது போல் அவர் விபரங்களை அறிந்தார் என்று யூகிக்க இடம் இல்லை. மோசே தமக்கு வெளிப்படுத்தப் பட்டவைகளையே எழுதினார். அண்டத்தைப் படைப்பதில் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியானவராகிய தேவன் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பது அவருக்கு வெளிப்படுத்தப்பட்டதா? தேவனை('elohim)ப் பற்றியும் தேவனுடைய ஆவியைப் பற்றியும் (ruah 'elohim) ஆதி 1:1, 2ல் குறிப்பாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. படைப்பில் தேவனுடைய ஆவியானவரும் ஈடுபட்டிருந்ததை மற்ற பதிவேடுகளுங் கூட நமக்குக் கூறுகின்றன (யோபு 33:4; சங். 104:30). தேவத்துவத்தைப் பற்றிய மோசேயின் கருத்தைப் புரிந்து கொள்வதற்கு நாம் மூன்று கேள்விகளை நோக்குவோம்.*

*முதலாவது, "தேவனுக்கு 'elohim என்ற பன்மைப் பெயர்ச் சொல்லை மோசே பயன்படுத்தியதில் அவர் பல தெய்வக் கொள்கையைக் கண்டாரா?" இதற்குப் பதில் "இல்லை'' என்பதேயாகும். இஸ்ரவேலர் யாவருக்கும் விசுவாசத்தின் அஸ்திபாரத்தை மோசேயே ஷேமாவில் விளக்கப் படுத்தினார்: "இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்'' (உபா. 6:4). இந்த மாபெரும் உறுதிப்பாட்டில் சித்தரிப்பு தெளிவாய் உள்ளது: தேவனின் பெயருக்கு மோசே ஒரு பன்மை வடிவத்தைப் பயன்படுத்தியிருந்தாலும், உண்மையில் தேவன் ஒருவரே என்று அவர் கூறியிருந்தார். மேலும் தேவனுடைய படைப்புப் பணியை விவரிப்பதற்கு ஆதியாகமத்தின் வசனப்பகுதியில் "அவர் சிருஷ்டித்தார்'' என்று அர்த்தப்படும் bara' என்ற ஒருமை வினைச் சொல் பயன் பட்டிருக்கின்றது. இது ஒருமைத்துவச் சிந்தனையைச் சுட்டிக் காட்டுகின்றது.*

*இரண்டாவது கேள்வி, " 'நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக' என்ற கூற்றில் பன்மைப் பெயர்ச் சொல் வடிவங்களை மோசே பயன்படுத்தியதில் பல தெய்வக் கோட்பாட்டைக் கண்டாரா?" மோசே ஒரே தேவனை விசுவாசித்தார் என்று நாம் ஏற்கனவே கண்டிருக்கின்றோம், ஆனால் கேள்வியானது இன்னமும் அவர் பன்மைப் பெயர்ச் சொற்களைப் பயன்படுத்தியது பற்றிய விஷயத்திலேயே நிலைத்திருக்கின்றது. இந்த இடத்தில் வேதவசனம் என்ன கூறுகின்றது என்பதில் அல்ல, ஆனால் அது என்னத்தை அர்த்தப்படுத்துகின்றது என்பதிலேயே நாம் இடர்ப்பாடு அடைகின்றோம். மோசேக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளின் மாபெரும் அளவின்படியும், மொழி தன்னை அனுமதிக்கும் அளவின்படியும் தேவனுடைய மிக உயர்வான இயல்பை விளக்கப்படுத்தினார் என்பது சாத்தியமாகும்.*

*மூன்றாவது கேள்வி, ''நாம் குறிப்பிட்டுள்ள ஏவப்பட்ட மற்ற எழுத்தாளர்களைப் போலவே மோசேயும் உண்மையில் உணர்ந்ததை விட அதிகமானவற்றைக் கூறினாரா?" இதற்குப் பதில் "ஆம்" என்பதேயாகும். தேவத்துவத்தில் மூன்று நபர்கள் பற்றிய கருத்து எதுவும் மோசே பெற்றிருந்ததாகக் குறிப்பெதுவும் இல்லையென்றாலும், தேவன் சாரத்தில்* (Essence) *ஒருவராகவும் நபர்த்துவத்தில் மூவராகவும் காணப்படுகின்றார் என்ற பின்னாளைய வெளிப்பாட்டிற்கு இது இசைவானதாகவே உள்ளது. முடிவான சத்தியத்தின் அடிப்படையில், தேவனுடைய முழுமைத்துவம் பற்றிய வெளிப்பாடானது ஆதி. 1:26ல் உள்ள பன்மைப் பெயர்ச் சொற்களில் காணப்படுகின்றது என்று நாம் முடிவு செய்ய இயலும். வேறு விதமாய் இருப்பது மிகவும் கடினமானதேயாகும்.*[7]

*தேவனுடைய முழுமைத்துவமானது படைப்பில் ஈடுபட்டது என்பதே சுருக்க விபரமாய் உள்ளது. அதாவது, படைப்பில் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் (திருஅவதாரத்திற்கு முன் வார்த்தை என்ற வகையில் இருந்தவர்), மற்றும் ஆவியானவராகிய தேவன் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.*

---

*குறிப்புகள்*

[1]*மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகியவை பொழிப்புரைச் சுவிசேஷங்கள் என்று அறியப்படுகின்றன, ஏனென்றால், அவைகள் இயேசு கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் ஊழியம் பற்றிய ஒரே விதமான மேல் கண்ணோட்டங்களை முன் வைக்கின்றன.* [2]"the" *என்ற சுட்டுச் சொல்லானது யோவா. 1:1 மற்றும் ஆதி. 1:1 ஆகிய இரண்டிலும் இல்லாதிருக்கின்றன. அவைகள் "தவற விடப்பட்டுள்ளன" என்று நாம் கூறுவதில்லை; அப்படிக் கூறுவது, அது ஒரு காலத்தில் அங்கிருந்தது என்று மறைமுகமாய்க் கூறுவதாகிவிடும். மூலபாஷையில் அவ்வார்த்தை பயன்படுத்தப் படவில்லை, ஆனால் மொழிபெயர்ப்பாளர்களால் சேர்த்துக் கொள்ளப்பட்டது.* [3]*Logos என்பது "வார்த்தை" என்பதற்கான கிரேக்கச் சொற்றொடராகும்.* [4]*Pros, இது சார்புச் சொல்லுடன் பயன்படுத்தப்படும் பொழுது, "அருகாமைக்கு" அல்லது*

“உறவுமுறை” என்ற அதன் அடிப்படை அர்த்தங்களில் ஒன்றைக் கொண்டுள்ளது. இந்த வேதவசனப் பகுதியானது proston theon என்றுள்ளது, இது “தேவனுடன்” என்று அர்த்தப்படுகின்றது. [5]“தாவீது அல்லது பழங்காலத்தில் அவரது வழி வந்தவர்கள் எவருக்கு சாத்தியமாகக் கூடியதைக் காட்டிலும் முழுமையான கருத்தில், இந்த மேசியா என்பவர் தேவனுடைய குமாரனாக மட்டுமல்ல (வ. 5) உண்மையில் தேவன் என்றே குறிப்பிடப்பட முடியும், ...” (F. F. Bruce, *The Epistle to the Hebrews*). [6]“மற்றவர்கள் இயேசுவைத் தெய்வீகமானவர் என்ற வகையில் கண்டார்களா?” என்ற துணைக் கட்டுரையைக் காணவும். [7]இங்கு நாம் “நாம் உண்டாக்குவோமாக” என்று அர்த்தப்படும் na’aseh என்ற இணைப்புச் சொல்லைக் காண்கின்றோம். முயற்சி அல்லது வலியுறுத்தத்தை விளக்க எபிரெய மொழியில் இந்த இலக்கண வடிவம் பயன்படுத்தப்படுகின்றது. இந்த சந்தர்ப்பப் பொருளில், பிதாவாகிய தேவன் குமாரனாகிய தேவனிடத்தில் ஆவியானவராகிய தேவனிடத்தில் தங்களின் சாயலில் மனித குலத்தைப் புதிதாய்ப் படைப்பதில் பங்கேற்கும்படி உண்மையுடன் அதிகாரத்துடனும் விடுத்த வேண்டுகோளாய் இருக்கின்றது.

---

## *Logos என்ற வார்த்தை*

*யோவான் logos என்ற சொற்றொடரை ஏன் பயன்படுத்தினார்? மற்றும் அதைவிட முக்கியமாக அவர் அதன் அர்த்தத்தை அவ்வளவு துல்லியமாக அவர் ஏன் விளக்கினார்? logos என்ற வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப் படுவதற்கு முன்பு ஏற்கனவே வளமான அர்த்தம் கொண்டதாயிருந்தது. logos என்பதில் பதிந்திருந்த கருத்துக்கள் கிரேக்க தத்துவ ஞானிகளுக்கு, விசேஷமாக ஸ்தோயிக்கருக்கு (அப். 17:18) மிகவும் வசீகரமானதாயிருந்தது. ஸ்தோயிக்கச் சிந்தனையைத் தொடக்கத்தில் வளர்ச்சி பெறச் செய்தவர்களில் ஒருவரான எபேசு நகரின் ஹெராக்ளிட்டஸ் என்பவர் logos என்பதை இயற்பியல் பாடத்தில் இயற்கையின் விதியாகக் கண்டார். சில நூற்றாண்டுகளுக்குப் பின், (கி.மு. சுமார் 300ல்) சீப்புருவைச் சேர்ந்த ஜெனோ, ஒப்புக் கொள்ளப்பட்ட ஸ்தோயிக்கத்தின் நிறுவனர் ஆனார். அத்தேனேயில் இருந்த அவரது பள்ளியில், அவர் logos என்பதை இந்த அண்டத்திற்குக் காரணமாக உரைத்தார். இந்தக் காரணம்தான் எல்லா விஷயங்களுக்கும்/பொருட்களுக்கும் அவைகளின் ஒழுங்கமைப்பு, வடிவம் மற்றும் இசைவு ஆகியவற்றைக் கொடுக்கின்றது. தெய்வீகத்துவத்தில் அவரின் நம்பிக்கையானது இந்த logosன் படைப்புத் திறனுள்ள அக்கினியாக ஒப்பிட்டார். சில வேளைகளில் pneuma* (spirit) *என்றும் இது அழைக்கப்பட்டது. இவ்விதமாக, ஸ்தோயிக்கர்கள் logos என்பதை இயற்கையில் ஒழுங்கமைவும், தர்க்கரீதியானதுமாகவும்; தெரிவித்தலில் காரணம் மற்றும் வார்த்தையாகவும்; இறையியலில் பகுத்தறிவுள்ள ஆவி என்ற வகையில் எல்லாவற்றையும் கொடுத்து, தன்னை எல்லாவற்றிக்கும் தொடர்பு படுத்துகின்றது என்று கண்டனர்* (Paul Edwards, *The Encyclopedia of Philosophy*).

*கி.பி. முதல் நூற்றாண்டின் உலகமானது கிறிஸ்தவத்தின்*

*தொடக்கத்தைக் கண்டது. நம்பிக்கையின் நற்செய்தியும், கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பும் எருசலேம் தொடங்கி மத்திய தரைக் கடலைச் சுற்றிலும் உள்ள பகுதிகளில் பிரசங்கிக்கப்பட்டது. அந்த நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் ஏவப்பட்ட மனிதர்கள் விசுவாசத்தைப் பற்றி எழுதியிருந்தனர். இந்த எழுத்துக்கள் கொய்னி (சாதாரண) கிரேக்க மொழியில் தேவனுடைய இயல்பையும், அவரது செயல்பாட்டையும், மனித குலத்திற்கான அவரது சித்தத்தையும் விவரித்தன.*

*கி.பி. முதல் நூற்றாண்டின் முதல் பாதியில், பைலோ அவர்களின் எழுத்துக்கள், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகியோரின் இறையியல் சிந்தனையில் logosன் கருத்துக்கள் இருந்ததை முன்னிலைப் படுத்தின. பைலோ ஒரு கிரேக்க பாஷை பேசும், யூத தத்துவ ஞானியும் இறையியல் அறிஞரும் ஆவார். எகிப்தின் அலைக்சந்திரியாவில் வளர்க்கப்பட்டு, கல்வி பெற்ற அவர், பழைய ஏற்பாட்டு வேதவசனங்களையும் கிரேக்க தத்துவத்தையும் ஆழமாய்க் கற்றுணர்ந்தவர் என்பதற்கு அவருடைய எழுத்துக்கள் ஆதாரமாகும். உருவக மற்றும் கிரேக்கத் தத்துவக் கொள்கைகளைப் பயன்படுத்தி அவர் பழைய ஏற்பாட்டிற்குக் கொடுத்த மறுவிளக்கவுரையானது நவீன காலங்களைப் பற்றிக் கொண்டிருந்த அவரது நாட்களில் செயல்விளைவைப் பெற்றிருந்தது. logos என்பது வரலாற்று ஓட்டத்தை அதற்கு நியமிக்கப்பட்ட பாதையில் இலக்கைச் சென்றடையும் வரை செலுத்துகின்ற தெய்வீக கட்டளையாகும் என்று கூறினார். இவ்விதமாக logosன் செயல் விளைவுகள் வான்வெளியிலும் மனிதரின் நிறைவான அடைவிடத்திலும் பங்கேற்பவையாக உள்ளது.*

# பிரிவு II:
# திரு அவதாரத்திற்குப் பின்பு அவரது தெய்வீகம்

பிதாவாகிய தேவனின் ஞானமாகவும் வல்லமையாகவும் தேவகுமாரன் முன்னின்றதை நாம் கண்டிருக்கின்றோம். பொருள் கூறுகளால் உண்டாக்கப்பட்ட ஆச்சரியமான நமது அண்டமானது தேவனுடைய அறிவு மற்றும் வல்லமையை வெளிப்படுத்துவதற்கான நிலைக்களனை அளித்தது.

தேவனுடைய கரத்தின் மிகப் பரந்த செயலில் நாம் குடியிருப்பது "பூமி" என்று அழைக்கப்படக் கூடிய மிகச் சிறிய ஒரு கிரகம் ஆகும், இது அளவிட முடியாத பரப்பளவில் அமைந்துள்ள எண்ணற்ற வான்வெளி மண்டலங்களில் ஒன்றான சூரிய மண்டலத்தில் உள்ள பல கிரகங்களில் ஒன்று ஆகும். தேவனுடைய படைப்பில் அவரது சாயலாக உள்ள ஒரே உயிர் ஜீவனுக்கு - மனிதனுக்கு - இந்த பூமியானது ஏற்ற வாழ்விடமாகத் தேவனால் ஆயத்தம் செய்யப்பட்டது.

மனித வரலாற்றிற்கான தேவனுடைய அக்கறை மற்றும் அதில் அவரது ஈடுபாடு ஆகியவற்றுக்கு தெய்வீக/மனிதத்துவ உறவுமுறையே அடிப்படையாகும் என்பது சந்தேகத்திற்கிடமற்றதாக உள்ளது. இருப்பினும், வேதாகமத்தின் தனிச்சிறந்த பதிவை நாம் பெற்றிராதிருந்தால் நம்மோடு அவர் கொண்டுள்ள நெருங்கிய உறவின் விதத்தையும் அளவையும் நம்மால் மிக அரிதாகவே கற்பனை செய்து பார்க்க முடிந்திருக்கும். பிதாவாகிய தேவனும், குமாரனாகிய தேவனும், ஆவியானவராகிய தேவனும் மனிதனைப் படைப்பதில் செயல்பட்டனர் என்பதை வேதவசனங்களில் இருந்து நாம் முடிவு செய்ய இயலும். மேலும் மனிதன் தன்னுடைய கீழ்ப்படியாமையினால் தேவனோடுள்ள தகுதியான உறவில் நிலைத்திருக்கத் தவறியதானது தெய்வீகம் மற்றும் மனிதத்துவம் ஆகியவற்றுக்கிடையில் ஒரு பிரிவைக் கொண்டு வந்தது என்பதையும் வேதவசனங்களில் நாம் காண்கின்றோம்.

தேவனுக்கும் நமக்கும் இடையில் உள்ள பிரிவினையானது நமது முயற்சிகளினால் இணைக்கப்பட முடியாதிருந்தது; தேவன் தமது பரிசுத்தமான இயல்பினால், நம்மை நமது களங்கப்பட்ட, பாவம் நிறைந்த

நிலையில் ஏற்றுக் கொள்ளக் கூடாதிருந்தார். ஒப்புரவானது எப்போதும் சாத்தியமாயிருப்பதற்காகத் தேவன் குறிப்பிட்ட மூன்று வழிகளில் முயற்சி எடுக்க வேண்டியதாயிருந்தது. முதலாவது, அவர் தாமே தமக்கும் நமக்கும் இடையில் உள்ள பெரும் பள்ளத்தின் குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டியிருந்தது. இரண்டாவது, நாம் அப்பாலத்தைக் கடந்து அவரிடம் திரும்பச் சேருவதற்கு அவர் வழி வகைகளைக் கொடுக்க வேண்டியிருந்தது. மூன்றாவது, அவர் தொடர்ந்து நமக்கு பலம், உட்கண்ணோட்டம், தகுதிகள் மற்றும் வழி நடத்துதல் ஆகியவற்றைக் கொடுத்து, வெற்றிகரமாய் நாம் அதைக் கடக்கக் கூடியவர்களாகும்படி செய்ய வேண்டியிருந்தது.

நமக்காகத் தேவனுடைய "சொந்த" ஈடுபாடு, இயேசு கிறிஸ்து என்ற நபரில் வந்தது, அவருடைய இரத்தமானது நமக்கும் தேவனுக்கும் இடையில் உள்ள இடைவெளியை இணைத்தது (எபே. 2:12, 13; கொலோ. 1:19-22). இந்த முடிவில், தேவன் மாம்சமாகி நமக்குள்ளே வந்து வாசம் பண்ணினார் (யோவா. 1:14). இயேசு, திருஅவதாரமான தேவன் - தேவனும் மனிதனும் - தாம் பூமியில் இருக்கும் பொழுது தமது தெய்வீகத்தை எப்படி பிரதிபலித்தார் என்பதை நாம் கவனிப்போம்.

# பூமியில் குமாரனுடைய தெய்வீகத்தை வேதாகமச் சொற்றொடர்கள் பிரதிபலிக்கின்றன

*தேவன் மனித இனத்தைப் படைத்த பிறகு, ஒரு குறிப்பிட்ட வேளையில் ஏதோ ஒரு கோரமான தவறுண்டாயிற்று. மனிதன் - ஆணும் பெண்ணும் சுய விருப்பப் பாதையொன்றைத் தேர்ந்து கொண்டு, தேவனுடைய பாதுகாக்கும் எச்சரிக்கைகளை மதிக்காது விட்டனர். இந்தப் பாவத்திற்கு அவர்கள் தேவனுடன் கொண்டிருந்த ஐக்கியத்தை விலையாகக் கொடுக்க வேண்டியதாயிற்று, மற்றும் இது மரணத்தின் பயங்கரத்தைக் கொண்டு வந்தது. தேவன் மற்றும் ஆதாம் ஏவாள் ஆகியோருக்கிடையிலான பெரும் பிளவானது ஆழமும் அகலமும் உடையதாயிற்று. விளைவுகள் தொலை தூரத்தையடைந்தன; அவை நம்மையும் கூடப் பாதிக்கின்றன. எண்ணெய் தோண்டும் கிணறுகளில் பயன்படும் சங்கிலியின் ஒவ்வொரு கண்ணியும் எண்ணெயினால் தடவப்பட்டிருப்பது போல, மனித வரலாற்றில் ஒவ்வொரு தலைமுறையும் இணைக்கப்பட்டு, பாவத்தினால் கறைப்பட்டது. இது மாற்றியமைக்கப்பட்டிராதிருந்தால் மனித இனம் மரணத்தினால் அழிந்திருக்கும் (ரோமர் 5:12). நாம் இவ்வுலகில் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, எவ்வித நம்பிக்கையுமின்றி விடப்பட்டிருந்தோம் (எபே. 2:12). தேவன் நமக்காகச் செயல் பட்டிராதிருந்தால் நாம் யாவரும் இழக்கப்பட்டிருப்போம்.*

*அன்பு, இரக்கம் மற்றும் கிருபை ஆகியவற்றின் நம்புவதற்குரிய செயல் விளக்கமாக, தேவன் இப்பூமிக்கு ஒரு நபராக வந்தார்! அவர் அப்பெரும் பள்ளத்தைக் கடந்தார். அவர் பாலத்தைக் கட்டினார். உயரம், ஆழம், அகலம் அல்லது நீளத்தைக் காண முடியாத அன்பினால் அவர் செயல்பட்டார். அவர் செய்தது எதிர்பாராததாகவே இருந்தது; அது தகுதியற்றவர்களுக்குச் செய்யப்பட்டதாய் இருந்தது. என்ன ஒரு மகிமையுள்ள, மகிழ்ச்சி நிறைந்த, ஊக்கமூட்டும் நற்செய்தி! இதற்கு மாறாக, இதைத் தப்பிதமாக புரிந்து கொள்வது எவ்வளவு சுலபமாக இருக்கிறது! தேவன் நமக்குச் செய்திருப்பதைப் பற்றிய நமது புரிந்து கொள்ளுதலை ஆழப்படுத்தி, அதைப்பற்றிய நமது மதிப்பை உயர்த்துவதே இப்பாடத்தின்*

குறிப்பிட்ட இலக்காகும்.

பழைய ஏற்பாட்டில் பல வாக்குத்தத்தங்களும், தீர்க்கதரிசனங்களும் தேவனுடைய மேசியாவின் வருகையைப் பற்றியவைகளேயாகும். இவைகளின் வளர்ச்சி உச்ச நிலை இயேசுவின் வருகையில் காணப் படுகின்றது. யோவானின் எழுத்துக்களுடன் புதிய ஏற்பாடு நிறைவுற்றிருந்த வேளையில், இயேசு தேவனுடைய குமாரன் மட்டும் அல்ல. அவர் குமாரனாகிய தேவனுமாவார் என்பது சபைக்கும் இந்த உலகத்திற்கும் வெளிப்படுத்தப்பட்டது (யோவா. 1:1-14; 20:26-31).

## "தேவனுடைய குமாரன்"

''தேவனுடைய குமாரன்'' என்ற சொற்றொடரானது அதனுடன் பழைய ஏற்பாட்டில் அல்லது புதிய ஏற்பாட்டில் தெய்வீகத்துவக் கருத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. இஸ்ரவேலர்களுக்கு மோசே, "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய பிள்ளைகள்" என்று கூறினார். இஸ்ரவேலர்கள், ''தேவனுடைய புத்திரர்கள்'' என்று அழைக்கப்பட்டிருந்தாலும் கூட தாங்கள் தெய்வீகமானவர்கள் அல்ல என்று அறிந்திருந்தார்கள். புதிய ஏற்பாட்டில் இயேசு, "சமாதானம் பண்ணுகிறவர்கள் ... தேவனுடைய புத்திரர்" என்னப்படுவார்கள் (மத். 5:9) என்று கூறுவதை நாம் காண்கின்றோம். இயேசுவின் கூற்றிலிருந்து எவரொருவரும், சமாதானம் பண்ணுகின்றவர் தெய்வீகத்துமானவர் என்று கருதுவதில்லை. இப்படிப்பட்ட பல உதாரணங்களில், "தேவனுடைய புத்திரர்(கள்)" என்ற சொற்றொடரானது தெய்வீகத்துவத்தின் அர்த்தத்தை பழைய ஏற்பாட்டிலோ அல்லது புதிய ஏற்பாட்டிலோ பெற்றிருப்பதில்லை என்று நாம் காண்கின்றோம். இது இயேசுவுக்குப் பயன்படுத்தப்படும் போதுதான் ஒரே விதிவிலக்காக - மிகப் பெரும் விளக்கமாக - அமைகின்றது.

இவ்விடத்திலும் கூட, இயேசுவின் வாழ் நாட்களின் போது இந்த விளக்கத்தைப் பயன்படுத்திய பலர், தங்கள் சிந்தையில் தெய்வீகத்துவத்தின் கருத்தைப் பெற்றிருந்திருக்கவில்லை என்பதை நாம் அறிய வேண்டும். இஸ்ரவேலர்கள் தங்களின் வரலாறானது தேவனுடைய மேசியாக்களாக இருந்த தனி நபர்களினால் அடையாளப் படுத்தப்பட்டிருந்ததை அறிந்தார்கள். "மேசியா" என்றால் "அபிஷேகம் பண்ணப்பட்டவர் அல்லது தெரிந்து கொள்ளப்பட்டவர்" என்று அர்த்தப்படுகின்றது. தேவன் தமது மக்களை வழிநடத்திப் பாதுகாப்பதற்குப் பல தலைவர்களையும் அரசர்களை அபிஷேகம் செய்திருந்தார். சில வேளைகளில் அவர்கள் "தேவனுடைய புத்திரர்கள்" என்று அழைக்கப்பட்டனர் (சங். 89:20-29; 2 சாமு. 7:11ஆ-16). உண்மையில், இஸ்ரவேல் தேசத்தார் முழுமையும், யாத். 4:22 மற்றும் ஓசியா 11:1ன் படி தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டனர்.

இவ்விதமாக, எபிரெய/இஸ்ரேலய/யூதர்களின் மனதில் "தேவனுடைய குமாரன்" என்ற சொற்றொடரானது ஆழமான தனிக் குறிப்பைப் பெற்றிருந்தது. இஸ்ரவேலர்கள் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களினமாய் இருந்தார்கள். அவர்கள் அவரது குடும்பத்தின் உறுப்பினர்களாய்

*இருந்தார்கள். அவர்கள் அவரது சித்தத்தைப் பெறுபவர்களாயும் அதினால் பயனடைபவர்களாயும் இருந்தார்கள். "தேவனுடைய குமாரன்" என்ற வகையில் இஸ்ரவேலர்கள் மதிப்புமிக்கதொரு வம்சா வழியினைப் பெற்றிருந்தார்கள். ''தேவனுடைய புத்திரர்கள்'' என்ற வகையில் அவர்களின் தலைவர்களும் அரசர்களும் யேகோவாவால் விசேஷமாய் நியமிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டார்கள்.*

*யோவான் ஸ்நானன் தமது ஊழியத்தைத் தொடங்கிய பொழுது, தாம் மேசியா அல்ல என்பதை மத அதிகாரிகளுக்கு விரைவில் சுட்டிக் காட்டினார். மாறாக அவர் மேசியாவுக்கான வழியை ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். யோவான் இயேசுவை ஒருபோதும் மேசியா என்று அழைத்ததில்லை, ஆனால் தமக்குப் பின்வருகின்றவர் - உண்மையில் தமக்கு முன்பாகவே இருந்தவர் - அவரே என்று வலியுறுத்தினார், மேலும் தம்மை விட அவர் பெரியவர் என்றும் வலியுறுத்தினார். அவரது கூற்றுக்கள் இயேசுவின் மேசியாத்துவத்தை மறைமுகமாய்க் குறிப்பிட்டு, அவருடைய கர்த்தத்துவத்தையும் உறுதிப்படுத்தின (மத். 3:1-3; யோவா. 1:15, 19-23, 30).*

## *"ராஜா"*

*ஆகையால், இயேசு ஞானஸ்நானம் பெற்ற பிறகு, அவர் தம் ஊழியத்தைச் செய்யத் தொடங்கிய போது, அவரது சம காலத்திய யூதர்கள் பலரால் அவர் அரசத்துவச் சொற்றொடர்களில் அடிக்கடி குறிப்பிடப் பட்டதில் வியப்பெதுவும் இல்லை. அவரை மாபெரும் தீர்க்கதரிசி என்று விசுவாசித்த சிலர், அவரைத் தங்களின் ராஜாவாக்கிக் கொள்ள விரும்பினார்கள் (யோவா. 6:14, 15). மற்றவர்கள், ''கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், ..." (லூக். 19:38; சங். 118:26ஐயும் காணவும்) என்று மிகுந்த சத்தமிட்டுக் கூறினார்கள்.*

*புறஜாதியார் சிலரும் கூட, இயேசுவின் வாழ்வு மற்றும் ஊழியம் ஆகியவற்றைச் சூழ்ந்திருந்த ராஜத்துவ வாசனையை அறிந்திருந்தார்கள். அவர் பிறந்த வேளையில், பெர்ஸியா அல்லது அரபியாவில் இருந்து வந்து புறஜாதியார் என்று யூகிக்கப்படும் கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் "யூதர்களின் ராஜாவாக"ப் பிறந்தவரை(மத். 2:1, 2)த் தேடி வந்தார்கள். இயேசுவின் வாழ்க்கை முடிவின் அண்மையில், ரோம ஆளுநராகிய பிலாத்து, இயேசுவின் புகழைப் பற்றியும், அவர் தம்மையே மேசியா, ராஜா மற்றும் தேவனுடைய குமாரன் என்று ஒப்புக் கொண்டது பற்றியும் குறிப்பாகக் கவலையடைந்தார் (மத். 26:63, 64; யோவா. 18:37). இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்த வேளையில், "நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா'' என்ற மேல் விலாசத்தைச் சிலுவையின் மீது வைக்கும்படி பிலாத்து கட்டளையிட்டார் (யோவா. 19:19).*

## *"மேசியா"*

*இயேசு தமது வாழ்வுக் காலத்தில், புறஜாதியார் சிலராலும், யூதர்கள் பலராலும் தேவனால் அபிஷேகம் செய்யப்பட்ட ராஜா மற்றும் குமாரன் -*

*“மேசியா” என்ற வகையில் நோக்கப்பட்டார். இயேசு தாமே இந்த நிலையை ஏற்றுக் கொண்டு, மற்றவர்கள் தம்மைப் பற்றிக் குறிப்பிட்ட இப்பணித்துவத்தையும் அவர் ஒப்புக் கொண்டார் (மத். 16:16; யோவா. 1:49). இருப்பினும், யோவான் ஸ்நானன் ஒருபோதும் இயேசுவை மேசியா என்று அழைத்திராதிருந்தது போலவே, இயேசுவும் தமது ஊழியத்தின் போது தம்மை மேசியா என்று அடையாளப்படுத்திக் கொள்வதில் விருப்பம் இல்லாதவரைப் போல காணப்பட்டார். இது ஒருவேளை தொடர்ந்து செய்ய வேண்டியதாய் இருந்த ஊழியத்திற்கு அவரே ஏற்படுத்திக் கொண்டிருந்த “கால அட்டவணையின்” நிமித்தமாக இருந்திருக்கலாம் (மத். 16:20; 26:18; யோவா. 2:4; 7:6; 8:20; 17:1, 2) அல்லது யூதமக்கள் தங்கள் முன்னுரைத்தலின்படியான மேசியாவைப் பற்றிய பல தவறான கருத்துக்களை அவருக்கு நடைமுறைப்படுத்துவதில் இருந்து தவிர்ப்பதற் காக செய்யப் பட்டிருந்திருக்கலாம். இது நிச்சயமாகவே அவர் “மேசியாத்துவ உணர்வு” இல்லாதிருந்ததால் ஏற்பட்டது அல்ல.* (John Bright, *The Kingdom of God என்ற நூலில் இருந்து).*

*இயேசுவை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்கள், அவைகளைப் பயன்படுத்தியவர்கள் இயேசுவைத் தேவன் என்று நினைத்தார்கள் என்று அர்த்தப்படுத்த அவசியமில்லை. உண்மையில், இயேசுவிடமிருந்து வந்ததைத் தவிர, இயேசு தெய்வீகமானவர் என்ற உரிமையுள்ள அறிக்கைகள் அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிறகே உண்டாயின, “சந்தேகத்” தோமா இயேசுவின் பரிசுத்த சரீரத்தைக் கண்ட பொழுது, “என் ஆண்டவரே! என் தேவனே!” என்று கூறினார் (யோவா. 20:28). உச்சக்காட்சி வந்திருந்தது. உயிர்த்தெழுதலின் வெற்றி திட்டவட்டமானதாய் இருந்தது. இயேசுவின் முழு அடையாளம் இப்பொழுது உறுதிப்படுத்தப்பட்டதாயிற்று. இயேசு தேவனாகவே (தெய்வீகத்துவமானவராகவே) இருக்கின்றார்!*

# பூமியில் குமாரனுடைய தெய்வீகத்தை அவரது சுய விழிப்புணர்வு பிரதிபலிக்கின்றது

*இயேசுவின் தெய்வீகத்துவத்தைப் பற்றிய சாட்சியத்தின் ஒரு பகுதியாக இருப்பது அவரது தெய்வீக விழிப்புணர்வு ஆகும். இயேசுவின் தனிப்பட்ட வாழ்வு பற்றி நாம் சிறிதளவே தகவல் பெற்றிருந்தாலும், சுவிசேஷ விபரங்களில் நமக்குத் தரப்பட்டுள்ள உட்கண்ணோட்டங்கள் அவர் தமது தெய்வீகத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வுள்ளவராய் இருந்தார் என்று விளக்குகின்றது. அவர் தெய்வீகமான தமது சர்வ ஞானத்தையும் சர்வ வல்லமையையும் தமது ஊழியத்தில் கருவியாகப் பயன்படுத்தினார். அவர் தாம் மீட்பர் என்ற வகையில் தமது பங்கை நிறைவேற்றுகையில் நடக்கும் எல்லாவற்றையும் - நிகழ் காலத்திலும் எதிர்காலத்திலும் மற்றவர்களின் சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகள் உட்பட யாவற்றையும் - அறிந்தவராய் இருந்தார்.*

## *பிதாவுடன் தமது உறவைப் பற்றிய அவரது அறிவு*

*சிறு பையனாயிருந்த காலம் தொடங்கி, ஏறக்குறைய பார் மிட்ஸ்வா[1] வயது தொடங்கி, இயேசுவானவர், தமது பிதாவினுடைய திட்டங்களில் தமது பங்கைப் பற்றிய உணர்வுள்ளவராய் இருந்தார். தேவாலயத்தில் யோசேப்பும் மரியாளும் அவரைக் கண்டடைந்த பொழுது, பின்வரும் உரையாடல் தொடர்ந்தது:*

> *… மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள். அதற்கு அவர்; நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா? என்றார் (லூக். 2:48-49).*

*இயேசு யோசேப்பைக் குறிப்பிடவில்லை. அவர், "உன் தகப்பனும்" என்று மரியாளின் சொற்றொடருக்கும் ''என் பிதாவுக்கு'' என்ற தமது வார்த்தைகளுக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாகக் காட்டினார். இயேசு தமது பரலோகப் பிதாவுடனான தமது தெய்வீக உறவைப் பற்றி விழிப்புணர்வற்றவராய் இருந்தார் என்பதற்கான ஆதாரமெதுவும் இல்லை. முழுவதும் இதற்கு நேர்மாறானதாகவே உள்ளது!*

*இயேசுவின் தெய்வீகத்துவம் என்ற வெளிச்சத்தில் இந்த பிதா/குமாரன் உறவுமுறை எதை அர்த்தப்படுத்துகின்றது? இன்னொரு இடத்தில் அவர், "சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்'' (மத். 11:27). இது உலகளாவியவற்றையும் (சகலமும்) மற்றும் தனிப்பட்ட தன்மையையும் ("பிதா தவிர ..... குமாரன் தவிர") நிச்சயப்படுத்துகின்றது. தனிச் சிறப்புள்ள இந்த பிதா/குமாரன் உறவானது மிக நெருங்கிய, தெய்வீகமான உறவை உள்ளடக்காத வரையில் ஒன்றையும் அர்த்தப்படுத்துவதில்லை. பிதா, குமாரனுடன் கொண்டுள்ள இந்த உறவானது குமாரன் தாம் தேர்ந்து கொள்பவர்களுக்குப் பிதாவை வெளிப்படுத்தக் கூடியவராக்குகின்றது.[2]*

*இயேசு தமது சீஷர்களிடம் கூறிய சில கூற்றுக்களின் பின்னால் இந்த "தெய்வீக ஊக்குவித்தல்" அமைந்துள்ளது. உதாரணமாக, கேள்வி கேட்ட தோமாவிடம் இயேசு தாம் மட்டுமே பிதாவினிடத்தில் சென்றடையும் வழியாக இருந்ததாக(மற்றும் இருக்கின்றதாக)த் தகவல் தந்தார். அப்பொழுது பிலிப்பு, தங்களுக்குப் பிதாவைக் காண்பிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு இயேசுவின் பதிலுரையானது அவர் தம் அடையாளம் பற்றிக் கொண்டிருந்த உணர்வுக்கு அற்புதமானதொரு முன்மாதிரியைக் கொடுக்கின்றது:*

> *என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, ''பிதாவை எங்களுக்குக் காண்பியும்'' என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார். நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள் (யோவா. 14:9ஆ-11அ).*

*தாம் பிதாவல்ல என்பதை அவர் அறிந்திருந்தார்; தாம் பிதாவினுடைய குமாரன் என்பதை அவர் அறிந்திருந்தார். இவ்விருவரும் ஒருவரைக் கண்டால் இன்னொருவரைக் கண்டதாகும் என்ற அளவுக்கு மிகவும் நெருக்கமான உறவுடையவர்களாய் மற்றும் ஒருவருக்குச் செவி கொடுத்தால் இன்னொருவருக்குச் செவி கொடுத்ததாகும் என்ற அளவுக்கு மிகவும் நெருக்கமான உறவுடையவர்களாய் இருந்தார்கள்.*

*இன்னொரு முறை இயேசு பிதா செய்கின்றதெதுவோ அதையே*

குமாரனும் செய்கின்றார். ஏனெனில் இருவரும் ஒருவரையொருவர் அந்த அளவுக்கு அறிந்துள்ளனர் என்று கூறியபோது இதைத் தாண்டி இன்னும் அதிகமாகக் கடந்து சென்றார். ஜீவனும் நியாயத்தீர்ப்பும் பிதாவினால் குமாரனிடத்தில் ஒப்புவிக்கப்பட்டுள்ளது; ஆகையால், பிதாவும் குமாரனும் கனப்படுத்தப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர்:

> அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாகச் செய்ய மாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார். பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங்கள் ஆச்சரியப்படத் தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார். பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறது போல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத் தீர்ப்புச் செய்யாமல், நியாயத் தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதை யும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார். குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம்பண்ணாத வனாயிருக்கிறான் (யோவா. 5:19-23).

தமது பிதாவுடனான தம் உறவுமுறை பற்றிய இயேசுவின் விழிப்புணர் வானது அவர் தமது பிதாவைப் போலவே தெய்வீகத்துவமானவராய் இருந்தார் (மற்றும் இருக்கின்றார்) என்ற அஸ்திபாரத்தின் மேல் அமைந்ததாகும்.

## தமது தெய்வீக அறிவைப் பற்றிய அவரது விழிப்புணர்வு

மனிதத்துவ வல்லமைக்கு அப்பால் இயேசு கொண்டிருந்த அறிவானது கவனிக்க வேண்டிய இன்னொரு பகுதியாகும். இது மிகவும் அடிக்கடி சுவிசேஷ நூல்களில் காணப்படுவதால் சுலபமாய் ஒதுக்கப்பட்டு விடுகின்றது.

மாற்குவின் சுவிசேஷத்திலிருந்து எடுக்கப்பட்ட பல உதாரணங்களை நாம் கவனிப்போம்: (1) இயேசு, நான்கு மனிதர்களால் தம்மிடத்தில் கொண்டு வரப்பட்ட திமிர்வாதக்காரனை குணமாக்கிய பொழுது, தம்மை நோக்கிக் கொண்டிருந்த நியாயப்பிரமாணப் போதகர்களின் சிந்தனையை அவர்கள் பேசும் முன்பே கூட அவர் அறிந்தார் என்று மாற்கு 2:8 கூறுகின்றது. (2) இயேசு தாம் மூப்பர்களாலும், பிரதான ஆசாரியர்களாலும், நியாயப்பிரமாணத்தின் போதகர்களாலும் புறக்கணிக்கப்பட வேண்டிய தாயிருந்தது பற்றித் தமது சீஷர்களிடத்தில் போதிக்கத் தொடங்கினார். அவர் கொல்லப்படுவார், ஆனால் மூன்று நாட்களுக்குப் பிறகு

மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவார் (8:31; 9:9, 31; 10:33, 34). (3) அவர் தம் சம காலத்தில் வாழ்ந்தவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணும் வரை உயிரோடிருப்பார்கள் என்று முன்னுரைத்தார் (9:1). (4) அவர் தமது அப்போஸ்தலர்களில் சிலர் பெறப்போவதாயிருந்த துன்புறுத்தல் மற்றும் மரணம் ஆகியவற்றைக் குறிப்பிட்டார் (10:39). (5) அவர் தமது ஊழியத்தில் செயல்விளைவை ஏற்படுத்தக் கூடியது எது என்பதைப் பற்றி முன்னதாகவே அறிந்து வைத்திருந்தார் (11:2-6). (6) இயேசுவிடத்தில் கேள்வி கேட்கப்பட்ட போது, அவருடைய பதிலானது பெரும்பாலும், கேள்வி கேட்பவர்களுடைய உள்ளான சிந்தனைகள் மற்றும் எண்ணப்போக்குகளைப் பற்றிய அவரது அறிவின் அடிப்படையிலேயே அமைந்தன என்று கூறப்படுகின்றது (12:13-17). (7) தேவாலயத்திற்கு வரப்போவதாயிருந்த அழிவைப்பற்றியும் அதைத் தொடர்ந்து ஏற்படும் பெரும் துன்பத்தைப்பற்றியும் இயேசு அளவீட்டு முறையில் விவரித்தார் (13:1-23). (8) யூதாஸ் தம்மைக் காட்டிக் கொடுப்பான் என்றும், பேதுரு தம்மை மூன்று முறை மறுதலிப்பார் என்றும், அப்போஸ்தலர்கள் யாவரும் "இடறலடைவார்கள்" என்றும் அவர் அறிந்திருந்தார் (14:17-21, 27, 30).

வெறும் மனிதத்துவத் திறமைக்கு அப்பால் இயேசு பெற்றிருந்த அந்த அறிவானது, தீர்க்கதரிசிகள் தங்களின் முன்னுரைத்தல்களில் விளக்கிய வற்றை விடவும் மேலானதொன்றுமில்லை (அதைப் போன்றதே) என்ற நிலைப்பாட்டை ஒருவர் மேற்கொள்ளலாம். இயேசு கொண்டிருந்த இயற்கைக்கு மேலான அறிவானது - அவரது சர்வ ஞானமானது - அவரது தெய்வீகத்துவத்தினால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத விளைவு ஆகும், அது வெறுமனே ஒரு தீர்க்கதரிசன வரம் மட்டுமல்ல: "பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா. 16:15; மேலும் யோவா. 16:30; 17:10; 21:17 முதலியவற்றையும் காணவும்).

இயேசு எவ்விதம் தம்மைப் பற்றிய முழுமையான விழிப்புணர் வுடையவராய் இருந்தார் என்று நாம் இப்பொழுது அறியத் தயாராய் இருக்கின்றோம். இயேசு தாம் தேவனுடைய குமாரன் என்ற வகையில், தெரிந்து கொள்ளப்பட்டவர் (மேசியா) என்ற வகையிலும் தம் அடையாளத்தை அறிந்தார் என்று ஏற்கனவே நாம் கண்டோம். அவர் எவ்வளவு அடிக்கடி பின்னணியில் தம் மேசியாத்துவத்தையும், குமாரத்து வத்தையும் காத்துக்கொண்டார் என்பதையும் நாம் கண்டிருக்கின்றோம் (மாற். 8:30; மத். 16:20). அடுத்ததாக நாம், அவர் தம் கவனம் நிறைந்த கால அட்டவணையின்படி தம் அடையாளத்தை எவ்விதம் வெளிப்படுத்தினார் என்பதைக் காண்போம்.

---

குறிப்புகள்

[1]பார் மிட்ஸ்வா என்பது 13ஆம் வயதில், யூத ஆண் மத சம்பந்தப்

பருவமடைவதை குறிக்கின்றது. "கட்டளையின் மகன்" என்று அர்த்தப்படும் இவ்வார்த்தை, வாலிபனையோ அல்லது இதற்காகக் கொண்டாடப்படும் சடங்குகளையோ குறிக்கக் கூடும். Milton Steinberg, அடிப்படை யூதத்துவம். [2]G. E. Ladd, *A Theology of the New Testament,* மத். 11:27ஐப் பற்றி, "பிதா குமாரனை அறிகிற அதே முறையிலேயே இயேசு பிதாவை அறிவார் .. ஆகவே இது தெய்வீக அறிவின் மட்டத்திலேயே இருக்கிறது" என்று Ladd குறிப்பிட்டிருக்கிறார்.

---

# மற்றவர்கள் இயேசுவை தெய்வீகத்துவமானவராகப் பார்த்தார்களா?

இயேசு தமது சொந்த அடையாளத்தை அறிந்திருந்தார். இயேசுவாலும் மற்றவர்களாலும் அது அறிக்கை செய்யப்பட்டதை அப்போஸ்தலர்கள் கேட்டிருந்தார்கள். இயேசுவை நாம் தேவனென்று அறிக்கை செய்கின்றோம், ஆனால் நாம் ஒரு சிலாக்கியமான நிலையில் இருக்கின்றோம். இயேசுவின் வரலாற்றை நாம் முழுமையாகக் கேட்டிருக்கின்றோம். வேதவசனங்களின் முழுமையான வெளிப்பாட்டை நாம் வாசித்திருக்கின்றோம். வேதாகம ரீதியான ஆச்சரியமான முடிவைப் பற்றி நாம் அறிந்து அதை ஆவலுடன் எதிர் நோக்கியிருக்கின்றோம்.

நீங்கள் எப்பொழுதாவது ஒரு புத்தகத்தின் கதை முடிவு எப்படியிருக்கும் என்பதை அதன் முடிவுப் பகுதியை காணாதவாறு உங்களைத் தடுத்துக் கொண்டு ஒரு புத்தகத்தை வாசித்ததுண்டா? நீங்கள் வாசிக்கையில் அற்புதமான முடிவு பற்றி விழிப்புணர்வுடனும், உரையாடல்களில் மறைபொருள்களை உணர்ந்து கொள்ளவும், விவரணைகள் மற்றும் உறவு முறைகள் ஆகியவற்றை விளங்கிக் கொள்ளவும் முடிகின்றது. முடிவை முன்னதாகவே அறிந்து கொள்ளுதலானது நமக்குத் திருப்திகரமான ஒரு உணர்வைத் தரலாம், ஆனால் அப்புத்தகத்தின் கதாபாத்திரங்கள் அதன் முடிவு பற்றி அறியவில்லை என்பதை மறந்து போகலாம். தனிநபர்கள் ஏன் சில விஷயங்களைச் செய்கிறார்கள் அல்லது கூறுகின்றார்கள் என்று நாம் ஆச்சரியப்படுகின்றோம். நிச்சயமாக அவர்கள் மிகச் சிறப்பாக அறிந்திருக்க வேண்டும்! இல்லை, அவர்கள் அது எவ்விதம் முடிகின்றது என்பதை அறியவில்லை!

வேதவசனங்களை நாம் வாசிக்கையில், அதிகமாக யூகம் செய்து கொள்வது சுலபமாகும். உண்மையில் வாழ்ந்தவர்கள் அல்லது நிகழ்ச்சிகளின் பதிவுகளில் உள்ள செயல்பாடுகள் மற்றும் வார்த்தைகளில் நமக்கு அனுகூலமான தோற்றத்தை நாம் தள்ளி, முழுமையான வரலாற்றை அறிவதிலிருந்து அவற்றைத் தேர்ந்தெடுக்கின்றோம்.

இயேசுவைப் பின்பற்றியவர்களோ அல்லது அவரை எதிர்த்தவர்களோ அவரது வாழ்வின் நிகழ்ச்சிகளில் இம்மானுவேல் - "தேவன் நம்மோடு இருக்கிறார்" என்பதன் ஆதாரத்தைக் காண ஆயத்தமாய் இருந்ததில்லை.

இயேசுவைப் பற்றிய முழுமையான சத்தியத்தை வாசிப்பவர்கள் என்ற வகையில் நாம் இந்த சத்தியத்தை எதிர்பார்ப்பதில் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும். அது நமக்கு முன் விரித்துரைக்கப்படுவதை நாம் அனுமதிக்க வேண்டும். இந்தக் கொள்கையை நாம் வேண்டுமென்றே காணாது விடக் கூடாது. இயேசு, சத்தியத்தினிடம் வருதலின் ஆதாயத்தைப் பற்றிப் பேசினார், அது பக்குவமடையு முன்பு எதிர்நோக்குதல் பற்றி அவர் பேசவில்லை (யோவா. 8:32).

"யூதர்களின் ராஜா", "மேசியா" மற்றும் "தேவனுடைய குமாரன்" போன்ற சொற்றொடர்கள் இயேசு தெய்வீகமுள்ளவர் என்ற கருத்தை மறைமுகமாய் உணர்த்தத் தேவையில்லாத வகையில் அவரைப் பற்றி விளக்கப்படுத்த ஏவுதல் பெற்றிராதவர்களால் சில வேளைகளில் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். இஸ்ரவேலின் கடந்த காலத்தில், அரசர்கள், அபிஷேகம் பெற்றவர்கள் (மேசியாக்கள்) மற்றும் மொத்தத்தில் இஸ்ரவேலும் கூட தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்ற வகையில் "தேவனுடைய புத்திரர்கள்" என்று அழைக்கப்பட்டிருந்தனர்.

இயேசு தேவனுடைய குமாரன் மட்டுமல்ல, ஆனால் குமாரனாகிய தேவனாகவும் இருந்தார் என்பதற்கான திட்டவட்டமான, நம்பச் செய்யக் கூடிய ஆதாரத்தை நாம் எங்கு காண முடியும்? நாம் புதிய ஏற்பாட்டின் மற்ற எழுத்துக்களுக்குச் செல்ல முடியும்; இருப்பினும், நமக்குச் சுவிசேஷங்கள் மட்டுமே தேவைப்படுகின்றன. இயேசுவின் தனிப்பட்ட வாழ்வும் போதனைகளும் அவர் தெய்வீகத்துவமானவர் என்ற கருத்தை முன்னணிக்குக் கொண்டு வருகின்றன. நாம் சுவிசேஷ விபரங்களை நோக்கி, இயேசுவின் நாட்களில் இருந்தவர்கள் கண்டிராத ஆதாரங்களைக் காண முடியும். இது அவர்களைக் காட்டிலும் நாம் அதிகமான உள்ளறிவு உடையவர்கள் என்பதால் அல்ல, ஆனால் முழுமையான புதிய ஏற்பாட்டின் பின்னாளைய வெளிப்படுத்துதலை நாம் "முன்னோக்கியே நோக்கி" தனிச் சிறப்பான சலுகை பெற்றவர்களாய் இருக்கிறோம் என்பதாலேயே நம்மால் முடிகின்றது.

# பூமியில் குமாரனுடைய தெய்வீகத்தை அவரது கால அட்டவணை பிரதிபலிக்கின்றது

*இயேசு தமது தெய்வீகத்துவம், தாம் குமாரனாகிய தேவன் என்ற வகையில் தமது அடையாளம் பற்றி முழுமையாய் அறிந்திருந்தார். தாம் தெரிந்து கொள்ளப்பட்டவர் (மேசியா) என்பதை அவர் தம் சிறு வயதிலேயே அறிந்திருந்தார். தமது அடையாளத்தின் இவ்விரு முகப்புகளையும் தம் சொந்த ஊழியக் ''கால அட்டவணையின்'' கட்டமைப்பிற்குள் வெளிப்படுத்தும்படி காத்துக் கொள்ள அவர் முயற்சி செய்தார் என்பது உறுதியானதேயாகும். இது அவ்வளவு சுலபமான பணியாய் இருக்கவில்லை. இயேசு தம் அடையாளத்தையும் நிலைப் பாட்டையும் முற்றிலும் மறைத்து வைக்காதிருக்கையிலேயே, அவைகளின் சிறப்பம்சம் பற்றி உலகத்தில் வளர்ந்து வந்த விழிப்புணர்வை/அறிவை அவர் கட்டுப்படுத்தச் செய்தார். இயேசு இவைகளைச் செய்த இரண்டு குறிப்பிடத்தக்க வழி வகைகளை நாம் ஆராய்வோம்.*

## *இயேசு தமது அடையாளத்தை எவ்விதம் மறைத்தார்*

*முதலாவதாக, இயேசு தமது அடையாளம் பற்றிய மற்றவர்களின் விழிப்புணர்வை, அதை மறைத்து வைத்ததின் மூலம் கட்டுப்படுத்த முயற்சி செய்தார். இயேசு "அடையாளங்களைச்'' (semeia) செய்த பொழுது, யோவான், "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவா. 20:31) என்று கூறினார். இருப்பினும் யோவான் சுவிசேஷத்தில் இயேசு செய்த முதல் அடையாளம் அவரது தாயின் வற்புறுத்துதலால் மட்டுமே செய்யப்பட்டது. ஏன்? ஏனென்றால் அவரது "வேளை இன்னும் வரவில்லை" (யோவா. 2:4). பல காரணங்களுக்காக இயேசு தம்முடைய இயற்கைக்கு மேலான வல்லமையைக் காட்சிக்கு வைப்பதில்*

*எச்சரிக்கையாய் இருந்தார்: (1) அவர் தம் வல்லமையானது தேவனுடைய வல்லமை என்று காணப்பட வேண்டியது அவசியமில்லை என்று அறிந்தார் (மத். 12:24). (2) "பலத்த செய்கைகள், அற்புதங்கள் மற்றும் அடையாளங் கள்" ஆகியவற்றின் அடிப்படையில் மட்டும் அவர் மீது விசுவாசம் கொள்வது (அப். 2:22) போதுமானதல்ல என்று அவர் அறிந்தார். (யோவா. 2:11, 23, 24: 6:14, 15, 60-71; மத். 12:38, 39; முதலியன). (3) "மாபெரும் அற்புதங்களும் அடையாளங்களும்" "கள்ள கிறிஸ்துக் களாலும் கள்ள தீர்க்கதரிசிகளாலும்" வஞ்சித்தலின் வல்லமை நிறைந்த கருவிகளாகப் பயன்படுத்தப்பட முடியும் என்று இயேசு அறிந்தார் (மத். 24:24, 25). (4) அவர் தம் இராஜ்யத்தின் அஸ்திபாரத்தைப் போடுவதற்கான தம்முடைய கால அட்டவணையை மக்கள் முந்திச் செல்லுவதை விரும்பவில்லை.*

*அடையாளங்களை இயேசு அடிக்கடிப் பயன்படுத்தினார். ஒருவேளை அவர் அவ்வாறு செய்யாதிருந்தால், தமது பண்புகளுக்குப் புறம்பானவராய் இருந்திருப்பார் என்று உண்மையில் நாம் கூற முடியும். பலவேளைகளில் அவர் தாம் செய்த அற்புதங்களை இரகசியமாய் வைக்கும்படி மக்களின் குறிப்பாய்க் கேட்டுக் கொண்டாலும் (மத். 8:3, 4; 9:27-30), அவரது மாபெரும் மன உருக்கமானது அவரைச் செயல்படும்படித் தூண்டியது (மத். 20:34; மாற். 5:19; லூக். 7:11-15). சிலவேளைகளில் அற்புதமானது அவருடைய மகிமையையும் அவருடைய பிதாவின் மகிமையையும் காண்பிக்க ஒரு வழிமுறையாகப் பயன்படுத்தப்பட்டது (யோவா. 2:11; 11:1-4, 38-44). இருப்பினும், அவர் தம் இயற்கைக்கு மேலான வல்லமை யையும், மேசியாத்துவத்தையும் காலத்திற்கு முன் அறிவித்தலை அல்லது அரசியலாக்கப்படுவதைத் தவிர்க்க விரும்பி முயற்சி செய்தார் (மாற். 8:29, 30; யோவா. 1:48-51).*

## இயேசு தமது அடையாளத்தை எவ்விதத்தில் வெளிப்படுத்தினார்

*இரண்டாவதாக, இயேசு தமது முழுமையான அடையாளம் மற்றும் பங்கு பற்றிய தனிச்சிறப்புகள் விரித்துரைக்கப்படுதலைக் கட்டுப்படுத்த முயற்சி செய்தார், மற்றும் அவைகளைத் தமது சொந்த "கால அட்டவணை யின்"படி வெளிப்படுத்தவும் முயற்சி செய்தார். தம்மைப் பற்றி அவர் மிகவும் விரும்பிக் கூறிய விளக்கச் சொற்றொடர் "மனுஷ குமாரன்" என்பதாகும். குறிப்பிடத் தக்க வகையில், சுவிசேஷங்களில் இச்சொற்றொட ரானது அவரைப் பற்றிக் குறிப்பிட்ட ஒருவராலும் ஒருபொழுதும் பயன்படுத்தப்பட்டதில்லை. இயேசுவின் கூற்றை கூட்டத்தார் அவரிடத்திலேயே திருப்பி வீசிய ஒரே ஒரு வேளையில்தான் இச்சொற்றொடர் இயேசுவை நோக்கிக் கூறப்பட்டது: "... அப்படியிருக்க மனுஷ குமாரன் உயர்த்தப்பட வேண்டியதென்று எப்படிச் சொல்லுகிறீர்; இந்த மனுஷ குமாரன் யார்?" (யோவா. 12:34ஆ).*

*இயேசு தம்மையே "மனுஷ குமாரன்" என்று குறிப்பிட்டார் என்பதில்*

கேள்வி எதுவும் இருப்பதில்லை. இணைவு நிலைச் சொற்களை விடுத்து, இயேசு தம்மைப் பற்றிய இந்த விவரிப்பை நான்கு சுவிசேஷங்களிலும் சுமார் எண்பது முறைகள் பயன்படுத்தினார். இணைவு நிலைச் சொற்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டாலும் கூட, ஒரு தனிப்பட்ட உண்மை நம் இருதயத்தில் ஆழப்பதிகின்றது; இந்த நியமனப் பெயரினால் இயேசு தம்மையே அடையாளப் படுத்திக் கொண்டதுடன், தமது ஊழியம் முழுவதிலும் அவர் தம்மை "மனுஷ குமாரன்" என்ற வகையிலேயே பணியில் ஈடுபடுத்திக் கொண்டார்.[1]

உண்மையில் "மனுஷ குமாரன்" என்ற வகையில் இயேசுவின் பங்கானது எந்த அளவு அவரைச் சூழ்ந்துள்ளது என்பதை நாம் கவனிப்போம்:

1. *"மனுஷ குமாரன்" கடினமான சூழ்நிலைகளை அனுபவித்தார் (மத். 8:20; லூக். 9:58).*
2. *அவர் ஒரு ஊழியக்காரராய் இருந்தார் (மத். 20:28; மாற். 10:45).*
3. *அவர் மக்களுடன் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டார் (மத். 11:19; லூக். 6:22; 7:34; யோவா. 9:35).*
4. *அவர் "மனுஷ குமாரன்" என்ற தமது பங்கு பற்றிய மக்களின் பதில்செயலை அறிய ஆர்வமாய் இருந்தார் (மத். 16:13).*
5. *அவர் காட்டிக் கொடுக்கப்பட்டார் (மத். 17:22; 20:18; 26:24, 45; மாற். 9:31; 10:33; 14:21, 41; லூக். 9:44; 22:48; 24:7அ).*
6. *அவர் பாடுபட்டார் (மத். 17:12; 26:2; மாற். 8:31; 9:12; லூக். 9:22).*
7. *அவர் சிலுவையில் அறையப்பட்டார் (லூக். 24:7ஆ; யோவா. 3:14; 8:28; 12:23).*
8. *அவர் உயிர்த்தெழுந்தார் (மத். 12:40; 17:9; மாற். 9:9; லூக். 11:30; 24:7இ).*
9. *அவர் வெளிப்படுத்தப்பட்டார் (லூக். 17:30).*
10. *அவர் மறுபடியும் வருகின்றார் (மத். 10:23; 16:27; 24:27, 30, 37, 39, 44; 25:31; 26:64ஆ; மாற். 13:26; லூக். 12:40; 17:24; 18:8; 21:27; யோவா. 3:13).*
11. *அவர் நியாயந்தீர்ப்பார் (மத். 25:31-46; மாற். 8:38; லூக். 9:26; 12:8, 10; 17:26; 21:36).*
12. *அவர் ஒரு இராஜ்யத்தைப் பெற்றுள்ளார் (மத். 16:28; 19:28).*
13. *அவர் மேலே எடுத்துக் கொள்ளப்படுவார் (யோவா. 6:62).*
14. *அவர் அரசாளுவார் (மத். 26:64அ; மாற். 14:62; லூக். 22:69).*
15. *அவர் பழைய பிரமாணத்தைக் காட்டிலும் மேலானவர் (மத். 12:8; மாற். 2:28; லூக். 6:5).*
16. *அவர் தூதர்களைக் காட்டிலும் மேலானவர் (மத். 13:41).*
17. *அவர் மகிமைப் படுத்தப்படுகின்றார் (யோவா. 1:51; 13:31).*
18. *அவர் பாவங்களை மன்னிக்கின்றார் (மத். 12:32; மாற். 2:10; லூக். 5:24; 12:10).*
19. *அவர் அதிகாரமுள்ளவராய் இருக்கின்றார் (மத்.9:6; யோவா. 5:27).*

20. *அவர் வேதவாக்கியங்களை நிறைவேற்றினார் (மத். 26:24; மாற். 14:21அ; லூக். 18:31).*
21. *அவர் ஜீவனைக் கொடுக்கின்றார் (யோவா. 6:27, 53-56).*
22. *அவர் இரட்சிக்கின்றார் (லூக். 19:10).*
23. *அவர் ஒரு "கால அட்டவணையைப்" பெற்றுள்ளார் (மாற். 14:41; யோவா. 12:23).*

குமாரனாகிய தேவன் தொடர்ந்து தம்மை "மனுஷ குமாரன்" என்று விவரிப்பது ஏறக்குறைய முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரையாக உள்ளது. அவர் ஏன் இதைச் செய்தார்? இந்தச் சொற்றொடரைப் பயன் படுத்துவதென்பது அவரது உண்மையான அடையாளத்தை வெளிப் படுத்தவும் மற்றும் மறைக்கவும் அழகிய மற்றும் நுட்பமான வழியாய் இருந்தது. இது அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின் போது, அவரது உண்மை இயல்பு மற்றும் அடையாளம் ஆகியவை விரித்துரைக்கப்படுதலை கட்டுப்படுத்த உதவும் ஒரு மேடையை அவருக்குக் கொடுத்தது. அவருடைய "கால அட்டவணை" அவருக்கு முக்கியமானதாயிருந்தது. ரபீயாக, எஜமானராக மற்றும் போதகராக, அவர் எப்பொழுதுமே இந்த "கால அட்டவணையை"ப் பற்றிய விழிப்புணர்வுள்ளவராக இருந்தார். உதாரணமாக, உவமைகளைப் பயன்படுத்திப் போதிப்பதென்பதே அவருடைய மிகவும் நன்கு அறியப்பட்ட வழிமுறையாக இருந்தது. இது, போதிக்கப்பட்ட சத்தியத்தை வெளிப்படுத்தவும் மறைத்து வைக்கவும் ஏற்றதொரு முறையாகும். (மத். 13:10-13, 34, 35; மாற். 4:10-12, 33, 34; லூக். 8:10). தக்க வேளையில் தாம் தெளிவான பேச்சில் செய்தித் தொடர்பு கொள்ளுவதாக அவர் வாக்குத்தத்தம் செய்து, இதே காரணத்திற்காக (போதனையை வெளிப்படுத்தவும், மறைத்து வைக்கவும்) அவர் உருவக மொழிநடையின் மற்ற வகைகளையும் பயன்படுத்தினார்.[2]

நீங்கள் விரும்பினால், அவரது திரு அவதாரமும் கூட ஒரு வகையில் மறைக்கப்பட்ட சத்தியமாகவும், வாழும் ஒரு உவமையாகவுமே இருந்தது. தேவனுடைய முகத்தை நேரடியாகப் பார்த்து, அதன் பின் உயிர்வாழக் கூடியவர் யார்? (யாத். 33:20; யோவா. 1:18; 6:46; 1 தீமோ. 6:15, 16; 1 யோவா. 4:12அ). இயேசு மாம்சத்தில் வந்த தேவனாயிருந்தார்; இந்த மாம்சத்திரையின் காரணமாகவே, மனிதப் பிறவி ஒருவர் அவரைக் காணவும், "என் ஆண்டவரே! என் தேவனே!" என்று கூறவும் முடிந்தது (யோவா. 20:28). தெய்வீகத்துவமானது மாம்சத்திரையில் நம்மிடம் வந்தபொழுது, இயேசுவின் சரீரமானது குத்தப்பட்டு[3] அவர் தம் இரத்தத்தைக் கல்வாரியில்[4] சிந்திய போது அந்த (மாம்சத்) திரையானது தேவனுடைய மாபெரும் அன்பு, இரக்கம் மற்றும் கிருபை ஆகியவற்றின் மகிமையுள்ள வெளிப்படுத்துதலாயிற்று.

"குமாரனாகிய தேவன்" தமது முழுமையான அடையாளம் மற்றும் பங்கு ஆகியவற்றை மக்களுக்கு வெளிப்படுத்திப் புரிய வைக்கும் செயலைக் கவனமாகக் கட்டுப்படுத்தினார்.

குறிப்புகள்

[1]C. S. Mann *அவர்களின் Mark*, The Anchor Bible, vol. 27 *என்ற நூலில் உள்ள சுருக்கமான கலந்துரையாடலைக் காணவும்.* [2]*யோவா. 10:6; 16:25, 29, 30. Paroimia* = allegory, figure, Proverb, Parable. *பல்வேறு மொழிபெயர்ப்புகளைக் காணவும்.* [3]*இயேசுவின் "மாம்சத்திரை" குத்திக் கிழிக்கப்பட்டபோது, அடையாளத்துவமாக, தேவாலயத்தின் திரைச் சீலை கிழிந்து போயிற்று (மத். 27:51: மாற். 15:38; லூக். 23:45).* [4]*"... நமது விசுவாசத்தைத் தொடங்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறவர் அத்திரையை, நமது கர்த்தரின் மனிதத்துவ வாழ்வை அடையாளப்படுத்து கின்றதாகவே கண்ணோக்கினார் ..."* (F. F. Bruce, *The Epistle to the Hebrews*).

---

## *"மனுஷ குமாரன்"*

*மனிதத்துவத்துடன் இயேசுவை அடையாளப்படுத்தும் வகையில் "மனுஷ குமாரன்" என்ற சொற்றொடரை நினைக்கும்படி ஒருவேளை நாம் ஈடுபாடு கொண்டிருக்கலாம். இருப்பினும், நாம் இயேசுவின் காலத்தில் வாழ்ந்திருந்தால், இந்தச் சொற்றொடரானது எதிர் விளைவு ஒன்றையே பெற்றிருந்திருக்கும். இந்தச் சொற்றொடரானது இயேசுவை "பரலோகத் தின் மனிதத் தோற்றமாகவே'' பெரும்பாலும் அடையாளப் படுத்தியிருக்கும். ஏன்? ஏனென்றால் இயேசு அருள்வெளிப்பாட்டின் காலம் ஒன்றில் வாழ்ந்தார். நாம் அருள் வெளிப்பாடு[1] பற்றி முழுமையான அளவில் ஆராய்ச்சி செய்ய முடியாதிருக்கின்ற வேளையில், இயேசு தம்மைப் பற்றிக் குறிப்பிட மிகவும் விரும்பிய விவரிப்பான ''மனுஷ குமாரன்'' என்ற சொற்றொடரை நாம் முழுமையாய்ப் புரிந்து கொள்ள உதவுகின்ற ஒரு சில விளக்கக் குறிப்புகளைக் காண்போம்.*

*கி.மு. 200 முதல் கி.பி. சுமார் 100 வரை உலகமானது யூதர்களைப் பொறுத்த வரையில், "சீர் குலைந்த உலகமாக" ஆயிற்று. இந்த நூற்றாண்டு களுக்கு முன்னதாக, யூத மக்கள் பெருந்துன்பத்திற்குப் மேல் பெருந்துன்ப மாக ஏராளமானவற்றை அனுபவித்திருந்தார்கள். கி.மு. 721ல் இஸ்ரவேல் இராஜ்யமானது அசீரியர்கள் கையில் விழுந்திருந்தது. கி.மு. 606 முதல் 586 வரையிலும் யூதா இராஜ்யம் சிறைப்பிடிக்கப்பட்டு, மக்கள் பாபிலோனியா அடிமைத்தனத்தில் எடுத்துச் செல்லப்பட்டு, அவர்களின் தேவாலயமும், அன்பிற்குரிய நகரமான எருசலேமும் அழிக்கப்பட்டிருந்தன. கி.மு. 539ல் பெர்சியர்கள் பாபிலோனியர்களை வெற்றி கொண்டனர், அதன் பின்பு விரைவிலேயே யூதர்களைத் தங்களின் சொந்த பூமிக்குத் திரும்பும்படி அவர்கள் அனுமதித்தார்கள். அங்கே அவர்கள் கிரேக்கர், சீரியர், எகிப்தியர் மற்றும் ரோமர் ஆகியோரின் ஆளுகைகளின் கடின அடிகளை உணர்ந்தார்கள் என்பது தெளிவு. அவர்கள் தேவாலயத்தைத் திரும்பவும் கட்டி (கி.மு. 515), சீரியரின் ஆளுகையில் இருந்து சற்றுக்காலம்* (ca *கி.மு. 165-63) சுதந்திரத்தை மறுபடியும் பெற்றிருந்தாலும், கி.மு. 63 முதல் ஒரு சில நூற்றாண்டுக் காலமாக அவர்கள் நேரடியாக ரோம அதிகாரத்தின் கீழ்*

*இருந்தார்கள். ரோமானியர்கள் இரண்டாம் தேவாலயத்தை கி.பி. 70ல் அழித்தார்கள்.*

*ஒழுங்கமைவில் ஏற்பட்டிருந்த இந்த நெடிய வரலாற்று அழிவானது யூதர்களின் தலைமுறைகளில் ஏக்கத்தையும் பேரச்சத்தையும் ஏற்படுத்தியது. அவர்களின் தேசிய நம்பிக்கைகள் ஏமாற்றம் அடைந்தன. அவர்கள் தங்களின் தீர்க்கதரிசன வேதவசனப் பகுதிகளில் காணப்பட்ட வாக்குத் தத்தங்கள் சிலவற்றுக்கு மறுவிளக்கம் தர வேண்டிய அவசியத்தைக் கண்டனர். பலருக்கு அது, மறுவிளக்கம் அல்லது நம்பிக்கை இழப்பாக இருந்தது. அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இராஜ்யம் எங்கே? அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா எங்கே? மாபெரும் மறுகட்டுமானம் மற்றும் தேவனால் நியமிக்கப்பட்ட ஒருவருடைய மேசியாத்துவ ஆளுகை ஆகியவை என்னவாயிற்று?[2]*

*தேவனுடைய நம்பிக்கையிழந்து போயிருந்த மக்களுக்கு நம்பிக்கைக் கொண்டு வருவதற்காக வெளிப்படுத்தப்பட்ட இலக்கிய வகை ஒன்று இந்த மாபெரும் வேதனையின் கூடாரத்திலிருந்து/கொப்பரையில் இருந்து உதித்தெழுந்தது. நம்பிக்கையின் செய்தியானது வழக்கமாக, விவரிப்பான, அடையாள, உருவக மொழிநடையில் ஏற்படுத்தப்பட்டது. மனித குலத்தின் பொல்லாங்கின் காரணமாகத் தேவன் வரலாற்றில் அவர்களை "விட்டு விட்டார்" ஆயினும் இன்னமும் தேவன் கட்டுப் படுத்துபவராகவே இருந்தார் என்ற நம்பிக்கையே இந்த எழுத்துக்களில் பெரும்பாலான வற்றுக்கு அடிப்படையாய் இருந்தது. தேவன் இந்த உலகத்தை மேற் கொள்ளுவார்; நீதிமான்களின் உரிமை நிலை நிறுத்தப்படும், மற்றும் ஒருவேளையில் அல்லது வரலாற்றுக்குப் பிந்திய இராஜ்யமாக தேவனு டைய ஆளுகை (இராஜ்யமானது) மலரும். வேதவசனங்களின் வாக்குத் தத்தம் உண்மையாகும் - ஆனால் ஒரு "புதிய" வழியில் உண்மையாகும் - என்று இன்னமும் எதிர்பார்க்கப்பட்டது.[3]*

*இந்தச் சந்தர்ப்பப் பொருளில், "மனுஷ குமாரன்" என்ற சொற்றொடரானது அதிர்ச்சியளிக்கும் முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. இது "பரலோகத்தில் தொடக்கம்" பெற்ற ஒருவரைக் குறிப்பிட்டது. தானியேலின் புத்தகத்தில் உள்ள வெளிப்படுத்தப்பட்ட பகுதியான அதிகாரங்கள் 7 முதல் 12 வரை, "மனுஷ குமாரன்" என்பவருடைய பிரசன்னமானது "பூர்வத்தின் நாட்கள்" தொடங்கியே இருந்ததாகச் சுட்டிக் காட்டுகின்றன. அவருக்கு "அழியாத ராஜ்யம்" (7:14) தரப்பட்டது. பூமிக்குரிய இராஜ்யங்களுக்கு வித்தியாசப்பட்ட வகையில், "உன்னதமான வருடைய பரிசுத்தவான்கள் ராஜரிகத்தைப் பெற்று, என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்று தானியேல் கூறினார். (முழுமையான சந்தர்ப்பப் பொருளுக்கு தானி. 7ஐக் காணவும்.) யூதர்களின் அருள் வெளிப்பாட்டு நம்பிக்கைகளானவை, "பூர்வ நாட்களில்" (தேவனிடத்தில்) வேர் கொண்டிருந்தன, அவர் "மனுஷ குமாரனின்" வருகையின் மூலமாக அவர்களின் சார்பில் மனித குல வரலாற்றில் இடைப் படுவார் என்று அவர்கள் நம்பியிருந்தார்கள். அவர் அவர்களுக்கு உரிமையை நிலைநிறுத்துவார்; அவர் ஆளுகை செய்வார்*

*மற்றும் அவர்கள் இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.*

*ஆதிக் கிறிஸ்தவர்கள் நாசரேத்தூர் இயேசுவை பழைய ஏற்பாட்டு விவரிப்பின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட "மனுஷ குமாரன்" என்று கண்டார்கள் என்ற தெளிவான கருத்தில் கேள்வியெதுவும் இல்லை. இது அவர் பரலோகத்திற்குரிய எல்லையில் இருக்கின்றவர் என்று அவர்கள் ஒப்புக் கொண்டதை அர்த்தப்படுத்துகின்றது; அவர் தேவனாக இருந்தார். அவர் சாலமோனைப் போலவோ (2 சாமு. 7:14) அல்லது இஸ்ரவேலைப் போலவோ (யாத். 4:22, 23) தேவனுடைய புத்திரனாய் இருந்ததில்லை. "மனுஷ குமாரன்" என்ற வகையில் அவர் சங். 8:4-6 (எபி. 2:5-11; 1 கொரி. 15:27; எபே. 1:22ஐக் காணவும்) மற்றும் ஏசா. 7:14 (மத். 1:22, 23ஐக் காணவும்) ஆகியவற்றின் நிறைவேற்றமானார். அவர் அருள் வெளிப் பாட்டின் வெற்றியாளராக, தெய்வீகத்துமுள்ளராகவே இருந்தார். அவர் தம்முடைய மகிமையின் கம்பீரம் எல்லாவற்றிலும், "முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாக" (வெளி. 1:12-18)க் காணப்பட்டார்.*

*பிறகு ஏன், "மனுஷ குமாரன்" என்ற சொற்றொடரை இயேசு தொடர்ந்து பயன்படுத்தியதைக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள் தங்களின் நீண்டநாள் நம்பிக்கைகள் மற்றும் கனவுகள் ஆகியவற்றின் நிறைவேற்றமாக அவரை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தார்கள்? ஏனென்றால் அவரது திரு அவதாரத்தினால் தான். யூதத்துவ அருள் வெளிப்பாட்டாளர்கள் எபிரெய வேதவசனங்களைப் பற்றிய தங்கள் சிந்தனை மற்றும் விளக்கங்களை மறுவுருவாக்கப் படுத்தியிருந்தார்கள். அவர்களின் மறுவிளக்கத்தின்படி, சமீபத்திலோ அல்லது காலங்களின் முடிவிலோ தேவன் தாமே வந்து இடையிடுதலே அவர்களின் துன்பங்கள் எல்லாவற்றிற்கும் தீர்வாக இருந்தது. பழைய ஒழுங்கு அமைவானது விழுந்து போகும். தேவனுடைய வெளிப்படுத்தப்பட்டவைகளின் ஆளுகையானது அவர்களின் மகிமையுள்ள ஒன்றுகூடுதலை உத்தரவாதப் படுத்தும். இந்த மகிமைப் படுத்துதலுக்கு "மனுஷ குமாரன்" ஒரு கிரியா ஊக்கியாக இருப்பார்.*

*வெறுமனே ஒரு மனிதத்துவப் பிறவியாய் இருப்பவர் இப்படிப்பட்ட எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாது என்பது தெளிவு. அழிந்து போகும் எவரொருவரும் ஒரு யுகத்தைத் தொகுத்து முடித்து இன்னொரு யுகத்தைத் தொடக்கி வைத்து, வரலாற்றையும் உண்மை நிலையையும் மாற்ற முடியாது! மாம்சத்தில் வந்த இயேசுவானவர் அவர்கள் எதிர்பார்த்த வெளிப்பாட்டுக் கண்ணோக்கில் பொருந்தாதிருந்தார். அவர் தம்மைப் பற்றி "மனுஷ குமாரன்" என்று அடிக்கடி பேசினாலும் அவரது மனிதத்துவமானது அவரது தெய்வீகத்துவத்தை மறைத்தது. தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிற்று என்று அவர் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார், ஆனால் அதன் வெளிப்படுத்தப்பட்ட மகிமை மற்றும் கம்பீரம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டும் எதையும் மக்கள் காணாதிருந்தனர். அவர்களுடைய விடுதலையின் கண்ணோக்கு மற்றும் மகிமையின் மறுகட்டுமானம் ஆகியவற்றில் "மாம்சத்தில் தேவன்" என்ற கருத்து உள்ளடங்கியிருந்ததில்லை.*

*இயேசுவின் ஊழியமானது அவரது அடையாளத்தையும், ஊழிய நோக்கத்தையும் விதிமுறைப் படுத்தப்பட்ட ஒரு "கால அட்டவணை"யில் விரித்து வைத்தது. இயேசு தம்மை இன்னொரு அற்புதம் செய்பவர் என்று மட்டுமே காணப்படுவதிலிருந்து தவிர்ப்பதற்குத் தமது அற்புதங்களைக் காத்திருந்தார். அவர் "கள்ளக் கிறிஸ்து" என்று முத்திரையிடப்பட்டு விடாதபடிக்கு மேசியா என்ற தமது அடையாளத்தை வெளிப்படுத்துவதில் அவர் ஜாக்கிரதையாய் இருந்தார் (மாற். 13:21-23). வெளிப்படுத்தப் பட்டவைகளை ஏற்றுக் கொண்டவர்கள் "தங்களுடைய" மனுஷ குமாரனின் பங்கு அவரில் நிறைவடைவதை ஒருக்காலும் காணப் போவதில்லை என்று அறிந்தே அவர் "மனுஷ குமாரன்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். அவர் தமது ஊழியத்தில் ஏன் இந்த "மறை முகமான" அணுகு முறையைப் பயன்படுத்தினார்? மனிதனுடைய வீழ்ச்சியில் இருந்தே தேவன் மனித குலத்தை நேரடியாக எதிர் கொண்டதில்லை.*

> *அவரே [தேவனே] நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறவர்; ... (1 தீமோ. 6:15ஆ, 16அ).*

*தேவன் தமது "சேரக்கூடாத ஒளியில்" இருந்து மனித குலத்தை அதன் பாவம் நிறைந்த நிலைமையில் நேரடியாக எதிர் கொண்டால், அதன் செயல் விளைவு பேரழிவாயிருக்கும். ஆகையால், தேவன் என்ற வகையில் இயேசு வானவர் திரு அவதாரம் எடுத்து, மாம்சத்தினால் திரையிடப்பட்டவராக வந்தார். இந்த வழிமுறையில் அவர் தமது சுடர் விடும் மதி நுட்பம் மற்றும் வல்லமையால் அழித்து விடாமல் "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்க வும்" முடிந்தது. தேவன் "சேரக்கூடாத ஒளியில்" வாசம் பண்ணுகிறார் என்றால், அவர் தமது திரையிடப்படாத, மிகவும் பரிசுத்த தன்மையுடன் நமது பாவம் நிறைந்துள்ள நிலையின் முன் பிரசன்னமாக முடியாது என்றும் அது அர்த்தப்படுவதில்லையா? இருப்பினும், அவர் நம் மத்தியில் இருந்தார்! "... தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி ..." (2 கொரி. 5:19) என வாசிக்கின்றோம்.*

*வியப்பில் ஆழ்த்தும் இந்தச் சத்தியத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வர, இயேசு பகுத்தறியும் பண்பைப் பயன்படுத்தினார். அவர் தமது மேசியாத்துவத்தை வலியுறுத்தவில்லை - ஆனால் அவர் தாம் தேவனுடைய மேசியா என்பதை ஒப்புக் கொண்டார் (யோவா. 4:25, 26). அற்புத அடையாளங்களை எதிர்பார்த்த, சிலிர்ப்பைத் தேடுவோருக்கு அவர் இணங்கி விடவில்லை - ஆனால் தமது மேசியாத்துவத்தை நிலைநாட்ட வடிவமைக்கப்பட்ட பரிவிரக்கமுள்ள அற்புதங்களை அவர் நிகழ்த்தினார் (லூக். 7:11-17; யோவா. 20:30, 31). அவர் தம் காலத்தில் வாழ்ந்தவர்களின் மறைபொருளாக வெளிப்படுத்தப் பட்டவைகளின் எதிர்பார்ப்புகளுக்குப்*

*பொருந்தினவராய் இருக்கவில்லை, ஆனால் அவர் தாம் "மனுஷ குமாரன்" என்று போதித்தார். (அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள பண்புகளைக் காணவும்). அவர் மறைபொருளாக வெளிப்படுத்தப்பட்டவைகளைப் போதித்தவர்கள் போல தேவனுடைய இராஜ்யமானது முடிவுக் கால (உலகத்தின் முடிவில் நடக்கும்) நிகழ்ச்சி என்று போதிக்கவில்லை; மாறாக, இராஜ்யம் சமீபத்தில் இருந்ததையும், தமது தலைமுறையிலேயே அது வருவதையும் அவர் அறிவித்தார் (மாற். 1:14, 15; 9:1). இவ்விதமாக, "வெளிப்படுத்தப்பட்டவைகளின் வெளிச்சத்தில் நாம் எவ்வகையிலும் வெறுமனே இயேசுவை விளக்கப்படுத்துவதில்லை, ஆனால் ... இயேசுவின் வெளிச்சத்தில் வெளிப்படுத்தப்பட்டவைகளை விளக்கப்படுத்து கின்றோம்"[4] என்று நன்றாகவே கூறப்பட்டுள்ளது.*

*குறிப்புகள்*

[1]Cf. James E. Priest, "Contemporary Apocalyptic Scholarship and the Revelation" in *Johannine Studies: Essays in Honor of Frank Pack,* ed. James E. Priest. [2]Cf. John J. Collins, *The Scepter and the Star: The Messiahs of the Dead Sea Scrolls and Other Ancient Literature என்ற நூலில் காணவும். இந்தப் பணியானது மேசியாத்துவம் என்ற பாடக் கருத்துப் பற்றி யூதர்கள் மத்தியில் நிலவி வந்த பல்வேறு மாறுபட்ட கண்ணோட்டங்களாக இயேசுவின் பிறப்புக்கு முன்னும் பின்னும் காணப்பட்ட இலக்கியங்களில் இருந்து தொடுக்கப்பட்ட கவனமான ஆராய்ச்சி வடிவமைப் பாகும். இதில் விசேஷமாக "இயேசுவும் தாவீதின் மேசியாவும்" என்ற பாடம் மிகவும் கவனத்திற்குரியதாகும்.* [3]E. Isaac, "1 (Ethiopic Apocalypse of) ENOCH" in *The Old Testament Pseudepigrapha,* vol. 1 *Apocalyptic Literature and Testaments,* ed. James H. Charlesworth *துன்மார்க்கருக்கு நியாயத்தீர்ப்பையும் நீதிமான்களுக்கு உரிமை நிலை நாட்டலையும் மற்றும் அவர்களை மேன்மையான மகிமையுள்ள சமாதானத்திற்கு ஒப்புக் கொடுத்தலையும் "மனுஷ குமாரன்" நிறைவேற்றுவார் என்பதற்கான எடுத்துக்காட்டுகளை அதிகாரங்கள் 46, 62, 63, 69-71ல் காணவும்.* [4]G. Ebeling, "The Beginnings of Christian Theology" in *Apocalypticism,* ed. R. W. Funk, *Journal for Theology and the Church.*

# பூமியில் குமாரனுடைய தெய்வீகத்தை "நான் இருக்கிறேன்" என்ற கூற்றுகள் பிரதிபலிக்கின்றன

*இயேசுவின் வாழ்வு மற்றும் அவரது உரிமைகோருதல்களில் பல அம்சங்கள், அவரது காலத்தின் வரலாற்றுப் பின்னணி மற்றும் மதச் சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் மிக நன்றாகப் புரிந்து கொள்ளப்படுகின்றன. இருப்பினும், இயேசு மற்றும் அவரது ஊழியம் பற்றிய உலகளாவிய தனிச் சிறப்பானது வழக்கமான விதிகளான இடம், காலம், கலாச்சாரம், மதச்சிந்தனை அல்லது வரலாறு போன்றவற்றால் வரையறைப் படுத்தப்பட அல்லது அளக்கப்பட முடியாது. மாறாக, அவர் இந்த வட்டாரங்களை யெல்லாம் கடந்து நின்று, அவை ஒவ்வொன்றிற்கும் தகுதியான அர்த்தத்தைத் தருகின்றார். அவர் குமாரனாகிய தேவனாயிருப்பதால் அவைகளைக் கடந்து நிற்கின்றார். அவர் தேவன் - மனுஷன் என்ற வகையில் அவைகளுக்குள் வாழ்ந்து, அதன் மூலம் அவைகளுக்கு அர்த்தம் தருகின்றார். அவரின் தெய்வீகத்துவமும் மனிதத்துவமும் நாம் இருப்பதற்கே மிகவும் இன்றியமையாதவைகள் ஆகின்றன. அவரது தெய்வீகத்துவமின்றி நாம் படைக்கப்பட்டிருக்க முடியாது; அவருடைய மனிதத்துவமின்றி நாம் இரட்சிக்கப்பட்டிருக்க முடியாது.*

*இயேசு தக்க உரிமையுடனேயே தாம் தேவன் என்று போதித்தார் என்பதில் வியப்பெதுவும் இல்லை. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அவருடைய தெய்வீகத்துவத்தை வலியுறுத்தியதிலும் வியப்பெதுவும் இல்லை. இயேசுவின் வாழ்வு மற்றும் போதனையின் அடிப்படையாக இந்த நிறைவான சத்தியம் மட்டும் இல்லாதிருந்தால், அவர் ஒரு மாபெரும் தத்துவ ஞானி, ஒழுக்கவியலாளர் அல்லது போதகர் என்பதற்கு மேலாக இருந்திருக்க மாட்டார்; பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் பிடியிலிருந்து விடுதலையாவதற்கான நமது நம்பிக்கையானது வீணாகவும் ஆதாரமற்றதாகவும் ஆகியிருக்கும். இந்த விஷயத்தை நாம் முழுமையாக எதிர்கொள்ளுவோம்; இயேசு தேவனாயிருந்தார் அல்லது ஒரு கொடிய வஞ்சகராய் இருந்தார். இந்தக் கேள்வியைக் குறித்துத் தெளிவாக அவர் என்ன கூற இருக்கிறார்?*

# அவரது தெய்வீகத்துவம் வலியுறுத்தப்பட்டது

இயேசுவை “தேவனுடைய குமாரன்” என்று அழைத்த பலரும், அவர் தெய்வீகத்துவமானவர், என்று நினைக்க அவசியமற்றவர்களாய் இருந்தார்கள். ‘‘மேசியா’’ என்ற சொற்றொடரானது தன்னிலேயே தெய்வீகத்துவத்தைக் குறிப்பிடுவதில்லை என்று நாம் கண்டிருக்கின்றோம். அவருடைய அற்புதங்கள், அவர் தெய்வீகமானவர் என்று விசுவாசிக்கும்படி எப்போதுமே வற்புறுத்திக் கொண்டிருந்ததில்லை என்றும் நாம் கண்டிருக்கின்றோம். மேலும் அவர் தம்மையே “மனுஷ குமாரன்” என்று தொடர்ந்து விவரித்துக் கொண்டதானது அவரது தெய்வீகத்துவத்தை வலியுறுத்துகின்ற வழியாகும் என்று பெரும்பான்மையானவர்களால் தகுதியான வகையில் புரிந்து கொள்ளப்படவில்லையென்றும் நாம் கண்டிருக்கின்றோம். இருப்பினும் தேவனாய் இருக்கிறார் என்பது பற்றிய இயேசுவின் குறிப்பிட்ட உரிமைகோருதல்களை நாம் பரிசீலனை செய்திருக்கவில்லை. இப்பொழுது நாம் அதைச் செய்வோம்.

இயேசு ஒரு யூதராக இருந்தார். அவரது உடலமைப்பு, கற்றல், வாழ்வு மற்றும் செயல்பாடுகள் இவை யாவும் “ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம்’’ (யோவா. 3:2அ) என்று இயேசுவினிடத்தில் கூறும்படி சனதெரீன் சங்கத்தின் ரபீயான நிக்கொதேமுவை வழி நடத்திற்று. இயேசு ஆகமங்களை அறிந்திருந்தார்; ஆகமங்களைப் போதிப்பவர்கள் அவர் பரிசுத்த எழுத்துக்களை அறிந்தவர் என்பதை அறிந்திருந்தார்கள். ஆகையால், இயேசு தமது தெய்வீகத்துவத் திற்குச் சாட்சியமாக வேதவாக்கியங்களைப் பயன்படுத்திய பொழுது, அவரது கருத்தை அவர்கள் தவற விடவில்லை. அவர் வினயமாய் இருந்தார் என்பதை அறிந்ததால் அவர்கள் வியப்பும் கோபமும் அடைந்தார்கள். அவர் தம்மைத் தேவனென்று உரிமைகோரியதை அவர்கள் அறிந்தார்கள்.

மோசேக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய நாமத்தை யூதர்கள் உச்சரிக்காத அளவுக்குப் பயபக்தியுடன் மதித்தார்கள் (யாத். 3:13-15; 6:2, 3). இதற்கான வேதவசன ஆதாரமானது கி.மு. சுமார் 100 வரைக்கும் பின் சென்று சவக் கடல் சுருள்களில் காணப்படுகின்றது. சவக்கடல் சுருள்களில் உள்ள ஏசாயாவின் புத்தகமானது, வேதபாரகர்கள் ‘adonay (Lord) என்ற வார்த்தையை yahweh (God) என்ற வார்த்தைக்கு மேலாக எழுதினார்கள்’[1] என்பதைக் காண்பிக்கின்றது. அவ்வழி முறையில், சொல்வதற்குரிய பெயருக்குப் பதிலாக “கர்த்தர்” என்று கூறும்படி வாசகர்கள் நினைவூட்டப் பட்டார்கள். மோசேக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய நாமமானது ‘‘இருக்கின்ற’’ என்ற வினைச் சொல்லின் ஒரு வடிவமான “Yahweh” என்பதாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், தேவன் ‘‘இருக்கின்றவராக’’ அல்லது ‘‘இருப்பவராக’’த் தம்மை மோசேக்கு வெளிப்படுத்தினார், அது இருக்கின்ற ஒருவரைக் குறிக்கும்.

இந்த நாமத்தை இயேசு தம்மைக் குறிக்கப் பயன்படுத்திய போது, யூதர்கள் மத்தியில் எழுந்த கோபத்தையும் மூர்க்கத்தையும் நாம் அரிதாகவே

புரிந்து கொள்ள முடிகின்றது: "அதற்கு இயேசு: 'ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கின்றேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்றார். அப்பொழுது அவர் மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள்" (யோவா. 8:58, 59அ). இது முடிவான ஒரு அறிவிப்பாய் இருந்தது. இதைக் காட்டிலும் உயர்வான உரிமைகோருதல் ஏற்படுத்தப்பட முடியாது.

கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் பிரதிபலிக்கப்பட்டுள்ளபடி, *ego eimi* ("நான் இருக்கிறவர்") என்பது தேவனுக்குக் குறிப்பாக இருப்பதுடன், தேவன் தம்மைப் பற்றி எபிரெய பாஷையில் வலியுறுத்தும் வகையில் *'ani'ani hu* ("நானே அவர்") என்று பேசியதன் மொழிபெயர்ப்பாகவும் இருக்கின்றது (உபா. 32:39). இந்தக் கூற்றானது வலியுறுத்தமுள்ளது என்பதைத் தவிர வேறு வழியில் அறிவுக் கேற்ப ஆலோசிக்கப்பட முடியாது. NIVயில் "நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறேன்" (I tell you the Truth) என்றுள்ள சொற்றொடரானது, மூலத்தில் "ஆமென், ஆமென்" என்றுள்ளது, இது KJVயில் "Verily Verily" என்றும், RSVயில் "truly truly" என்றும் தமிழில் "மெய்யாகவே, மெய்யாகவே" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[2]

இருப்பினும், யூதர்கள் அவரை விசுவாசிக்கவில்லை. அவருடைய உரிமைகோருதலைத் தேவதூஷணம் என்று அவர்கள் கருதினார்கள். தேவதூஷணமானது கல்லெறிதல் என்ற தண்டனையால் மரணம் தருவதற்கான குற்றமாய் இருந்ததால் (லேவி. 24:16), அவர்கள் ரோமானியச் சட்டத்தால் (யோவா. 18:31) அனுமதிக்கப்படாதிருந்த செயலைக் கூட்டமாய்க் கூடிச் செய்து முடிக்கத் தேடினார்கள்.

எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு, "நான் இருக்கிறேன்" என்ற சூத்திரத்தைப் பின்வருமாறு பேசுவது தகுதியுள்ளதாய்க் காணப்படுகின்றது: "இது இயேசு தம்மைப் பற்றியே அறிவித்துக் கொண்ட தைரியமான அறிவிப்பு ஆகும். 'நான் இருக்கிறேன்.' இது, 'நான் எங்கு இருக்கிறேனோ, அங்கு தேவன் இருக்கிறார், அங்கு தேவன் வாழ்கிறார், பேசுகிறார், அழைக்கிறார், கேட்கிறார், செயல்படுகிறார், முடிவெடுக்கிறார், அன்பு கூருகிறார் ...' இதைக்காட்டிலும் தைரியமாய் எதுவும் கூறப்படவோ, கற்பனை செய்யப்படவோ முடியாது" (E. Stauffer, *இயேசுவும் அவரது வரலாறும்* என்ற நூலில்).

ஆழ்ந்தறிவுள்ள, இக்கூற்றானது அடிப்படையில் ஒரு அறிக்கையாய் இருப்பதில்லை. அதைக் காட்டிலும் அதிகமானதாய் இருக்கின்றது. இது திகைப்பூட்டும் ஒரு அறிவிப்பாகும். இது தெய்வீகத்துவமுடையவர் கூறிக் கொள்ளும் மொழிநடையாகும் (எ.கா. ஏசா. 41:4). இதை மனதில் கொண்டிருந்தால், இயேசுவின் வாழ்வில் பல கூற்றுக்கள் விசேஷ குறிப்பிடுதல்களால் செறிவூட்டப்பட்டவையாகின்றன: "ஜீவ அப்பம் நானே", "நானே உலகின் ஒளி", "ஆட்டு மந்தைக்கு வாசல் நானே", "நானே நல்ல மேய்ப்பன்", "நானே உயிர்த்தெழுதல்", "நானே ஜீவன்", "நானே வழி", "நானே சத்தியம்", "நானே மெய்யான திராட்சச் செடி" (யோவா. 6:35; 8:12; 10:7, 11; 11:25; 14:6; 15:1) ஒருவர் எப்படித் தம்மைப் பற்றி இப்படிப்பட்ட கூற்றுக்களைக் கூற முடியும்? இயேசு ஒரு வெறியராகவோ, பித்தம்

*கொண்டவராகவோ அல்லது தேவனாகவோ இருந்தார் என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். இந்த விபரங்களை ஒருவர் வாசித்து, இவற்றை விசுவாசித்து அதன் பிறகு, இயேசுவை ஒரு வெறியரென்றோ அல்லது பித்தம் கொண்டவரென்றோ கூறும் எவரும், இயேசுவைப் பற்றிக் கூறுவதற்கும் அதிகமாகவே தம்மைப் பற்றிக் கூறுகின்றவர் ஆவார்.*

## அவரது தெய்வீகத்துவம் உறுதிப்படுத்தப்பட்டது

*இயேசு ''நானே இருக்கிறவர்'' என்று கூறிய போது, மற்றவர்கள் வழக்கமற்ற முறையில் செயல்பட்டதை இயேசுவின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சியொன்று காண்பிக்கின்றது. காட்டிக் கொடுத்தவனான யூதாஸ், படை வீரர்கள் மற்றும் யூத மதத் தலைவர்கள் கொண்ட ஒரு குழுவை, இயேசுவைத் தேடும்படிக்கு கெத்சமெனே தோட்டத்திற்கு வழி நடத்தினான். அங்கு அவர்கள் அவர் தம் சீஷர்களுடன் இருக்கக் கண்டனர். இயேசு அவர்கள் யாரைத் தேடி வந்தார்கள் என்று அவர்களிடத்தில் கேட்டார் (யோவா. 18:4). அவர்கள் "நசரேயனாகிய இயேசுவை" என்று கூறிய பொழுது, அவர் "Ego eimi" ("நானே இருக்கிறவர்", இது பல பிரதிகளில் ''நானே அவர்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) என்று பதில் அளித்தார். இந்த ஆயுதமேந்திய படைக் குழுவும், மத முக்கியஸ்தர்களும் இயேசு தம்மை கலிலேயாவிலிருந்து வந்த நாடோடியான/சுற்றித் திரிகின்ற ரபீ என்று மட்டுமே கூறியதாகப் புரிந்து கொண்டார்களா? அப்படியென்றால், அவர்கள் ஏன் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள்? (யோவா. 18:2-8). இகழப்பட்ட பகுதியொன்றில் இருந்து வந்தவரும், எருசலேமின் மதநிர்வாகத்தினரால் ஏளனம் செய்யப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டிருந்த இந்தப் பழைமை வாதமற்ற ரபீயிடம் அவர்கள் பயப்படத் தக்க மற்றும் அச்சுறுத்தக்கூடிய சிலவற்றை அவர்கள் கண்டார்களா? அரிது! அவர்கள் கண்டது மனதில் ஆழப்பதியும் ஒரு உருவமாகும். அவர்கள் கேட்டது - "Ego eimi" என்ற - தெய்வீக மொழியாகும். அதை அவர் இருமுறை கூறினார்! "அவர்" என்ற பிரதிப் பெயர்ச் சொல்லானது மொழிபெயர்ப்பாளர்களால் கொடுக்கப்பட்டுள்ளது. கிரேக்க வசனத்தில் இது இல்லை. வேதாகமங்களில் சாய்வெழுத்துக்களில் உள்ள வார்த்தைகள் வேதவசனப் பகுதியுடன் சேர்க்கப்பட்டவைகள் என்ற குறிப்பைச் சுட்டிக்காட்டுவது இதைச் சரி பார்க்கும். தெளிவுரை வேதாகமங்கள் பெரும்பாலானவற்றில் உள்ள குறிப்புகளும் ''அவர்'' என்ற வார்த்தையானது மூலத்தில் இல்லாததைச் சுட்டிக்காட்டும்.*

*முந்திய வேளைகளில், இயேசு தம் உரையைக்கேட்ட யூதர்களிடத்தில், பரலோகத்தின் பிதாவுடன் தமக்குள்ள தனிச் சிறப்பான உறவுமுறையை விளக்கப்படுத்தியிருந்தார். அவர், தாம் மேலிருந்து வந்தவர் என்றும் அவர்கள் தாழ்வில் இருந்து உண்டானவர்கள் என்றும் வலியுறுத்தியிருந்தார். அவர்கள் தங்கள் பாவங்களின் காரணத்தால், தாம் செல்லும் இடத்திற்கு வர முடியாது என்று கூறியிருந்தார். இருப்பினும், "நானே அவர் என்று*

நீங்கள் விசுவாசியாவிட்டால், உங்கள் பாவங்களிலே சாவீர்கள்”[3] என்று கூறியதன் மூலம் அவர்களுக்கு அவர் ஒரு பரிகாரத்தை அளித்திருந்தார்/ வைத்திருந்தார். இயேசு அதை முழுமையாக அவர்களுக்கு முன் வைத்தார். “நானே இருக்கிறேன்” என்பதன் கேள்வியானது ஆர்வமுள்ள இறையியல் பகுதி விஷயமாக மட்டும் இனியும் இருப்பதில்லை.

இன்றைய நாட்களிலும் அது அப்படியிருக்க முடியாது. இயேசு “இருக்கிறேன் என்பவராக” இருக்கிறார். அவரது பிதா “இருக்கிறேன் என்பவராக” இருக்கிறார். இது தெய்வீகத்துவத்தின் மொழியாகும். இயேசுவின் தெய்வீகத்தில் விசுவாசக் குறைபாடுள்ள எதுவும் அவரிடத்தில் சேரும் மற்றும் அவரது பரலோக இல்லத்தில் சேரும் கதவை அடைத்து விடுகின்றது.

தெய்வீகத்துவமானவர் என்ற வகையில், இயேசு தம்மை மேசியாவாக அடையாளப்படுத்தினார். தெய்வீகத்துவமானவர் என்ற வகையில், இயேசு தம்மை யூதர்களின் அரசராக அடையாளப் படுத்தினார். தெய்வீகத்துவமானவர் என்ற வகையில், இயேசு தம்மை மனுஷகுமாரனாக அடையாளப் படுத்தினார். தெய்வீகத்துவமானவர் என்ற வகையில், இயேசு தம்மைத் தேவகுமாரனாக அடையாளப்படுத்தினார். தெய்வீகத்துவ மானவர் என்ற வகையில், இயேசு பாவிகளைத் தேடவும் இரட்சிக்கவும் இந்த உலகத்திற்கு வந்தார். இயேசு, குமாரனாகிய தேவனாகவே இருந்தார்.

இந்த அடையாளப்படுத்துதல்கள் யாவும் அவர் மாம்சம் என்ற திரையில் இருந்த போது ஏற்படுத்தப்பட்டன. அவை யாவும் தேவனுடைய ஞானம், வல்லமை, மகிமை, அன்பு மற்றும் கிருபை ஆகியவற்றின் செயல் விளக்கங்களாயிருந்தன. இந்த அடையாளப் படுத்துதல்கள் யாவும் அவரது உயிர்த்தெழுதலினால் சரி பார்க்கப்பட்டு மற்றும் அதிகாரப்படுத்தப் பட்டன! இந்த மாம்சத்திரையானது அன்பான மற்றும் கிருபையான தேவனை மறைத்தும் வெளிப்படுத்தியும் இருந்தது. அடுத்து நாம் இயேசுவின் மனிதத்துவத்தைப் படிக்கையில், அந்த மாம்சத்திரையைப் பற்றி நாம் பரிசோதனை செய்வோம்.

---

குறிப்புகள்

[1]Miller Burrows, ed., *The Dead Sea Scrolls of St. Mark's Monastery*, vol. 1, "The Isaiah Manuscript and the Habakkuk Commentary" (New Haven: The American Schools of Oriental Research, 1950), Plate 22, line 20; Isaiah 28:16; etc. [2]NIV, RSV, KJV, NEB, JB *மற்றும் தமிழ் வேதாகமம் ஆகியவற்றில் யோவா. 8:58ஐக் காணவும். “சுவிசேஷ நூல்களில், இது* [*ஆமென், ஆமென்*] *என்பது இயேசுவால் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது, மற்றும் இது ஒரு தனிச் சிறப்பான கூற்றுக்கு முன் சொல்லாகவே எப்பொழுதுமே இருந்துள்ளது. இது அவைகள் மேன்மையானவைகள், உண்மையானவைகள்*

*மற்றும் முக்கியமானவைகள் என்று அடையாளப்படுத்துவதாக ஆராயாமலே ஏற்றுக்கொள்ளப்படுவதற்கானவைகளாய் உள்ளன. ஆமென் என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதென்பது ஒருவரது சொந்த வார்த்தைகள் அதாவது இயேசுவின் சொந்த வார்த்தைகளாய் அறிமுகப் படுத்தப்பட்டதாகும், இதற்கு இணையான யூதப் பயன்பாடு எதுவும் உண்மையில் காண்பிக்கப்படவில்லை.”* [3]*யோவா. 8:21-34.*

# பகுதி III:
# திரு அவதாரத்திற்குப் பின் அவரது மனிதத்துவம்

*இயேசுவின் தெய்வீகத்துவம் இல்லாமல் நாம் படைக்கப்பட்டிருக்க முடியாதென்றும், அவரது மனிதத்துவம் இல்லாமல் நாம் இரட்சிக்கப் பட்டிருக்க முடியாது என்றும் நாம் கூறியிருக்கின்றோம்.*

*இயேசுவின் தெய்வீகத்துவத்தைக் குறித்து நாம் கணிசமான அளவு கண்டோம். இது எப்படியிருக்க வேண்டுமோ அப்படியே இருக்கின்றது. தேவை இருக்கின்றது. உதாரணத்திற்கு, அமெரிக்காவைக் கவனியுங்கள். "அமெரிக்க வாழ்வில் மதமானது தனது செல்வாக்கை அதிகரித்துள்ளதா அல்லது குறைத்துள்ளதா?'' என்ற கேள்வியுடன் சமீபத்தில் ஒரு வாக்கெடுப்பு நடைபெற்றது. பதில் அளித்தவர்களில் 21 சதவிகிதம் பேர், மதம் தனது செல்வாக்கில் அதிகரித்துள்ளது என்று கூறினார்கள்; 65 சதவிகிதம் பேர், மதம் தனது செல்வாக்கில் குறைந்து வருகின்றது என்று கூறினார்கள். முன்னணியில் உள்ள தேசீய* pollster *ஆன ஜார்ஜ் கேல்லப்,* Jr. *அவர்கள், "அமெரிக்க நாடு வேதாகமக் கல்வியறிவற்றவர்களின் நாடாகும். அமெரிக்கர்கள் பெரும்பாலோர் தாங்கள் எதை அல்லது ஏன் நம்புகின்றார்கள் என்று அறியாதிருக்கின்றனர்'' என்று கூறியதாக ஜெஃப்ரி* L. *ஷெலர் அவர்கள் தம்முடைய* "Spiritual America" *என்ற நூலில் கூறுகின்றார். "கிறிஸ்தவத்தை"த் தங்களின் விசுவாசம் என்று அறிக்கையிடும் பலரைப் பொறுத்தமட்டில் அது உண்மையென்றால், கிறிஸ்துவத்தை எந்த வடிவத்திலும் உரிமைகோராமல் இன்றைய நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களின் நிலை என்ன? ஆம், இயேசுவே குமாரனாகிய தேவன் என்று நம்பச் செய்கின்ற ஆய்வுப் பாடம் ஒன்றை முன் வைப்பது அவசியமாய் இருக்கின்றது.*

*இருப்பினும், நசரேயனாகிய இயேசு நம்மைப் போல் மனிதத்துவத்தில் இருந்தார் என்பதை விளக்குவதன் அவசியத்தையும் நாம் காண்கின்றோம். மன்னிக்கும் மீட்பர் உண்மையிலேயே பாடுபட்டு, சோதனைகளை எதிர்த்து நிலைநின்றார் என்பது பற்றிய புரிந்து கொள்ளுதலை பின்பு எவ்விதத்தில் நாம் பெற முடியும்?*

> *அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற் கேதுவாக, தேவ காரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு, எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் (எபி. 2:17, 18).*

*தேவன் மாம்சத்தில் உடனுறைய முடியாதாகையால், இயேசு ஆவியில் மட்டுமே இருந்தார் என்று சிலர் போதித்துள்ளனர். இதற்கு மாறாக, இயேசு மாம்சத்தில் இருந்தார். அவர் பசியாய் இருந்தார் (மத். 4:2); அவர் தாகமாய் இருந்தார் (யோவா. 19:28); அவர் இளைப்படைந்தார் (யோவா. 4:6). அவரது பூமிக்குரிய சரீரமானது கண்ணீரை (யோவா. 11:35), வியர்வையை (லூக். 22:44) மற்றும் இரத்தத்தை (யோவா. 19:34) வெளிப்படுத்தியது.*

*இயேசுவோடு இருந்தவர்கள் அவர் ஒரு அசாதாரணமான மனிதராயிருந்தார் என்பதை அறிந்திருந்தார்கள், ஆனாலும் அவர் ஒரு மனிதர் என்பதில் அவர்கள் எவ்வித சந்தேகமும் கொண்டிருந்ததில்லை.*

# வேதாகமத்திற்குப் புறம்பே சாட்சியளிக்கப்பட்ட வகையில் அவரது மனிதத்துவம்

*இயேசுவின் தெய்வீகத்துவத்தைப் பற்றி நாம் மிகவும் விரிவாகக் கண்டோம். தெய்வீகத்துவத்தைப் பற்றி நாம் பேசும் பொழுது, மிகவும் மேலானவராயிருக்கின்ற தேவனைப் பற்றி நாம் பேசுகின்றோம். தேவனை நபர்த்துவத்தில் அடையாளப் படுத்துவதற்கு நாம் விரும்பும் பொழுது, பிதாவாகிய தேவனை, குமாரனாகிய தேவனை அல்லது பரிசுத்த ஆவியானவராகிய தேவனைப் பற்றிப் பேசுகின்றோம். இயேசு, குமாரனாகிய தேவனாயிருக்கிறார் என்று நாம் கண்டிருக்கின்றோம். இயேசு, திரு அவதாரம் எடுத்த தேவனாக, மாம்சத்தில் வந்த தேவனாக இருக்கின்றார். டொஸேட்டிக்ஸ் (Docetics) என்பவர்கள் இயேசுவின் மனிதத்துவத்தைப் புறக்கணிக்கின்றனர், ஏனென்றால் தேவன் (தூய ஆவியானவர்) தம்மை அசுத்தமான பொருளுடன் (மாம்சத்தில்) அவ்வளவு நெருக்கமாய் அடையாளப்படுத்திக் கொள்ள முடியாது என்று அவர்கள் நம்புகின்றனர். அது மத எதிர்ப்புக் கொள்கையாய் இருந்தது; அது இன்னமும் உள்ளது. ஏன் இந்த குழப்பம்? தேவன் இரட்சகராயிருப்பதில்லையா? இயேசு மனிதராயிருந்தார் என்பதைப் புரிந்து கொள்ளுவது ஏன் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கின்றது?*

*இயேசுவின் மனிதத்துவமானது, தேவன் மனித குலத்தை மீட்பதற்காக மாம்சத்தில் வந்தார் என்ற திகைப்பூட்டும் உணர்ந்தறிதலை நமக்குக் கொண்டு வருகின்றது. இரத்தத்தில் உயிர் இருக்கிறது என்று ஆதிகாலத்தில் இருந்தே மனிதருக்குப் போதிக்கப்பட்டுள்ளது. பாவங்களுக்கான பலியில் இரத்தம் சிந்துதல் அவசியமாய் இருந்தது. இருப்பினும் விலங்குகளின் இரத்தம் பாவத்தை நீக்க முடியாததாயிருந்தது (லேவி. 17:11; எபி. 10:4). ஆகையால் நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள முடியாத நமது பாவம் நிறைந்த நிலையில் இருந்து நம்மை இரட்சிப்பதற்கு குமாரனாகிய தேவன் முழுமையான, பாவமற்ற தகுதி பெற்ற, எல்லையற்ற பயன் மிக்க இரத்தப்பலி ஒன்றை அளித்தார் (எபி. 9:11-14). இதைக் குறித்துக் கொள்ளுங்கள்! சிலுவையின் மீது சிந்தப்பட்ட இரத்தம் ஏதோ ஒரு வகையான "தெய்வீக" இரத்தம் அல்ல. அந்த உடல் மனிதத்துவத்திற்கு மேம்பட்ட உடல் அல்ல. சிலுவையில் இயேசுவின் மரணம் என்பது தேவனுடைய*

மரணம் அல்ல. அது ஒரு மனித உயிரின் மரணமாகவே இருந்தது, ஒரு மனிதரின் மரணமாகவே இருந்தது. அது ஒரு அவசியமான பலியாக இருந்தது. (இதை விட மலிவான பலி போதுமானதாய் இருந்திருந்தால் பிதா வானவர் தமது குமாரனை இதற்கு உட்படுத்தியிருப்பாரா?) ஆகையால், இயேசுவின் மனிதத்துவத்தை மறுப்பது என்பது உண்மையில் நமது சொந்த இரட்சிப்பையே மறுப்பதென்பதாகும். இயேசுவின் தெய்வீகத்து வத்தையும், அவரது மனிதத்துவத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ள நாம் இப்பொழுது, அவரது வரலாற்றுத்துவத்தையும் மற்றும் அவரது மனிதத்துவத்தையும் வலியுறுத்தும் பதிவுகளுக்குத் திரும்புவோம்.

குமாரனாகிய தேவனைப் பற்றி வேதாகமம் கூறுவதென்ன என்பதிலேயே நாம் அடிப்படை ஆர்வம் உள்ளவர்களாய் இருக்கின்றோம். இருப்பினும், நான் பல பத்தாண்டுகளாகப் பிரசங்கித்து மற்றும் போதித்து வந்திருக்கும் வேளையில், இயேசு இருந்தார் என்பதற்கு வேதாகமத்திற்குப் புறம்பே ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்று என்னிடத்தில் அடிக்கடி கேட்கப்பட்டுள்ளது. உலகத்தில் இயேசுவின் பிரசன்னத்தின் செல்வாக்கு நம்மிடையே உள்ளது என்பதற்கு ஆண்டுக் கணக்கீட்டு முறையானது ஒரு விளக்கமாக இருக்கின்றது!

கேள்வி கேட்பவர்கள் இலக்கியம் சார்ந்த ஆதாரத்தை விரும்புகின்றனர். கிறிஸ்துவின் வாழ்வு குறித்து "வேதாகமத்திற்குப் புறம்பே" ஆதாரங்கள் உள்ளதா என்பது பற்றி ஆச்சரியப்படுகின்றவர்களின் பயன்பாட்டிற்காக, காலத்தின் அழிவுகளினூடே தப்பிப் பிழைத்துள்ள ஒரு சில எழுத்து ஆதார மூலங்களை நாம் சுருக்கமாய்க் குறிப்பிடலாம். நாங்கள் இந்த ஆதாரங்களுக்கு அர்த்தம் சொல்லவோ, அல்லது அதன் தரத்தை எடை போடவோ செய்யவில்லை என்பதை தயவு செய்து கவனியுங்கள். வேதாகமத்திற்குப் புறம்பே கூட இயேசு குறிப்பிடப்படுகின்றார் என்பதற்கான ஆதாரமாக மட்டுமே இவைகளை நாம் கொடுக்கின்றோம்.

இயேசு ஒரு யூதராக ஜீவித்து, ஏறக்குறைய யூதர்கள் மத்தியில் மட்டுமே ஊழியம் செய்திருந்ததால், இயேசு வாழ்ந்தார் என்பதை மறுக்கும் இடர்ப்பாடுள்ள பணியை எந்த ஒரு யூத மூல ஆதாரமும் தேர்ந்து கொள்ளவில்லை என்பது கவனிக்க ஆர்வமுள்ள விஷயம் ஆகும். இதற்கு எதிரிடையாக, வேதாகமத்தை விடுத்து, மற்றுள்ள யூத மூல ஆதாரங்கள் அவர் வாழ்ந்தார் என்றே சுட்டிக் காட்டுகின்றன. உதாரணமாக கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த யூத வரலாற்றாளரான யோசிப்பஸ் அவர்கள் தம்முடைய "யூதர்களின் பண்டைக் காலங்கள்" (Antiquities of the Jews) என்ற நூலில் பின்வருவதைப் பதிவு செய்துள்ளார்.

> மற்றும் ஏறக்குறைய இந்த வேளையில், நாம் மனிதர் என்று அழைக்க வேண்டுமென்றால், இயேசு என்ற ஞானமுள்ள மனிதர் ஒருவர் எழும்பினார். ஏனெனில் அவர் வியக்கத்தக்க செயல்களை (அற்புதங்களை)ச் செய்பவராயிருந்தார், சத்தியத்தைச் சந்தோஷத் தோடு ஏற்றுக் கொண்ட மனிதர்களுக்கு ஒரு போதகராய் இருந்தார். அவர் பல யூதர்களையும், பல கிரேக்கர்களையும் கூட வழி

நடத்தினார். இந்த மனிதர் கிறிஸ்துவாயிருந்தார்.[1]

ரோமானிய எழுத்தாளர்களிடமிருந்து வரும் ஆதாரமும் கூட, இயேசு உண்மையிலேயே ஒரு வரலாற்று நபராகவே இருந்தார் என்பதைக் காண்பிக்கின்றது. முதல் நூற்றாண்டின் திருப்பத்தில் சுமார் (கி.பி.) 120 வரை டேசிட்டஸ் என்ற ரோம வரலாற்றாளர் ஒருவர் வாழ்ந்து வந்தார். கி.பி. 64ல் ரோமாபுரியின் பெரும்பகுதியை அழித்திருந்த தீயைப் பற்றி அவர் எழுதிய போது, அந்தப் பயங்கர நிகழ்ச்சிக்கு ரோமாபுரியில் வாழ்ந்திருந்த கிறிஸ்தவர்கள் மேல் குற்றம் சாட்டுவதற்கு நீரோவின் முயற்சியைப் பற்றி டேசிட்டஸ் எழுதினார்:

> இதன் விளைவாக, [ரோமாபுரிக்குத் தீ வைத்து விட்ட தாகத் தம்மேல் குற்றம் சாட்டப்பட்டதிலிருந்து] தப்பிப்பதற்காக, நீரோ தங்களின் அருவருப்புகளுக்காக வெறுக்கப்பட்ட ஒரு இனமான, மக்களால் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள்மேல் அந்தக் குற்றத்தை ஒட்ட வைத்து, அவர்களை மிகவும் கொடிய வாதனைகளினால் உபத்திரவப் படுத்தினார். அவர்களின் பெயர் தொடக்கம் பெற்ற நபரான கிறிஸ்து என்பவர் திபேரியு ராயனின் ஆட்சிக் காலத்தில், நமது ஆளுநர்களில் ஒருவராயிருந்த பொந்தியு பிலாத்துவின் கரங்களில் மிகக் கடுமையான தண்டனையடைந்திருந்தார் ... (Tacitus *Annals*, xv. 44).

யூத மற்றும் ரோம ஆதார மூலங்களில் இருந்து மற்ற சாட்சியங்களும் குறிப்பிடப்பட முடியுமென்றாலும், இங்கு கொடுக்கப்பட்டுள்ளவைகள் நமது நோக்கத்தை நிறைவேற்றப் போதுமானவைகளாகும். இயேசு என்பவர் ஒரு குறிப்பிட்ட இடத்தில், வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் வாழ்ந்திருந்த மனிதர்ஆவார். இது வேதாகமத்திலிருந்தும், ஆதிகிறிஸ்தவ இயக்கத்திற்குப் பொதுவாக எதிர்ப்பாயிருந்த மனிதர்களால் எழுதப்பட்ட வேதாகமத்திற்குப் புறம்பான ஆதார மூலங்களில் இருந்தும் சரி பார்க்கப்படுகின்றது. சில ஆதார மூலங்கள் விமர்சகர்களால் தாக்கப்பட்டிருந்தாலும், வரலாற்று ரீதியான இயேசுவானவர் வேதாகமமில்லாத ஆதார மூலங்களிலும் பேசப்பட்டார் என்ற உண்மை இன்னமும் நிலை நிற்கின்றது இயேசு உண்மையில் ஒருபோதும் இருந்திருக்கவில்லையென்றால் இயேசுவை, பிலாத்து மற்றும் திபேரியு போன்ற வரலாற்று நபர்களுடன் தொடர்பு படுத்தி யோசிப்பாஸ் மற்றும் டேசிட்டஸ் போன்ற எழுத்தாளர்கள் எழுத வேண்டிய அவசியம் என்ன?

பழங்கால மதச் சட்ட நூல்கள் இயேசுவை, “பெரிதளவில் தேவன், பெரிதளவில் மனிதன்” (“Very God and Very man”) என்று விவரிக்கின்றன. இதுவே கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையாகவும் சாராம்சமாகவும் இருக்கின்றது. கிறிஸ்தவம் அமர்ந்துள்ள இந்த மேல் வளைவான சத்தியமானது பழைய ஏற்பாட்டுப் பாடக் கருத்துக்களை அதிகமாய்ப் பயன்படுத்திய சுவிசேஷத்தின் தொடக்க கால அறிவிப்பில் இருந்தும், கி.பி. முதல் நூற்றாண்டின் கடைசிப் பாதி வரையிலும் முற்றிலும் தொடர்ந்திருந்ததாகத் தோன்றும் வேதவசனப் படிப்பில் இருந்தும்

பெறப்பட்டதாகும்.

---

குறிப்புகள்

[1]Josephus *Antiquities* xviii. 3.3.; quoted in Everett F. Harrison, *A Short Life of Christ* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1968), 17.

# இயேசுவின் சரீரப் பிரகாரமான அமைவு

*இயேசுவை ஒரு மனிதப் பிறவி என்ற வகையில் நாம் நோக்கும் பொழுது, அவரை நம்மில் ஒருவராக நாம் கருதுகின்றோம்! மனிதராக இருப்பது என்றால் அது அர்த்தப் படுத்துவது என்ன? அந்தக் கேள்விக்கான பதிலானது இந்த யுகத்தில் மிகப் பரந்து விரிந்த அளவில் உள்ளது. ஆகையால், நாம் கவனமாய்ச் செயல்பட வேண்டும். வேதாகமத்தை நமது வழிகாட்டியாகப் பயன்படுத்தி, நமது கேள்விக்கான அளவெல்லைகளை நமக்கு முன் இருக்கச் செய்ய 168ஆம் பக்கமுள்ள வரைவட்டவணையைக் காண்போம்.*

*நவீன காலங்களில், முன்னேறிய சமூக அறிவியல்கள், அதிலும் விசேஷமாய் உளவியலானது வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ள நபர்த்துவத்தின் பரிசுத்தமான கருத்திடம், கடைசியில் வந்து சேர்ந்துள்ளது. மனிதப் பிறவிகள் என்ற வகையில் நாம் எவ்வாறு உள்ளோம் என்ற பன்மைத்துவச் சித்தரிப்பானது உயர்தரமான எபிரெய வார்த்தையான nephesh என்பதினால் விரிவாக விளக்கப் படுகின்றது. இது NIVயில் 150 வழிமுறைகளுக்கும் மேற்பட்ட அளவில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள அளவுக்கு பரந்த பொருளுடைய தாயிருக்கின்றது.[1] இது கிரேக்கத்துவத்தில் காணப்படும் மனிதகுலம் பற்றிய பழங்கால இருமைக் கண்ணோட்டத்திற்கு முற்றிலும் வித்தியாச மானதாகும். வரைவட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரந்த கண்ணோட்டமானது, மனிதர்களைப் பற்றி நாம் படிக்கும் போது இயேசுவின் மனித வாழ்க்கை உட்பட நாம் தேடுகின்றவைகளாகவே உள்ளது.*

## இயேசுவின் உடல்

*இயேசு ஒரு மனித உடலுடன் இந்த உலகிற்கு வந்து சேர்ந்தார். அவரது தோற்றமானது திகைப்பூட்டுவதாக இருந்ததில்லை. ஒரு ஆரோக்கியமான ஆண் குழந்தையில் காண்பதற்கு ஒருவர் எதிர்பார்க்கின்ற இயல்பான பண்புகள் யாவற்றையும் அவர் கொண்டிருந்தார். மற்ற எல்லா பிறப்புக்களும் எதிர்பார்க்கப்படுவது போலவே அவரது பிறப்பும் சுமார் ஒன்பது மாத கர்ப்ப காலத்திற்குப் பின்பே எதிர்பார்க்கப்பட்டது. அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பேணி வளர்க்கப்பட்டார். அவர் பிறந்த எட்டாம் நாளில் அவருக்கு விருத்தசேதனம் செய்விக்கப்பட்டு,*

*இயேசு என்று பெயரிடப்பட்டார். ஆண்டுகள் கடந்த பொழுது அவரது மனித உடல் பலத்து வளர்ந்தது. அவர் உயரத்தில் வளர்ச்சியடைந்தார். அவர் நன்கு சரி செய்யப்பட்ட, முழு வளர்ச்சியுற்ற மனிதராகப் பக்குவப்பட்டார். சுமார் முப்பது வயதில் இயேசு தமது சரீரத்தை யோர்தான் நதியில் தம் உறவினரான யோவான் ஸ்நானனிடம் ஞானஸ்நானம் பெறும்படி கீழ்ப்படுத்தினார் (லூக். 2:4-7, 21, 40, 51, 52; 3:23; மத். 3:13-15).*

*இயேசு தம் சொந்த ஊழியத்தின் போது அவரது உடலானது நம் எல்லாருக்கும் பொதுவானவைகளாய் உள்ள இயல்பான பாதிப்புகளுக்கு உட்பட்டதே என்று காண்பித்தார். அவர் இளைப்படைந்தார், மற்றும் தாகமுற்றார். இயேசுவின் பயணங்களில் பெரும்பாலானவை நடைப் பயணங்களாகவே இருந்தன என்பது தெளிவு. அப்படிப்பட்ட ஒரு பயணத்தில் அவர் இளைப்படைந்து, தண்ணீர் பருக விரும்பினார். மத்தியான வேளையில் அவர் சமாரியாவின் சீகார் என்ற ஊரில் இருந்த யாக்கோபின் கிணற்றண்டையிலே வந்து சேர்ந்தார். அவர் அங்கு இளைப்பாறியிருந்து, தண்ணீருக்காகக் காத்திருந்தார். கடைசியில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி தண்ணீர் மொள்ளுவதற்கு வந்தாள். யூதர்கள் சமாரியர்களைச் சுத்தமற்றவர்கள் என்று கருதி வந்ததை அவள் அறிந்திருந்ததால், இயேசு, "தாகத்துக்குத் தா" (யோவா. 4:8) என்று கேட்ட பொழுது அவள் அதிர்ச்சியடைந்தாள்.*

*இந்த நிகழ்ச்சியானது யோவான் சுவிசேஷத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தாலும், இயேசு அந்தப் பெண்ணுடனும், அந்தக் கிராமத்திலிருந்த சமாரியர்களுடனும் பகிர்ந்து கொண்ட அற்புதமான போதனையினால் இயேசுவின் வாழ்க்கையில் நடந்த இந்த நிகழ்ச்சியானது புகழ் பெற்றதாயிற்று. களைப்போடும் தாகத்தோடும் வந்த இந்த மனிதர் ஒரு தீர்க்கதரிசியாக அல்லது ஒருவேளை மேசியாவாகக் கூட காணுமளவுக்குச் சமாரியர்களுக்குப் போதித்ததை நாம் அவர்களுடன் நின்று கேட்கையில் இந்த நிகழ்ச்சி முழுவதும் அதிகம் வளமை யுடையதாகின்றது. மிக நீண்ட காலத்திற்கு முன் Yhoshua' (யோசுவா என்பதற்கான எபிரெய வார்த்தை=தேவன் இரட்சிக்கின்றார்) என்ற வார்த்தையானது எதை அர்த்தப்படுத்தியிருந்ததோ அந்த ஆச்சரியம் நிறைந்த விஷயத்தையே இவரது பெயரான Yeshua' (இயேசு என்பதற்கான எபிரெய வார்த்தை = இரட்சகர்) என்பதும் நமக்கு அர்த்தப்படுத்துகிறது என்பது நம் சிந்தையில் உதிக்கின்றது (யோவா. 4:4-42).*

*மனித குடும்பத்தின் உறுப்பினர்களிடையே காணப்படும் மகிழ்ச்சியற்ற இரண்டு பொதுவான விஷயங்கள் பெருந்துயரமும் மரணமும் ஆகும். சபை என்ற தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் என்ற வகையில், நாம் விசுவாசத்தில் நிலைத்திருந்தால் நாம் சகித்திருக்கக் கூடிய அளவே உபத்திரவம் வரும் என்று நமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. மற்றும், கர்த்தர் முதலில் வந்து விட்டால் மட்டுமே நாம் மரணத்தை எதிர் கொள்ளாது விட்டு விடுவோம் என்றும் நமக்குக் கூறப் பட்டுள்ளது (எபி. 9:27).*

## நமது மனிதப் பகுதிகள்

*உபா. 6:4, 5; லேவி. 19:10ஆ; மாற். 12:29-31*

இயல்பானது/பொருள் சார்ந்தது

**உணர்வு வசப்படுகின்ற, உணர்வுப்பூர்வமான**
"இருதயம்" *(Gk.: kardia)*
*மாற்கு 12:30*

**உடல் ரீதியான**
"பலம்" *(Gk.: ischus)*
*மாற்கு 12:30*
"மாம்சம்" (Gk.: *sarx*)
*லூக்கா 24:39*

ஆவிக்குரியது/பொருள் சாராதது

"ஆவி" *(Gk.: pneuma)*
*மத்தேயு 26:41*

"ஆத்துமா" *(Gk.: psuche)*
*மாற்கு 12:30*

**மனம் சார்ந்த, சுபாவத்தின்படியான**
"மனது" *(Gk.: dianoia)*
*மாற்கு 12:30*
*(சுபாவம்) எபேசியர் 2:3*

**சமூகத்துவ**
"பிறன்" *(Gk.: plesion)*
*மாற்கு 12:31*
"அந்நியோந்நியம்"
*(Gk.: koinonia) அப். 2:42*

நாம் தேவனுடைய வசனத்தைப் படிக்கும் பொழுது, இயேசு மேற்சொன்ன இரு அனுபவங்களிலிருந்தும் விதி விலக்குப் பெற்றிருந்த தில்லை என்று நாம் காண்கின்றோம். மனித இனத்தின் இவ்விரு அடையாளங்களையும் அனுபவிப்பவர்கள் யாவருக்கும் முன்னணியில் அவர் நிற்பதை ஆழ்ந்த படிப்பொன்று நமக்குக் காண்பிக்கின்றது. உயிரியல் ரீதியாகப் பேசினால், கெத்சமெனே தோட்டத்தில் அவர் பெற்ற பெருந் துயரானது, அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழும் அளவுக்கு மாபெரும் வேதனையாய் இருந்தது. என்ன ஒரு கடுந்துயரம்! (1 பேது. 4:12-16; லூக். 22:44ஐக் காணவும்.)

மனித வரலாற்றின் மாபெரும் பிரிவுக் கோடாய் இருப்பது சிலுவையில் இயேசுவின் மரணம் ஆகும். இதைத் தொடர்ந்து வந்த உயிர்த்தெழுதலுடன் இந்த நிகழ்ச்சியானது நமது நித்திய அடைவிடத்தைத் தீர்மானிக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. கி.மு. மற்றும் கி.பி. என்பதைப் பயன்படுத்துவதன் மூலம் நாம் சிலுவையின் மையத்துவத்தை ஒப்புக் கொள்ளுகின்றோம். இது இந்த நிகழ்ச்சிக்கு முன்னும் பின்னும் உள்ள காலங்களின் எல்லா யுகங்களையும் கடந்து செல்லுகின்றது. சிலுவையில் இயேசுவின் மரணமானது அவரது மனிதத்துவத்தின் முற்றான ஆதாரம் ஆகும். அவர் இறந்த பிறகு, அவரது சடலமானது சிலுவையிலிருந்து அகற்றப்பட்டு, அடக்கத்திற்கு அவசரமாகத் தயாரிக்கப்பட்டு, கல்லறையில் வைக்கப்பட்டது (மத். 27:50; யோவா. 19:28, 30; லூக். 23:46, 50-53).

## இயேசுவின் உணர்வுகள்

நம்முடைய தொடர்புடைய உணர்வுகளை இயேசு வெளிப் படுத்தினார். நாம் மனிதர்களாய் இருப்பதால் மற்றும் அவர் மனிதராய் இருந்ததால், இந்தத் தயார் நிலை உறவானது திகைப்பற்றதாக வருகின்றது. அவர் மனிதராய் இல்லாதிருந்தால் மட்டுமே அது திகைப்புக்குரியதாய் இருந்திருக்கும். இருப்பினும், அவரது தெய்வீகத்துவத்திற்கான குறிப்பிட்ட சில போதனை அல்லது உதாரணத்தை நாம் தேடுகையில் அவரது மனிதத்துவத்திற்கான இந்த ஆதாரங்களை வாசித்துச் செல்வதற்குச் சுலபமாயிருக்கின்றது. இயேசு ஒரு மனிதர் என்ற வகையில் அவரது உணர்வு வெளிப்பாடுகளைப் பற்றிய பின்வரும் உதாரணத்தை நாம் கவனிப்போம். அவரிடத்தில் இன்னும் நெருக்கமாய் நாம் இழுக்கப்படுவோம்.

### அவரது அன்பு

அன்பே முதலாவது என்பதால் நாம் முதலில் அன்பைக் கவனிக்கின்றோம். உண்மையான அன்பு என்பது மனித ஆவியின் மிக உயர்ந்த வெளிப்பாடாக இருக்கின்றது, ஏனென்றால் இது, அன்பாய் இருக்கும் தேவனுடைய சாயலாக மனித உயிர் படைக்கப்பட்டது என்று காண்பிக்கின்றது. அன்புகூரச் செய்யும் நம் திறனின் ஆழம் மிக்க வெளிப்பாடானது தேவன் படைத்த உயிரினங்கள் எல்லாவற்றின் உச்சியில் நம்மை வைக்கின்றது. இந்தத் திறன் இல்லையேல், நாம் முழுமையான

மனிதர்களாக மாட்டோம்.

செல்வந்தனான ஒரு மனிதன் ஒருமுறை, நித்திய ஜீவனைப் பற்றிய சில கேள்விகளுடன் இயேசுவை அணுகினான். அதைக் கொடுப்பதற்கே இயேசு வந்ததால், இந்த மனிதனுடன் உரையாடலில் ஈடுபட அவர் விருப்பம்/சித்தம் கொண்டதை நாம் பாராட்டலாம். ஒளியூட்டும் அந்த உரையாடல் முழுவதற்குமான திறவுகோல் கருத்தானது, "இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து" (மாற். 10:21) என்ற கூற்றில் காணப்படுகின்றது (மாற். 10:21அ; 1 யோவா. 4:8; யோவா. 11:5 ஆகியவற்றையும் காணவும்).

இயேசுவின் கலிலேய ஊழியத்தின் போது, அவர் பன்னிரெண்டு மனிதர்களை அப்போஸ்தலர்களாகத் தேர்ந்தெடுத்தார். அந்த வேளையிலிருந்து இந்த மனிதர்களுக்குப் போதிப்பதும் பயிற்சியளிப்பதும் அவரது ஊழியத்தின் முக்கிய பாகங்களாயிற்று. அது அறைகூவல் விடுக்கும் செயல் முறையாய் இருந்தது. அவர்களை வளமூட்டி, ஒழுங்கு படுத்தி, ஒளியூட்டி மற்றும் கடிந்து கொள்ளுகையில் அவர் வியக்கத் தக்க பொறுமையை அவர்களிடம் காட்டினார். அவர் தமது "கால அட்டவணையின்" முடிவை நெருங்கிய பொழுதும் தமது ஊழியத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார், இந்தப் பதினோறு மனிதர்களும் தங்களுக்கு மரணமே நேர்ந்தாலும், இரட்சிப்பின் செய்தியை அறிவிக்குமளவு அவர்களை அவரால் உருவாக்க முடிந்ததற்கு இதுவே (அவர் ஊழியத்தைத் தொடர்ந்து செய்ததே) நிறைவான காரணம் என்று வேத வசனங்கள் நமக்குக் கூறுகின்றன. நினைவில் நிற்கும் கடைசி பஸ்கா நெருங்கிய பொழுது, இயேசு "தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே, முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்" (யோவா. 13:1ஆ) என்று யோவான் எழுதினார். அவரது அன்பின் முழு அளவுதான் என்ன? கெத்சமெனேயில் இயேசுவின் கடுந்துயரம் மற்றும் சிலுவையில் அவரது மரணம் ஆகியவை பற்றி முன்பு நாம் பேசினோம். அது கடுந்துயரமாயிருந்தது. அது "தம்முடைய ஒரே பேறான குமாரனை ... தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்த" (யோவா. 3:16) வருடைய அன்பின் மிகச் சிறந்த காட்சியாய் இருந்தது. இயேசுவின் மரணமானது "அவர்களுக்கு அவரது அன்பின் முழு அளவைக் காண்பித்தது." சிலுவையில் இயேசுவின் மரணமானது இந்த உலகம் அறிந்தவற்றிலேயே மாபெரும் மனித அன்பின் வெளிப்பாடு ஆகும், ஏனென்றால் அது பிதாவாகிய தேவனுடைய அன்பின் குறைவற்ற முன் மாதிரியாய் இருந்தது.

பூரண அன்பு நிறையும் பொழுது, மகிழ்ச்சிக்கான ஒவ்வொரு காரணமும் உள்ளது. இயேசு அன்பு மற்றும் சந்தோஷம் ஆகியவற்றை ஒன்றுகூட்டியே பேசினார். தேர்ந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்களிடத்தில் அவர், "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும் படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன். நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது" (யோவா. 15:11-12) என்று கூறினார். இயேசு அன்பையும் சந்தோஷத்தையும் தம் வாழ்க்கையில் வெளிப்படுத்தினார்.

அவர் அதற்கும் அதிகமானதைச் செய்தார். அவர் அன்பிற்கும் சந்தோஷத் திற்கும் அவைகளின் முடிவான அர்த்தங்களைக் கொடுத்தார்.

**அவரது மனதுருக்கம்**

மனதுருக்கம் என்பது மனிதப் பண்புகளில் மிகவும் விரும்பக் கூடிய ஒன்றாகும். இது நமக்கு வெளியே நமது மனிதத்தன்மையே நீட்டித்துக் காட்டும் நம் திறமையின் அடையாளம் ஆகும். அர்த்தமுள்ள உறவுகளை வளர்ப்பதில் மனதுருக்கம் என்பது கட்டமைப்புத் தொகுதிகளில் ஒன்றாக உள்ளது. நமது வாழ்வில் பரிவிரக்கத்தின்/மனதுருக்கத்தின் இன்றியமையாத பங்கை இயேசு வலியுறுத்தி, அது அவருக்கான நமது பணியை எவ்விதம் அதிகமாய் எடுத்துரைக்கும் என்பதையும் வலியுறுத்தினார். பசித்தவர் களுக்கு உணவளித்தல், தாகமுள்ளவர்களுக்குத் தண்ணீர் கொடுத்தல், அந்நியரை உபசரித்தல், நிர்வாணமானவர்களுக்கு ஆடையளித்தல் மற்றும் சிறையில் வாடுபவர்களைச் சென்று சந்தித்தல் ஆகியவை பற்றி உரைத்தார். இப்படிப்பட்ட செயல்கள் தமக்கே ஊழியம் செய்ததாகும் என்று இயேசு கூறினார். இதற்கு மறுபுறத்தில், கடின இருதயத்துடன் இருப்பவர்கள் மோசமான முடிவடைவார்கள் என்றும் இயேசு கூறினார் (மத். 25:34-46).

மனதுருக்கம் என்பது இயேசுவின் சொந்த ஊழியத்தில் ஒரு தனிச் சிறந்த அடையாளமாயிருந்தது. தொழு நோயாளியாயிருந்த ஒரு மனிதரை நோக்கிப் பார்த்த அவர் அம்மனிதன் மீது மனதுருக்கம் கொண்டார். நோயாளிகள் பலரைக் கொண்டிருந்த திரளான கூட்டத்தைக் கண்ட அவர், அவர்கள் மீது மனதுருக்கம் கொண்டார். தொல்லைப்பட்டு, உதவியற்று அலைந்து திரிந்து கொண்டிருந்த மற்ற கூட்டங்களையும் அவர் கண்டார். அவர்கள் மீதும் மனதுருக்கம் கொண்டார். மனதுருக்கம் இல்லாத அவரது ஊழியத்தைக் கற்பனை செய்து பார்ப்பது மிகவும் கடினமாகும்.

மனதுருக்கம் என்பது, "இன்னொருவர் அல்லது மற்றவர்கள் பெற்றுள்ள தனிப்பட்ட துயரம் குறித்த ஆவிக்குரிய உணர்வும், அதை நோக்கி இயக்கப்பட்ட சுயநலமற்ற மென்மையான உணர்வும் ஆகும்" என்று விளக்கம் தரப்படுகின்றது. "உணவுக்கு வேலை செய்வேன்" என்று கிறுக்கெழுத்தில் எழுதப்பட்ட அட்டையொன்றை ஏந்தி அழுக்கான மனிதர் ஒருவர் சாலையோரத்தில் நின்று கொண்டு இருந்ததைக் கடந்து நீங்கள் எப்பொழுதாவது பயணம் செய்ய நேர்ந்ததுண்டா? தொலைக் காட்சிச் செய்தியில் யுத்தத்தினால் மனிதத்தன்மையற்ற முறையில் கொல்லப்பட்ட குழந்தையின் உயிரற்ற, இரத்தம் வடியும் உடலைக் கையில் பற்றிக் கொண்டிருக்கும் பித்தம் கொண்ட தாயை நாம் காணும்பொழுது நாம் "இரக்கவுணர்வினால் அசைகின்றோம்." நாம் மனிதர்களாயிருப்பதால் பரிதாப நிலையில் உள்ளவர்களுக்காக நாம் "வருத்தப் படுகின்றோம்." இயேசுவும் இந்த மனித உணர்வுகளைக் கொண்டிருந்தார், ஆனால் அவர் இன்னும் சற்றுக் கடந்து சென்றார். அவர் இப்படிப்பட்ட உணர்வுகளை மிக உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்தினார். அவர் மற்றவர்களின் பரிதாப நிலையையும் பாடுகளையும் இலகுவாக்கினார். அவரது மனிதத்தன்மை யானது அவரது மனித இயல்பில் உச்சரிக்கப்பட்டது (மாற். 1:40, 41; 6:34;

*மத். 9:36; 14:14).*

**அவரது கோபம்**

*தன்னில்தானே எதிரிடையாகத் தோன்றும் சத்தியமாக, இயேசுவின் மனதுருக்கத்துடன் பக்கம் பக்கமாக அவரது கோபமும் காணப்படுகின்றது. அவரைச் சிறுமைப்படுத்தியவர்கள், அவமானப்படுத்தியவர்கள் அல்லது துன்புறுத்தியவர்களுக்கு எதிராக அவரது கோபமானது திருப்பப்பட வில்லை. ஆனால் மனதுருக்கமின்றி வெறுமையான இருதயங் கொண்டிருந்தவர்கள், அவர் ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்த பொழுது, நியாயப்பிரமாணத்தை மீறினார் என்று கூறி அதைப் பொறுத்துக் கொள்ளாமல் போனபோது அவர்களுக்கெதிராகவே அவரது கோபம் குறிவைக்கப்பட்டது. உதாரணமாக, ஓய்வுநாளில் அவர் ஒரு ஜெப ஆலயத்தில் இருந்த பொழுது, சூம்பின கையுடைய மனிதன் ஒருவனை அவர் கண்டார். இயேசு அந்த மனிதனை கூட்டத்தாரின் முன்பு வந்து நிற்கும்படி கூறினார். பின்பு அவர், ஓய்வுநாளில் ஒரு மனிதனைக் குணமாக்கலாமா என்ற அர்த்தமுள்ள கேள்வியை அவர்களிடத்தில் கேட்டார். அவர்கள் அதற்குப் பதில் அளிக்க மறுத்த பொழுது, ‘‘அவர்களுடைய இருதய கடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடன் ...’’ (மாற். 3:5) சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்தார். மனதுருக்கத்திற்கு இடம் தராத அவர்களின் மத உறுதிப்பாட்டின் மீது அவர் கோபம் கொண்டார். அவர்கள் தவறானவர்களாய் இருந்தனர். அவர் சரியானவராய் இருந்தார். அவர்கள் கடின இருதயம் கொண்டிருந்தனர். அவர் மனதுருக்கம் கொண்டிருந்தார்.*

**அவரது அறிவார்வமுள்ள இயல்பு**

*இயேசுவின் உண்மையான மனிதத்துவத்திற்கான மிக முடிவான சில ஆதாரங்கள் அவரது அறிவார்வமுள்ள இயல்பில் காணப்படுகின்றன. இயேசுவின் மனிதத்துவமானது “நபர்த்துவமற்றது” என்ற நிலைப்பாட்டை நாம் புறக்கணிக்கின்றோம்; உணராப் பண்பாக, தனித்துவமற்றதாக உள்ளது. இந்தக் கண்ணோட்டத்தைப் பரிந்துரைப்பவர்கள், இயேசுவின் வாழ்வில் இருந்த அறிவார்வமுள்ள இயல்பு போன்ற வரைமுறைகளினால் தொந்தரவு படுத்தப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். உண்மையில் மனிதராயிருத்தல் என்பது வரையறைக்குட்பட்டது என்பதை நிச்சயமாகவே எல்லாரும் ஒப்புக் கொண்டாக வேண்டும். இயேசுவிடத்தில் இருந்த இந்தப் பண்பைக் தடுத்து நிறுத்துதல் என்பது அவருடைய உண்மையான மனிதத்துவத்தை மறுத்தல் அல்லது வரையரைக் குட்படுத்துதல் ஆகிவிடும்.*

*அறிவார்வமுள்ள இயல்பான வாழ்வின் எல்லா அம்சங்களின் மூலமாகவும் இயங்குகின்றது. “மத்தியானம் என்ன சாப்பாடு?” என்பது அறிவார்வமுள்ள இயல்பின் தற்செயலான ஒரு வடிவம் ஆகும். “வாழ்க்கையின் அர்த்தம் என்ன?” என்பது ஆழ்ந்தறிவுள்ள கேள்வியாகும். நாம் “தனிச் சிறப்பற்ற விபரங்கள்” என்று அழைக்கக் கூடியவைகள் பற்றிய*

இயேசுவின் அறிவார்வமுள்ள இயல்பினுடைய பதிவேடானது அவர் மனிதத்துவத்தில் தான் இருந்தார் என்று நமக்கு நினைவூட்டுவதற்காகவே சுவிசேஷ எழுத்தாளர்களால் மேற்கொள்ளப்பட்ட உணர்வுள்ள முயற்சி என்றே காணப்படுகின்றது.

ஒரு சமயத்தில், இயேசு, ஐயாயிரம் புருஷர்களுக்கும், அவர்களுடன் இருந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கும் உணவளித்தார். அவர்களுக்கு உணவளிக்கும் முன்பு அவர், "உங்களிடத்தில் எத்தனை அப்பங்களுண்டு? போய்ப் பாருங்கள்" (மாற். 6:35-38ஐக் காணவும்) என்று கேட்டார். அவர் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டார்? அப்போஸ்தலர்களுக்கு அவரைப் பற்றி உயர்வான எண்ணம் வரவேண்டும் என்று விரும்பினாரா? அப்படி அவர் விரும்பியிருந்தால், "கூட்டத்தில் சென்று பாருங்கள், நீங்கள் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் காண்பீர்கள். அவைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்" என்று அவர் கூறியிருக்க முடியும். அது (அக்கேள்வி) கூட்டத்தாரிடையில் ஒரு மனப் பதிவை ஏற்படுத்து வதற்கானதா? அப்போஸ்தலர்களிடம் இக்கேள்வி கேட்கப்பட்டதைக் கூட்டத்தார் கேள்விப்பட்டதாகக் குறிப்பெதுவும் இல்லை. அவர் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டார்? அவர் மனிதராய் இருந்தார். எழுத்தாளர் "மனிதத்துவப் படுத்த" முயற்சி செய்வதை ஏன் "ஆவித்துவப் படுத்த" வேண்டும்?

இயேசுவின் உதடுகளில் இருந்து வந்தவைகளில் மிகவும் திகைப்புக்குரிய கேள்விகளில் ஒன்று மார்த்தாள் மற்றும் லாசரு ஆகியோரின் சகோதரியான மரியாளிடம் கேட்கப்பட்டது. லாசரு மரித்து, அடக்கம் செய்யப்பட்டிருந்தார். அந்த வேளையில் பெத்தானியாவில் இருந்த அவர்களின் வீட்டிலிருந்து தூரத்தில் இருந்த இயேசுவுக்கு லாசரு மரிக்கும் முன்பே அவரது (லாசருவின்) சுகவீனம் பற்றி அறிவிக்கப்பட்டிருந்தது. இயேசு தாம் இருந்த இடத்திலேயே மேலும் இரண்டு நாட்கள் தங்கினார். பின்பு அவர் தம் சீஷர்களிடம் லாசரு மரித்து விட்டதாகக் கூறினார். அவர்கள் எல்லாரும் பெத்தானியாவிற்குத் திரும்பி வந்தார்கள். இயேசு மார்த்தாளின் வீட்டிற்கு வரும் முன்பே அவள் அவரைச் சந்திக்கச் சென்று, அவரால் ஆறுதல் படுத்தப்பட்டாள். பின்பு அவள் மரியாளிடம் சென்று, இயேசு வந்து சேர்ந்திருந்தார் என்றும் அவர் அவளைக் காண விரும்பினார் என்றும் கூறினாள். அவளும் அவளுடன் இருந்த மற்றவர்களும் துக்கமாயிருந்ததை இயேசு கண்ட பொழுது, அவர் ஆவியிலே கலங்கித் துயரமடைந்தார், அவரது உணர்வுகள் ஆழமாய் அசைக்கப்பட்டன. பின்பு அவர், "அவனை எங்கே வைத்தீர்கள்?" என்று கேட்டார் (யோவா. 11:34). அவர் கல்லறைக்கு வருகையில், "இயேசு கண்ணீர் விட்டார்" (யோவா. 11:35) என்று நமக்குக் கூறப்படுகின்றது. என்ன மனதுருக்கம்! என்ன அன்பு! என்ன பிறர் துயர் அறிதல்! என்ன மனிதத்துவம்! இந்த வசனப் பகுதியைப் பற்றி, "சுவிசேஷகர் இயேசுவின் மனித இயல்பு பற்றி சுவிசேஷ நூல்கள் யாவற்றிலும் காணப்படுபவற்றிலேயே மிக இளகிய விவரிப்பாக 'இயேசு கண்ணீர் விட்டார்' என்று விவரிக்கின்றார்"[2] என்று கூறப் பட்டுள்ளது. இதற்கு நாம், "ஆமென்!" என்று கூற முடியும். விலையேறப்

பெற்ற இவ்வசனப் பகுதியில் அவருடைய மனிதத்துவத்திற்கான ஒளிவிடும் ஆதாரங்களில் "அவனை எங்கே வைத்தீர்கள்?" என்ற அவரது ஒன்றுமறியாத குழந்தைத்தன்மையான கேள்வியும் கூட எவ்விதத்திலும் குறைந்த தாயிருப்பதில்லை (யோவா. 11:1-36).

இயேசு தமது சரீரத்திலும் உணர்வுகளிலும் தாம் உண்மையான மனிதராய் இருந்ததை வெளிக்காட்டினார். இயேசுவின் மனிதத்துவத்தைப் பற்றி "நபர்த்துவத் தன்மையானது" என்று எதுவும் இல்லை. அவரது மனிதப் பண்பானது ஒரு தந்திரமான தோற்றமல்ல. அது நிஜமானது மற்றும் அது அவரது தெய்வீகத்துவத்தைப் போலவே உண்மையானதாயிருந்தது.

---

குறிப்புகள்

[1]Edward W. Goodrick and John R. Kohlenberger III, eds., *The NIV Exhaustive Concordance* (Grand Rapids, Mich.: Zondervan, 1990), 1546-47. [2]Wilbert F. Howard, *The Interpreter's Bible,* ed. George Arthur Buttrick (New York: Abingdon Press, 1952), 8:646.

# இயேசுவின் ஆவிக்குரிய அமைவு

இயேசுவின் மனிதத்துவத்தைப் பரிசீலனை செய்வதில், நாம் அவர் எவ்வழிகளில் நம்மைப் போல இருந்தார் என்பதை ஆராய்வதாகவே உண்மையில் காணப்படுகின்றது. என்றாலும், இதற்கு நேர்மாறானதே சவாலாக இருக்கிறது. அவர் ஒரு மனிதப் பிறவி என்ற வகையில் நாம் அவரது வாழ்வை உயர்த்திக் காட்டும் வழிகளை நாம் ஆராய வேண்டும். இது மிகவும் கஷ்டமான பணி என்பது தெளிவு. மத்தேயு 5ஐ நாம் வாசிக்கும் பொழுது நாம் யாவரும் இதை உணருகின்றோம். ஒரு சிக்கலான காரணியானது நமது பணியை இன்னும் சிரமமாக்கலாம். நாம் நமது சொந்த மனிதத்துவத்தையே இன்னும் நிச்சயமாய் அறியாதிருக்கலாம். உதாரணமாக, ஆவியையும் ஆத்துமாவையும் நாம் எவ்விதம் கண்ணோக்கு கின்றோம்? இயேசு ஆவியும் ஆத்துமாவும் கொண்டிருந்தார். அது போலவே நாமும் இருக்கின்றோம். இவைகளே அவரது மற்றும் நமது மனிதத்துவத்தில் அடங்கியுள்ள பாகங்களாகும். இயேசுவைப் போலவே இருக்க விரும்பும் கிறிஸ்தவர் தம் சொந்த ஆவி மற்றும் ஆத்துமா ஆகியவற்றை எப்படி சமாளிக்கின்றார்? இந்தக் கேள்வி கடினமான ஒன்றாகும் என்று ஒப்புக் கொள்ள வேண்டும். ஒரு மனிதப் பிறவி என்ற வகையில் இயேசுவுக்குள் இருந்த ஆவி மற்றும் ஆத்துமா ஆகியவற்றை நாம் எவ்விதம் அதிகமாய்ப் பாராட்ட முடியும்?

## அவரது ஆவிக்குரிய இயல்பு விளக்கப்படுகின்றது

முதலாவது, நாம் ஆவி (pneuma) மற்றும் ஆத்துமா (psuche) ஆகியவற்றைப் பருப்பொருளற்றவைகளாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த வகையான கருத்தில் இவையிரண்டுமே "ஆவிக்குரியவைகள்" என்ற நிலையில் உள்ளன. ஆகையால், ஆவியும் ஆத்துமாவும் ஒரே சாரமுடையவைகளாக, அதாவது ஆவியாகவே உள்ளன. பிறகு ஏன் நாம் வித்தியாசப் படுத்துகின்றோம்? அந்த வித்தியாசம் என்ன? சில வேளைகளில் இவ்விரண்டையும் வித்தியாசப் படுத்துவது கடினமாய் உள்ளது, ஏனெனில் இவ்விரண்டு வார்த்தைகளும் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றைப் பயன்படுத்தக் கூடியவைகளாய் இருக்கின்றன.

ஆவியில் (pneuma) நமது அழியாமை தங்கியுள்ளது என்று நாம் காண்கின்றோம். முதல் கிறிஸ்தவ வேதசாட்சியான ஸ்தேவானின் கடைசி

வார்த்தைகளில் இந்த ஜெபம் இருந்ததாக லூக்கா பதிவு செய்தார்: "கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்" (அப். 7:59). இயேசு சிலுவையில் மரணம் அடைந்த பொழுது, "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (லூக். 23:46) என்று கூறினார். அவர் (ஆவி என்பதற்குச்) சமானமான எபிரெய வார்த்தையான ruach என்பது காணப்படும் சங். 31:5ஐ மேற்கோள் காட்டினார். "ஆவியானது தன்னைத் தந்த தேவனிடத்திற்குச் செல்லுகின்றது" (பிர. 12:7ஆ) என்பதை பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகியவற்றின் மேற்கண்ட உதாரணங்கள் பிரதிபலிக்கின்றன. எனவே, ஒருவருடைய ஆவி(pneuma) யானது அவருடைய மேன்மைப் படுத்தப்பட்ட, அழியாத பகுதியாகும் என்று நாம் காண்கின்றோம்.

இதற்கு மறுபுறத்தில், ஆத்துமா (psuche) என்பதும் உள்ளது, இதுவும் பருப்பொருளற்றதாகவே இருக்கின்றது. இருப்பினும், ஆத்துமாவானது மனித இயல்பை மேன்மைப் படுத்துவதில்லை. இது நம் மனித மனவுருக்கங்களின் இருக்கையாக அல்லது வாய்க்காலாக உள்ளது, இவைகளின்/இந்த மனவுருக்கங்களை இயல்பானது என்றோ அல்லது விலங்கு நிலைக்கு ஒப்பானது என்றோ அழைக்கலாம். தங்களின் இருப்பில் விலங்கு அல்லது சுபாவமான பாகத்திற்கு முதலிடம் கொடுக்கின்ற மக்களைப் பற்றி யூதா பேசினார். அவர், "இவர்கள் பிரிந்து போகிறவர்களும், ஜென்ம சுபாவத்தாரும், ஆவியில்லாதவர்களுமாமே" (வ. 19) என்று கூறினார். யூதா இம்மனிதர்களை psuchikoi, அதாவது "ஜென்ம சுபாவமான" மனிதர்கள் என்று அழைத்தார். Psuche என்பது மாம்சம் அல்ல என்பதால், யூதாவும் புதிய ஏற்பாட்டின் மற்ற எழுத்தாளர்களும் இவ்வார்த்தையை, மாம்சத்தின் (sarx) இச்சைகள் மற்றும் வேட்கைகளைச் சுற்றியிருக்கும் பொருளற்ற இயல்பைச் சுட்டிக் காட்டுவதற்குப் பயன்படுத்தினார்கள் என்றும் நாம் புரிந்து கொள்கின்றோம்.

"மாம்சம்" என்பது மனிதரின் அழியக் கூடிய பாகமாய் (சுபாவமான, விலங்குத் தனத்துக்கடுத்ததாக) இருப்பதால், மனித இனத்தின் அழியாத மற்றும் அழியக் கூடிய அமைவுகளுக் கிடையில் "யுத்த இயல்புள்ள" பெரும் சீற்றம் இருப்பதில் வியப்பெதுவும் இல்லை. இது, மனிதரின் சுபாவமான பகுதி அதன் இயல்பிலேயே பொல்லாங்குடையது என்று கூறுவதற்கல்ல. "மாம்சமானது ஆவியாக உள்ள தேவனில் நம்பிக்கை வைப்பதை விட்டு, தன்னில் தானே நம்பிக்கை வைக்கும் போது தான் மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போக முடியாததாகின்றன, எரே. 17:5ff; 2 நாளா. 32:8."[1]

எனவே, ஒரு சரீரம் (soma) இருக்கின்றது. சரீரம் என்பது அமைப்பாக உள்ளது. அது உயிரற்ற பொருட்களுக்குக் கூட ஏற்புடையதாகப் பயன்படுகின்றது. விதைகள் மேனிகளை உடையவைகளாய் இருக்கின்றன என்று பவுல் பேசினார்; பறவைகள் மற்றும் மீன்கள் போன்ற பூமிக்குரிய சரீரங்களைப் பற்றி அவர் குறிப்பிட்டார்; சூரியன் மற்றும் நட்சத்திரங்கள் போன்ற வானத்துக்குரிய மேனிகளைப் பற்றியும் அவர் பேசினார் (1 கொரி. 15:36-41). இந்தச் சொற்றொடரானது உயிருள்ள எல்லாப்

பொருட்களுக்கும் ஏற்புடையதாகப் பயன்படுகின்றது. உதாரணமாக, யாக்கோபு குதிரைகளின் சரீரங்களைப் பற்றிப் பேசினார் (யாக். 3:3).

*Soma* என்பது நமது மனித உடல்களுக்கும் ஏற்புடையதாகப் பயன்படுகின்றது என்பதே நாம் மிகவும் அக்கறை செலுத்துகின்ற விஷயம் ஆகும். நம்முடைய சரீர உடலே நம்முடைய தனிப்பட்ட தன்மையை தெளிவாகக் காட்டுவதாய் இருக்கிறது. எந்த ஒரு கைரேகை அமைப்பும் இன்னொரு கைரேகை அமைப்பைப் போல் இருப்பதில்லை என்பது பெரும் வியப்புக்குரியதாக உள்ளது. நாம் நபர்களாக இருக்கின்றோம் என்பதற்கு நமது உடல்கள் சாட்சியம் அளிக்கின்றன. தேவனுடைய சிருஷ்டிகள் என்ற வகையில் நாம் இருக்கின்றோம், அசைகின்றோம், மற்றும் நாம் பிறந்த நம் சரீரத்தில் நமது இருப்பைப் பெற்றுள்ளோம். நமது சரீரங்கள் உடல் சார்ந்தவைகளாக இருக்கின்றன. இவ்விதமாக, அவைகள் அழிவற்றவையாக இருப்பதில்லை. இருப்பினும், பூமியில் இருக்கையில் இருத்தல் என்ற கருத்தில் அவைகளின் மூலமாக நமது ''இருப்பை'' வெளிப்படுத்துவதற்கு அவைகள் கருவிகளாய் இருக்கின்றன.

இவை எல்லாவற்றையும் சிந்தையில் கொண்டு, தெசலோனிக்கேயில் இருந்த கிறிஸ்தவர்களுக்கான பவுலின் ஜெபத்தை ஒருவேளை நாம் இன்னும் அதிகமாய் மதிக்கலாம்: "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி [*pneuma*] ஆத்துமா [*psuche*] சரீரம் [*soma*] முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" (1 தெச. 5:23). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர்களின் ஆவிக்குரிய, மனிதத்துவ மற்றும் உடல் ரீதியான இயல்புகள் முழுவதும் தேவனுக்கு முன்பாகக் குற்றமற்றதாகக் காக்கப்படும்படிக்கு பவுல் ஜெபித்தார்.

''சரீரம்'' (*soma*) என்பது வரைவட்டவணையில் முன்னிறுத்தப் படவில்லை. ஏனென்றால் உண்மையில் இது "அங்கு" இல்லை. சரீரம் என்பது நமது இருப்பின் வடிவமைப்பு ஆகும். இது, அவ்வரைவட்ட வணையில் காணப்படும் கூறுகள் யாவும் நெருங்கிய உறவுடன் செயல்படுவதற்கான தனி நபருக்குரிய கருவியாக உள்ளது. இவ்வழி முறையில் நாம் நமக்குரிய நபர்த்துவங்களை அல்லது ஆளுமைத் தன்மைகளை வெளிப்படுத்துகின்றோம்.

## இயேசுவின் ஆவிக்குரிய இயல்பு காட்சிப் படுத்தப்பட்டது

இயேசுவின் மனிதத்துவத்தைப் புரிந்து கொண்டு அதை மதிப்பதற்காக நாம் நமது மனிதத்துவத்தை, ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் ஆகியவற்றின் சந்தர்ப்பப்பொருளில் நாம் கவனித்திருக்கின்றோம். அவரது மனிதத்து வத்தில் இந்த எல்லா அம்சங்களும் ஈடுபட்டுள்ளன. இப்பொழுது நாம், "அவர் ஒரு மனிதப் பிறவி என்ற வகையில் எவ்விதத்தில் தமது ஆவிக்குரிய இயல்பைக் காண்பித்தார்?" என்று கேட்கின்றோம்.

*அவருடைய ஜெப வாழ்வு*

*அவருடைய வாழ்வின் இந்த அம்சத்தை நாம் குறைந்தது இரண்டு குறிப்பிடத்தக்க வழிகளில் காண்கின்றோம். முதலாவது, நாம் அவரது ஜெப வாழ்வைக் கவனிப்போம். இது வியப்பில் ஆழ்த்தக் கூடியதாய் இருந்தது. குமாரனாகிய தேவன் தமது திரு அவதாரத்திற்கு முன்னும் பின்னும் தேவனுடைய குமாரனாகவே இருந்தார். பின்பு ஏன் குமாரனாகிய தேவன் பிதாவாகிய தேவனிடத்தில் ஜெபித்தார்? குமாரனாகிய தேவன் மனிதத்துவத்திலும் இருந்தார். அவர் தம் மனிதத்துவத்தில் மனிதராகவும், தம் தெய்வீகத்தில் தெய்வீகத்துவமுடையவராகவும் இருந்தார்!*

KJV, RSV *மற்றும் தமிழ் வேதாகமத்தில் நாம், "அவரோ வனாந்தரத்தில் தனித்துப் போய், ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்" (லூக். 5:16) என்று காண்கின்றோம்.* NIV*யானது, "இயேசு அடிக்கடி தனித்திருந்து தனிமையான இடங்களில் ஜெபித்துக் கொண்டிருந்தார்" என்று மொழிபெயர்ப்பதன் மூலம் நிகழ்காலத்தொடர்வினை மற்றும் பன்மைப் பெயர்ச் சொல் ஆகிய கருத்தை அடிக்கடி மறுபடி மறுபடி உணர்த்திப் பற்றுகின்றது. அவர் கடல் மேல் நடந்து தமது சீஷர்களுடன் சேர்ந்துகொள்வதற்கு முந்திய மாலைப் பொழுதில் மலைப் பகுதியில், தனித்திருந்து ஜெபம் செய்தார் (மத். 14:23). கப்பர்நகூமில் அவர் அதிகாலையில் இருளில் தனித்திருந்து ஜெபம் செய்தார் (மாற். 1:35). அவர் தமது சீஷர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு மலைப் பகுதியில் இரவு முழுவதும் ஜெபத்தில் இருந்தார் (லூக். 6:12). ஜனங்கள் தம்மை யாரென்று சொல்கிறார்கள் என்று அவர் தமது சீஷர்களிடம் கேட்பதற்குச் சற்று முன்பு தனித்து ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார் (லூக். 9:18). அவர் ஜெபம் பண்ணுவதற்காக மறுரூப மலையின் மீதேறினார் (லூக். 9:28, 29). ஜெபம் பண்ணுதல் பற்றிய ஒரு பாடத்தை அவர் தமது சீஷர்களுக்குக் கொடுக்கு முன்பு அவர் தனித்திருந்து ஜெபம் பண்ணினார் (லூக். 11:1).*

*சுவிசேஷ எழுத்தாளர்களால் இவை யாவும் ஏன் பதிவு செய்யப் பட்டன? இயேசு அடிக்கடி தனிமையில் ஜெபம் பண்ணினார் என்ற உண்மையானது ஒருவேளை, நாம் எப்பொழுதும் கற்பனை செய்வதைக் காட்டிலும் அதிகமான அளவில் அவரது மனிதத்துவத்திற்கான அதிக ஆழ்ந்தறிவுள்ள சாட்சியாக இருக்கின்றதால் அவர்கள் இவைகளைப் பதிவு செய்திருக்கலாம்.*

*ஒருவேளை நமது சொந்த அனுபவத்தில் இருந்தும் கூட நாம், ஜெபமில்லாத வாழ்வானது தனிமைப் படுத்தப்பட்டதாகவும், வெறுமையானதாகவும் உள்ளது என்பதை அறிகின்றோம். ஜெபத்தில் உள்ளடங்கக் கூடியவை அதிக அளவு வித்தியாசப்படக் கூடும். கிறிஸ்துவின் ஜெபத்தை முன்மாதிரியாகக் கொண்டு தங்களின் வாழ்வை அமைத்துக் கொள்பவர்களின் உறுதிப்பாட்டிற்கு ஜெபம் ஒரு அசையாத அஸ்திபாரமாய் இருக்கின்றது. தேவனில்லாமல் மனித வாழ்வு உயிர் பெற்றிருக்கும் என்று எதிர்பார்க்கப்பட முடியாது, மற்றும் ஜெபம் செய்யும் பழக்கத்தினால் நாம் நமது அன்பு மற்றும் வழிபாடு, சார்புடைய தன்மை, நன்றியுணர்வு மற்றும் வேண்டுகோள்கள் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றோம். இயேசு*

*தமது பிதாவினிடம் நிலையாக ஜெபிப்பதில் பிரவேசித்தார். அவர் நமது உதாரணமாக இருக்கிறார்.*

*இயேசுவின் ஜெபங்களில் உள்ள பொருளடக்கத்தைப் பற்றி நமக்குக் கூறப்படும் பொழுது, நாம் துதிக்கவும், அகம் மகிழவும், நன்றி செலுத்தவும், கண்ணீர்விடவும் அசைக்கப் படுகின்றோம். பேதுருவுக்கு இயேசு கூறிய பின்வரும் கூற்றின் செயல் விளைவை ஆழ்ந்து சிந்திக்கும்படி சற்றுப் பொறுங்கள்: "நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்" (லூக். 22:32அ). இது வேத வசனங்களில் உள்ள தனித்தன்மையுள்ள கூற்றுக்களில் ஒன்றாக இருப்பினும், இயேசு நமக்காக ஜெபத்தில் வேண்டுதல் செய்வதில் உங்களிடத்திலும் என்னிடத்திலும் தனிப்பட்ட வகையில் போதிய அளவு ஆர்வமுடையவராயிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தப் போதுமானதாக உள்ளது. மனிதத்துவத்தின் என்ன ஒரு ஆச்சரியமான வெளிப்பாடாக இது உள்ளது! மற்றவர்களுக்கான நமது ஜெபத்தில், நாம் அவர்களின் வாழ்வை தேவனுடைய கிருபை, அன்பு, மன்னிப்பு மற்றும் பெலம் ஆகியவற்றின் கீழ் வைக்கின்றோம். நாம் செய்கின்றது போலவே இயேசு தனி நபர்களுக்காகத் தமது பிதாவினிடத்தில் ஜெபித்தார். ஜெபம் என்பது உண்மையான மனிதத்துவத்தின் அடையாளமாகவே உள்ளது.*

*யோவான் 17ம் அதிகாரமானது இயேசுவின் ஜெபத்தின் மிக விரிவான பதிவேடாக உள்ளது. அது நீளத்தில் மட்டுமின்றி நோக்கத்திலும் மிக விரிவானதாக உள்ளது. அவர் தமக்காகவும், தம்முடைய சீஷர்களுக்காகவும், அவர்களது செய்தியின் மூலமாய் விசுவாசிகளாகப்போகும் அனைவருக்காகவும் ஜெபித்தார். அவர் "உன் [நம்] விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்" (லூக். 22:31, 32ஐக் காணவும்) என்று பேதுருவுக்காக ஜெபித்தது போலவே எல்லா விசுவாசி களுக்காகவும் ஜெபித்தாரா? நாம் நமது கிறிஸ்தவத் தோழர்களுக்காக நிலையாய் ஜெபிப்பதில்லையா?*

*இயேசுவின் ஜெப வாழ்வைப் பற்றி இன்னும் மிக அதிகமாகக் கூற முடியும், கூறப்பட வேண்டும் மற்றும் கூறப்படும். வேறு எந்த ஜெபங்களைக் காட்டிலும் கெத்சமெனேயிலும் சிலுவையிலும் அவர் பண்ணிய ஜெபங்கள் அவருடைய மனிதத்துவத்தை மிக விரிவாக விளக்குகின்றன.*

***கல்வாரியில் அவரது மரணம்***

*தொலைக்காட்சியில் கல்வி நிகழ்ச்சியொன்றைக் கவனிப்பது போல இயேசுவின் கெத்சமெனே அனுபவத்தை வாசிப்பது மிகவும் எளிது. நாம் ஆதாரங்களைக் கவனிக்கலாம். முன் வைப்பவர்களின் நுணுக்கமான அறிவை நாம் பாராட்டலாம். அவர்களுடைய "நடிப்பின்" திறமையால் கூட வசீகரிக்கப் படலாம். ஓ, ஆம், அங்கு கற்றுக் கொள்வதற்கு ஒரு பாடத்தை நாம் காண்கின்றோம், ஆனால் அது உண்மையானது என்ற அளவில் நாம் கண்ணோக்காதிருக்கலாம். அதை நாம் வெறுமனே ஒரு எடுத்துரைப்பாகவும் கூடக் காணலாம். தலைமைப் போதகரான இயேசு*

*கெத்சமெனேயில் இன்னொரு பாடத்தை மட்டுமே எடுத்துரைத்தாரா? தேவனிடத்தில் நாம் நமது துன்பங்களை எடுத்துச் சென்றால், தேவன் நமக்கு விடுதலை கொடுப்பார் என்று மட்டுமே போதிக்க அவர், முயற்சி செய்தாரா? இல்லை! ஜெபிப்பதற்கு முன் இயேசு, "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது" என்று கூறினார். ஜெபிக்கையில் அவர், "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்" என்று கூறினார். பெரும் துக்கத்தில், "அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழும்" அளவுக்கு அவர் அதிக ஊக்கத்தோடு ஜெபம் பண்ணினார். மேலும் அவர், "ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவது" என்றும் ஜெபம் செய்தார் (மத். 26:36-45; மாற். 14:32-40; லூக். 22:39-46).*

*தோட்டத்தில் இயேசு "நடிக்கவில்லை." அவருடைய துக்கம் உண்மையானதாய் இருந்தது. சிலுவை எதிர்பார்க்கப் பட்டிருந்தது, இயேசு தமது வாழ்வின் மிகக் கடினமான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான வானலோகப் போராட்டத்தை அவர் போராடிக் கொண்டிருந்தார். அவர் "நபர்த்துவமற்ற" முறையில் உணரா வகையில் போராடிக் கொண்டிருக்கவில்லை. மனிதர் என்ற வகையில் இயேசு என்ற நபர் மீது போரானது கவனப்படுத்தப்பட்டது, அவர் சாத்தானுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்தார்! பிதாவாகிய தேவன் மீட்பதற்கான தமது மாபெரும் திட்டத்தை மனிதரான இயேசுவினிடத்தில் மையப் படுத்தியிருந்தார். அந்தத் திட்டமானது கெத்சமெனேயில் ஏமாற்றப்பட்டிருக்குமா? "பாத்திரத்தில்" பங்கேற்காத படிக்கு இயேசு சோதிக்கப்படுதலுக்கு இணங்கியிருப்பாரா?*

*இந்த விறுவிறுப்பான காட்சியை நாம் மறுகண்ணோட்ட மிடுகையில், சிந்தையின் வலுவானதொரு சுய ஒழுக்கத்தை/கட்டுப்பாட்டை நாம் இதிலிருந்து பெறாவிட்டால், இயேசுவின் பெருந்துன்பத்திற்கான அடிப்படைக் காரணத்திலிருந்து நாம் விலக்கப்பட்டு விடுவோம். நேர்முகமாக ஏதோ ஒன்று அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. பேருருவம் உடைய போராட்டம் ஒன்று வளர்ந்து கொண்டிருந்தது. சாத்தான்மேல் வெற்றி கொள்ளும் சூழ்நிலையை இயேசுவுக்குக் கொடுப்பதற்காக அவரது மனிதத்துவமானது தெய்வீகத்துவமாக மாறவில்லை. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்பட முடியாதவராய் இருக்கின்றார் (யாக். 1:13); மனிதர்கள் அவ்விதம் சோதிக்கப்பட முடியும். இயேசு சோதிக்கப்பட்டார். அவர் மனிதராய் இருந்தார். மனிதப் பிறவி களாகிய நாம் நமக்கு ஏற்படும் யுத்தத்தை ஜெபிப்பது போலவே அவர் ஒரு மனிதப் பிறவியாக இருந்தே அதை ஜெயித்தார். நாம் ஜெயித்தால், பிதாவினிடத்தில் ஊக்கத்துடன் ஜெபிப்பதாலும், அவருடைய வல்லமையிலும் மற்றும் நம்மை தாங்கி ஆதரிக்க விருப்பமுள்ளவரை முற்றிலும் நம்பி இருப்பதினாலுமே (1 கொரி. 10:13).*

*கெத்செமெனேயிலும் சிலுவையிலும் இயேசு தமது உண்மையான மனிதத்துவத்தைக் காண்பித்தார். அவரது பிதாவைப் போலவே நாமும்*

*அவரது மனிதத்துவத்தை பரிபாலித்தால், அவர் தேவனாய் இருந்ததினால் வெற்றி கொண்டார் என்று வலியுறுத்துவதன் மூலம் நாம் அவரது மனிதத்துவத்தைக் களவாட முயற்சி செய்ய மாட்டோம். அவரது ஜெபங்கள் உண்மையானவைகளாய் இருந்தன. பிதா அவருடன் இருந்தார். அவர் - "பாத்திரத்தை" நீக்கிப் போடுவதினால் இன்றி, இயேசு பிதாவின் சித்தத்தை சரீரத்தில் நிறைவேற்றுவதற்கு அவரை (இயேசுவை) பெலப்படுத்தியதன் மூலம் - அவரது (இயேசுவின்) ஜெபங்களுக்குப் பதில் அளித்தார் (லூக். 22:43). எனவே இயேசு "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ" (யோவா. 18:11ஆ) என்று உறுதியுடன் கூறியிருக்க முடிந்தது.*

*இயேசு வனாந்தரத்தில் சோதிக்கப்பட்ட பொழுது, சாத்தானுக் கெதிரான சிறு யுத்தத்தில் ஜெயித்தார். அவர் கெத்சமெனேயில் ஒரு தீவிரமான யுத்தத்தில் ஜெயித்தார். சிலுவையில் அவர் தமது மாபெரும் வெற்றியை வென்றார் என்பது எதிரிடையானது போலத் தோன்றும் மெய்யுரையாகும். அவரே, "தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்" (மத். 10:39) என்று போதித்தார். இயேசு "தமது ஜீவனைக் காத்துக் கொள்ளும்படி" கெத்சமெனேயில் சோதிக்கப்பட்டார் - ஆனால் அவர் அதைச் செய்ய மறுத்து விட்டார். அதற்குப் பதிலாக, அவர் சிலுவையில் நமக்காகத் தமது ஜீவனை "இழந்தார்."*

*இந்தச் சிந்தனை உங்களை விட்டுப் போக அனுமதிக்காதீர்கள் என்று நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இயேசு உண்மையில் ஒரு மனிதராக இராதிருந்தால், அவரது மனிதத்துவம் ஏதாவது ஒரு வகையில் உண்மையற்றதாக, ஒரு தோற்றமாக அல்லது மறை உருவாக இருந்திருந்தால், சுவிசேஷங்களின் உருவகங்கள் பூமிக்குரியதாயிராமல், தூதர் ஒருவரின் வருகையாக, மனித உருவில் ஆன தெய்வீகத் துவமானவராக மட்டும் இருந்திருந்தால், மீட்பிற்கான திட்டம் முழுவதும் தரையில் விழுந்திருக்கும். இயேசுவின் முழு மனிதத்துவத்தையும் பற்றிக்கொள்ளுங்கள்![2]*

---

*குறிப்புகள்*

[1]Edmond Jacob, *"psuche,"* in *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Friedrich, trans. and ed. Geoffrey W. Bromiley. [2]James S. Stewart, *The Strong Name.*

# இயேசுவினுடைய மனிதத்துவத்தின் கொடுமுடி: அவரது மரணமும் உயிர்த்தெழுதலும்

*இயேசுவினுடைய மனிதத்துவத்தின் கொடுமுடியாக இருந்தது என்ன? இயேசு "முழுமையும் மனிதரா"யிருந்த வகையில் அவரது ஜெப வாழ்வும், கல்வாரியில் அவரது மரணமும் இரண்டு மாபெரும் உதாரணங்களாயிருந்தனவென்று நாம் ஆலோசித்திருந்தோம். ஜெபம் என்பது பெயர் குறிப்பிடத் தகுதியானது என்ற விஷயமும் நாம் மரணத்தை எவ்வளவு வினயமாய்க் கண்ணோக்குகின்றோம் என்ற விஷயமும் வெறும் மனிதத்துவத்தின் சார்ந்திருப்புத் தன்மை மற்றும் போதுமற்ற தன்மை ஆகியவற்றுக்கு ஆதாரங்களாய் இருக்கின்றன. ஜெபத்தில் நாம் சார்ந்திருப்பவரின் சித்தத்தைத் தேடுகின்றோம்; மரணத்தில் நாம் அழியாமையைக் கடந்து அவருக்குள் இருக்கும் ஜீவனை எதிர் நோக்குகின்றோம்.*

*வேத வசனங்களில் நாம், இயேசு ஜெபிப்பதைக் கேட்டும், அவர் சிலுவையில் மரித்ததைப் பார்த்தும் இருக்கின்றோம். இந்த அனுபவங்கள் இயேசுவின் உண்மை மனிதத்துவத்தை நாம் நம்பும்படி செய்கின்றன. அவர் சிலுவையில் இருந்து, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கை விட்டீர்?" (மாற். 15:34) என்று கதறிய பொழுது, எப்படி ஜெபிப்பது என்று நமக்குப் போதிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளாதிருந்தார். நீங்களும் நானும் அறிந்து கொள்ள முடியாத உணர்வுப் பூர்வமான பெரும் துக்கத்திலிருந்தும் சரீரவாதையிலிருந்தும் அவர் கூப்பிட்டார். நாம் அதைப் புரிந்து கொள்ள முடியாது, ஏனென்றால் நாம் அங்கு ஒருபோதும் இருந்ததில்லை, ஒருக்காலும் இருக்கப் போவதில்லை, அங்கு இருக்கவும் நம்மால் முடியாது. சிருஷ்டிகரே சிருஷ்டியானது போன்ற அவ்விதத்தில் நாம் ஒருக்காலும் இருந்ததில்லை. மனிதராவதற்கு தெய்வீகத்துமானவர் அந்த மகிமையைத் தாமே வெறுமையாக்கின நிலையில் நாம் ஒருக்காலும் இருந்ததில்லை. நீங்களும் நானும் நற்குணமுள்ள வாழ்வு வாழ்ந்து, வேதனை நிறைந்த மரணத்தில் இறக்கலாம்; ஆனாலும் நாம் ஒருக்காலும் பாவமற்ற வாழ்வை வாழ்வ தில்லை, மற்றும் நாம் நம்மையே பரிபூரணமான பலிகளாக ஒருக்காலும்*

ஒப்புவிக்கப் போவதில்லை. மற்ற எவரும், இயேசுவைப் போல் விட்டு விடப்பட்டு, முற்றான தனிமையில் சிலுவையில் தொங்கி, கடும் வேதனையான சித்திரவதையை அனுபவிப்பதில்லை.

வாழ்ந்தவற்றிலேயே மிக முழுமையான முன்மாதிரி வாழ்வை இயேசு வாழ்ந்தது மட்டுமின்றி (எபி. 4:15; 1பேது. 2:22), எவரொருவரும் மரித்ததைக் காட்டிலும் மிகவும் முற்றான அவமானம் உண்டாக்கும் மரணத்தையும் அவர் அடைந்தார் (2 கொரி. 5:21). இயேசு ஒரு மனிதர் என்ற வகையில் தம் ஊழியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு வாழ்வின் மிகவும் மேன்மைப் படுத்தப்பட்ட அனுபவமும், மரணத்தில் மிக அதிகமான வேதனையுள்ள அனுபவமும் தேவைப்பட்டன. அவர் நாம் பின்பற்றுவதற்கு ஒரு உதாரணத்தை அமைப்பதற்காக மட்டும் இப்பூமிக்கு வந்தவரல்ல (1 பேது. 2:21). அல்லது அவர் நமக்கு ஜீவனுக்கேற்ற ஆச்சரியமான வசனங்களைப் போதிக்க மட்டும் வரவில்லை (யோவா. 6:63). இயேசு தாமே, "உலகத்தை ஆக்கினைக்குள்ளாக்குத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவா. 3:17) என்று கூறினார்.

பிறப்பு, வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றைக் காட்டிலும் அதிகமான விஷயங்கள் அவரது ஊழியத்திற்குத் தேவைப்பட்டன. அவர் தம் ஊழியத்தை நிறைவேற்ற, அவரது பிறப்பு இணையற்றதாயிருக்க வேண்டியதாயிற்று, அவரது வாழ்க்கை குறையற்றதாயிருக்க வேண்டியதாயிற்று, மற்றும் அவரது மரணம் மிகக் கொடுமையான உண்மையாய் இருக்க வேண்டியதாயிற்று. பூமியில் இயேசு வாழ்ந்த வாழ்வின் எல்லா அம்சங்களிலும் இங்கு வாழ்ந்திருந்த மனிதர்களிலேயே மிகவும் மேன்மையான மனித இயல்பை அவர் ஒளி வீசச்செய்தார். அவர் முழுமையானவராக/பூரணப்பட்டவராக இருந்தார் - ஏனென்றால் அவர் "பாதி - தேவனாக" இருந்ததால் அல்ல, ஆனால் அவர் உண்மையில் மனிதராயிருந்தும் கறை அல்லது குற்றம் எதுவும் இல்லாத வாழ்க்கை வாழ்ந்ததினாலேயே அப்படியானார். பிறப்பு முதல் மரணம் வரையிலும் மிக மேன்மையான வாழ்க்கை மட்டுமின்றி பாவமற்ற வாழ்க்கையும் வாழ்ந்தவர் மனித வரலாறு முழுவதிலும் இயேசு ஒருவரே ஆவார்.

## அவரது மரணம்

தனிப்பட்ட முறையில் பரிசுத்தமும் சமாதானமும் நிறைவும் கொண்ட இந்த இயேசுவால், இழந்து போகப்பட்டவர்களை இரட்சித்தல் என்ற தமது ஊழியத்தை எவ்விதம் வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்தது? அதுவே கெத்செமெனேயின் முக்கிய கூறாக இருந்தது. அவர் தமது பிதாவின் சித்தத்தைச் செய்வதற்குச் சித்தமாயிருந்தார்: "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே;" (1 தீமோ. 2:5, 6அ). இயேசு, "அப்படியே, மனுஷகுமாரனும்

ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மாற். 10:45) என்று கூறினார்.

இப்படிப்பட்ட ஒரு தூய்மையான மற்றும் அன்புக்குரிய நபரைப் பலியிட வேண்டியது ஏன்? - மற்றும் அந்த மரணம் அவ்வளவு கொடியதாகவும் கொடூரமாகவும் இருக்க வேண்டியது ஏன்? ஏனென்றால் அது தேவனுடைய உயர்த்தப்பட்ட பரிசுத்த தன்மையாகும். ஏனென்றால் அது மாற்றப்பட முடியாத முற்றிலுமான நீதியினால் ஆனதாகும். அவரது பரிசுத்த தன்மை பாவத்தை வெறுத்தது; அவரது நீதியானது ஒவ்வொரு பாவமும் தண்டிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றது. தப்பிக் கொள்ளும் வழிகள் எதுவும் இல்லாதிருந்தது. தேவன், அன்பு மற்றும் சகிப்புத் தன்மை என்ற கொள்கையின் அடிப்படையில் தனது குழந்தைகளின் தவறான காரியங்களை ஒதுக்கிப் பார்க்கும் மனம் போன போக்குடைய பெற்றோரைப் போன்றவர் அல்ல. இதற்கு மாறாக, "... எந்த ... கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத் தக்கதாக" (எபி. 2:2ஆ) அவர் இருக்கின்றார் என்று பழங்காலத்திலிருந்தே நமக்குக் கூறப் பட்டுள்ளது; மற்றும், "மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே" (எபி. 10:28). புதிய ஏற்பாட்டில், "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபி. 9:27) என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. பாவம் என்பது ஆபத்தானது; அது மன்னிக்கப்படவில்லை யென்றால் மரணத்திற்கு ஏதுவாகின்றது.

முற்றிலும் பரிசுத்தமான தேவனால் கேட்டுக் கொள்ளப்பட்ட நீதியின் நிறைவேறுதலானது குறை கூறப்பட முடியாத கிறிஸ்துவின் முழுமையான பலியினால் அன்றி வேறு எதினாலும் நமது பாவங்களை மன்னிக்கக் கூடாதிருந்தது. ஆகையால் தேவனுடைய குமாரன் தமது பிதாவாகிய தேவனுடைய சித்தத்திற்குத் தம்மை முற்றிலும் ஒப்புக் கொடுத்து, மீட்கும் பொருளைச் செலுத்தினார். தேவனுடைய நீதி நிறைவேற்றப்பட்டதற்குக் கேட்டுக் கொள்ளப்பட்ட அளவிட முடியாத அப்படிப்பட்ட தகுதியுடைய ஒரு பலியை அவரது உடலும் இரத்தமும் (அவரது ஜீவனை) கொடுத்தன. இந்த ஈவை ஏற்றுக் கொள்கின்றவர்களை பிதாவானவர் மன்னிக்கும் போது அவரது முழு இயல்புக்கும் முற்றிலும் இசைவுடைய தன்மை அப்படியே தக்க வைத்துக் கொள்ளப்பட்டது. "நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்" (யாக். 2:13ஆ).

இயேசு மரித்துக் கொண்டிருக்கையில், "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே"; "முடிந்தது!"; "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (லூக். 23:34; யோவா. 19:30; லூக். 23:46) என்று கூறினார். "முடிந்தது!" ஒருவேளை இந்த வார்த்தைகளின் முழுமையான தனிச் சிறப்பை உணர்ந்து கொள்வது என்பது மனிதரின் மனதினால் இயலாததாக இருக்கலாம். இருப்பினும் இயேசு அதை அறிந்தார்; தாம் பாடுபட்ட பயங்கரமான மரண அடிகளிலும் கூட, அவர் அமைதியுணர்வுடன்

*மரித்தார். இப்பொழுது, கடனாய்ப் பெறப்பட்ட ஒரு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுதலில் தொடங்கி அவரது பிதாவின் இல்லத்திற்குச் செல்லும் பயணம் மட்டுமே எஞ்சியிருந்தது. அவரது மனிதத்துவமானது அதன் எல்லைகள் வரையிலும் நீட்டிக்கப்பட்டது. அவரது பிறப்பே மகிமையுடையதாக இருந்தது (லூக். 2:6, 7, 13, 14). அவரது வாழ்வு மிக மேலான தூய்மையுள்ளதாய் இருந்தது. அவரது மரணம் அவரது வெற்றியாயிருந்தது என்பது தன்னில்தானே எதிரிடையாகத் தோன்றும் உண்மையாகும். அவர் தமது பிதாவின் சித்தத்தைச் செய்யவே வந்திருந்தார் (யோவா. 6:38), அவர் அதைச் செய்திருந்தார்!*

## அவரது உயிர்த்தெழுதல்

*இயேசுவின் உயிர்த்தெழுதல் அவரது மெய்ப்பாடு ஆகும் - என்ன ஒரு உயிர்த்தெழுதல்! மனிதக் காதுகளால் கேட்கப்படாமல், மனிதக் கரங்களால் தொடப்படாமல், மனிதக் கண்களால் காணப்படாமல், மனித மனங்களால் அரிதாகவே உணரப்படும் வகையில் இயேசு ஜீவனுள்ளோருடைய தேசத்திற்குத் திரும்பினார்.*

*அவரது உயிர்த்தெழுதல் மற்றும் அவரது பரத்துக்கேறுதல் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலத்தில் அவர் நூற்றுக்கணக்கான மக்களால் காணப்பட்டார் (1 கொரி. 15:1-8). இயேசுவின் உயிர்த் தெழுதலுக்குப் பிறகு அவருடைய தரிசனங்களில் பல மனிதரின் கண்ணோட்டம் என்ற கருத்தில் புதுமையின் மெல்லிய திரையினால் உடுத்தப்பட்டதாக உள்ளன. சில உதாரணங்களைக் கவனியுங்கள். ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் இன்னமும் இருட்டாயிருந்த போதே மகதலேனா மரியாள் இயேசுவைப் புதைத்திருந்த இடத்திற்குச் சென்றாள். கல்லறை திறந்திருந்ததை அவள் கண்ட பொழுது, அவரது சரீரம் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது என்று அவள் நினைத்தாள். அவள் அழுது கொண்டிருந்த போது இயேசு அவளுக்குத் தரிசனமாகி, அவளுடன் பேசினார். அவர், ''என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், 'நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு' என்றார்" (யோவா. 20:1-18ஐ வாசிக்கவும்). இயேசு உயிர்த்தெழுப்பப்பட்டார் என்று பெண்களின் குழு ஒன்று பதினோறு அப்போஸ்தலர்களிடம் கூறிய பொழுது, "இவர்களுடைய வார்த்தைகள் அவர்களுக்கு வீண் பேச்சாகத் தோன்றினதினால், அவர்கள் இவர்களை நம்பவில்லை'' (லூக். 24:6-11ஐ வாசிக்கவும்). வெறுமையாயிருந்த கல்லறையைக் கண்ட பிறகும் கூடப் பேதுரு, "சம்பவித்ததைக் குறித்துத் தன்னில் ஆச்சரியப்பட்டுக் கொண்டு போனான்" (லூக். 24:12ஆ). அதே நாளின் பிற்பகுதியில், இரண்டு மனிதர்கள் இயேசுவுடன் உணவு உண்டார்கள். அவர்கள் முதலில் அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை; அவர்கள் அவரை அடையாளம் கண்டு கொண்டவுடன்*

*அவர் மறைந்து போனார் (லூக். 24:13-31). இதற்குச் சற்றுப் பிறகு, எருசலேமில் அப்போஸ்தலர்களுடன் கூடியிருந்தவர்களுக்கு இயேசு தரிசனமானார். "அவர்கள் கலங்கி, பயந்து ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள்." அவர் தமது கைகளிலும் கால்களிலும் இருந்த சிலுவையில் அறையப்பட்ட தழும்புகளை அவர்களுக்குக் காண்பித்து அவர் தாம் மாம்சமும் இரத்தமும் உடையவராய் இருந்ததையும் தாம் ஒரு (வெறும்) ஆவியல்ல என்பதையும் அவர்களுக்கு உறுதிப் படுத்தினார் (லூக். 24:36-43).*

*ஒரு வாரத்திற்குப் பிறகு கதவுகள் பூட்டப்பட்டிருந்த ஒரு அறையில் இருந்த தமது அப்போஸ்தலர்கள் யாவருக்கும் இயேசு தரிசனமானார். இதற்கு முன்பு இயேசு தரிசனமாகியிருந்த பொழுது தோமா அவர்களுடன் இல்லாதிருந்தார். அவர் (தோமா) இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றிய தமது நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தியிருந்தார். இப்பொழுது அவர்களுடன் அவர் இருந்தார். இயேசு அவரிடத்தில் பேசினார்: " 'நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு' என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக 'என் ஆண்டவரே! என் தேவனே!' என்றான்" (யோவா. 20:27, 28).*

*கலிலேயாவில் இயேசு அப்போஸ்தலர்களுக்குக் குறித்திருந்த மலையில் இயேசு அவர்களுக்குத் தரிசனமாகி, பிரதான கட்டளையைக் கொடுத்த பொழுது, "அவர்கள் அவரைக் கண்டு பணிந்து கொண்டார்கள்; சிலரோ சந்தேகப்பட்டார்கள்" (மத். 28:16, 17). உயிர்த்தெழுதலுக்குப் பிந்திய காலத்தின் போது இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு நாற்பது நாளளவும் தரிசனமானதாக லூக்காவின் சுவிசேஷத்தில் நாம் வாசிக்கின்றோம். அப். 1:3ன்படி நம்ப வைக்கும் பல ஆதாரங்களுடன் அவர் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். கடைசியாக, அவர்களை அவர் ஒலிவ மலைக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் (லூக். 24:51).*

*இந்த நிகழ்ச்சிகளில் பல புதுமையின் மெல்லிய திரையினால் உடுத்தப்பட்டவை என்று நாம் ஏன் கூறினோம்? இது இயேசுவின் உயிர்த்தெழுதலை ஏற்றுக் கொள்வதில் சீஷர்கள் சிரமம் பெற்றிருந்தார்கள் என்பதாலா? பலர் அதைக் கடினமாக உணர்ந்தார்கள் என்பது தெளிவே, ஆனாலும் அது எதிர்பாராதது அல்ல. உயிர்த்தெழுதலின் இறையியலை ஒரு உபதேசமாகக் கலந்துரையாடுவது சுலபமானதாக இருக்கலாம்; அது நேரடியான ஒரு நிகழ்ச்சி என்ற கருத்துவாக்கம் செய்வது அவ்வளவு சுலபமானதல்ல. உயிர்த்தெழுதல் என்பது எந்த ஒரு சொந்த அனுபவத்தின் அடிப்படையிலும் நாம் உறவு படுத்திக் காண முடியாத பாதாள உலகின் பரிமாணமாய் உள்ளது. இயேசு தரிசனமான பொழுது அவரது பின்பற்றாளர்களில் சிலர் பயமடைந்தார்கள் என்பது வினோத மாயிருந்ததா? இல்லவே இல்லை. ஒரு சில நாட்களுக்கு முன்பு சிலுவையில் அறையப்பட்டு, புதைக்கப்பட்டவராக நீங்கள் கண்ட ஒருவர் உங்கள் முன்னால் நிற்பதை நீங்கள் காணும் பொழுது ஏற்படும் செயல் விளைவை யோசித்துப் பாருங்கள். உங்கள் முன்பு உயிருள்ள நபராக நிற்பவர் நீங்கள்*

*கண்ட மரித்து அடக்கம் பண்ணப்பட்ட அதே நபர் தான் என்றால், நீங்கள் உறுதியாகவே "மறு உலகத் தன்மை"யின் சூழ்நிலையொன்றை உணர்வீர்கள். இவர் "அப்பாலிருந்து திரும்பி வந்த" நபர் என்று நீங்கள் அறிவீர்கள். புதுமையான ஏதோ ஒன்று நடந்தது என்று நீங்கள் அறிவீர்கள்.*

*இயேசுவின் உயிர்த்தெழுதல், அதைத் தொடர்ந்த அவரது தரிசனங்கள் ஆகியவற்றைச் சுற்றி வழக்கமற்றது ஏதோ ஒன்று சுழன்றது. அப்போஸ்தலர்கள் தங்களின் மாறுபட்ட செயல்பாடுகளினால் இதைச் செயல் விளக்கப்படுத்தினார்கள். மேலும் இயேசுவும் தமது சொந்த வார்த்தைகள், செயல்பாடுகள் மற்றும் தரிசனங்கள் ஆகியவற்றால் இந்தச் சூழ் நிலைக்குப் பங்களித்தார். அவர் தமது உயிர்த்தெழுதலுக்குப் பின், "என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை" (யோவா. 20:17) என்று கூறினார். பேதுருவிடம் அவர் யோவானைப் பற்றி, "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன?" (யோவா. 21:23ஆ) என்று கூறினார். அவரது தரிசனங்கள் பெரும்பாலும் அசாதாரண சூழ்நிலைகளிலேயே இருந்தன. இதற்கு முன்பு இயேசு ஒருபொழுதும் மூடப்பட்ட அல்லது பூட்டப்பட்ட கதவுகளின் மூலம் தோன்றியதோ அல்லது மறைந்ததோ இல்லை. சில வேளைகளில் அவர் சுலபமாய் அடையாளம் காணப்பட முடியாதவராயிருந்தார். நிகழ்ச்சிகள் ஒரு வினோதமான/புதுமையான திருப்பத்தை எடுத்துக் கொண்டன.*

*இயேசுவின் பூமிக்குரிய பயணம் நிறைவடைந்தது. என்ன ஒரு நிகழ்ச்சி! என்ன ஒரு வாழ்வு! என்ன ஒரு மீட்பர்! தேவனுடைய வினைத் திறன் பற்றி நீங்கள் எப்பொழுதாவது கவனித்திருக்கின்றீர்களா? எங்கும் நிறைந்தவராய் இருக்கும் தேவன் எவ்விதம் "உலகத்தில் வந்து" இங்கு சில "காலம்" கழித்து விட்டு, மற்றும் அதே வேளையில் அவர் எப்பொழுதும் பிரசன்னமாயிருக்கும் நித்தியத்திற்குத் திரும்ப முடிந்தது? இதை அவர் தமது படைப்பின் சமநிலையைக் கலைத்து விடாமல் செய்ய முடிந்தது எப்படி? அவர் நமது வான மண்டலத்திலும் பூமியின் மீதும் ஏற்படும் பிரளயக் கொந்தளிப்புக் குவியலின் மீதும் அவைகளுக்குக் காரணமாயிராதது போல தமது எல்லையற்ற வல்லமையை எவ்விதம் தமக்குள் "அடக்கிக்" கொண்டிருக்க முடிந்தது? இயேசு கிறிஸ்துவில் இவைகளுக்குப் பதில் காணப்படுகின்றது, ஏனெனில் "தேவன் கிறிஸ்துவுக்குள் உலகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கிக் கொண்டார்" (2 கொரி. 5:19).*

*இந்த மகிமையான நிகழ்ச்சி எவ்விதம் நிறைவேற்றப்பட்டது என்பதை நாம் கவனிக்கையில், கிறிஸ்துவின் வாழ்வில் இரு மாபெரும் மாற்ற நிகழ்வுகள் இருப்பது உறுதி என்பதை நாம் நோக்குகின்றோம். இதில் முதலாவது, தெய்வீகத்திலிருந்து மனிதத்துவத்திற்கு மாறியது வலியுறுத்தம் பெற்றதாக இருந்தது. குழந்தையான இயேசு தூதர்களின் கீதங்களின் ஒலிகளுக்கு மத்தியில் வந்து சேர்ந்தார், ஆனால் துணிகளினால் சுற்றப்பட்டு முன்னணையில் கிடத்தப்பட்டார். அவர் கன்னிப் பெண்ணிடமிருந்து பிறந்தார், ஆனால் யோசேப்பின் குமாரன் என்று எண்ணப்பட்டார்.[1] அவரது வாழ்க்கை முழுவதிலும் அவர் அவ்விதமாகவே எண்ணப்பட்டார்.*

*தெய்வீகத்துவமானது மனிதர் என்ற வகையில் உருக் கொண்டிருந்தது. திரு அவதாரம் என்பது உண்மையானது. பவுல் பின்வருமாறு எழுதினார்:*

> *கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப் பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார் (பிலி. 2:5-8).*

*இரண்டாவது மாற்ற நிகழ்வானது, மனிதத்துவத்திலிருந்து தெய்வீகத்துவத்துக்கு மாற்றத்தின் வலியுறுத்தமாக இருந்தது. அவரது மனிதத்துவமானது அவரது தெய்வீகத்துவத்தை மூடி மறைத்திருந்தது. இந்த மாற்றத்தின் "புதுமைத் தன்மை"யின் மத்தியில், தூக்கப்பட்ட திரையின் வழியாக/மூலமாகக் கடைசியாகத் தோமாவினால் அவரைக் காண முடிந்தது. அவர் "என் ஆண்டவரே! என் தேவனே!" (யோவா. 20:28) என்று இயேசுவிடம் பேசினார். இது ஒரே ஒரு மனிதருடைய அறிக்கைதானே என்று நீங்கள் கூறலாம். அது உண்மையே ஆனாலும் மனிதருக்குத் தேவன் தம்மையே வெளிப்படுத்தியதில் இது வரலாற்றுப் பூர்வமானதாக, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக, மனிதரின் உணரும் திறமையில் ஒரு திருப்பு முனையாக, மற்றும் அந்த வெளிப்படுத்துதலின் தனிச் சிறப்பினுடைய அறிக்கையாக உள்ளது.*

*இந்த மாற்ற நிகழ்வானது பரத்துக்கேறுதலில் நிறைவாக்கப்பட்டது. இயேசு மறுபடியும் உயிருள்ளவராக ஒருபோதும் காணப்படாதபடி திடீரென்று ஒரே நாளில் மறைந்து போய் விடவில்லை. அவர் தம்முடைய அப்போஸ்தலர்களுடன் பேசிக் கொண்டிருக்கையில், "அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக் கொள்ளப்பட்டார்; அவர்கள் கண் களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது" (அப். 1:9). இவ்விதமாக மனிதத்துவத்திலிருந்து தெய்வீகத்துவத்திற்கு மாற்றம் பெற்ற வலியுறுத்தம் முடிவுற்றது.*

*நம்புவதற்கரிய இவ்விரு மாற்ற நிகழ்வுகளும் இயேசு தேவனை விடக் குறைவானவர் என்றோ, மற்றும் அவரது பிறப்பில் அவர் அதிகமாக மனிதத்துவத்தில் (மட்டும்) இருந்தார் என்றோ அல்லது அவரது மரணத்தின் போது அவர் குறைவான மனிதத்துவமும் அதிகம் தேவனுமானார் என்றோ உறுதிப்படுத்துவதில்லை. ஒவ்வொரு மாற்ற நிகழ்விலும் அதிக ஆளுமை செலுத்திய வெளிப்பாட்டின் உறுதி பற்றி மட்டுமே நாம் ஆய்வு செய்துள்ளோம். கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனுடைய மீட்பின் ஊழியமானது சுய ஆதாரமுடையது போல அவ்வளவு எளிமையானது அல்ல. இருப்பினும், ஒருமுறை புரிந்து கொண்டால், தேவ அன்பு, கிருபை மற்றும் இரக்கம் ஆகியவற்றை அது பிரதிபலிப்பதானது நமது சொந்த வாழ்வை விசுவாசத்திலும், அன்பிலும், நன்றியுடைமையிலும் மற்றும் ஊழியத்திலும் அவருக்கு ஒப்படைக்கச் செய்கின்றது.*

*"திரு அவதாரத்தின் பாடல்" என்று சில வேளைகளில் அழைக்கப் படுகின்ற கீத அறிவிப்பொன்று வேதாகமத்தில் காணப்படுகின்றது, இது "குமாரனாகிய தேவன்" என்ற நமது படிப்பை முடிப்பதற்கு ஏற்றதொரு ஆய்வுப் பொருளாக உள்ளது:*

> *அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக் கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப் பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார் (1 தீமோ. 3:16).*

---

குறிப்புகள்

[1] *லூக். 1:34, 35; 2:33, 34, 41, 42, 48; 3:23; மத். 13:55, 56; யோவா. 6:42.*

# மாம்சத்தில் தேவன்

## *ராய் லேனியர்*

*இருபது நூற்றாண்டுகளாக மனிதர்களிடையே, நசரேயனாகிய இயேசு ஒரு அற்புதமாகவே இருந்திருக்கின்றார். அவரது நண்பர்கள் அவரைப் பாவமற்ற தேவ குமாரன் மற்றும் மனிதர்களின் பாவங்களில் இருந்து அவர்களை மீட்பவர் என்ற வகையில் அன்புகூர்ந்து, ஆராதித்தனர். பல்வேறு அளவுகளில் அவிசுவாசிகளாயிருந்த அவரது எதிரிகள் அவரது நற்பெயருக்குக் கேடுண்டாக்க எண்ணற்ற அளவில் வீண் முயற்சிகள் செய்தனர், ஆனால் ஒவ்வொரு கண்ணோட்ட வகையிலும் அவர் மனிதர்களுக்கு மேலானவர் என்று ஒப்புக் கொள்ளும்படி நிர்பந்திக்கப் பட்டனர்.*

*அவர் தமக்கு முன்னும், தம் காலத்திலும் இருந்த யாரைப் போலும் இல்லாத தனிச் சிறப்பான வகையில் வாழ்ந்தார். அவரது போதனையானது செயல்முறையிலும், கருத்தடக்கத்திலும் எந்தக் காலத்திலும் உள்ள மற்ற எந்த மனிதருடைய போதனையைக் காட்டிலும் உயர்வானதாக இருந்தது. அவரது பணிகள் உண்மையாகவே தேவனுடைய பணிகளாய் இருந்தன. அதிகமான தடைகளும், கெடுக்கும் நோக்கமும் கொண்ட எதிர்ப்புகளும் இருந்த போதிலும், அவரது செல்வாக்கானது அதிகமான மக்களால் உணரப்பட்டு, அவருக்கு முன்பும் அவரது காலத்திலும் வாழ்ந்த மற்ற எந்த மனிதரைக் காட்டிலும் அதிகமான நன்மைக்கு வழி நடத்தியுள்ளது.*

*துன்மார்க்கரான மனிதர்களும் அவிசுவாசிகளும் இந்த உண்மைகளுக்குப் பல்வேறு வழிகளில் காரணம் காட்ட முயற்சி செய்துள்ளனர், ஆனால் திருப்தியளிக்கக் கூடிய விளக்கம் ஒன்றே ஒன்று தான் உள்ளது. கபடமற்ற இஸ்ரவேலரான ஒருவரின் வார்த்தைகளில் இந்த எளிய, உயர்வான விளக்கம் உள்ளது: "ரபீ, நீர் தேவனுடைய குமாரன்" (யோவா. 1:49அ; வ. 47ஐக் காணவும்). வேதவசனங்களின் போதனைப்படி நாசரேத்தூர் இயேசு தேவனாக - மாம்சத்தில் தேவனாக, மாம்சமான தேவனாக, மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனாக இருந்தார்.*

## அவர் தேவனாயிருந்தார் என்று தீர்க்கதரிசிகள் கூறினார்கள்

**ஏசாயா**

இயேசு பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, ஏசாயா "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்" (ஏசா. 7:14) என்று கூறினார். இயேசு பிறந்த போது இந்த தீர்க்கதரிசனம்

*நிறைவேறிற்று என்று மத்தேயு கூறினார் (மத். 1:22). "இம்மானுவேல்" என்ற வார்த்தை "தேவன் நம்மோடு இருக்கிறார்" என்று அர்த்தப் படுவதாக அவர் நமக்காக விளக்கப்படுத்தினார் (மத். 1:23). இவ்விதமாக, ஏசாயா மற்றும் மத்தேயு ஆகியோரின்படி இயேசு, ''தேவன் நம்மோடிருக்கிறார்'' என்பவரானார்.*

*அவரது வருகையை ஏசாயா மீண்டும் பின்வரும் வார்த்தைகளில் முன்னுரைத்தார்:*

> *நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப் பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும் (ஏசா. 9:6).*

*தாவீதின் அரியணையில் அமர வேண்டியவராயிருந்தவர் "வல்லமையுள்ள தேவன்" என்று இந்தக்கூற்றில் இருந்து நாம் அறிகின்றோம். மரியாள் ஒரு குமாரனைப் பெற்று அவருக்கு இயேசு என்று பெயரிட வேண்டும் என்று காபிரியேல் தூதன் கூறிய போது இந்தத் தீர்க்கதரிசனத்தைச் சந்தேகமின்றி மறைமுகமாகச் சுட்டிக்காட்டினார் (லூக். 1:31). ''அவர் பெரியவரா யிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்" (லூக். 1:32). மரியாளின் மகன் "உன்னதமானவருடைய குமாரன்" என்று அழைக்கப்பட வேண்டியவராயிருந்தார், ஏனென்றால் அவரே ஏசாயா தீர்க்கதரிசனத்தின் "வல்லமையுள்ள தேவனாக" இருந்தார்.*

***மீகா***

*தீர்க்கதரிசியான மீகா, "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப் போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா 5:2) என்று கூறினார். கிறிஸ்து எங்கே பிறக்க வேண்டியதாயிருந்தது என்று ஏரோது கேட்ட பொழுது, பிரதான ஆசாரியர்களும் வேதபாரகர்களும் இந்த தீர்க்கதரிசன வசனத்திற்குத் திரும்பினார்கள். "யூதர்களின் ராஜாவாகப் பிறந்தவரை" (மத். 2:2-8) அவர்கள் காணும்படிக்கு ஏரோது ஞானிகளை பெத்லகேமுக்கு அனுப்பவும், இந்த தீர்க்கதரிசனமே காரணமாயிற்று. மீகாவின் கூற்றுப்படி, யூதர்களின் ராஜாவாவதற்குப் பிறந்த இவர் என்றென்றுமிலிருந்து என்றென்றைக்கும் வரைக்கும் இருக்கின்றார். எந்த ஒரு சிருஷ்டியைக் குறித்தும் இப்படிக் கூறப்பட முடியாது; சிருஷ்டிகரைப் பற்றி மட்டுமே இப்படிப்பட்ட சொற்றொடர்களினால் விவரிக்க முடியும். இவ்விதமாக, தீர்க்கதரிசனத்தின்படி அவர் தேவனென்று உணரப்பட்டவர் ஆவார்.*

# தாம் தேவனென்று இயேசு உரிமை கோரினார்

**யூதர்களின் பொதுக் கருத்து**

*இயேசு தேவனாயிருக்கிறவரென்ற உரிமைகோருதலை நிரூபிக்க வேத வசனங்களைக் குறிப்பிட்டுக்காட்டுவதற்கு முன் மேசியா என்பதற்கான யூதர்களின் பொதுக் கருத்தை நன்கு அறிவது நமக்குத் தேவை. இந்த யூத எண்ணமானது அவர்களின் சொந்த உறுப்பினரான டிரைபோ என்பவர் ஜஸ்ட்டின் மார்ட்டியருடன் (c. 110-c.165) நடத்திய அவரது விசேஷித்த உரையாடலில் விளக்கியுரைக்கப்பட்டது:*

> *... இந்தக் கிறிஸ்து காலங்களுக்கு முன்னதாகவே தேவனுடன் இருந்தார் என்பதும், அவர் மனிதனாகப் பிறந்து வருவதற்குத் தம்மை ஒப்புக் கொடுத்திருந்தும், மனிதரின் மனிதராய் இருக்கவில்லை என்பதும் [ஆகிய இவ்வுறுதிப்பாடானது] என்னைப் பொறுத்தமட்டில் வெறும் முரண்பாட்டு மெய்யுரையாக மட்டுமின்றி, மதியீனமான தாகவும் தோன்றுகின்றது.[1]*

> *அவர் ஒரு மனிதராய் இருந்துள்ளார் என்றும், தேர்ந்தெடுக்கப் படுதலினால் அபிஷேகிக்கப்பட்டுள்ளார் என்பதும், அதன் பிறகு கிறிஸ்துவானார் என்பதும் என்னைப் பொறுத்தமட்டில் அறிவுக்குப் பொருத்தமாய்ப் பேசுவதாகத் தோன்றுகின்றது .... ஏனெனில் நாம் யாவரும் கிறிஸ்து மனிதர்களில் ஒரு மனிதனாக [பிறப்பார்] என்றும், அவர் வரும் போது எலியா அவரை அபிஷேகம் செய்வார் என்றும் எதிர்பார்க்கின்றோம். ஆனால் இந்த மனிதர் கிறிஸ்துவாகத் தோன்ற வேண்டுமென்றால், இவர் மனிதர்களில் ஒரு மனிதனாய் [பிறந்ததாக] உறுதியாக அறியப்பட வேண்டும்; ஆனால் எலியா இன்னும் வராதிருக்கின்றார் என்ற சூழ்நிலையிலிருந்து, இந்த மனிதர் அவரல்ல [கிறிஸ்துவல்ல] என்று நான் உய்த்துணருகின்றேன்.[2]*

*இயேசுவின் காலத்தில் யூதர்கள் இந்த நம்பிக்கையைக் கொண்டிருந்தார்கள் என்பது மத்தேயு 22:41-45ல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு நிகழ்ச்சியிலிருந்து காணப்படுகின்றது:*

> *பரிசேயர் கூடியிருக்கையில், இயேசு அவர்களை நோக்கி, கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக் கிறானே. தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார்.*

தாவீது தமது பின் வழித் தோன்றலை “ஆண்டவர்” என்று ஏன் அழைத்தார் என்பதற்கு யூதர்களால் விளக்கம் தர முடியாமல் போனது ஏன்? அவர்கள் மேசியாவை தாவீதின் குடும்பத்தில் “மனிதப் பெற்றோர்களுக்குப் பிறக்கும் ஒரு மனிதராக” எதிர்பார்த்தனர் என்பதே இதற்கு எளிய பதில் ஆகும். அவர் மாம்சத்தில் தேவன் (தாவீதின் பின் சந்ததியில் மாம்சமானவர்) என்று போதித்த வேதவசனங்களை அறிந்திருந்தால், இந்தக் கேள்விக்கு அவர்களால் பதில் அளிக்க முடிந்திருக்கும்.

யூதர்களின் கருத்து மதிப்பீட்டின்படி, ஒருவர் தம்மை கிறிஸ்துவாகிய மேசியா என்று உரிமைகோருதலானது மாபெரும் பாவம் ஒன்றுமல்ல. அது போலவே யாரையாகிலும் கிறிஸ்து என்று விசுவாசிப்பதிலும் குற்றம் எதுவும் இல்லாதிருந்தது. மத். 9:27ல் பார்வையற்ற இரு மனிதர்கள் இயேசுவைத் “தாவீதின் குமாரனே” என்று அழைத்தனர்; மத். 15:22ல், கானானியப் பெண்ணும் இதையே செய்தாள். “வெற்றிகரமான பிரவேசம்” என்று அழைக்கப்படும் பயணத்தில் இயேசு எருசலேமுக்குள் பிரவேசித்த பொழுது அவருக்கு முன் சென்ற திரளான கூட்டத்தார், “தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா” (மத். 21:1-17) என்று கூறினர். “தாவீதின் குமாரன்” என்ற சொல் விளக்கமானது இதே வழிமுறையில் மத். 21:9 மற்றும் 22:42 ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ளது. திரளான கூட்டத்தார் அவரை “தாவீதின் குமாரன்” என்று அழைத்தனர், ஆயினும் வெகு சொற்பப் பேர்தான் அவரை தேவனுடைய குமாரன், மாம்சத்தில் தேவன் என்று விசுவாசித்தனர். சில நாட்களுக்குப் பிறகு, அவர் தேவனுடைய குமாரன் என்று கூறியதில் தேவதூஷணம் கூறினார் என்று அவரை ஆக்கினைக்குள்ளாக்கிய தலைவர்களுடன் அவர்கள் சேர்ந்து கொண்டனர்.

**இயேசுவின் உரிமைகோருதல்**

இவை எல்லாவற்றையும் மனதில் கொண்டு, இயேசு தம்மை தேவனென்று அழைத்துக் கொண்டதைக் கவனிப்போம். அவர் “மனுஷ குமாரன்” என்பதை “மனிதன்” என்று அர்த்தப்படுத்துவதற்குப் பயன்படுத்தியதைப் போலவே “தேவ குமாரன்” என்ற சொல் விளக்கத்தை “தேவன்” என்று அர்த்தப் படுத்துவதற்குப் பயன்படுத்தினார். யோவான் 5:17, 18ல் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:

> இயேசு அவர்களை நோக்கி: என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்து வருகிறார், நானும் கிரியை செய்து வருகிறேன் என்றார். அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ் சொல்லித் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலை செய்யும்படி அதிகமாய் வகை தேடினார்கள்.

யூதர்கள் தங்களைத் தேவனுடைய புத்திரர்கள் என்று அழைத்துக் கொண்டனர், மற்றும் அவர்கள் தேவனைத் தங்களுடைய பிதா என்றும் அழைத்தனர் (யோவா. 8:41). நிச்சயமாகவே அவர்கள் தேவனை இயேசு தமது பிதா என்று அழைத்ததை மறுத்திருக்கக் கூடாது - ஆனால் அவர்கள்

அதை மறுத்தனர். ஏன்? இயேசு, "சொந்தப் பிதா" என்று பொருள்படும் சொற்றொடரைப் பயன்படுத்தியதே அவர்களின் மறுப்பாக இருந்தது, அதில் அவர் "தேவனுக்குச் சமமானவர்" என்ற கருத்து மறைந்திருந்தது. அவர் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கும் ஒரு சொற்றொடரைப் பயன்படுத்திய பொழுது, அது அவர் தம்மைத் தேவனென்று அழைத்துக் கொள்வதாகவே இருந்தது, அதை அவர்கள் தேவ தூஷணமாகக் கருதினர்.

யோவான் 8:53ஆ, 54ல் யூதர்கள் அவரிடத்தில், "உன்னை நீ எப்படிப்பட்டவனாக்குகிறாய்?" என்று கேட்டனர். இயேசு, "என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும், என் பிதா என்னை மகிமைப் படுத்துகிறவர், 'அவரை உங்கள் தேவனென்று' நீங்கள் சொல்லுகிறீர்கள்" என்று பதில் அளித்தார். யூதர்கள் தங்கள் தேவனென்று அழைத்தவரை இயேசு தமது சரியானப் பிதா என்று அடையாளப் படுத்தினார். இது அவர் மற்ற எவரும் கொண்டிராத தனிச் சிறந்த வகையில் தாம் தேவனுடைய குமாரனாக இருந்தார் என்று கூறும் இன்னொரு வழிமுறை ஆகும். ஆகையால் அவர் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினார்.

இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று அழைத்துக் கொண்ட பொழுது, அவர் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினார் என்று யூதர்கள் புரிந்து கொண்டனர். இது யோவான் 10:30-36ல் தெளிவாக்கப்படுகின்றது. "நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்ற இயேசுவின் கூற்றானது ஒரு பலத்த மறுசெயலைக் கொண்டு வந்தது:

> ... அப்பொழுது யூதர்கள் மறுபடியும் அவர் மேல் கல்லெறியும்படி, கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள். இயேசு அவர்களை நோக்கி, நான் என் பிதாவினாலே அநேக கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன், அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள்? என்றார். யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக, நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை: நீ மனுஷனாயிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லி, இவ்விதமாகத் தேவதூஷணஞ் சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவர்களா யிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பதாய் உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா? தேவவசனத்தைப் பெற்றுக் கொண்டவர்களைத் தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறாததாயிருக்க, பிதாவினால் பரிசுத்த மாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னைத் தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவதூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?

இயேசு தம்மைத் "தேவனுடைய குமாரன்" என்று அழைத்துக் கொண்ட பொழுது, அவர் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினார் என்று யூதர்கள் புரிந்து கொண்டது இவ்விடத்தில் தெளிவாய் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த உரிமைகோருதலே கடைசியில் அவரை அவருடைய மரணத்திற்கு வழி நடத்திற்று. யூதர்களின் ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக, "நீ கிறிஸ்துவானால், அதை எங்களுக்குச் சொல்" என்று அவர்

கட்டளையிடப்பட்டார். இதற்கு அவருடைய பதிலானது அவருடைய உரிமைகோருதலுக்கு எவ்வித சந்தேகத்திற்கும் இடம் அளிக்கவில்லை. கிறிஸ்து என்று ஒரு மனிதர் உரிமைகோருவதற்கு எதிரான நியாயப் பிரமாணம்/சட்டம் எதுவும் இல்லாதிருந்ததால் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாதிருந்தது. அடுத்து அவர், "அப்படியானால் நீ தேவனுடைய குமாரனா?" என்று கேட்கப்பட்டார். அவர், "ஆம், நான் அவ்வாறே யிருக்கிறேன்" என்று பதில் அளித்தார். இந்த உறுதிப்பாட்டைத் தொடர்ந்து யூதர்கள், "இனி வேறு சாட்சி நமக்கு வேண்டுவதென்ன? நாமே இவனுடைய வாயினாலே கேட்டோமே" என்று கூறினார்கள். (லூக். 22:66-71ஐ வாசிக்கவும்.)

பிறகு அவர்கள் அவரைப் பிலாத்துவின் முன்னிலையில் கூட்டிச் சென்றனர். அவர் தம்மை "கிறிஸ்து" என்ற ராஜாவாக்கிக் கொண்டார் என்பதே அவருக்கெதிராகக் கொண்டு வரப்பட்ட முதல் குற்றச் சாட்டாயிருந்தது. இந்தக் குற்றச்சாட்டு அவருக்குத் தண்டனையைப் பெற்றுத் தராது என்று அவர்கள் கண்ட போது, "எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாக வேண்டும் என்றார்கள்" (யோவா. 19:7). அவர்களுடைய நியாயப் பிரமாணத்தின்படி, தேவதூஷணக் குற்றம் செய்த ஒருவர் மரண தண்டனைக்கு ஆளாக வேண்டும் (லேவி. 24:16). அவர் தம்மைத் தேவனு டைய குமாரன் என்று அறிக்கையிட்டதினால் தேவதூஷணம் கூறியதாக அவர்கள் குற்றப் படுத்தினார்கள் (மத். 26:63-66). எனவே, இயேசு தாம் தேவனுக்குச் சமமாயிருப்பதாக உரிமை கோரியதை நாம் காண்கின்றோம்; அவர் மாம்சத்தில் தேவனென்று தம்மை உரிமைகோரினார்.

## அவர் தேவனாக இருந்தார் என்று அப்போஸ்தலர்கள் அறிவித்தனர்

இயேசு இப்பூமியில் இருக்கையில் அவரது அருகாமையில் இருந்த மனிதர்களாக - அவரது அற்புதங்களைக் கண்டும், மூன்றாண்டுகளுக்கும் மேலாக அவரது போதனைகளை நிலையாகக் கேட்டும் இருந்த மனிதர்களாக - அப்போஸ்தலர்கள் இருந்தனர். அந்த மனிதர்கள் அவர் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த பின் அவரைக் கண்டும் அவரோடு உண்டும் இருந்தனர். பின்னாளில் அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றனர், அந்த ஆவியானவர் அவர்களைத் தவறின்றியும் காத்ததுடன், நமக்குச் செய்தியளிக்கும்படியான வசனங்களையும் அவர்களுக்குக் கொடுத்தார். இயேசு தேவனுடைய குமாரன், மாம்சத்தில் தேவன், மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவன் என்று அந்த மனிதர்கள் கூறினார்கள்.

***யோவான்***

*பிரியமான சீஷனான யோவான் ஒருவேளை, பிதாவுடன் நமது கர்த்தருக்குள்ள உறவை மிகவும் முழுமையாகப் புரிந்து மதித்திருந்தார். பரிசுத்த ஆவியானவரால் தவறற்ற விதத்தில் வழி நடத்தப்பட்ட அவர் பின்வருமாறு எழுதினார்:*

> *ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது ...*
>
> *அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோவா. 1:1-4, 14).*

*இவ்விடத்தில் குறிப்பிடப்பட்ட "வார்த்தை" தேவத்துவத்தில் இரண்டாம் நபர் ஆவார். வார்த்தை இயேசுவாக ஆயிற்று. இந்த உண்மையானது வசனம் 14ல் கூறப்படுவதால் இதைப்பற்றி விவாதிக்கத் தேவையில்லை. ஆகையால், அவர் தேவனென்று நிரூபிப்பதற்கு இந்த வார்த்தையைப் பற்றி ஏற்படுத்தப்பட்ட கூற்றுக்களை நாம் முதலில் கவனிப்போம். இரண்டாவதாக, இந்த வார்த்தை தேவன் என்றும், மாம்சத்தில் வந்தபொழுது நாசரேத்தூர் இயேசு என்று அறியப்பட்ட தென்றும் நிரூபிக்கப்பட்டதைக் கவனிப்போம்.*

*வார்த்தையின் நித்தியத்துவமானது முதலாவது, "ஆதியிலே இருந்தது" என்ற சொற்றொடரால் குறிப்பிடப்படுகின்றது. மற்ற ஒவ்வொன்றும் இருக்கத் தொடங்கும் பொழுது வார்த்தையானது ஏற்கனவே "இருந்தது"; படைக்கப்பட்ட எந்த ஒன்றுக்கும் முன்னதாகவே அவர் இருந்தார். எனவே அவர் படைக்கப்பட்டவற்றின் ஒரு பாகமல்ல. அவர் நித்தியமானவராக இருக்கின்றார். தேவனைத் தவிர நித்தியமானது வேறெதுவும் இல்லை; ஆகையால் அவர் தேவனாக இருக்கின்றார்.*

*அடுத்ததாக, அவர் பிதாவுடன் இருக்கும் நிலையானது இவ்வசனப் பகுதியில் இருமுறை குறிப்பிடப்படுகின்றது: ''அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது"; "அந்த வார்த்தை ஆதியிலே தேவனோடிருந்தது." அதன் பிறகு, இன்றியமையாத மற்றும் தனிப்பட்ட தெய்வீகத்துவம் உறுதிப்படுத்தப்பட்டது: "அந்த வார்த்தை தேவனாயிருந்தது." கடைசியாக, பிதாவினிடத்திலிருந்து அவர் தனித் தன்மையுடையவராய் இருப்பது கூறப்படுகின்றது: ''அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.'' இருவர் இருக்கின்றனர் மற்றும் அவர்கள் ஒவ்வொருவரும் "தேவன்" என்று மிகச் சரியாக அழைக்கப்படலாம் என்ற கருத்தை இவ்வார்த்தைகள் தரவில்லையென்றால் இவைகள் வார்த்தைகளின் புத்தி கூர்மையற்ற தாறுமாறான கலவையாகவே இருக்கும். "வார்த்தை தேவனாயிருந்தது", ஆயினும் அவர்*

*“தேவன்” என்று அழைக்கப்பட்டவருடன் இருந்தார்; இதன் விளைவாக ‘‘தேவன்’’ என்று இருவர் அழைக்கப்பட்டனர். இதற்கு மறுபுறத்தில் அவர்களின் ஒருமைப்பாட்டின் காரணமாக நாம், “ஒரே ஒரு தேவனே இருக்கின்றார்” என்று உண்மையாகக் கூற முடியும்.*

*மற்றும் இவ்வார்த்தை சிருஷ்டிகர் என்று கூறப்படுகின்றது: “சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.’’ இது அவர் படைப்பு யாவுக்கும் முன்னதாகவே இருந்தார் எனவே அவர் படைக்கப்பட்டவரல்ல என்பதை மறுபடியும் நிரூபிக்கின்றது. அவரது சுயமான இருப்பு மற்றும் அவரது வலியூட்டப் பட்ட மற்றும் ஒளி பொருந்திய வல்லமை ஆகியவை அடுத்த கூற்றில் எதிரொளிக்கப்படுகின்றன: “அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.” இதன்படி, அவரே ஜீவன் மற்றும் வெளிச்சம் யாவற்றுக்கும் ஆதார மூலமாய் இருந்தார். உண்மையிலேயே அவர் தேவனாக இருந்தார்.*

*இந்த வார்த்தையாக இருந்தவர், ‘‘மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்.’’ மாம்சமானதில் அவர் தம்மை வார்த்தை, தேவன் என்று பண்பு படுத்திய அந்த இயல்புகள் எதையும் இழக்கவில்லை. “ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்” (யோவா. 8:58) என்று அவர் கூறிய பொழுது மாம்சத்தில் அவர் தமது நித்திய இருப்பை உறுதிப்படுத்தினார். “பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப் படுத்தும்” (யோவா. 17:5) என்று கூறியதின் மூலம் நாசரேத்தூர் இயேசு என்ற வகையில் அவர் பிதாவுடன் ஒன்றாயிருந்ததை அறிவித்தார்.*

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்துவத்திற்கு மற்றும் ஒரு ஆதாரத்தை நாம் 1 யோவான் நிருபத்தில் காண்கின்றோம். பிரியமான அந்த அப்போஸ்தலர் 1:2ல், ‘‘அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத் திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்” என்று எழுதினார். இது யோவான் அவரது சுவிசேஷத்தில் கூறிய கூற்றைப் போன்றே உள்ளது. வெளிப்படுத்தப்பட்ட ஜீவன் எதுவோ அது நித்திய ஜீவனாயிருந்தது. அது முதலில் தேவனிடத்தில் இருந்தது, பிறகு அது நமக்கு வெளிப்படுத்தப்பட்டது. தேவனுடைய குமாரன் பிதாவினிடத்திலிருந்து, பிறகு நமக்கு வெளிப்படுத்தப்பட்ட தென்றால், அந்த நித்திய ஜீவன் தேவனுடைய குமாரனே என்று முடிவு செய்வதில் நாம் சரியானவர்களாய் இருக்க வேண்டும்; ஆனால் நாம் முடிவுகளைப் பெறும்படி விடப்படுவதில்லை. யோவான், “அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்து கொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்” (1 யோவா. 5:20) என்று கூறினார். இதிலிருந்து நாம், தேவனுடைய*

குமாரனான பிதாவுடனிருந்த அந்த நித்திய ஜீவனே மாம்சத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட இயேசு கிறிஸ்து என்று அறியப்பட்டதாகக் கற்கின்றோம்/அறிந்து கொள்ளுகின்றோம்.

நமது தேடுதலை இவ்விடத்தில் முடித்தல் நன்று, ஏனெனில் தேவனுடைய குமாரனான இந்த இயேசு கிறிஸ்துவே மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார். "உண்மையான தேவனாக இருக்கிறார்" என்ற ஏவுதல் பெற்ற நேர்மறையான கூற்றை நாம் கண்டிருக்கின்றோம்.

**பவுல்**

இயேசுவின் தெய்வீகத்துவத்தைப் பற்றி எழுதிய இன்னொரு அப்போஸ்தலர் பவுல் ஆவார், இவருக்குக் கர்த்தர் பரலோகத்திற்குச் சென்ற பிறகு தரிசனமானார், மற்றும் இவர் (பவுல்) பிடிக்கப்பட்டு மனுஷர் பேசப்படாததும் வாக்குக் கெடாததுமான வார்த்தைகளைக் கேட்டார் (2 கொரி. 12:2-4). பின்வரும் சொற்றொடர்களில் இவர் இயேசுவை விவரித்தார்:

> அவர் [இயேசு] தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார் (பிலி. 2:6-8).

ஒரு காலத்தில் இயேசு தேவனுக்குச் சமமாய் இருந்தார் ஆனால் அவர் தம்மையே வெறுமையாக்கி அல்லது அந்தச் சமான நிலையை ஒப்புக் கொடுத்துத் தாழ்த்தினார் என்று பவுல் இவ்விடத்தில் கூறினார். இயேசு பூமியில் இருக்கையில் தேவனுக்குச் சமமானவராக, தேவத்துவத்தின் பரிபூரணமும், தேவனுடைய சகல வல்லமையும் தமக்குள் வாசம் பண்ணிய நிலையிலேயே இருந்தார். அவர் எவ்வகையில் தேவனுக்குச் சமமான வராயில்லாது இருந்தார்? அவர் மனிதர் சாயலாக்கப்பட்டார், மற்றும் ஒரு ஆவி என்ற தேவ சாயலற்றவராயிருந்தார், அவர் மனித குலத்துடன் தம்மை அடையாளப் படுத்திக் கொண்ட பொழுது அதை (தேவ சாயலை) ஒப்புக் கொடுத்தார். நாம் ஆராய்ந்து கொண்டிருக்கும் விஷயத்திற்கு - இயேசுகிறிஸ்து மனிதர் சாயலாக்கப்பட்ட தேவன் மற்றும் மாம்சத்தில் நம்மிடையே வாசம் பண்ணிய தேவன் என்பதற்கு - இதுவே விளக்கமாக உள்ளது. (எபி. 2:14-17ஐக் காணவும்).

மற்றும் பவுல் தேவனுடைய குமாரனைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்:

> அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவை

*களுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், துரைத்தனங் களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது (கொலோ. 1:15-17).*

*இயேசுவின் தெய்வீகத்துவத்தை விசுவாசியாதவர்கள் "சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்" என்ற சொற்றொடரை "முதலாவது படைக்கப் பட்டவர்" என்று அர்த்தப்படுத்துவதற்குப் பயன்படுத்துகின்றனர். அவர் "சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறாக" இருப்பதற்குக் காரணம் என்ன என்பது அடுத்த கூற்றில் தரப்பட்டுள்ளது - ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. "முதற்பேறானவர்" என்பது வாரிசு உரிமை பெற்றவர் மற்றும் கர்த்தர் என்று அர்த்தப்படுகின்றது மற்றும் அது முதல் பிறந்தவர் என்றும் அர்த்தப்படுகின்றது. படைக்கப்பட்ட எல்லாவற்றிற்கும் இயேசுவே கர்த்தராயிருக்கின்றார், அவராலே எல்லாப் பொருட்களும் செய்யப்பட்டன. இது ஒரு நல்ல கருத்தை ஏற்படுத்துகின்றது; மற்ற விளக்கங்கள் அவ்வாறு ஏற்படுத்துவதில்லை. "அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர்" என்றால் படைக்கப்பட்ட எல்லாவற்றிற்கும் முந்தினவர் என்று அர்த்தப்படுத்துகின்றது. இது அவர் தமது தெய்வீகத்தில் படைக்கப்பட்ட எல்லாவற்றிற்கும் முந்தி ஏற்கனவே இருந்தார் என்று விவாதிக்கின்றது. "எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது." படைக்கப்பட்ட ஒன்றைப் பற்றி இவ்வாறு கூறப்பட முடியாது, ஆனால் எல்லாவற்றையும் படைத்தவரைப் பற்றியே இவ்விதத்தில் நேர்மையாகக் கூறலாம்.*

*அடுத்ததாக, சந்தேகம் அல்லது தவறான புரிந்து கொள்ளுதலை அனுமதிக்காத அளவு மிகத் தெளிவான பவுலின் கூற்று ஒன்றை நாம் கவனிப்போம். யூதர்களைப் பற்றிக் கூறும் பொழுது அவர், "... மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன்" (ரோமர் 9:5) என்று உரைத்தார். கிறிஸ்து அவரது யூத சந்ததியில் தரப்பட்ட மாம்சத்தில் அவர் தேவனாக இருக்கின்றார் என்பதே இதன் தற்போதைய மொழிபெயர்ப்பில் இவ்வசனப் பகுதியின் எளிய தனிச் சிறந்த கருத்தாக உள்ளது. அவர் தேவனாக இருக்கின்றபடியால், அவர் யூதர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட, பெற்றுக் கொண்டிருக்கின்ற சாபங்களுக்கு மாறாக ஸ்தோத்திரங்களைப் பெற்றுக் கொள்ளத் தகுதியுடையவராய் இருக்கின்றார்.*

*இயேசுவின் உயிர்த்தெழுதலானது அவர் தேவனுடைய குமாரன் அல்லது மாம்சத்தில் தேவன் என்பதற்கு மாபெரும் ஆதாரமாகும் என்று பவுல் கருதினார். பரலோகத்திலிருந்து தேவன், "இவர் என்னுடைய நேசகுமாரன்" என்று இருமுறை உரைத்தார் (மத். 3:17; 17:5; மாற். 9:7; லூக். 9:35ஐக் காணவும்), ஆனால் யூதர்கள் அவரை விசுவாசிக்க மறுத்தனர். ஒரு மனிதரும் ஒருபோதும் செய்திராத அப்படிப்பட்ட அற்புதங்களை இயேசு நிகழ்த்தினார், இருந்தாலும் அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை. தேவனு டைய வாக்கில் அவர் தேவ குமாரன் என்று சாட்சியம் அளிக்கப்பட்டார்; ஆனால் இந்த சாட்சியத்தை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, அதன் காரண*

மாக அவர் தேவதூஷணம் செய்த வஞ்சகன் என்று அவரை அவர்கள் சிலுவையில் அறைந்தனர். பரலோகத்தின் மகா தேவன் பூமியின் மிக உயர்ந்த நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்மாறாக்கினார்; கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பியதினால் அவரைத் தமது குமாரன் என்று தேவன் அறிவித்தார்.

தேவனுடைய சுவிசேஷத்தைப் பற்றிப் பேசுவதில் பவுல் பின்வருமாறு எழுதினார்:

> ... இயேசு கிறிஸ்துவானவர், மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார் (ரோமர் 1:4, 5).

இவ்விடத்தில் பவுல் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்ற வகையில் நமது கர்த்தர் என்று குறிப்பிட்டார். இந்த குமாரன் தமது மனிதத்துவத்தைத் தாவீதின் மூலம் பெற்றிருந்தார், ஆனால் அவரது உயிர்த்தெழுதலானது அவர் மனிதருக்கு மேலானவர் என்று அறிவிக்கின்றது. அவர் தேவனுடைய குமாரன் என்று கூறியதற்காகச் சிலுவையில் அறையப்பட்டார் - அதாவது, அவர் தாவீதின் குமாரனாக இருந்தும் அதைக் காட்டிலும் உயர்வான உறவுமுறையொன்றை அவர் பெற்றிருந்தார். அவருக்குத் தாவீதுடன் இருந்த தொடர்பினால் அல்ல, ஆனால் தேவனுடன் அவருக்கு இருந்த உறவுமுறையினாலேயே அவரது தெய்வீகத்துவம் வந்தது. இயேசுவை மரித்தோரில் இருந்து தேவன் எழுப்பியதின் மூலம் இயேசுவின் உரிமைகோருதலைக் கனப்படுத்தினார். இந்த வசனப் பகுதியானது இயேசு கிறிஸ்துவின் மனிதத்துவம் மற்றும் தெய்வீகத்துவம் ஆகியவற்றிற்குத் திடமான பாறை போன்ற ஆதாரமாக நிலைநிற்கின்றது. இது "இயேசு கிறிஸ்து நமது கர்த்தர்" என்ற நபரை தேவனுடைய குமாரன் என்று அழைத்து அவரது மனிதத்துவத்தையும் தெய்வீகத்துவத்தையும் இணைக்கின்றது.

மாம்சத்தின்படி இயேசு தாவீதின் சந்ததியில் "பிறந்தவர்" என்று பவுல் கூறினார். பிறப்பு என்பது தொடக்கத்தைக் குறிப்பிடுகின்றது. இருப்பினும், கிறிஸ்துவின் ஆவியைக் குறித்து அவர் தேவனுடைய குமாரனென்று "பலமாய் ரூபிக்கப்பட்டார்" என்று பவுல் கூறினார். இது ஒரு தொடக்கத்தைக் குறிப்பிடுவதில்லை. நாசரேத்தூர் இயேசுவில் அவரது பிறப்பில் தொடங்கிய அந்த மனிதத்துவம் மற்றும் தேவனோடிருந்த மற்றும் தேவனாயிருந்த தெய்வீகத்துவம் ஆகியவை ஒன்றாகுவதை நாம் காண்கின்றோம். அவருக்குள் - அவருக்குள் மட்டுமே - தேவன் மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டதை நாம் காண்கின்றோம்.

## அவரது ஊழியங்கள் அவர் தேவனாக இருப்பதை அறிவிக்கின்றன

இயேசுவின் சொந்த கூற்றின்படி, அவர் இங்கு பூமியில் இருக்கையில்

*செய்த ஊழியங்கள் வேறு எவராலும் ஒருபொழுதும் செய்யப் பட்டிருந்ததில்லை. அவர், "வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவமிராது" (யோவா. 15:24அ) என்று கூறினார். அவர் தமது ஊழியங்களைத் தமது தெய்வீகத்துவத்தினை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்களாகக் கருதினார்; அவர், "நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்து வருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது" (யோவா. 5:36) என்று கூறினார். இந்தக் கிரியைகள் கிறிஸ்துவின் தெய்வீகத்திற்குப் போதுமான மற்றும் ஏராளமான சாட்சியமாய் இருக்கின்றது. விசுவாசியாதவர்கள் யாவரும் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுகிறார்கள். அவர், "நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" (யோவா. 8:24) என்று கூறினார்.*

### *அசுத்த ஆவிகளின் மீது வல்லமை*

*அசுத்த ஆவிகளின் மீது இயேசு செலுத்திய அதிகாரமானது மனிதப் பிறவிக்கு அப்பாற்பட்ட வல்லமைக்கு நிரூபணமாய்/ஆதாரமாய் இருக்கின்றது. பெயல்செபூலினால் அவர் அசுத்த ஆவிகளைத் துரத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்ட பொழுது, அவர், ''பலவானை முந்திக் கட்டினாலொழிய, ஒருவனும் பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து, அவன் உடைமைகளைக் கொள்ளையிடக் கூடாது; கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடுவான்" (மாற். 3:27) என்று கூறினார். இவ்விடத்தில் அவர் மனிதத்துவத்திற்கு அப்பாற்பட்ட வல்லமையை உரிமைகோரினார்.*

*இயேசுவின் பிரசன்னமே அசுத்த ஆவிகளுக்குத் தொந்தரவாய் இருந்தது. கப்பர்நகூமில் இருந்த ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவி ஒன்று, "எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்'' (மாற். 1:24ஆ) என்று சத்தமிட்டது. இன்னொருவர், "நீர் தேவனுடைய குமாரன்" (மாற். 3:11) என்று கூறினார். அசுத்த ஆவிகள் தங்களை அழிப்பவர் அவர் என்று அடையாளம் கண்டு கொண்டன; அவைகள், "காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ?" என்று கேட்டன (மத். 8:29). இவ்வசனப் பகுதிகள், தேவனுடைய வல்லமையைக் காட்டிலும் அவரது வல்லமை குறைவானதல்ல என்று நிரூபிப்பதுடன், அசுத்த ஆவிகள் தங்களின் தண்டனை வருகின்ற போது எதிர்கொள்ள வேண்டிய தேவகுமாரன் அவரே என்று இயேசு கிறிஸ்துவைப் பற்றிப் புரிந்து கொண்டதையும் காட்டுகின்றன.*

### *பாவங்களை மன்னிப்பதற்கு அதிகாரம்*

*இயேசு பூமியில் இருக்கையில் பாவங்களை மன்னித்தார், லூக். 5:20, 21ல் இதைப் பற்றி வேதபாரகரும் பரிசேயரும் சரியாகவே கூறினர், தேவனைத் தவிர வேறொருவராலும் பாவங்களை மன்னிக்க முடியாது. இயேசு ஒரு மனிதனிடத்தில், "உனது பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்று*

கூறிய பொழுது, அவர்கள் அவர் மீது தேவதூஷணக் குற்றம் சாட்டினர். அவர் தமக்குப் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் உண்டு என்று நிரூபிப்பதற்காக அவர்களின் கண்களுக்கு முன்பாக அம்மனிதனைக் குணப்படுத்தினார். (மத். 9:2-8 மற்றும் மாற். 2:1-12 ஆகியவற்றையும் காணவும்.) இந்த நிகழ்ச்சியானது இரண்டு சத்தியங்களை நிரூபித்தன. முதலாவது, தமது சொந்த வல்லமையினால் வியாதியஸ்தரைக் குணமாக்கும் ஒருவர், பாவங்களையும் மன்னிக்க முடியும். இரண்டாவது, இயேசு பாவங்களை மன்னிக்க முடிந்திருந்ததால் (தேவன் ஒருவரைத் தவிர வேறு எவரும் இதைச் செய்ய முடியாது) அவர் தேவனாக இருந்தார்.

**வரையறையற்ற வல்லமை**

அவர் புயலை அமர்த்தியது, ஐந்து அப்பங்கள் மற்றும் இரண்டு மீன்கள் ஆகியவற்றைக் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவளித்துப் பின் எஞ்சிய துணுக்குகளைப் பன்னிரெண்டு கூடைகள் நிறையச் சேர்த்தது, தண்ணீரின் மேல் நடந்தது, மற்றும் மரித்தவர்களை மறுபடியும் உயிருடன் எழச் செய்தது ஆகியவற்றை மறுகண்ணோட்டமிட நமக்கு இவ்விடத்தில் காலம் தடை செய்கின்றது. இந்த நிகழ்ச்சி ஒவ்வொன்றின் அடிப்படையிலும் எடுக்கக் கூடிய நீதியான முடிவாக இருப்பது இயேசு மாம்சத்தில் தேவனாக இருந்தார் என்பதே ஆகும். நாசேரத்தூர் இயேசுவின் நாமத்தை அறிக்கையிட்டு (அழகு வாசலின் அருகே பிறவிச் சப்பாணியைப் பேதுரு அப். 3:6ல் குணப்படுத்திய போது செய்தது போல) செய்தது தவிர, எந்த ஒரு மனிதரும் எந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட எந்த ஒரு அற்புதமும் நிகழ்த்த முடியவில்லையாதலால் இயேசு மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனாக இருந்தார் என்று நாம் முடிவு செய்வதில் சரியானவர்களாய் இருக்கின்றோம் என்பது நிச்சயமே ஆகும். வேறு எவரும் இப்படிப்பட்ட ஒரு வல்லமையை நேரடியாக செயல்படுத்த முடியாதிருந்தது.

## முடிவுரை

இயேசு தேவனுடைய குமாரன், மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவன் என்ற ஆய்வுப் பொருளானது சுவிசேஷத்தின் இருதயம் போன்ற மையப் பகுதியில் உள்ளது. அது, மற்ற எல்லாம் நிலைநிற்கும் அஸ்திபாரமாய் உள்ளது. இந்த சத்தியத்திலிருந்து சோதனை வேளைகளில் நம்மை நிலை நிறுத்துவதற்கு ஊக்குவிக்கும் பல பாடங்களை நாம் வெளிக் கொண்டு வரலாம்.

முதலாவது, இயேசு மோசேயைக் காட்டிலும் பெரியவராய் இருக்கின்றார் என்ற உண்மையின்மீது யூதத்துவத்தைக் காட்டிலும் கிறிஸ்தவம் மேன்மையானது என்பது அமைந்துள்ளது. இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தார்; மோசே அப்படியிராதிருந்தார். இது எபிரெய நிருபத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது, தூதர்களுக்கு மேலான ஒரு உயர்வை நாம் பெறுவோம் என்ற நமது நம்பிக்கையானது, இயேசு மாம்சத்தில் தேவன் என்ற

சத்தியத்தின் மீது நிலைநிற்கின்றது. அவர் ஒரு எடுத்துக்காட்டாக அமைக்கப்பட்டுள்ளார்; நாமும் உயர்த்தப்படுவோம் (1 கொரி. 15:20-22; 1 பேது. 5:6) என்பதற்கு நிரூபணமாக அவர் முதற்பலனாக இருக்கின்றார். அவருடன் நமக்கு ஒரு சுதந்திரம் கொடுக்கப்படும், அது மாசற்றதும் வாடாததுமாக பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது (1 பேது. 1:4, 5).

மூன்றாவது, தேவன் மாம்சமாகி, மனிதர்கள் மத்தியில் வாழ்ந்தது அவர் இழந்து போனவர்களின் மீது கொண்டுள்ள அன்பைச் செயல் விளக்கப் படுத்துகின்றது. இவ்விடத்தில் மனிதரைத் தேடும் தேவனின் சித்தரிப்பு ஒன்றை நாம் பெறுகின்றோம். தேவனைத் தேடுவது மனிதரின் கடமை என்பதைப் பற்றி அதிகம் கூறப்பட்டுள்ளது; ஆனால் தேவன் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்ததால் மட்டுமே தேவனைத் தேட வேண்டியது மனிதனுடைய கடமையாயிற்று (லூக். 19:10). மனுஷகுமாரன் "ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கொடுத்திருக்கையில்" (எபி. 2:16) விழுந்து போன தூதர்களுக்கு உதவாமல் அவர்கள் மீது கடந்து சென்றார். அவர் தூதர்களையல்ல மனிதர்களையே அன்புகூர்ந்து தூக்கியெடுத்தார்.

நான்காவது, தேவன் மாம்சத்தில் வந்து, மனிதர்களிடையே வாழ்ந்து, மற்றும் மனிதருக்காக மரித்தது என்பது தேவனுடைய பார்வையில் மனிதர் எவ்வளவு மதிப்பு மிக்கவர் என்பதைக் காட்டுகின்றது. மனிதர் என்பவர் ஒரு குருவி அல்லது ஒரு செம்மறியாட்டைப் பார்க்கிலும் அதிகம் மதிப்புள்ளவராவார் என்று இயேசு யூதர்களுக்குப் போதித்தார். மனிதருக்காக அவர் மரித்தார், நமது இடத்தில் அவர் ஜீவனைக் கொடுத்தார் என்ற உண்மையானது அவர் தம்முடைய ஜீவனைக் காட்டிலும் நம்முடைய ஜீவனை மிக உயர்வாக மதித்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. அவர் நம்மை - நரகத்திலிருந்து மட்டுமல்ல, இந்த வாழ்வின் பாவங்களிலிருந்தும் - இரட்சிக்க விரும்புகின்றார், அதினால் நமது வாழ்வானது இப்பூமியில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தகுதியானதாகலாம். நாம் பாவத்தில் வாழ்ந்தால், தகுதியற்றவர்களாய் இருக்கின்றோம். அவருக்காக வாழ்வது என்பது மட்டுமே நமது வாழ்வைத் தகுதியுடையதாக ஆக்குவதற்கான ஒரே ஒரு வழியாகும்.

---

குறிப்புகள்

[1]Justin Martyr, *Dialogue of Justin, Philosopher and Martyr, with Trypho, a Jew* 48. Alexander Roberts and James Donaldson, eds., *The Ante-Nicene Fathers: Translations of the Writings of the Fathers down to A.D. 325*, rev, and arr. A. Cleveland Coxe (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957). [2]Ibid, 49.

# குமாரனின் ஞானஸ்நானம்

## எடி குளோர்

ஞானஸ்நானம் என்பது கண்டிப்பாகவே புதிய ஏற்பாட்டின் நடைமுறைப் பழக்கமாகும்.[1] யோவானால் தரப்பட்ட ஞானஸ்நான மானது, யூதர்களுக்காக, மனந்திரும்பும்படி அழைப்பதற்கும், பாவ மன்னிப்பை ஏற்றுக் கொள்வதற்குமானதாகும். இயேசுவின் பிறப்பைப் போலவே அவர் பெற்ற ஞானஸ்நானமும் அசாதாரணமானது. அது சாதாரணமானதிலிருந்து மாறுபட்டதாய் இருந்தது.

இயேசுவுக்கு முப்பது வயதான போது (லூக். 3:23),[2] அவர் (நாசரேத்திலிருந்து; மாற். 1:9) அறுபது மைல்கள் பயணம் செய்து பெத்தாபராவுக்கு (யோவா. 1:28)[3] யோவானால் ஞானஸ்நானம் பெறும்படியாக வந்தார்.[4] யோவானுடைய பிரசங்கத்தைக் கேட்டு அவரிடத்தில் ஞானஸ்நானம் பெற வந்த ஆயிரக்கணக்கானவர்களுடன் அவர் சேர்ந்து கொண்டார். ஒருவேளை, மக்கள் வரிசையில் நின்று யோவானின் ஞானஸ்நானம் பெறுவதற்காக யோர்தான் நதிக்குள் சென்றிருக்கலாம். யோவான் நிமிர்ந்து பார்க்கையில், அடுத்து இயேசு வருவதைக் கண்டார். அவர் திகைப்புற்றுத் தயங்கினார், ஆனாலும் அவர் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அவருடைய ஞானஸ்நானக் காட்சியானது தேவத்துவத்தைத் திட்டவட்டமாக/தீர்மானமாக விளக்கப்படுத்துகின்றது: தேவன் பரலோகத்தில் இருந்து பேசினார், இயேசு ஞானஸ்நானம் பெற்றார், மற்றும் ஆவியானவர் புறாவின் வடிவத்தில் இறங்கி வந்தார்.

இயேசுவின் ஞானஸ்நானம் பற்றி ஆவியானவர் நமக்கு மூன்று விபரக் குறிப்புகளைத் தருகின்றார், அவைகளில் மத்தேயுவின் விபரக் குறிப்பு முழுமையானதாக உள்ளது:

> அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து, "நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?" என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, "இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதா யிருக்கிறது" என்றார். அப்பொழுது அவருக்கு இடங் கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத் திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, "இவர் என்னுடைய நேசகுமாரன்,

*இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று உரைத்தது (மத். 3:13-17; இ.வ. மாற். 1:9-11; லூக். 3:21, 22).*

*இயேசுவின் வெளிப்படையான ஊழியத்திற்கு அழகியதொரு முன்னுரையை வடிவமைத்த நான்கு பெரும் முக்கியத்துவமான நிகழ்ச்சிகளில் இந்த ஞானஸ்நானமானது முதலாவது நிகழ்ச்சியாகும். இயேசு ஞானஸ்நானம் பெற்றபொழுது பதினெட்டு ஆண்டளவான ஏறக்குறைய முழு அமைதியானது உடைபட்டது. இரண்டாவதாக, ஆவியானவர் புறாவின் வடிவத்தில் இயேசுவின் மேல் வந்து இறங்கினார் (மத். 3:16). இது பரிசுத்த ஆவியானவரை அளவற்ற வகையில் இயேசு பெற்றுக் கொண்ட தருணம் என்பது உறுதி (லூக். 3:22; 4:1; 1:15). மூன்றாவதாக, இயேசு அவரது பிதாவினால் போற்றி ஒப்புக் கொள்ளப்பட்டார் (மத். 3:17). பிதாவானவர், இயேசுவைத் தம்முடைய குமாரன் என்றும், தாம் அவரில் பிரியமாய் இருப்பதாகவும் கூறினார். நான்காவதாக, இயேசு வனாந்தரத்தில் பிசாசினால் சோதிக்கப்பட்டார் (மத். 4:1-11). J.W. மெக்கார்வி அவர்கள், "அவர் சோதிக்கப்பட்டது இன்றியமையாதது ஆகும், இவ்விதமாய் நாம் அவரது இயல்பை அதன் பெலம் மற்றும் பாவமற்ற தன்மை ஆகியவற்றுடன் பகிர்ந்து கொள்ளுதலை அவர் நமக்குக் கொண்டு வருவதற்காக அவர் நமது இயல்பை அதன் பெலவீனம் மற்றும் சோதனை ஆகியவற்றுடன் பகிர்ந்து கொண்டார்" என்று எழுதினார்.[5]*

*யோவான், தேவனுடைய தீர்க்கதரிசியாயிருந்தார், அவர் மேசியாவுக்கு வழியை ஆயத்தப்படுத்தும்படி அனுப்பப்பட்டிருந்தார். பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகியவற்றிடையில் இணைக்கும் கண்ணி வளையமாக அவர் இருமடங்கு ஊழியத்தைப் பெற்றிருந்தார்: (1) வரப்போகிற கிறிஸ்துவுக்காகவும் அவருடைய இராஜ்யத்திற்காகவும் மக்களை (யூதர்களை) ஆயத்தப்படுத்துதல், மற்றும் (2) மேசியாவை அடையாளப் படுத்துதல் (யோவா. 1:23, 31-34).*

## *யோவானுடைய ஞானஸ்நானம் என்னவாக இருந்தது?*

*யோவானுடைய ஞானஸ்நானம் எதிர்பார்ப்பின் ஞானஸ்நானமாய் இருந்தது. அது இயேசுவின் வருகையை எதிர்நோக்கியிருந்தது (அப். 19:4). யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்கள், கிறிஸ்து வரும்பொழுது அவரை ஏற்றுக் கொள்வதாக உறுதி கொடுத்தார்கள். யோவான் தமக்கென்று சீஷர்களை ஏற்படுத்திக் கொள்ளாது, மேசியாவுக்கென்று சீஷர்களை ஏற்படுத்தினார் (மத். 3:11).*

*யோவானுடைய ஞானஸ்நானம் மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானமாகவும் இருந்தது (அப். 19:4). மக்களை மனந்திரும்பச் செய்வதே அவருடைய ஞானஸ்நானத்தின் பொதுவான நோக்கமாய் இருந்தது. மக்களின் இருதயங்களை நீதியை நோக்கித் திருப்பியதால் யோவான் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தினார். இது ஒரு புது வகையான*

*மனந்திரும்புதலாய் இருந்தது. இதற்கு முன்பு, மனந்திரும்புதலானது பூமிக்குரிய ஆசீர்வாதங்களினால் தூண்டப்பட்டது; யோவான் பிரசங்கித்த மனந்திரும்புதலோ வரவிருந்த மேசியா மற்றும் அவரது இராஜ்யத்தின் கண்ணோக்கில் மக்களை மனந்திரும்பும்படி அழைத்தது.*

*அடுத்ததாக, அது பாவமன்னிப்புக்கென்று தரப்பட்ட ஞானஸ்நானமாய் இருந்தது (மாற். 1:4). இந்த ஞானஸ்நானமானது - பாவமன்னிப்புக்கென்று தண்ணீர் ஞானஸ்நானமானது - இவ்வகையில் புதிய ஏற்பாட்டில் கட்டளையிடப்பட்ட ஒரே ஞானஸ்நானம் ஆகும். இயேசுவின் இரத்தம் பின்னோக்கியும், முன்னோக்கியும் பாய்கின்றது.*

*யோவானுடைய ஞானஸ்நானம் கீழ்ப்படிதலுக்கான ஞானஸ்நானமாகவும் இருந்தது (லூக். 7:30). யோவான் கொடுத்த ஞானஸ்நானம் புறக்கணிக்கப்பட்ட பொழுது, தேவனுடைய ஆலோசனை புறக்கணிக்கப்பட்டது. அவரது ஞானஸ்நானம் தேவனுடைய நீதியின் ஒரு பகுதியாக இருந்தது.*

## இயேசு யோவானால் ஞானஸ்நானப் படுத்தப்பட்டது ஏன்?

**ஒரு எதிர்மறையான கண்ணோட்டம்**

*இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார் என்பதற்கான காரணங்களை நாம் ஆராய்கையில், முதலாவது நாம் எதிர் மறைப் பகுதியை நோக்குவோம். இயேசு மனந்திரும்ப அவசியமில்லாதிருந்தது. அவர் பூமிக்குரிய தம்முடைய வாழ்க்கை முழுவதிலும் பாவமற்றவராய் இருந்தார். எபி. 4:15, "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" என்று கூறுகின்றது. அவர் முழுமையான நீதியுள்ளவராய் இருந்தார், மற்றும் அதை விட இன்னும் அதிகமான நீதியாய் இருக்க முடியாதிருந்தது.*

*இரண்டாவதாக, இயேசுவுக்குப் பாவமன்னிப்பு அவசியமாய் இருந்ததில்லை. "பாவமன்னிப்பு" என்பது பாவத்தின் கறையை மறைமுகமாய் உணர்த்துகின்றது. இயேசு ஒரு போதும் பாவம் செய்திராதபடியினால் அவரிடத்தில் நீக்கப்பட வேண்டிய கறை எதுவும் இருந்ததில்லை.*

*மூன்றாவதாக, ஆசாரியத்துவ அலுவலில் பரிசுத்தப் படுத்தப் படுவதற்காக அவர் இதைச் செய்யவில்லை. அவர் பூமியில் இருக்கையில் ஒரு ஆசாரியராய் இருந்ததில்லை. அவரது விஷயத்தில் தேவன் ஒரு விதிவிலக்கை ஏற்படுத்தி, பரலோகத்தில் அவரை நமது பிரதான ஆசாரியராக ஏற்படுத்தினார்.*

*நான்காவதாக, தெய்வீகத்துவம் அவர் மேல் வந்திறங்குவதற்காக அவர் இதைச் செய்யவில்லை. அவர் தொடக்கத்திலிருந்தே தெய்வீகமானவராகவே இருந்தார் (மத். 1:23). அவரது ஞானஸ்நானம் அவரைத் தெய்வீகமானவராக்கவில்லை.*

**ஒரு நேர்மறையான கண்ணோட்டம்**

*இப்பொழுது நாம் இயேசுவின் ஞானஸ்நானத்தை ஒரு நேர்மறையான தோற்றத்திலிருந்து கண்ணோக்குவோம். இயேசு தாம் யோவானால் ஞானஸ்நானம் பெற்றது ஏன் என்று குறிப்பாகக் கூறினார். அவர், "எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்காக" (மத். 3:15) ஞானஸ்நானம் பெற்றார். அவரது ஞானஸ்நானம் ஒரு நிறைவேற்றமாய் இருந்தது. யோவானால் ஞானஸ்நானப்படுத்தப்படுவது தேவனுடைய நீதியை நிறைவேற்றுதலாய் இருக்கும். "நீதி" என்பது "தேவனுடைய சகல கட்டளைகளின்படியும் நடத்தல்'' என்பதுடன் சமப்படுத்தப்பட வேண்டும். நாம், ''உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்; ...'' (சங். 119:172) என்று வாசிக்கின்றோம்; மற்றும் "அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனை களின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்" (லூக். 1:6) என்றும் வாசிக்கின்றோம். பின்னாளில் இயேசு, ''யோவான் கொடுத்த ஞானஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று?" என்று கேட்டார் (மத். 21:25). அவர் யோவானால் ஞானஸ்நானப் படுத்தப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாய் இருந்தது (யோவா. 6:38). ஆகையால் அவர் யோவானின் ஞானஸ்நானத் திற்குக் கீழ்ப்படிந்ததில் தேவனுடைய சித்தத்திற்குத் தம்மைக் கீழ்ப்படுத்தினார்.*

*இயேசுவின் ஞானஸ்நானம் பற்றி அவரே கொடுத்த விளக்கம் ஒன்று மட்டுமே சுவிசேஷ நூல்களில் குறிப்பாகக் காணப்பட முடிகின்றது. அவரது ஞானஸ்நானமானது பல வகையான தனிச் சிறப்புள்ள மறைமுகக் கருத்துக்களை உள்ளடக்கியிருக்கிறது. முதலாவது, அது ஆதரவுக் கருத் தொன்றை மறைமுகமாய்க் குறிப்பிட்டது. அவரது ஞானஸ்நானமானது தேவனுடைய தீர்க்கதரிசியான யோவானின் ஊழியத்தையும் செய்தியையும் அங்கீகரித்து, இசைவளித்தது. யோவானால் இயேசு பெற்ற ஞானஸ்நானமானது யோவானின் ஞானஸ்நானத்தினுடைய தோற்றுவாய் பற்றிச் சிலவற்றைக் கூறியது. அது தேவனிடத்திலிருந்து வந்ததாய் இருந்தது. மேலும் அது யோவானுடைய ஞானஸ்நானத்தின் நோக்கம் பற்றியும் சிலவற்றைக் கூறியது. அவர் கொடுத்த ஞானஸ்நானம் கிறிஸ்துவின் வெளியரங்கமான ஊழியத்திற்கு முன்பு இருந்த யுகத்திற்கான தேவனு டைய திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.*

*இரண்டாவது, இயேசுவின் ஞானஸ்நானமானது தொடக்கத்தை மறைமுகமாய்க் குறிப்பிடுகின்றது. இயேசு தமது ஞானஸ்நானத்தின் பொழுது, மேசியாவாக ஒப்புக் கொள்ளப்பட்டார். அவர் ஞானஸ்நானம் பெற்றதைத் தொடர்ந்து பரிசுத்த ஆவியானவர் புறா வடிவில் அவர் மீது இறங்கி வந்தார். இந்த வேளை தொடங்கி, யோவான் அவரை மேசியா என்று அடையாளப்படுத்த முடியும் (யோவா. 1:32-34; 1:35, 36). இயேசு ஞானஸ்நானம் பெற்ற பொழுது, அவரது பிதாவினால் அறிக்கையிடப் பட்டார். நாசரேத்தில் அவரது அமைதியான வாழ்வானது இப்பொழுது பின்னால் விடப்பட வேண்டியதாயிற்று. இயேசு தமது ஞானஸ்நானத்*

திலிருந்து, வனாந்திரத்திற்குச் சோதிக்கும்படும்படி சென்றார், மற்றும் சோதிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் இருந்து, அவர் தம் வெளியரங்கமான ஊழியத்திற்குச் சென்றார்.

## இயேசுவின் ஞானஸ்நானத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடங்கள் என்ன?

இயேசுவின் ஞானஸ்நானமானது, நாம் யோவானுடைய ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நமக்குப் போதிப்பதில்லை. பலர், "நான் இயேசுவைப் போலவே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள விரும்புகின்றேன்'' என்று கூறியிருக்கின்றனர். "இயேசுவைப் போலவே" ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதென்பது இயலாததாயிருக்கும். யோவானுடைய ஞானஸ்நானமானது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கும், ஒரு குறிப்பிட்ட மக்களுக்குமானதாகும். அவர் கொடுத்த ஞானஸ்நானம் இனியும் செல்லத்தக்கதல்ல (அப். 19:1-5). பாவமற்றவரான இயேசு, எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்காகவே ஞானஸ்நானம் பெற்றார். இயேசு நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்ததால் அதற்குக் கீழ்ப்படிந்தார். தேவனுக்குக் கீழ்ப்படிதலுள்ளவராய் இருப்பதற்கு, அவர் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியதாயிருந்தது. ஆனாலும், இன்றைய நாட்களில் நாம் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது தேவனுடைய சித்தமல்ல. இன்றைய நாட்களில் நாம் யோவானுடைய ஞானஸ்நானத்தைப் பெற முடியாது, ஆனால் இயேசு செய்த அதே காரணங்களுக்காக நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய முடியும். நாம், "இயேசு தமக்காகத் தம்முடைய பிதா கொண்டிருந்த சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து போல இன்றைய நாட்களில் நான் கீழ்ப்படியக் கூடியதான எனக்கான தேவனுடைய சித்தம் எதுவாயிருக்கும்?'' என்று கேட்க வேண்டும்.

அவரது ஞானஸ்நானம் நமக்குக் கீழ்ப்படிதலின் பாடத்தைப் போதிக்கின்றது[6] அவர் யோவானால் ஞானஸ்நானப்படுத்தப்பட வேண்டும் என்பது அவருடைய பிதாவின் சித்தமாய் இருந்தது. இயேசு யோவானால் ஞானஸ்நானப் படுத்தப்படுவதற்குத் தம்மை மகிழ்ச்சியுடன் கீழ்ப் படுத்தினார், ஏனென்றால் அது அவருடைய பிதாவின் சித்தமாய் இருந்தது. எவர் ஒருவரும் தம்மை தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புவிக்காத வரையிலும், அவர் இயேசுவின் உதாரணத்தைப் பின்பற்றுவதாக உரிமைகோர முடியாது. அபிப்பிராயக் கருத்து என்பது எப்போதும் கீழ்ப்படிதலல்ல. பிரதானக் கட்டளையின் ஞானஸ்நானத்திற்கு நாம் நம்மைச் சமர்ப்பிக்காதிருந்தால், நாம் தேவனுக்கு நம்மைச் சமர்ப்பித்தவர்களாய் இருப்பதில்லை (மத். 28:19, 20).

இயேசுவின் ஞானஸ்நானம் நமக்குத் தாழ்மையின் பாடத்தையும் போதிக்கின்றது. பாவம் நிறைந்தவர் பாவமற்றவரை ஞானஸ்நானப் படுத்தினார். கீழானவர் மேலானவரை ஞானஸ்நானப் படுத்தினார் (மத். 3:13-17). தாழ்மை என்றால், "நம்மைக் காட்டிலும் பெரியவற்றிடம்

நம்மை இழத்தல்'' என்று அர்த்தப்படுகின்றது. இயேசு தமது சுய எண்ணத்தைக் காட்டிலும் பிதாவின் சித்தத்தைப் பற்றி அதிக அக்கறையுள்ளவராய் இருந்தார். இயேசு கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார் (எபி. 5:8, 9).

இத்துடன் கூடுதலாக, அவரது ஞானஸ்நானமானது, கீழ்ப்படிதல் என்பது நமது பிதாவைப் பிரியப்படுத்துகின்றது என்று நமக்குப் போதிக்கின்றது. அவரது ஞானஸ்நானத்திற்குப் பிறகு, தேவன் இயேசுவைத் தமது தனிச் சிறப்புள்ள குமாரன் என்று வெளிப்படையான வகையில் ஒப்புக் கொண்டார். அவரில் பிரியமாயிருக்கிறேன் என்று மட்டும் கூறாமல், அவரில் மிகவும் பிரியமாயிருக்கிறேன் என்று அவர் கூறினார். நாம் நமது பிதாவை எப்படிப் பிரியப்படுத்துகின்றோம்? நாம் கீழ்ப்படிதலினால் அவரைப் பிரியப்படுத்துகின்றோம் என்பதே தெளிவான பதிலாகும். இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சியாகப் பரலோகத்திலிருந்து தேவன் மூன்று முறைகள் பேசியதாக பரிசுத்த வேத வசனங்கள் கூறுகின்றன: அவரது ஞானஸ்நானத்தில், மறுரூபமான நிகழ்ச்சியில் (மத். 17:5) மற்றும் யோவான் 12:28-30ல்.

## இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல் என்பதன் அர்த்தம் என்ன?

இயேசு அவருடைய பிதாவின் சித்தத்தின்படி செய்யவே வந்தார். இயேசுவுக்குப் பிதாவின் சித்தம் என்பது ஞானஸ்நானம், சோதிக்கப்படுதல், மற்றும் சிலுவை என்றே அர்த்தப்பட்டது. நமக்கு தேவனுடைய சித்தம் என்னவென்று அர்த்தப்படுகின்றது? அது ஒரு விஷயத்தில் பிரதான கட்டளையின் ஞானஸ்நானமாக அர்த்தப்படுகின்றது (மாற். 16:15). இயேசு நம்மை தேவனுடைய சித்தத்தைச் செய்யும்படி அழைத்து; அதை எப்படிச் செய்வதென்றும் நமக்குக் காண்பித்துள்ளார். இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவது என்றால், தேவனுடைய சித்தத்தைச் செய்வது என்று அர்த்தப்படுகின்றது. யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பற்றி இயேசு அவ்வளவு கவனமாய் இருந்திருந்தார் என்றால், அதைக் காட்டிலும் பெரிய ஞானஸ்நானமாகிய பிரதான கட்டளையின் ஞானஸ்நானம் பற்றி நாம் எவ்வளவு கவனமாய் இருக்க வேண்டும்?[7]

---

குறிப்புகள்

[1]"யூதமார்க்கத்தமைந்தவர்களின் ஞானஸ்நானமானது யூதரல்லாதவர்களை யூதத்துவத்தில் சேர்த்தது, ஆனால் பாவமன்னிப்புடன் அதற்குத் தொடர்பில்லாதிருந்தது. யோவான் கொடுத்த ஞானஸ்நானமானது ஏற்கனவே யூதர்களாயிருந்தவர்களுக்குத் தரப்பட்டது, அது அவர்களை விசுவாசத்தில் சேர்த்துக்

*கொள்வதற்காகத் தரப்படவில்லை. யூதமார்க்கத்தமைபவர் சாட்சிகளின் முன்னிலையில் தமக்குத் தாமே முழுகிக் கொள்வார்; யோவானின் ஞானஸ் நானத்திற்கு அதைக் கொடுப்பவர் ஒருவர் தேவைப்பட்டார். யூதமார்க்கத் தமைந்தவர்களின் ஞானஸ்நானம் பழைய ஏற்பாட்டில் அறியப்படாத ஒரு வழக்கமாகும். இது யோவானின் நாட்களிலேயே நடைமுறைப்படுத்தப் பட்டிருந்ததால் அவ்வாறு இருக்கலாம் - ஆனால் இது அவ்வளவு நிச்சயமான கருத்து அல்ல. இந்த நடைமுறையைப் பற்றி பைலோவும் யோசிபஸூம் மௌனம் காக்கின்றனர், மற்றும் இதைப் பற்றிய நமது தொடக்க கால சாட்சியமும் கி.பி. 70ல் (பஸ்கா 8:8) எருசலேமின் அழிவின் காலத்தில் இருந்த ஷம்மாய் மற்றும் ஹில்லல் ஆகியோரின் பள்ளிகளுக்கிடையே இருந்த ஒரு சச்சரவாய் உள்ளது. அந்த வேளையில் இது நடைமுறைப் பழக்கமாய் இருந்ததாகக் காணப்படுகின்றது, ஆனால் இதன் தொடக்க நாட்கள் தெளிவற்ற நிலையில் மூடி மறைக்கப் பட்டுள்ளது."* (Jack P. Lewis, *The Gospel According to Matthew, Part 1,* Living Word Commentary, ed. Everett Ferguson [Austin, Tex.: Sweet Publishing Co., 1976], 62.) [2]*ஞானஸ்நானம் பெறுவதற்கு ஒருவர் முப்பது வயதாகும் வரை காத்திருக்க வேண்டும் என்று எவரொருவரும் இதிலிருந்து நிச்சயமாய் முடிவு செய்து விடக் கூடாது. இயேசு தமது பன்னிரெண்டு வயதிலேயே பிதாவின் சித்தத்தைப் பற்றிய உணர்வுடையவராய் இருந்தார் (லூக். 2:41-49). யோவான் தமது ஊழியத்தை முன்னதாக ஆரம்பித்திருந்தால், இயேசுவும் முன்னதாகவே ஞானஸ்நானம் பெற்றிருப்பார்.* [3]RSV*யில் பெத்தானி என்றும்* KJV*யில் மற்றும் தமிழில் பெத்தாபரா என்றும் உள்ளது.* [4]*புதிய ஏற்பாட்டில் ஏழு ஞானஸ்நானங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன: (1) மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் (1 கொரி. 10:2); (2) பாடுகளின் ஞானஸ்நானம் (மாற். 10:38, 39); (3) மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் (1 கொரி. 15:29); (4) பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் (மத். 3:11) (5) அக்கினி ஞானஸ்நானம் (மத். 3:11); (6) யோவானுடைய ஞானஸ்நானம் (அப். 19:3); மற்றும் (7) பிரதான கட்டளையின் ஞானஸ்நானம் (மாற். 16:15, 16; மத். 28:19, 20).* [5]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel* (Cincinnati, Ohio: The Standard Publishing Foundation, n.d.), 88. [6]*நமது ஞானஸ்நானத்திற்கும் இயேசுவின் ஞானஸ்நானத்திற்கும் இடையே இணைவுகளை நாம் கொண்டு வர முடியும்: (1) அவர் ஞானஸ்நானம் பெற்ற பொழுது ஆவியானவரைப் பெற்றார்; நாமும் அவரைப் பெறுகின்றோம் (அப். 2:38); (2) அவர் ஞானஸ்நானத்தின் போது ஜெபித்தார் மற்றும் நாமும் ஜெபம் நிறைந்தவர்களாய் ஞானஸ்நானம் பெற வேண்டும் (அப். 22:16); (3) ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து அவர் தேவனுடைய குமாரன் என்று ஒப்புக் கொள்ளப்பட்டார், மற்றும் நாம் ஞானஸ்நானத்தின் பொழுது உண்மையில் தேவனுடைய பிள்ளைகளாக்கப்படுகின்றோம் (கலா. 3:26, 27).* [7]*கால அளவில் பிரதான கட்டளையின் ஞானஸ்நானமானது யோவானின் ஞானஸ்நானத்தை விடச் சிறந்ததாய் இருக்கின்றது. யோவானுடையது ஒரு குறுகிய காலத்திற்கே இருந்தது; பிரதான கட்டளையின் ஞானஸ்நானமானது கிறிஸ்துவின் யுகத்திற்கானதாகும். யோவானின் ஞானஸ்நானமானது யோவானால் கொடுக்கப்பட்டது; பிரதான கட்டளையின் ஞானஸ்நானமானது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே கொடுக்கப்பட வேண்டியதாகும் (மத். 28:19, 20). பிரதான கட்டளையின் ஞானஸ்நானமானது ஏழு "ஒன்றுகளில்" (எபே. 4:4-6) குறிப்பிடப்பட்டுள்ளது, யோவானுடையது இதில் குறிப்பிடப்படவில்லை.*

# குமாரனின் சோதனைகள்

## எடி குளோர்

*கர்த்தருடைய ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள் நம்மைத் திகைப்படையச் செய்கின்றன. அவர் தமது போதக ஊழியத்தில் உடனடியாகப் பிரவேசித்தார் என்று வாசிக்கும்படி நாம் எதிர்பார்க்கின்றோம், ஆனால் அப்படி நடைபெறவில்லை. அதற்குப் பதிலாக, அவர் நாசரேத்தூரில் அறியப்பட்டிருந்ததை விடக்கூட முற்றிலும் மிக இரகசியமான மற்றும் தனிமையான இடத்திற்குச் சென்றார். வனாந்திரமே அவரது வீடாயிற்று, வனவிலங்குகளே அவரது துணைவர்களாயின (மாற். 1:12, 13). இந்தத் தனிமையில், இயேசுவானவர் சாத்தானால் சோதிக்கப்படுகையில் ஒரு தீவிரமான யுத்தம், ஒரு ஆவிக்குரிய போராட்டம், பரலோகம் மற்றும் பூலோகம் ஆகியவற்றின் மோதல் வந்தது.*

*இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகளை, "பரீட்சைகள்" என்று குறிப்பிடுவதே மிகச் சிறந்தது ஆகும், ஏனென்றால் சோதனை என்பதில் பிசாசின் அழைப்புக்குப் பதில் கொடுக்க உள்ளாகக் கொண்டுள்ள தீவிரமான ஆர்வமும் உள்ளடங்கியிருக்கின்றது (யாக். 1:10-12). இப்படிப்பட்ட மனவிருப்பங்கள் எதையும் இயேசு காட்சிப்படுத்தவில்லையென்றாலும், அவருக்கு ஏற்பட்ட சோதனைகள் அவரது மனிதத்துவத்தின் விளக்கமான சித்தரிப்பொன்றை நமக்குத் தருகின்றது. சோதனைகளுக்குட்படுதல் பற்றிய மூன்று விபரக் குறிப்புகளை வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தருகின்றார் (மத். 4:1-11; லூக். 4:2-13; மாற். 1:12, 13).[1] மாற்கு கொடுத்துள்ள விபரக் குறிப்பானது சோதிக்கப்படுதலைப் பற்றி விபரக் குறிப்பாய் இருப்பதை விட, அதிகமாக, மறைவான குறிப்பாகவே உள்ளது, ஆனாலும், இயேசு காட்டு மிருகங்களுடன் சஞ்சரித்து வந்தார் என்ற விபரத்தை மாற்குதான் கூடுதலாகக் கொடுத்தார். இயேசு தம்முடைய வாழ்வில் பலமுறை சோதிக்கப்பட்டார், ஆனால் இயேசுவின் வாழ்வில் இந்தக் காலகட்டத்தின் போது பாவம் செய்யும்படி இயேசுவைத் தூண்டுவதற்குச் சாத்தான் மிகவும் சிறப்பான/விசேஷித்த முயற்சியொன்றை மேற்கொண்டிருந்திருக்க வேண்டும். ஒருவேளை அவர் உபவாசம் இருந்த நாற்பது நாட்களிலும் அவர் சோதிக்கப்பட்டு, அந்த (உபவாச) காலத்தின் முடிவில் மிகப் பலத்த பரீட்சைகள் வந்திருக்கலாம்.[2]*

*சோதிக்கப்படுதலின் இந்த அனுபவமானது அவர் ஞானஸ்நானம் பெற்ற பிறகு உடனே ஏற்பட்டதாகும். மாற்கு 1:12, "உடனே ஆவியானவர் அவர் வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார்" என்று கூறுகின்றது. வனாந்தரத்திற்குப்[3] போகும்படியான தூண்டுதலானது பேய்த்தனத்தினால் அல்ல, தெய்வீகத்தினாலேயே ஏற்பட்டது. "யோர்தானில் பரலோகத்தின் அங்கீகாரம் கிடைத்த பிறகு, நரகத்தின் திடீர்த் தாக்குதல் வந்தது;*

புறாவுக்குப் பின் பிசாசு.''[4] அது போலவே, புதுக் கிறிஸ்தவர், தாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற உடனேயே சோதனைகளை எதிர்கொள்ளத் தயாராய் இருக்க வேண்டும். நாத்திகர்கள் அனுபவிக்காத சோதனைகளை கிறிஸ்தவர்கள் எதிர்கொள்வார்கள்.

சோதனைகளின் இவ்வரிசையைத் தொடர்ந்து, ''பிசாசானவன் ... சிலகாலம் அவரை விட்டு விலகிப் போனான்'' என்று லூக். 4:13 கூறுகின்றது. இது, இயேசு இந்த சோதனைகளைத் தொடர்ந்து சோதிக்கிற வனிடத்திலிருந்து ஒரு சுருக்கமான ஓய்வைப் பெற்றார் என்று மறைமுகமாய்த் தெரிவிக்கின்றது. மற்றும் இது, பிசாசானவன் மற்ற வேளை களில் அவரைச் சோதிப்பதற்காகத் திரும்ப வந்தான் என்பதையும் மறைமுகமாய்த் தெரிவிக்கின்றது.

இயேசு ஏன் சோதிக்கப்பட்டார்? இயேசு இவ்வுலகத்திற்கு வந்து, இங்கு ஒரு மனிதராக அவர் சோதிக்கப்பட வேண்டும் என்பது தெய்வீகத் திட்டமாய் இருந்தது. இயேசு ஏன் சோதிக்கப்பட்டார் என்பதற்கு வேத வசனங்கள் இரண்டு அடிப்படைக் காரணங்களைத் தருகின்றன.

முதலாவதாக, அவர் நமது போராட்டங்களைக் குறித்து முழுமையாகப் பரிதபிக்கக் கூடுவதற்காக அவர் சோதிக்கப்பட்டார் (எபி. 4:15; 2:15-18). இது, எல்லாக் காலங்களிலும் ஆண்கள் மற்றும் பெண்களால் அனு பவிக்கப்படும் ஒவ்வொரு வகையான சோதனையையும் இயேசு அறிந்தார் என்று அர்த்தப்படுத்துகின்றதா? அப்படியல்ல என்பது தெளிவானாலும், நாம் எதிர் கொள்ளுகின்ற ஒவ்வொரு சோதனையையும் அடிப்படையில் அவர் எதிர்கொண்டார். சோதனையானது மனித இயல்பைச் சென்று அடையக் கூடிய ஒவ்வொரு வழியின் மூலமாகவும் முழு வலிவுடன் தீவிரமாக அவரைத் தாக்கியது. நாம் சோதனையின் முழு வலிமையை உணர்ந்திருப்பதில்லை. நாம் முதலாவது சோதிக்கப்படும் பொழுது அதற்கு இடம் கொடுத்து விடுகின்றோம். இயேசு ஒருபொழுதும் சோதனைக்கு இடங் கொடாதிருந்தபடியால், அவர் அதன் முழு வலிமையை உணர்ந்தார். ஒருவேளை நீங்கள் ஒருபொழுதும் ஒரு பந்தயத்திலும் தோல்வி யடைந்திராத ஓட்டப்பந்தய வீரராயிருந்தீர்கள் என்று வைத்துக் கொள் வோம். தீவிரமான ஒரு ஓட்டம் ஓடுகையில், போட்டியின் முழு வலிமையையும் நீங்கள் உணருவீர்கள். எல்லா வேளைகளிலும் தோற்கின்றவர் மறுபடியும் தோற்றுப் போகுதல் பற்றி அதிகமாய்க் கவலைப்படுவதில்லை. இருப்பினும், ஒருபோதும் தோற்றிராதவர், தோற்றுப் போகுதல் என்பதை நினைத்துப் பார்க்கக் கூட முடியாதது என்று மதிக்கின்றார்.

சோதனைகளின் சுற்றுச் சூழல் மற்றும் நிகழ்ச்சிகள் மாறுபட்டிருக்கலாம், ஆனால் சோதனைகள் என்பவை எல்லாக் காலங்களிலும் உள்ள எல்லா ஆண்கள் மற்றும் எல்லா பெண்கள் ஆகியோருக்கு அவசியமாக ஒன்று போலவே இருக்கின்றன. ஒரு மனிதருக்குச் சோதனையானது மூன்று வழிகளில் மட்டுமே வர முடியும்: பசி - உடலின் இச்சை; பேராசை - கண்களின் இச்சை; மற்றும் மேன்மையில் விருப்பம் - வாழ்வின் பெருமை. மற்ற எல்லா சோதனைகளும் இம்மூன்றின்

வெவ்வேறு மாற்று வடிவங்களாய் மட்டுமே உள்ளன. இயேசு அவரது மனிதத்துவத்தின் ஒவ்வொரு பகுதியிலும் நம்மைப் போலவே சோதிக்கப் பட்டார் என்று அது அர்த்தப்படுத்துகின்றது.[5]

அவர் ஒரு பரிபூரணப்பட்ட மீட்பராகத் தகுதிப் படுத்தப் படுவதற்காகவும் அவர் சோதிக்கப்பட்டார் (எபி. 5:8, 9; 2:10).[6] அவர் தமக்காகச் சோதிக்கப்பட்டார், அவரது பண்பிற்கு/ஒழுக்கத்திற்கு அது ஒரு பரீட்சையாக அமைந்தது (எபி. 5:7-9). அவர் நமக்காகச் சோதிக்கப்பட்டார், அவர் நமக்காகப் பரிதபிக்கக்கூடிய பிரதான ஆசாரியராகவும் (எபி. 4:15, 16) மற்றும் நமக்கு உதாரணமாகவும் ஆவதற்காக அவ்வாறு சோதிக்கப்பட்டார்.

கிறிஸ்துவுக்கு ஏற்பட்ட சோதனைகள் மிகப் பெரும் சத்தியங்களை எடுத்துக்காட்டுகின்றன. முதலாவது, அவைகள் பாவம் மற்றும் பிசாசு ஆகியவற்றின் உண்மைத்தன்மையை முன் அனுமானப் படுத்துகின்றன.[7] சாத்தான் ஒரு சக்தியாக மட்டும் இருப்பதில்லை. அவன் உங்கள் ஆத்துமாவைத் தேடி அலைகின்ற ஒரு ஆவியாகவும் இருக்கின்றான். "சாத்தான்" என்பதற்கு மாற்குவினால் பயன்படுத்தப்பட்ட எபிரெய வார்த்தையானது மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோரால் "பிசாசு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது "அவதூறு செய்பவன் அல்லது பொய்க் குற்றம் சாட்டுபவன்" என்று அர்த்தப்படுகின்றது.

இரண்டாவது, அவைகள் இயேசு முழுமையான வகையில் மனிதராய் இருந்தார் என்று மறைமுகமாய் உணர்த்துகின்றன. அவர் பாவம் செய்யக்கூடாதவராய் இருந்தால் பிசாசானவன் அவரை ஏன் பரீட்சித்து பார்த்தான்? அவருக்கு ஏற்பட்ட சோதனைகள், அவர் பாவம் செய்யக் கூடிய நிலையில் இருந்தார்[8] என்பதையே மறைமுகமாய் உணர்த்துகின்றன.

மூன்றாவது, அவைகள், பாவம் செய்யும்படி சோதிக்கப்படுதல் பாவம் அல்ல என்பதை வெளிப்படுத்துகின்றன. நாம் சோதனையைத் தவிர்க்க முடியாது. மார்ட்டின் லுத்தர் அவர்கள், "என் தலைக்கு மேல் பறவைகள் பறப்பதை என்னால் தடுக்க முடியாது, ஆனால் அவைகள் என் தலைமுடியில் கூடு கட்டுவதை என்னால் தடுக்க முடியும்" என்று கூறினார்.

## அற்புதத்தினால் ஜெயித்தல் எதிரிடையாய் மனிதர் என்ற வகையில் ஜெயித்தல்

இயேசு முதலில் உடற்பசி என்ற பகுதியில் சோதிக்கப்பட்டார். "பசி" என்பது சிலவற்றை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கும் விருப்பம் ஆகும்.[9] யோவான் இதை "மாம்சத்தின் இச்சை" என்று அழைத்தார் (1 யோவா. 2:16).

> அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்த பின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து, "நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்" என்றான். அவர் பிரதி யுத்தரமாக, "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும்

பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே” என்றார் (மத். 4:2-4).

முதலாம் சோதனையின் சூழ்நிலைகள் என்னவாயிருந்தன? “மனித அனுதாபத்திலிருந்து துண்டிக்கப்பட்ட தனிமையான ஒரு இடம் முதல் யுத்தகளமாகத் தெரிவு செய்யப்பட்டது. அது ஒரு பழைய யுத்தகளமாகும். மோசே உட்பட இஸ்ரவேலர்கள் பலர் வனாந்தரத்தில் தோல்வியைச் சந்தித்திருந்தார்கள்” என்று ஒருவர் கூறியுள்ளார்.

இன்னொருவர், ‘‘முந்தின ஆதாம் பாவம் செய்ததினால் ஒரு தோட்டத்தை வனாந்தரமாக்கினார், ஆனால் பிந்தின ஆதாமோ, பாவத்தை எதிர்த்து நின்றதால் வனாந்தரத்தைத் தோட்டமாக்கினார்’’ என்று கூறியிருக்கின்றார்.

சாத்தான் முதலாவது சோதனையுடன் இயேசுவுக்கு எதிர் நின்ற பொழுது இயேசு உடலளவில் பலவீனமாயிருந்தார். அவர் நாற்பது நாட்கள் இரவும் பகலும் உபவாசம் இருந்திருந்தார். சாத்தான் பெரும்பாலும் நமது பலவீனமான நேரங்களிலேயே நம்மைத் தாக்குகின்றான்.

கல்லுகளை அப்பமாக மாற்றுவதில் என்ன தீங்கு உண்டாகி விடும்? சாத்தான், இயற்கையான தேவையொன்றை இயற்கைக்குப் புறம்பான வழியில் நிறைவேற்றிக் கொள்ளும்படி இயேசுவைக் கேட்டுக் கொண்டான். அவன், ஒழுங்கு முறைப்படியான பசியை ஒழுங்கு முறையற்ற வகையில் திருப்திப் படுத்திக் கொள்ளும்படி இயேசுவை கேட்டுக் கொண்டான். இயேசு உணவுத் தேவையில் இருந்தார். சாத்தான் உணவை விரைவாகப் பெறும் ஒரு வழியை ஆலோசனையாகக் கூறினான்.

“அந்த ஆலோசனையில் என்ன தீங்கு இருந்தது?” என்று நாம் கூறலாம். அந்த வழிமுறையில் இயேசு தம் பசியைத் திருப்திப் படுத்தியிருப் பாரேயானால், அவர் இயற்கையான தேவை ஒன்றை அற்புதமான வகையில் திருப்திப் படுத்திக் கொண்ட குற்றம் செய்தவராய் இருந்திருப்பார். இது அற்புத வல்லமையின் நோக்கமாக இருந்ததில்லை (யோவா. 20:31). பவுல் தம் “மாம்சத்தில் இருந்த முள்ளை” (2 கொரி. 12:7) அகற்றுவதற்கு அற்புத வல்லமையைப் பயன்படுத்தவில்லை. எப்பாப்பிரோதீத்து தம்மைத் தாமே அற்புத வல்லமையினால் குணப் படுத்திக் கொள்ளவில்லை (பிலி. 2:25-27). துரோப்பீமு இயற்கையை வெல்லுவதற்கு அற்புதத்தைப் பயன்படுத்தவில்லை (2 தீமோ. 4:20). இயேசு, மனிதத்துவ சோதனையை ஜெயித்து, தொடர்ந்து மனிதராய் இருப்பதற்குத் தமது தெய்வீக இயல்பைப் போக்கிடமாய்க் கொள்ள முடியாதிருந்தது. இயேசு தம்மையே தாழ்த்தி மனிதரானார், அவர் உண்மையாக மற்றும் முழுமையாக மனிதரானார் (பிலி. 2:5-7). மற்ற எல்லா மனிதர்களின் நிலைக்குச் சமமான நிலையில் இருந்தே அவர் சோதனையை எதிர் கொண்டார். சிலுவையின் மீது அவர் பாவத்திற்காய்ப் பாடுபட மட்டுமே முடிந்தது. அவர் அந்த வலியை ஒரு அற்புதத்தினால் நீக்கிப் போட்டு, அதன் பிறகும் மனிதனாய் இருக்க முடியாது இருந்தது. அவர் தம் பசி வேதனையை வெற்றி கொள்வதற்கு ஒரு அற்புதத்தைச் செய்திருந்தால், அற்புதங்களின் உதவியின்றியே தங்களின் மனிதத்துவப் பிரச்சனைகளைக் கையாள

வேண்டிய அவரது பின்பற்றாளர்கள் யாவருக்கும் அவர் ஒரு ஊக்கக் குறைவையே காட்டியிருப்பார்.

ஒழுங்கு முறைப்படியான தேவைகளை ஒழுங்கு முறையற்ற வழிகளில் திருப்திப்படுத்த முயற்சி செய்வதால் இருதய வேதனையையும் மற்றும் வருத்தத்தையும் பிறப்பித்துக் கொள்ளும் திரளான கூட்டத்தாரைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது கடினமானதாய் இருப்பதில்லை.

மனித உடலே இந்தச் சோதனையின் இலக்காக உள்ளது. எவரெட் F. ஹாரிஸன் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> பின் வந்த நாட்களில் இயேசு தம்மைப் பின்பற்றியவர்களிடத்தில் சீஷத்துவத்தின் நிபந்தனைகளாகக் கண்டிப்பான வேண்டுகோள்களை ஏற்படுத்த இருந்தார். அந்த வேண்டுகோள்களில் அடிப்படையானது சுயவெறுப்பு ஆகும். இப்படிப்பட்ட வேண்டுகோளை விடுக்கும் உரிமையும் அதன் கூற்றினுடைய வலிமையும் சோதிக்கப்பட்ட அனுபவத்திலிருந்தே நேரடியாக வருகின்றன. இயேசு தம்மைப் பின்பற்றத் தேடுகிறவர்களால் மறுவுருவாக்கம் செய்யப்பட வேண்டிய முன்மாதிரியொன்றை நிலைநாட்டினார். அவனுடைய (சாத்தானுடைய) ஆலோசனையின் வழிமுறைகளின் மூலமாக நமது கர்த்தர் தமக்குத் தாமே அப்பத்தைக் கொடுத்து, அதனால் இந்தச் சோதனைக்குச் இணங்கியிருப்பாரேயானால், தங்களின் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுத் தங்கள் அன்றாட உணவை ஈட்டுபவர்களுக்கு, சீஷத்துவம் என்பது பயனற்ற பேச்சாக இருந்திருக்கும். தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு அர்த்தமுள்ள தாயிருக்கக் கூடிய சுயநலமற்ற தன்மைக்கு தகுதியான ஒரு செயல் விளக்கத்தைத் தராது, “என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்” என்று இயேசுவால் கூறியிருக்க முடியாது.[10]

இந்த சோதனையை இயேசு எப்படி வெற்றி கொண்டார்? இயேசு “தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்துடன்” (எபே. 6:17) பிசாசை எதிர்த்துப் போரிட்டார். நமது கர்த்தர் உபாகமம் 8:3ஐ பிசாசுக்கு மேற்கோள் காட்டினார். இந்த வசனமானது “அப்பம்” (உணவு) மட்டுமே கருதுதற்குரிய ஒன்றே ஒன்று அல்ல என்று காண்பிக்கின்றது. அப்பம் (உணவு) மட்டுமே கருதுதற்குரிய ஒன்றாக இருந்திருந்தால், கல்லுகளை அப்பமாக்குவது இயேசுவுக்கு முற்றிலும் ஒழுங்கு முறைக்கு உட்பட்ட தாகவே இருந்திருக்கும். “அப்பம்” (உணவு) மட்டுமே இயேசுவின் ஒரே சிந்தையாய் இருந்ததில்லை. அவர் தம் பிதாவின் சித்தத்தைச் செய்வதற் காகவே இங்கு இருந்தார். அவரது சித்தத்தைச் செய்வதில் ஒரு மனிதராக வாழ்வதும், ஒரு மனிதராகப் பிசாசை எதிர்கொள்ளுவதும் அடங்கியிருந்தன.

## தேவனை நம்புவதினால் ஜெயித்தல் எதிரிடையாய் தேவனைச் சோதிப்பதினால் ஜெயித்தல்

இயேசு இரண்டாவதாக பேராவல் அல்லது சாதிக்க விருப்பம்[11] என்ற

*பகுதியில் சோதிக்கப்பட்டார். யோவான் இதை "ஜீவனத்தின் பெருமை" என்று அழைத்தார் (1 யோவா. 2:16) .*

> *அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டு போய், தேவாலயத்து உப்பரிகையின் மேல் அவரை நிறுத்தி, "நீர் தேவனுடைய குமாரனேயானல் தாழக் குதியும்; ஏனெனில், 'தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள்' என்பதாய் எழுதியிருக்கிறது'' என்று சொன்னான். அதற்கு இயேசு, "உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே" என்றார் (மத். 4:5-7).*

*இரண்டாம் சோதனையின் சூழ்நிலைகள் என்னவாயிருந்தன?*[12] எருசலேம் நகரில் இருந்த தேவாலயத்தின் உப்பரிகையே இதற்கு நிலைக்களனாய் இருந்தது. "உப்பரிகை'' என்ற வார்த்தை அநேகமாக, "கட்டிடத்தின் ஒரு பகுதி" என்று அர்த்தப்படலாம். இது அநேகமாக, இருநூறு அடிகளுக்குக் கீழே இருந்த கெதரோன் பள்ளத்தாக்கை மேலிருந்து நோக்கிய (தேவாலயத்தின்) தெற்குப் பகுதியாக இருந்திருக்கும். சாத்தான், இயேசுவை தேவாலயத்தின் மேல் இருந்து இந்தப் பள்ளத்திற்குள் கீழே குதித்து, அவரது பிதாவின் வாக்குத்தத்தத்தை உரிமைகோரும்படி கேட்டுக் கொண்டான். தேவன் அவருக்குப் பாதுகாப்பளிக்க வானுலகக் குடைக் கருவி யொன்றை அளிப்பார் என்று வாதிட்ட பிசாசானவன் தனது வேண்டுகோளை ஆதரிக்க சங்கீதம் 91:11ஐயும் மேற்கோள் காட்டினான்.

இந்த சோதனையானது இயேசுவுக்கு இரண்டு விதமான முக்கிய வசீகரிப்புகளை முன் வைத்தது: தமது பிதாவின் வாக்குத்தத்தத்தை நிரூபிப்பதற்கான ஆவல் மற்றும் மக்களிடையே உடனடியான செல்வாக்கைப் பெறுவதற்கான ஆவல். நாட்டை அடக்கியாண்டு அதன் அரசுரிமையை ஒரு நொடியில் வெல்லக் கூடிய காட்சியொன்றைப் படைக்கும்படி இயேசு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தார். இது மனம் சார்ந்த மற்றும் ஆவிக்குரிய சோதனையாய் இருந்தது.

*தேவாலயத்திலிருந்து குதிப்பதினால் என்ன தீங்கு உண்டாகி விடும்?* J. W. மெக்கார்வி அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> *இயேசு கீழே குதித்திருப்பாரேயானால், அவர் தம் பிதாவினிடத்தில் தமது குமாரத்துவத்தை நிரூபிப்பதற்குத் தேவையற்ற ஒரு அற்புதத்தை வற்புறுத்துபவராய் இருந்திருப்பார், அதனால் அவர் தேவனுடைய அன்பை அனாவசியமாகச் சோதித்துப் பார்ப்பவராய் ஆகியிருப்பார். தேவனுடைய கட்டளை அல்லது கடமையைச் செய்ய அழைப்பு இவை எதுவுமின்றி தங்களைத் தாங்களே ஆபத்திற்கு உட்படுத்திக் கொள்கின்றவர்கள், அவரது (தேவனது) அன்பைச் சோதிக்கின்றவர்கள் ஆகின்றனர்.*[13]

சாத்தான் வேத வசனத்தை மேற்கோள் காட்டினான், ஆனால் அவன் அதை ஏற்ற வகையில் பயன்படுத்தவில்லை. அவன், தேவன் கூறாத ஒன்றை

தேவனுடைய வசனம் கூறும்படி செய்ய முயன்றான். பிசாசானவனுக்குத் தலை நிறைய வேத வசனம் உண்டு, ஆனால் அவன் இருதயம் நிறையப் பாவம் உண்டு. சாத்தான் வேதாகமத்தை வெறுக்கின்றான், ஆனால் அவன் தனது நோக்கத்தை நிறைவேற்ற அதை(வேதாகமத்தை)ப் பயன்படுத்த முடியும். வேத வசனத்தை மேற்கோள் காட்டுவது மிகவும் சுலபமாகும்; வேத வசனம் என்ன கூறுகிறதென்று கண்டறிந்து அவைகளின் போதனை களைப் பின்பற்றுவது மிகவும் கடினமாகும்.

இந்த சோதனையை இயேசு எப்படி வெற்றி கொண்டார்? இயேசு, உபா. 6:16 என்ற இன்னொரு வேதவசனத்தைச் சுட்டிக் காட்டினார். இயேசு வேதவசனத்தை வேதவசனத்தினால் விளக்கப்படுத்தினார். வேத வசனங்களின் முழுமையான புரிந்து கொள்ளுதலைப் பெறுவதற்கு, வேதாகமம் கூறுகின்ற எல்லாவற்றையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இயேசு பழைய ஏற்பாட்டை ஒரு அலகு என்ற வகையில் பார்த்தார். சங்கீதங்களின் ஒரு வசனப்பகுதியானது உபாகமத்தின் ஒரு வசனப் பகுதியால் தகுதிப் படுத்தப் படுகிறது. பழைய ஏற்பாட்டை நமது கர்த்தர் தெளிவாய்ப் பயன்படுத்தியதைக் காட்டிலும் உயர்வான ஆதரவைக் காணுவது இயலாததாயிருக்கும். இஸ்ரவேலர்கள் தேவனைப் பரீட்சை பார்த்தது பற்றிய வசனப் பகுதியிலிருந்து இயேசு மேற்கோள் காட்டினார். தேவனுடைய பிரசன்னம் மற்றும் அவரது அளித்தல் ஆகியவை பற்றி மக்கள் சந்தேகப்பட்டு அவரைப் பரீட்சை பார்த்தார்கள். நாற்பது வருடங்கள் அலைந்து திரிந்த வேளையில் இஸ்ரவேலர்கள் தேவனைப் பத்து முறைகள் சோதித்தார்கள் என்று கூறப்பட்டிருந்தாலும், இங்கு அறிவிக்கப்பட்டுள்ள ஒரு நிகழ்ச்சியானது மோசேயினால் குறிப்பிடப்பட்டு இயேசுவால் மேற்கோள் காட்டப்பட்டதாயிருக்கின்றது.

இயேசு தமது பிதாவைச் சோதித்துப் பார்க்க மறுத்து விட்டார். பிசாசினால் மேற்கோள் காட்டப்பட்ட வசனமானது தேவன் தம்முடைய குமாரன் எவ்வளவு அக்கறையற்று மற்றும் கவனமற்று இருந்தாலும் அவரை(குமாரனை)க் காப்பாற்றுவார் என்று போதிக்கவில்லை. இயேசு இவ்வேத வசனப் பகுதியின் தகுதிப்பாட்டைச் சுட்டிக் காண்பித்ததின் மூலம் சாத்தானால் மேற்கோள்காட்டப்பட்ட அவ்வேத வசனப்பகுதியைத் தக்க முறையில் நடைமுறைப்படுத்தினார்.

## விட்டுக் கொடுப்பதினால் ஜெயித்தல்
## எதிரிடையாய்
## சிலுவையினால் ஜெயித்தல்

இயேசு சோதிக்கப்பட்டதின் மூன்றாவது பகுதி பேராசை, உடைமைகளைப் பெறுவதில் விருப்பம்[14] என்பதாக இருந்தது. யோவான் இதை "கண்களின் இச்சை" என்று அழைத்தார் (1 யோவா. 2:16).

> மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின்

> மகிமையையும் அவருக்குக் காண்பித்து, "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்" என்று சொன்னான். அப்பொழுது இயேசு, "அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்றார் (மத். 4:8-10).

*இந்த சோதனையின் சூழ்நிலைகள் என்னவாயிருந்தன?* இயேசு ஒரு உயர்ந்த மலைக்குக் கொண்டு போகப்பட்டார். அந்த உயரமான இடத்திலிருந்து அவருக்கு (லூக்கா எழுதியதின்படி "ஒரு நிமிஷத்திலே") உலகத்தின் எல்லா இராஜ்யங்களும் காண்பிக்கப்பட்டன. இயேசு சாத்தானை சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்து கொண்டால் இந்த இராஜ்யங்கள் எல்லாம் அவருக்குத் தரப்படும் என்று சாத்தான் கூறினான். பிசாசானவன் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் தனக்குச் சொந்தமாய்ப் பெற்றிருந்ததில்லை, ஆனால் அவை அவனது கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. உலகத்தின் இராஜ்யங்களை இயேசு *கண்டார்* என்று கூறப்படவில்லை. இராஜ்யங்கள் அவருக்குக் *காண்பிக்கப்பட்டன* என்றுதான் கூறப்பட்டது. பிசாசானவன் இராஜ்யங்கள் இருந்த திசைகளைச் சுட்டிக்காட்டி, அவைகளை விவரித்திருக்கலாம்; அது கற்பனைக் காட்சியாய் இருந்திருக்கக் கூடும். இந்தச் சோதனையானது ஏதேன் தோட்டத்தில் ஏவாளுக்கு நேர்ந்த சோதனையைப் போன்றதாகும். மரத்தின் கனி இச்சிக்கப்படத் தக்கதாயிருந்ததென்று ஏவாள் கண்டது போல, உலகத்தின் இராஜ்யங்களை இயேசு கண்டார்.

*அவைகளில் என்ன தீங்கு இருந்திருக்கும்?* நல்லது வருவதற்குப் பொல்லாங்கானதைச் செய்யும்படி சாத்தான் இயேசுவைக் கேட்டுக் கொண்டான். சாத்தான், "நீர் உலகத்தை வெற்றிக் கொள்ளவே வந்திருக்கின்றீர். நீர் என்னை மாத்திரம் பணிந்து கொண்டால், நான் உமக்கு உதவி செய்வேன். என்னுடன் நீர் போராடாமல் இருந்தால் எவ்வளவு விரைவில் இந்த உலகத்தை ஜெயித்து விடலாம் என்பதைச் சிந்தித்துப் பாரும்" என்று கூறினான். விட்டுக் கொடுத்தலின் மூலம் தமது ஆவிக்குரிய இலக்குகளைச் சாதிக்கும்படி இயேசு அழைக்கப் பட்டார். J. ஆஸ்வால்டு சான்டர்ஸ் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> இயேசு உலகின் எல்லா வல்லமை மற்றும் மகிமையைப் பெற்றுக் கொள்வதற்காகவே வந்திருந்தார், ஆனால் அவர் அதைத் தமது பிதாவின் வழியில், தமது பிதாவிற்குரிய காலத்தில் பெற வேண்டியதாயிருந்தது. சிலுவையில் மரணம் அடைவதும் அவரது பிதாவின் வழியில் உள்ளடங்கியிருந்தது … சாத்தான் தன்னுடன் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் சிலுவையிலிருந்து தப்பிக்கக் கூடிய சாத்தியக் கூற்றைத் தனது கடைசிச் சோதனையில் கவனப் படுத்தினான்.[15]

*இந்த சோதனையை இயேசு எப்படி வெற்றி கொண்டார்?* தேவனே நமது ஆராதனைக்குரியவர் என்பதை இயேசு பிசாசானவனுக்கு

*நினைவூட்டினார் (மத். 4:10). அவர் மறுபடியும் பழைய ஏற்பாட்டு வேதவசனத்தைச் சுட்டிக்காட்டி, உபா. 6:13ல் இருந்து மேற்கோள் காட்டினார். உலகத்தை ஜெயிப்பதற்குச் சாத்தானுடைய வழியானது தேவனுடைய வழியில் இருந்து மாறுபட்டதாய் உள்ளது. பிசாசானவனுடன் சேர்ந்து கொள்வதற்கு முன், இயேசு தமது இராஜ்யம் அமைய வேண்டிய அஸ்திபாரமாகிய ஆவிக்குரிய கொள்கைகள் எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்தாக வேண்டும். இயேசு மாம்சத்திற்குரிய இராஜ்யத்தையல்ல, ஆவிக்குரிய ஒரு இராஜ்யத்தையே நிலைநாட்ட வந்தார். சாத்தானால் ஆலோசனை கூறப்பட்ட வழிமுறையின் மூலம் அவர் உலகத்தின் இராஜ்யங்களின் மீது கட்டுப்பாட்டை விரைவில் பெற்றிருக்க முடிந்திருக்கும், ஆனால் அப்படிப்பட்ட கட்டுப்பாடானது சத்தியம் மற்றும் நீதியைக் கொடுத்துப் பெற வேண்டியதாகும். அவர் சிலுவையின் பாதையில் சென்று தம்முடைய பிதாவின் சித்தத்திற்கு உண்மையாய் இருப்பதன் மூலம் இந்த உலகத்தை ஜெயிப்பதைத் தேர்ந்து கொண்டார்.*

*சோதனைகளின் மேல் இயேசுவின் வெற்றியில் நாம் இயேசுவின் மனிதத்துவத்தைத் தெளிவாகவும், தவறற்ற வகையிலும் காண்கின்றோம். அவர் உண்மையிலேயே மனிதராக வந்தார்.*

---

*குறிப்புகள்*

*[1]யூதேயாவின் சமவெளியில், யோர்தான் பள்ளத்தாக்கில் இருந்து ஆயிரத்து ஐந்நூறு அடி உயரத்தில் இருந்த குவாரன்ட்டானியா என்ற மலையில் சோதிக்கப்படுதல்கள் நடந்ததாகப் பாரம்பரியம் குறிப்பிடுகின்றது. இது, ஞானஸ்நானம் பெற்ற இடமாகப் பாரம்பரியத்தில் கூறப்படும் இடத்தில் இருந்து யோர்தான் மற்றும் எரிகோவுக்கு மேற்கில் ஆறு அல்லது எட்டு மைல்கள் தொலைவில் உள்ளது, இது "யோர்தானை விட்டுத் திரும்பி ..." என்ற லூக்காவின் விளக்கத்துடன் ஒத்துப் போகின்றது. எரிகோவில் இருந்து எருசலேமுக்குச் செல்லும் இந்தச் செங்குத்தான சாலையானது இரத்தத்தின் உயரச் செல்லுதல் என்று அழைக்கப்பட்டது, ஏனென்றால் இது திருடர்கள் திரளாய் இருந்த இடமாயிருந்தது. இந்தச் சாலையின் வழியாக இயேசு பயணம் செய்து மலையை அடைந்திருக்கக் கூடும், அதன் சிகரங்களில் இருந்து மிகப் பரந்த காட்சியைக் காண முடிந்திருக்கும். அதன் மேற்கில் எருசலேம் வரையிலும், கிழக்கில் யோர்தான் பள்ளத்தாக்கு மற்றும் மோவாபியச் சமவெளி வரையிலும், மற்றும் வடக்கில் எர்மோன் மலை வரையிலும் கண் பார்வைக்கு எட்டியிருக்கும். "உலகத்தின் சகல ராஜ்யங்களுக்கும்" வழி நடத்துகின்ற நெடுஞ்சாலைகளும் காணப்பட்டிருக்கும்."* (J. W. Shepard, *The Christ of the Gospels*). *[2]இந்த மூன்று சோதனைகளும் பிசாசானவன் நாற்பது நாட்களாக அவரது (இயேசுவின்) பரிசுத்தமான ஆத்துமாவுக்குக் கொடுத்த சோதனைகளின் மாதிரிகள் மட்டுமே என்று* J. *ஆஸ்வால்டு அவர்கள் விவாதிக்கிறார். "அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்த பின்பு, அவருக்குப்*

*பசியுண்டாயிற்று" (மத். 4:2) என்ற வார்த்தைகளில் இக்கருத்து மறைமுகமாய் உணர்த்தப்படுவதாக அவர் கூறினார். "அவர் அந்த நாற்பது நாட்களிலும் முழுமையாகச் சோதிக்கப்பட்டார், ஆனால் அவர் தமது ஆவிக்குரிய இடர்ப்பாட்டு நிலை அவரது சிந்தையில் முன்னிடம் பெற்றிருந்ததால், அவர் உண்ண மறந்தார். அந்த நாற்பது நாட்களின் முடிவில் அவருக்குச் பசி உண்டாயிற்று. பிறகு பிரதிநிதித்துவமான மூன்று சோதனைகள் அவருக்கு ஏற்பட்டன." சான்டர்ஸ் இந்தக் கருத்தை நிரூபிக்காமல் இருக்கலாம்.* Guthrie *அவர்கள், "மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோரால் குறிப்பிடப்பட்ட மூன்று சோதனைகளும் முற்றிலுமானவைகளாய் இல்லாவிட்டாலும், முன்மாதிரியானவைகளாய் மதிக்கப்பட வேண்டும். அவைகள் தொடர்ந்து சோதனைகள் வருகின்ற வழிகளின் மாதிரிகளாய் உள்ளன" என்று எழுதினார்.* [3]*புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள "பாலைவனம்" அல்லது "வனாந்தரம்" என்ற வார்த்தையானது இதை நாம் வீணான மணற் பகுதி என்று நினைப்பதை அவசியமாக்காமல், சாதாரணக் குடியிருப்பில் இருந்து ஓரளவு விலகியிருந்த பகுதி என்றே எண்ணச் செய்கின்றது.* [4]Sanders, 57. [5]Sanders, 58. [6]*இயேசு பாவம் செய்ய மறுத்தார் என்பதற்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்!* [7]*பிசாசானவன் சிவப்பு நிற ஆடையணிந்து, கருப்புக் கலைக் கோலுடன் இயேசுவினிடத்தில் வரவில்லை. இயேசு அநேகமாக, நாம் சோதிக்கப்படுகின்ற வழிமுறையிலேயே சோதிக்கப்பட்டிருப்பார். அவரது சொந்த ஊழியம் தொடங்கு முன்பு பிரதான யுத்தமானது தொடங்கப்பட்டது. அது பிசாசுக்கு முக்கிய நேரமாய் இருந்தது.* [8]*இந்த மூன்று சோதனைகளின் பதிவேடானது, இயேசு மனிதருக்குப் பொதுவாக ஏற்படுகிற சோதனைகளை எதிர்கொண்டு மற்றும் அவற்றை முற்றிலும் எதிர்த்து நின்றார் என்று நமக்குக் காண்பிக்கின்றன. சோதனைகளைப் புரிந்து கொள்ளுதல் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் மிகுந்த அர்த்தம் நிறைந்ததாக இருக்கும். இது இயேசு முழுமையானவராகவும் பாவமற்றவராகவும் இருந்தார் என்ற நமது புரிந்து கொள்ளுதலை வளர்க்க வேண்டும்/அதிகப்படுத்த வேண்டும். இது கிறிஸ்து தமது வருகையில் வெளிப்படுத்திய தியாகத்தைப் பற்றிய நமது மதிப்பை ஆழப்படுத்த வேண்டும். இந்த சோதனைகளில் நாம், சாத்தானை எதிர்த்து நின்று அவனை முற்றிலும் தோல்வியுறச் செய்த உலகின் ஒரே ஒரு வரலாற்றைக் காண்கின்றோம்.* [9]*சான்டர்ஸ், 58.* [10]Everett F. Harrison, *A Short Life of Christ* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1968), 87.

[11]*சான்டர்ஸ், 59.* [12]*இது மத்தேயு கொடுக்கும் விபரத்தில் இரண்டாவது சோதனையாக உள்ளது; லூக்கா கொடுக்கும் விபரத்தில் இது மூன்றாவது சோதனையாக உள்ளது.* [13]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel* (Cincinnati, Ohio: The Standard Publishing Foundation, n.d.), 96. [14]*சான்டர்ஸ், 60.* [15]*மேற்கண்டதில் இருந்து.*